23 JUN 1914

SHIYALI.

ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராயநம:

A thorough and Complete Treatise on

THE Indian Pilgrim's Guide.

With the Benares &c. and the Ganges Mahatmiyams

With their appropriate Pictures.

ஸ்ரீ காசியாதிமான்மிய

கங்காயாத்ரா தீபிகை.

சமயோசிதபடங்களுடன்

ஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கராசார்யஸ்வாமிகள் திருவாக்கிதைப்படி

அகளங்கநல்லூர் ஆதிராஜு, கோ-சுப்பண்ணையைர் குமாரர்

மகாவித்வான் கோதண்டராம பாகவதரவர்களது

பேருதவியின்பேரில்

ஸ்ரீபஞ்சநதமென்னும் திருவையாறு

பேரி-குருமூர்த்திசாஸ்திரியள் பௌத்திரனும்,

சேதுராம கனபாடியள் புத்திரனுமாகிய

காசிவாஸி-பேரி-சிவராமசாஸ்திரியாலியற்றி

தஞ்சை

ஸ்ரீவித்தியாவிநோதினி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1911

All Rights Reserved.

இதன்விலை] [ரூ 1—8—0

Registered under Act XXV of 1867
All rights reserved by the Publisher.

PRINTED
PAGES 1 TO 80,
AT THE POORNACHANDRODAYA PRESS, TANJORE.
OTHERS AT
The Sri Vidya Vinodini Press,
North Main Street,
Tanjore.

Address all orders and communications to:—
PERI-SIVARAMA SASTRIYAL
Proprietor
Sri Kasimanmiya Office,
Tiruvadi, Tanjore District.

விஷய சூசிகை.

விஷயம்.	பக்கம்.
பாயிரம்-நூன்முகம், இந்நூலைலோகோபகாரமாய்ப் பிரசுரிக்க ஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கராசார்யஸ்வாமிகளின் திருவாக்கையும், இந்நூலாசிரியரின் அவையடக்கமும் நன்றியறிவிப்பும்.	1—3
துண்டிராஜகணபதிதுதி, காலபைரவர்துதி, விஷ்ணுத்துதி, கங்காஸ்துதி, அன்னபூர்ணித்துதி, ஷை வேறு, காசிவிஸ்வேஸ்வரர்துதி, சற்குரு மூர்த்திதுதி, (எல்லாம் கீர்த்தனைகள்) சிவனடியார்கடுதி, வாழ்த்து.	4—9
புண்யஸ்தலதீர்த்த யாத்ராப்பொதுவிதிகள், யாத்ராசாதனம், யாத்ராஅதிகாரிகள், யாத்ராசங்கற்பம், மஹாதீர்த்த பருவகாலங்கள், தீர்த்தசிரார்த்தம், விதி க்ஷேத்திர தீர்த்த யாத்ராபலன்.	10—13
நாட்டுக்கோட்டையாரின் தருமம், ஸ்ரீகாசிமான்மியத்ரிஸ்யம், ஸ்ரீகாசியினிருப்பிடம்.	14
ஸ்ரீகாசிநகரின் சிறப்பு, ஸ்ரீகாசியின் பூர்வீக சரித்திரமும், பூர்வீக இதரமதஸ்தர்களும்.	15—16
ஸ்ரீகாசியும்-இதரமதஸ்தர்களின் தற்காலநட்பும், நங்க ருண்ய பிரிடிஷ் அரசாக்ஷிக்கு ஹிந்துக்கள் நன்றிபாராட்டலும்.	17
இப்புவியின் சர்வமதங்களுள்ளும், ஹிந்துமதத்தின் சர்வோத்கிருஷ்டஸ்தாபனம்.	17
ஸ்ரீகாசியின் புராணோக்தம், ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வராலய வமைப்பு.	18—19
ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வரலிங்க மூர்த்தியின் த்ரிஸ்யபரிமாணவமைப்பும், ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வரரின் அபிஷேகாதிக்ரமங்களும், சட்டணவிதங்கள் நிர்ப்பந்தமல்லவென்பதும்	19
ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வராதி சந்நிதானங்கள் பிக்ஷாதிகாரிக்கும் இலக்ஷாதிகாரிக்கும் சர்வசமஉரிமை	20
ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வராலயத்தின்வெளிப்ராகாரங்கள், ஸ்ரீஅன்னபூர்ணிதேவாலயம், ஸ்ரீகாசிவிசாலாக்ஷி தேவாலயம், நாட்டுக்கோட்டையார் தருமம்.	20
ஸ்ரீகாசியின் உற்சவாதிகள், ஸ்ரீகாசியின் 64 காட்களும் அவைகளின் வரலாறும்.	20—21
ஸ்ரீகாசியிற் செய்யவேண்டிய 24 வகைமுக்ய யாத்திரைகளும், அவைகளின் பலாபலன்களும்.	22—23
ஷை அசக்தர்களுக்குப் பரிகாரமும், பரியாயமும்.	24
நித்தியயாத்ராக்ரமம், பஞ்சக்ரோஸ யாத்ராக்கிரமம்.	25—27
ஷை முதல் நாள் தங்குமிடம் கர்த்தமஹேஸ்வரம், 2-வது நாள் பீமசண்டி, 3 வது நாள் இராமேஸ்வரம், 4-வது நாள் கபிலதாரை-பஞ்சக்ரோஸ யாத்ராகாலம், விஸ்தீரணம், பலன்.	28—3[illegible]

அஷ்டபைரவர் யாத்திரை, 64 யோகினியாத்திரை, ஸப்தாவரண விநாயகர் யாத்திரை.	32—36
ஸ்ரீகாசிவாஸ இயல்புகள், ஸ்ரீகாசியின் 56 தேசராஜதர்மான்ன சத்திரங்கள்.	37
ஸ்ரீகாசிவாஸிகளின் ஜாகைக்கான தர்மமடங்கள், ஸ்ரீகாசியிலிருக்கும் வெளிதேசகாசிவாஸிகளின் சங்கியை	38—39
ஸ்ரீகாசிக்ஷேத்ரசந்யாஸிகள், ஸ்ரீகாசிவாஸம் ஊசிவாஸமே.	40
ஸ்ரீகாசியிற் பாவஞ்செய்தோனுக்கு யாண்டும் கதியில்லை.	41
காசிவாஸத்துக்குரியபலன், ஸ்ரீகாசிமரணம் ஜன்மாந்தர பாக்யம்.	42
ஸ்ரீகாசியில் மரணத்தருவாயில் ஜீவர்கட்குஉமாதேவி தன் உத்தரீயத்தால் வீசி இளைப்பாற்றியுபசரிக்கவும், பரமசிவன் அவர்கட்கு திவ்யதாரகப்ரம் ஹோபதேசஞ் செய்தலும்.	43
ஞ்யானக்காசியும், கங்காதீரக்காசியும், ஜீவன்முத்தரின் இலக்ஷணங்கள்.	44—45
ஸ்ரீமகாவிஷ்ணுவாதி 33 கோடி தேவர்கள், 48000 ரிஷிகள், 14 லோகங்கள், ஸப்தசாகரங்கள் முதலான விராட்விஸ்வமும் ஸ்ரீகாசியை வந்தடைதல்.	46
ஸ்ரீகாசியின் நாமரூபபேதங்களும், வரலாறும், ஸ்ரீகாசிநாமோச்சாரணபலன்.	47—48
ஸ்ரீகாசித்ரிமதஸ்தர்களுக்கு முரியது; யுகாந்த-கற்பாந்த-காலமாதி முடிவுகளிலும் ஸ்ரீகாசியொன்றுமே எஞ்சிநிற்றல்.	49
ஸ்ரீகாசியில் அநாதையாய் உயிர் துறப்பவர்கட்கு மரணத்தருவாயில் அன்னவாகாராதிகளை உதவுதல்.	50
தற்காலராஜதருமம் நம் நாட்டுக்கோட்டையாரதே-கோ-உத்க்ருஷ்ட விளக்கம்.	50—51
அஹிம்ஸாபிரதமோதர்ம:, வேதத்தின் கர்மகாண்ட பூர்வபக்ஷ சித்தாந்தங்கள்.	52—53
யாகஅதிகாரி, முறை, பலன், ஜீவன்முத்தரும் ஸ்வரூபத்திற் கலக்கும் வரையில் கருமங்களைச் சிரத்தையுடன் செய்ய வேண்டும்.	54—55
ஜீவஹிம்ஸை எவ்வகையினுமிழிந்ததே. ஸ்ரீகாசியிற் பிரேதம் சிவப்பிரதிமைக்கொப்பானது. ஸ்ரீகாசி சுதேசிகளின் வர்ணாச்சிரம ஆசாரங்களின் குறைவு	55—56
காசிராஜா, ஹரிச்சந்திரபஜார், காலகண்டய்யர் கிராமம், நாககுண்டம் வியாஸகாசிவகைரு, கங்கையில் ஊர்கோலங்கள், ஸ்ரீகாசியிற் செய்யும் நியதிச்செலவுகள்.	57—58
பெனரிஸ்ஸிற்றியும் முனிஸிபாலிடியும், 56 தேசத்துபக்தகோடிகளையும் ஏககாலத்தில் தரிசித்தல், கங்கைமாநதியின் பௌராணிக வரலாறும் மஹிமையும்	59—61
கங்கையின் ஆயிரநாமங்கள், கங்கை இப்பூவுலகிற்கு வந்த விருத்தாந்தம்.	62
பகீரதன் கங்கையை இப்புவிக்குக் கொண்டுவருதல், கங்கைமாநதியின் த்ரிஸ்யாம்ஸம்.	63—64

கங்கோற்பத்தி ப்ரதேசவிளக்கமும், ஆங்குதவம் புரியசாதன சௌகுரிய விவரங்களும். கங்கையின் உபநதிகளும் அதின்பேரிலுள்ள பட்டணங்களும்.	65—66
கங்காமுகத்வார ப்ரதேசவிவரணம். காசி கங்கை சிவகங்கையே.	67—68
ஸ்ரீசுப்பிரமணியர் தாரகாதிவசுரர்களைச் சம்ஹரித்து தேவரிடுக்கண்களை யகற்றியது.	69
பரமசிவனலன்றி வேனொயோரால் கங்காதாரணங் கூடாதென்ற நிரூபணம்	70
சிவன் அசிவத்தைத் தரித்துச் சிவனென்ற குதர்க்கம். கங்காமான்மிய காசிகாண்டம், கங்காபூஜாவிதியும் கங்கையிலெலும்பு விழுந்த சரித்திரமும்	71—72
ஜீவன் முத்தருக்கு விஸ்வேஸ்வரர் வழிபாடு ஆவஸ்யமில்லாதிருக்கவும், கங்காஸ்நாநம் இன்றியமையாதது.	73
மணிகர்ணிகாமான்மியம், பஞ்சநதிமான்மியம்	74—75
காசிப்பிரயாகைமான்மியம், ஞானவாவிமான்மியம், ஆதியான்மிகக் காசிவாஸியிலக்ஷணங்கள், ஜீவேஸ்வரஜிருவ்ஷ்டிபேதம்; ஜீவன், சாதனசதுஷ்டயங்களால் ஈஸ்வரானுக்ரஹம் பெற்றுப்பின் முத்திக்குச் சாதனமாகிய பரமஞ்யானத்தைப்பெறல் வேண்டும்; சாதனசதுஷ்டயங்கள்	76—79
இருக், யஜுர், ஸாமம், அதர்வணமென்னும் சதுர்வேத மஹாவாக்கியங்கள்.	80
இராமேஸ்வரம், ஷை யாத்ராக்கிரமம், பட்டண சௌகுரிய விளக்கம்	81—82
ஷை ஷட்காலபூஜை, பிரம்ஹோற்சவ விவரம், ஷை முக்யதீர்த்தங்கள் 22-ம் உபதீர்த்தங்கள் 28-ம் அவைகளினிருப்பிடங்களும் பலன்களும்.	83—86
ஷை அபிஷேக, அர்ச்சனை, நைவேத்யஉற்சவங்களின் கட்டணவிகிதங்கள்.	87
ஸ்ரீமத்கயா, ஷை பஞ்சகயை, அஷ்டகயை, மஹாகயை, கயாமான்மிய வரலாறு.	88—90
கயாவாலர்கள் பிரம்ஹாவினிடம் வரம்பெறல். இக்கலியில் ஸ்ரீமத்க்யாபிண்டப்ரதான காலத்தில் பிதிரர்கள் பிரத்தியக்ஷமாகாக்காரணம்	91—92
கயையொழிந்த வெளியிடங்களில் கயாஸ்மரணையும் ஜனார்த்தனார்ப்பணமுமின்றி சிரார்த்த சம்பூர்ணபலன் கிட்டாது. பிரயாகை.	93
ஷை நகரினமைப்பும் ஜாகாமுதலிய சௌகுரியங்களும் த்ரிவேணிசங்கமமஹிமைகள், ஸ்ரீமத் அயோத்தி ஷை பலஸ்தான, தீர்த்தாப்ராபவங்கள்.	94—97
அளகை அயோத்தியினெதிர் நிற்கவாற்றாமை. அயோத்தியில் ஆஞ்சநேயர் பிரபல சந்நிதி, நந்திக்கிராமம், ஸ்ரீமதுரா.	98-101
வசுதேவன்-தேவகிகல்யாணம், ஸ்ரீகிருஷ்ண னவதரித்தல்.	102—3

யோகமாயையினால் ஸ்ரீகிருஷ்ணன், வசுதேவன் தேவகியாளைக் காப்பாற்றினது. கம்ஸனை வதைத்தது. கோகுலம், பிருந்தாவனம்.	104—6
பிருந்தாவனம் விஷ்ணு சந்நிதானங்களில் சிரேஷ்டமெனல், கோவர்த்தனகிரி.	108
ஆக்ரா, இந்த்ரப்ரஸ்தம் சிற்பத்தொழிலின் உன்னதோன்னத திறமை.	109-10
ஹரித்வாரம்-ஸ்ரீகாஞ்சீபுரம், அவந்திகாநகரம், ஸ்ரீமத்த்வாரகை.	111—4
த்வாரகைக்குப் போகமார்க்கங்கள். மதுராவிலிருந்து ஹரித்வாரத்துக்குச் செல்லும் மார்க்கம், ஹரித்வாரத்தினின்று ஸ்ரீகாசிக்குச் செல்லும் மார்க்கம்.	115—6
கிஷ்கிந்தை, பண்டராபுரம், பஞ்சவடி, பஞ்சவடியின் வளப்பமும், கோதாவரியின் மாண்பும் த்ரியம்பகம், சித்திரகூடம்	117-21
நைமிசாரண்யம் ருஷிகேஸம், வான்மீகியாச்சிரமம் பாரத்வாஜாச்சிரமம், தலைக்காவேரி, ஸ்ரீசுப்ரமண்யம், தர்மஸ்தலம், உடுப்பி	122-26
ஸ்ரீங்கேரி, அநந்தசயனம், ஸ்ரீகோகர்ணம், இருப்பிடம், மார்க்கம்	127-30
கோகர்ணம், காசிமார்க்கம்-குற்றாலம், பாபநாசம், பாணதீர்த்தம்.	131—2
ஸ்ரீபத்ராசலம், திருப்பதி, ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீஜகந்நாதம்	133—5
ஷை தேவாலயத்தின் பரிமாணம், கட்டிடவமைப்பு, போக நைவேத்தியங்கள், அலங்கார வைபவங்கள் "சர்வம்ஜகந்நாத" மென்ற விளக்கம்.	136—8
ஸ்ரீஜகந்நாதயாத்திரையின் மஹிமை, குருக்ஷேத்ரம், ஷை ஸ்தாணுதீர்த்தம் மஹிமை, அமிருதசரஸ், லாலபூர், ஜாமல்பூர்.	139-42
ஹிமோத்கிரியினடிவாரம், இராவணனைக்கொல்ல ஸ்ரீராமர் தவம் புரிந்த இடம்	143—4
கர்ணமஹாராஜாவின் ராஜதானி, பாகல்பூர், விஷ்ணுகொண்டா ஸ்தலங்கள்.	144
விதுரராஜாஸ்தலம். அஸ்வத்தநாராயண விசேஷசந்நிதி. பம்பாய்நகரம்.	145
ஜெய்பூர், கங்காதீர ஸ்ரீவைத்தியநாத் க்ஷேத்திரம், விந்திய ராஜதானி.	146—7
பஞ்சாப் தேசராஜதானி, ஸிந்துதீரம், இலக்ஷ்மணபுரி, பூமிக்குள் காளிகாதேவி ஆலயம். இந்தியாவின் அதிகநீளமும் உயரமுமான மலைச்சுரங்க மார்க்கம்	147—8
ஸ்ரீகயாபிண்டத்தையேற்கப் பரிசுத்தமாக்கும் பூன்பூன் க்ஷேத்திரம்	148
இவ்வுலகத்தில் முதன்மைபெற்ற ஜர்ஸப்பா நீர்வீழ்ச்சி, வேதத்திற்கூறிய வைதரணீதீர்த்தம் 7000 கோயில்களுள்ள ஸ்ரீபுவனேஸ்வர்.	149-50

சர்வரோக நிவர்த்திஸ்தலம், கிருஷ்ணார்ஜ்ஜுன க்ஷேத்திரம். நருமதா உற்பத்தி.	15[illegible]—2
அகல்யைபாகதியடைந்தவிடம், அஹோபலம், புஷ்கரம் காளிதாஸஜ்னனபூமி	153
அமர்நாத், அம்பர்நாத், ஸ்ரீருக்மணிவிவாக பூர்வாங்கஸ்தலம், ஹோங்காரம்	1[illegible]—4
அந்தர்வேதி, ஹரிபாத், ஸ்ரீபரசுராமர் மாதுர்ஹத்தி நிவாரணஸ்தலம்	155
சீதாதேவிகுசலவாளைப் பெற்றவிடம், பலிசக்ரவர்த்தியாகஞ் செய்தஸ்தலம்.	156
ஸ்ரீராமர்பரதனைச் சந்தித்தவிடம், மஹாபாரதபத்ராவதி பட்டணம். ஸ்ரீகிருஷ்ண பிரவிஷ்த தேவாலயம், அகல்யை சாபநிவர்த்திஸ்தலம். பாண்டவர்கள் அக்ஞ்யாதவஸவாஸஸ்தலம்	156—7
விதர்ப்பராஜதானி, அநபதேவ் உஷ்ண நீர்ச்சுனைகள், குருமுக்தேஷ்வர்.	158
ஹஸ்திநாபுரம், வைதரணீதீரம், ஜ்வாலாமுகி, புஷ்பகிரி, தக்ஷிணபாஞ்சால ராஜதானி.	158—159
சகுந்தலா ஜனனபூமி, கர்னராஜதானி, குஸேலநகரம், பாண்டவர்களது கிஞ்சித்காலவனவாஸஸ்தலம்.	160
ஜயதேவகவிஜனனபூமி, குஷ்டரோகநிவாரணஸ்தலம், மஹாபலிபுரம்.	161
ஸ்ரீபரசுராமராஜதானி, தசரதசாபபூமி, மாந்தாதா, ததீசக்ஷேத்திரம்.	161—3
ரிஷ்யஸ்ரிங்காஸ்ரமம், நாதத்துவாரம், பூர்வஇந்த்ரப்ரஸ்தம், பாபநாஸம்.	161—5
ஸாஸ்வதிதீரக்ஷேத்திரம், இராஜக்ரஹம், பூர்வவிராடநகரம்.	165
ஸகிகோபால், ருக்மாங்கதராஜதானி, ஸரஸ்வதிநதி, ஸர்நாத்,	165—6
சாலிவாஹனராஜதானி, ஸித்தேஸ்வர், ஸித்தபூர், சீதாகுண்டம், சீதாமர்ஹி	166—8
கஜேந்திரமோக்ஷஸ்தலம், ஸூகரக்ஷேத்திரம், ஸ்ரிங்கேரி, மஹாவிஷ்ணுஸ்ரமபரிஹாரஸ்தலம், துங்காதீரபராசுராஸஸ்தலம், ஹிந்துஸ்தானி நாமக்ஷேத்திரங்கள், க்ஷேத்ரதாரதம்யஞ்யானம், க்ஷேத்ரமஹிமாசிரவணபலன்.	168—171
ஸ்ரீகாசிக்குச்செல்லும் கீழ புகைரதமார்க்கம், மதுரை, திருச்சி தஞ்சை, மாயவரம், விழுப்புரம், செங்கற்பட், கூடூர் ஜங்ஷன்கள்.	172—3
பெஜவாடா, சாமல்கோட், வால்டேர், செளபடா, கூர்டா ரோட்ஜங்ஷன்கள்.	174—5
ரூப்ஸா, கர்க்பூர், கோமா, கயா, மொகல்ஸெராய் ஜங்ஷன்கள்	175—6
கேர்மா-கல்கத்தா மார்க்கவித்யாஸம், சென்னை-ஸ்ரீகாசி 52 மணியே.	176—7
ஸ்ரீகாசிகீழமார்க்க இறங்கக்கூடிய மஜிலிகள், கோதாவரிஸ்டேஷன் அத்யாவஸ்யமும் அதிசௌகரியமுமானமஜிலி, பர்ஹம்பூர் ஓர்சௌகரியமஜிலி	177—8

ஸ்ரீஜகந்நாதமார்க்கம், கல்கத்தாநகரச்சிறப்பு, கிழமார்க்க ஆவஸ்யசௌகரியமஜிலிகள்.—கூடேர் நெல்லூர் வகையரு. சுலபச்செலவில் சாஸ்திரீகமாய் விவாஹாதிகள் செய்யும் முறை,வங்கவோல்-கோதாவரி வகையரு	179—183
பாதகயா, சத்திரபுரம் வகைரு, மஹாநதி, ஸோணபத்ராநதி தீரங்கள் வகைரு	184—5
ஸ்ரீகாசிபுகைரத மேலமார்க்கம், செங்கற்பட், அரக்கோணம், ரேணிகுண்ட, குந்தக்கல், ராயச்சூர், வாடி, ஹாட்கி, பார்விரோட் ஜங்ஷன்கள்	186—7
டோண்ட், மான்மாட், சாலிஸ்கோன், ஜால்கோன், புஸாவல் கண்ட்வா, இடார்ஸி, கடர்வாடா, ஜப்பல்பூர், கட்நி, மாணிக்பூர் ஜங்ஷன்கள்.	187—8
ஓயோகி, மொகல்ஸராய் ஜங்ஷன்கள். காஞ்சீபுரம், திருத்தணி, அலமேலுமங்காபுரஸ்தலங்கள் ரேணிகுண்டா, கடப்பை, குத்தி வகைரு	188—190
துங்கபத்ரா, கிருஷ்ணா, பண்ட்ராபுரமார்க்கம், கோதாவரி புன்டாம்பா	191—2
நருமதா,ஸ்ரீகாசிமேல, கீழரயில்மார்க்கதாரதம்யம், கங்காதீரதூர்க்காசந்நிதி	193—4
யதோக்தபூப்பிரதக்ஷிண ஸ்ரீகாசிமஹாயாத்ராக்கிரமமும், பலனும்	195—197
தென்னாட்டின் சிவத்தலங்கள் 274ன் 9 வகைபாகுபாடு.	197-98
காவிரிக்கு வடகரையில் 63 தென்கரையில் 127 சிவத்தலங்களின் மார்க்கம் வகைரு	199—204
ஈழநாட்டில 2, பாண்டியநாட்டில் 14, கொங்குநாட்டில் 7, நடுநாட்டில் 22, தொண்டை நாட்டில் 32, துளுவம் 1, வடநாட்டில் 5 சிவஸ்தலங்களின் மார்க்கம் வகைரு	204—206
தக்ஷிணதேச பிரஸித்த சிவஸ்தலங்கள் 13, சுப்ரமண்யஸ்தலங்கள் 11ன் விவரம் வகைரு	207—8
காவிரிமாநதியின் மாண்பு. சிவக்ஷேத்திரங்களும் நாட்டுக்கோட்டையாரும்.	209
இமயமலையின் க்ஷேத்ரதீர்த்த விசேஷங்கள், தோற்றம், சிறப்பு, வசதிமுதலியன.	210-11
இமாசலம்த்ரிமூர்த்திகளையும் ஒவ்வுதல், ஷெ ரிஷிபுங்கவர்கள்	212-13
இமயத்தின் வேதாதிபடலங்களும், ஸ்ரீமஹாவிஷ்ணு வாதிபரசிவபக்தர்களும்.	213—4
இமயகிரியின் யாத்ராபலன், பதரிகாஸ்ரமம், பதரிநாராயணம், பிரமகபாலம்.	215—6
ஸ்ரீகேதாரம், ருத்ரப்ரயாகை, கங்கோற்பத்தி, இமயமலையின் அடிவாரரெயில்வே டெர்மினஸ்(முடிவு) ஸ்டேஷன்கள்.	217—9
இமயமலையின் சற்குரு, சத்சிஷ்யவியற்கைவசதிகள்	220
ஸ்ரீகாசிக்குச்செல்ல நாட்டுமார்க்கம், ஸ்ரீகாசி யாத்ரபாதசாரிகளின்பலன். ரெயில்வே சட்டதிட்டங்கள்	221—226
சிவனடியார்கள் துதியும்-வாழ்த்தும்.	226



உ

ஸ்ரீ சற்குரு துணை.

பாயிரம்-நான்முகம்.

வடக்கில் இமயமலை, கிழக்கில் கங்காசாகரமென்னும் கங்காநதி சமுத்திரத்தில் சங்கமமாகும்க்ஷேத்திரம், தெற்கில்கன்னியாகுமாரி க்ஷேத்திரம், மேற்கில் ஸிந்துநதி இந்நான்கெல்லைக்குட்பட்ட நம்மிந்துக்களுக் குறைவிடமாகிய இவ்வாரியா வர்த்தமென்னும் பரதக்கண்டத்தில் வேதமேநமக்கு முக்கியப்பிரமாணம். அவ்வேதத்தின் கருத்து இந்நெடிய கடல்சூழ்ந்த இத்தொல்லுலகின் கண்ணுள்ள பிரமசிருஷ்டி எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவராசிகளுள், பிறப்பிறப்பிற்குக் காரணமாயுள்ள இச்சம்சார சாகரத்தைத்தாண்டக்கூடியஞானத்தையடைந்து முத்தியடையத்தகுதியுடையது இம்மானிட ஜென்மமேயென்றும், அவ்வாறடைவது அவரது கடமையென்றும், அம்முத்தியை அடைய பக்தி, கர்மம், ஞானம் என்னும் மூன்றுவழிகளுள், பக்தி, கருமங்களாலெய்தும் ஞானத்தால் அன்றி முத்தி கைகூடாதாகையால், அவ்விரண்டு மொருங்கமைந்துள்ள புண்ணிய க்ஷேத்திர தீர்த்தயாத்திரையே சுலபமார்க்கமாயிற்றெனக.

அங்ஙனமாகவும் சர்வ ஜீவ கருணாநிதியாகிய பரமசிவன், பந்தபாசத்தினால்கரையேற வழிதெரியாது திரிந்தலையும் ஆன்மகோடிகள் பிறத்தல், இறத்தல், காண்டல், நினைத்தல் முதலியவைகளாலெய்தும் பவரோகத்தை நிவர்த்தித்து பரகதியடையச்செய்யுமாறெழுந்தருளிய ஸ்தலங்களனேகமிருப்பினும், அவைகளனைத்துமொருங்கமைந்துள்ளதாயும், தேவாமிருதவாரிதியனைய ஸ்ரீகங்கைமாநதியைத்தன்பாற்பெற்றதாயும் எம்பெருமான்றேவியாரோடினிது வீற்றிருக்கும் ஸ்தலமாயும் சர்வோத்கிருஷ்டமாயும் விளங்குவது ஸ்ரீகாசியம்பதியேயாதலானும் அதற்குச்சமமான இராமேஸ்வரத்தைப்பற்றியும் இவையல்லாத நம்வேதசாஸ்திர புராணேதிகாசங்களில்கூறப்பட்டுள்ள இப்பரதகண்டத்தின் க்ஷேத்திர தீர்த்தங்களைப்பற்றியும் விவரித்தலானும், அக்ஷேத்திர தீர்த்தங்களையடைந்து அவ்வவ்விடங்களிற் செய்யவேண்டிய முறைகளை யெடுத்துக் கூறுதலானு மிந்நூலிற்கு ஸ்ரீகாசி யாத்திமான்மிய கங்காயாத்ரா தீபிகை யெனப்பெயர் பொருத்தப்படலாயிற்று.

இவ்விரிய நூல் அடியிற்குறித்த ஏழு அத்தியாயங்களாக பகுக்கப்பட்டிருக்கிறது:—

1. புண்ணியஸ்தல தீர்த்த யாத்திராப் பொதுவிதிகள்.

2. ஸ்ரீகாசி, பிரயாகை, கயா, அயோத்தி, ஹரித்துவாரம், மதுரா, கோகுலம், பிர்ந்தாவனம், குருக்ஷேத்திரம், துவாரகை, கிஷ்கிந்தை, கங்கோற்பத்தி, கங்காசாகரம், பதரிகாச்சிரமம், ருஷிகேசம், ஸ்ரீ கேதாரம், பஞ்சவடி, சித்திரகூடம், வால்மீகியாச்சிரமம், கோவர்த்தனகிரி, சப்தபுரி, சீதாகுண்டம், ஸ்ரீரெங்கம், தலைக்காவேரி, அநந்தசயனம், ஜனார்த்தனம், வைக்கம், உடுப்பி, சுப்பிரமணியம், கோகர்னம் முதலாய திவ்விய க்ஷேத்திரங்களுக்குச்செல்லும் மார்க்கமுதலியவைகளும், ஸ்ரீகாசி, கங்கை இவைகளின் மான்மியங்களும்.

3. இராமேஸ்வரத்திலிருந்து ஸ்ரீகாசிக்குச்செல்லும் மேல, கீழ மார்க்கமிரண்டிலுந் தொடர்ச்சியாய் ஒவ்வொரு ரெயில்வே ஸ்டேஷனும், மெயில் வண்டித்தொடர்களின் கால நிர்ணயங்களும், இறங்கக்கூடிய மஜிலிகளும், பிரயாண சௌகரியங்களும், ரெயில் சார்ஜ் (கட்டணம்) விகிதமும்.

4. சேர, சோழ, பாண்டியாதி திராவிட தேசத்தின் கண்ணுளதாய க்ஷேத்திர தீர்த்தங்களின் சிறப்பும், அவைகளிருப்பிடம் முதலியனவும்.

5. இமயமலையின் கண்ணுள்ள க்ஷேத்திர தீர்த்தங்கள்.

6. ஷை ஸ்ரீகாசி இராமேஸ்வரத்திற்குச் செல்ல நாட்டு மார்க்கமும், அவைகளின் மற்றைய விவரங்களும்.

7. பிரயாணிகள் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கியமான ரெயில்வே விதிகள்.

ஸ்ரீஸ்காந்தம், பதுமம், இலிங்க புராணங்கள், தைத்திரீய கைவல்ய மண்டூக்கியோபநிஷத்துக்கள், நாகேஸ்வரர் செய்த திரித்தலிசேது, சுரேசுராசிரியர் செய்த மிருதிமோக்க நிர்ணயம், காசிமான்மியம், திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவள்ளுவர், வாக்குண்டாம், இருசமயவிளக்கம், பெரியபுராணம், பாத்மோத்தர புராணம், வில்லிப்புத்தூராழ்வார்பாரதம், காஞ்சிப்புராணம், திருவள்ளுவர் மாலை, தொல்காப்பியம், ஜீவகசிந்தாமணி, பிரயோக விவேகம், சிலப்பதிகாரம், ஸ்ரீமத்கம்பராமாயணம், நூற்றெட்டு திருப்பதியந்தாதி, திராவிடவேதமாகிய நாலாயிரப்பிரபந்தம், ஆரியப்புலவர் பாகவதம், நாலடியார், காசிகாண்டம், கொலைமறுத்தல், சேஷதருமம், அத்தியாத்மிக ராமாயணம், நாரதீயபுராணம், சிற்பசாஸ்திரம், நைஷதம், தயாசதகம், பாதுகாசகஸ்ரம், விஸ்வகுணதிர்ஸியம் முதலிய நூல்களின் சில சுலோகார்த்தங்களும், வேறு சில பாடல்களும்; இந்தியன் ரெயில்வே கயிட்ஸ் விவரங்களும், ஆங்காங்கு உதாகரிக்கப்பட்டிருப்பினும், "பொதுவாகப் பெரும்பான்மையும் பண்டிதரல்லாத ஏனைய சாதாரண ஜனங்களினுபயோகத்தின் பொருட்டே, மிகவும் எளிய செந்தமிழ் நடையில் இந்நூலை ஜகத்குரு ஸ்ரீமத் ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் திருவாக்கைப்படி எழுதியிருப்பதால்" இதன் கண்ணுளதாய குற்றங்குறைகளை திருத்தங்களுடன் தெரிவிப்போருக்கு நன்றியறிவுள்ளவனாயிருப்பேன்.

திருவாதி-தஞ்சை,

புரொப்ரைடர்,
அடியார்க்கடியேன்.

ஓம் சுபம்.

ஸ்ரீ காசி விஸ்வேசர் துணை.

ஸ்ரீ காசியாதிமான்மிய கங்காயாத்ரா தீபிகை.

துண்டிராஜ கணபதி துதி—கீர்த்தனை.

பல்லவி

துண்டிராஜ ஸ்ரீ கணபதியே, சிந்தாகுலங்கள் தீர்த்தருளே
சிந்தாமணி ஸ்ரீகணபதியே.

அநுபல்லவி

பந்தமறுப்பீர் பாவனைஞ்செய்வீர், சுந்தரஜோதியாய் சுகமே தருவீர், துண்டிராஜ ... ...

சாமரகர்ண வாமனகாத்ர கோமளபாதா கோடிதிவாகர தேஜோரூபா துண்டிராஜ ... ...

விந்துரவதன சந்திரமகுடா சந்ததஞ்சிந்தையில் சாந்தமருள்வீர் துண்டிராஜ ... ...

சத்தியப்பொருளினை சற்ஜனமறியா சத்தியந்துதிக்கையால் தானறிவித்த துண்டிராஜ ... ...

வியாஸர் செய்த காசிதன்னில் உயிர் விழுந்தால் தார்த்தப ஜன்மமென்றே தயவாய்ச்சாரதி திருவாக்கை தக்ஷணமெழுதி வந்தவரே துண்டிராஜ ... ...

சிவராமன் சோதரியாம் பார்வதியீந்தப் பாலகனே பத்ம சரணே தினந்தினம்போற்றி துண்டிராஜ ... ...

காலபைரவர் துதி.

கீர்த்தனை—சாஸ்த்தாப்பாட்டு மெட்டு

பல்லவி

காலபைரவ மூர்த்திக்காசிதனைக் காத்துரக்ஷிக்கும் தேவே

அநுபல்லவி

மாலயன் மதிகெட்டு மகாதேவ நிந்தைசெய்ய மலரை யிறுப்பதுபோல் விதியின் தலையறுத்த கால ... ...

சரணங்கள்.

1. அண்டங்கள் அதிரவே அட்டகாசஞ் செய்துமிக, கொண்டு வைகுண்டவாசலிலே விஷ்வக்ஸேனர் தம்மைசூலத்தில் குத்திநின்ற கால ... ...

2. வைகுண்டத்தில் உட்புகுந்து விஷ்ணுவிட ரத்தமுண்டு, வெகுவாய் வணங்கிநின்ற லெக்ஷிமிக்கு மங்கிலிய பிக்ஷையிட்டு அனுக்கிரகம் செய்துவந்த கால ... ...

3. அஷ்டதிக்குப்பாலகரும் அங்கங்கே நடுநடுங்க, இஷ்டமுடன் இந்திரனும் இமையோரும் பூச்சொரிந்து வாழ்த்திநின்ற கால ... ...

4. அந்தரத்தில் தாரையெல்லாம் அலர்போ லுதிர்ந்திடவும், அந்தகனூர் லோகமெல்லாம், அலறி ஓலமிடச்செய்த கால.

5. வடமாலை வழிபாடு வணக்கத்துடனே சார்த்தி, அடியினை கதியென்றால் அநுக்கிரகம் செய்யுமப்பன் கால ... ...

6. சிவராமன் செய்பிழையை முற்றிலும் பொறுத்தருளீரும், பத்ம சரணந்தன்னில் பக்திதன்னை மேவச்செய்யும் கால.

விஷ்ணுத்துதி—ஜாவளி.

முக்கிய சிவபக்தரையா, எங்கள்விஷ்ணு முக்கிய சிவ பக்தரையா ... ...

முக்கண்ணனருளை முழுது முணர்ந்து கீதையுரைத்தாரன்றோ, பாண்டவர்க்கு உண்மையுரைத்தாரன்றோ பாண்டவர்க்கு முக்கிய சிவ ... ...

பாணமா யிருந்தும் பாரியாயுழைத்தும் கோணுதவரம் பெற்றான் கோவிந்தன் முக்கியசிவ ... ...

ஆயிரங்கதிரொளி சக்கரம்பணி கொள்ள ஆக்கினான் விழியாயலராய் அரனடிக்கு முக்கிய சிவ ... ...

பங்கஜமாயிரம் பாதத்தில் பூஜைசெய்து பங்கஜ நயனம் பெற்றான்றனினை சிவராமனேற்றித்துதி செய்வாம் முக்கிய சிவ.

கங்காஸ்துதி—கீர்த்தனை.

ராகம்—நாதநாமக்கிரியை.

பல்லவி:—கங்கே கங்கே காசிகங்கே, கங்கே கங்கே சுபதரங்கே

அநு:—சங்கரனார் திருச்சடையில் தங்கிநின்று காசியில் வந்த கங்கே கங்கே... ... ...

சரணங்கள்:—1. பகீரதமகராஜன் பரசிவனைத்தவ மிகச்செய்து சாகரானேச்சற்கதி சேர்க்க காசிதன்னில் அழைத்து வந்த கங்கே கங்கே ... ...

2. தெரிசனத்தால் பாபநாசம், ஸ்பரிசனத்தால் புண்ணிய லாபம், சேவனத்தால் கோடிதீர்த்தம் ஸ்நாநம்செய்தால் மோக்ஷமாமே கங்கே கங்கே ... ...

3. காசிக்கன்னியமான ஸ்தலத்தில் கங்கையென்று கூவியன்பாய் நேசமுடன் ஸ்நாநம்செய்தால் ஸ்ரீபதியின் லோகம் சேர்வார் கங்கே கங்கே ... ...

4. பேரி-சிவராமன் தேடிக்காணு பதமுடையோன் திருமுடிமேல் பத்மஜாக்ஷி நீயிருந்து பளிங்கெனவே நின்றாளே யேற்றிப் போற்றுவாம் கங்கே கங்கே ... ...

அன்னபூரணி துதி

கீர்த்தனை—நாகநந்தி ராகம்.

அன்னபூர்ணி நின்பாதஞ்சரணம் அடிமையென்னை ஆண்டு கொள்வாய் அன்னபூர்ணி ... ...

அநு.—அன்னவாகனத்திலேறி அனைவருக்குமமுதளிக்கும் உன்னையல்லால் உலகந்தன்னில் ஒருவரையும் உளங்கருதேன் அன்னபூர்ணி ... ...

சிஷ்டர் போற்றும் காசிதன்னிற் சிறந்துவாழும் சிற்பரையே அஷ்ட திக்குப்பாலகரும் அரியயனும் போற்றிச்செய்யும் அன்ன பூர்ணி நின்பாத ... ...

காசிதன்னில் வந்தேனம்மா காயமென்னும் சொமடுங் கொண்டு, நேசமுடன் நீ யிறங்கி நாசமில்லா நிலையருள்வாய் அன்னபூர்ணி நின்பாத ... ...

காரணமாம் தேகந்தன்னை காசிதன்னில் கருகச்செய்து பூரணமாம் சொரூபந்தன்னில் பொருத்திடுவாய் சிற்பரையே அன்னபூர்ணி நின்பாத ... ...

சேதி—சிவராமன் போற்றும்பரையை பக்தரெல்லாம் புகழும் தாயே, பத்மபீடம்வசிப்பவளே பார்வதியே பரஞ்சோதியே அன்னபூர்ணி நின்பாத ... ...

அன்னபூர்ணித்துதி—வேறு.

கீர்த்தனை ஆநந்தபைரவி.

பல்லவி:—அன்னபூர்ணித்தாயே அடிமையென்னை ஆதரித்தாள வா வா.

அநு:—அன்னையிலச்சைபோல அலைந்து திரிந்து நாளும் உன்னையே தஞ்சமென உள்ளபடி நம்பினேன் அன்னபூர்ணித் தாயே ... ...

சரணம்:—1. தேகத்தில் துன்பவினை சோம்பல் அருள் செய்து தாகமுடனே யென்னைத்தாங்கியே யாதரிப்பாய் அன்ன பூர்ணி ... ...

2. காசில்லா வெளியோரை கலிமனிதர் கணியார் மாசில் லாமுதே நீயும் அதுபோலிருக்கலாமோ அன்னபூர்ணி ...

3. மாணிக்கப்பாத்திரத்தில் அமுதமே தானெடுத்து பே ணியே ஊட்டிடுவாய் பாதம் பணிந்தோர்தம்மை அன்னபூர்ணி.

4. பஞ்சக்ரோஸ யாத்திரை செய்யப் பலமில்லார்க்குத் தஞ்சமுடன் சதம் வலம் சிரத்தையுடன் செய்தார்க்கு அந்தப் பலமும் கொடுப்பாய் அன்னபூர்ணி ... ...

5. சே—சிவராமனுமுந்தன் பாதத்தைப் பூஜித்துச் சந்த தம் ஏற்றிப்போற்றிவுளம் வைப்பான் அன்னபூர்ணி ... ...

காசிவிஸ்வேஸ்வரர் துதி. (ஜாவளி.)

விஸ்வேஸ்வரனே கிருபைசெய்யும் விஸ்வநாதா கண்பாரும்.

1. பாதம் பணிந்தேன் பரகதிவேணுமென்று போதத் தைத் தந்தருள்வீர் பூரணமாய் பஞ்சநதீசனே கண்பாரும். தேகத்திலபிமானம் தீரும்படியே பார்யோக நிலையருள்வீர் ...

2. என்சாமி ஞானநிலையருள்வீர் யென்சாமி விஸ்வேஸ் வரனே ... ...

3. காமக்கடல் கடந்துக் கரையேறிப் போவதற்கு நீயெம் னும் ஓடமளிப்பீர் உத்தமனே-கேதாரேஸ்வரனே ... ...

4. திருமால்விடைதன்னில் தேவியுடனேயேறி தெரிசனந் தாருமையா தாஸனுக்கு காசிவிஸ்வேஸ்வரனே ... ...

5. ஸ்ரீகண்டதாஸனாய் சே-சிவராமனுக் காகங்குளிரச்செய் யும் ஹர-ஹர உள்ளங்குளிரச்செய்யும் சிவ-சிவ, நின்பாதமதனை என்னிதயத்துள் வைப்பாய்-விஸ்வேஸ்வரனே.

சற்குருமூர்த்தி துதி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திருக்கிளர்வெண்பிறைக்கொழுந்துஞ்செஞ்சடையுமறிமானுந்திண்டோளெ
முருக்கிளர் வெம்புலியதளுங்கரந்து மானிட வடிவினுலகிற் போந்து [ட்டெ
மருட்கிடனாமெனைப் பிணித்தவல் வினையின்றொடரனைத்துமாய நூறி
யருட்கடைக் கணளித்தாண்டசுவாமி தேவன்றிருத்தாளகத்துள் வைப்பாம்.

சிவனடியார் துதி.

அறந்தவருழிதொழுகும் வைதிக சைவநெறியினிலகனிலமருங்கிற்
பிறந்துளோர்பிறவா நின்றுளோர் பிறப்போர் மெய்கழற்றாமரைப்போதின்
மறந்திடாதன்பு பூண்டுளோர் யாவராயினுமுவந்து மற்றவர்தஞ்
சிறந்த பூங்கமலமருட்டி வீடளிக்குஞ்சேவடி சென்னியிற் சேர்ப்பாம்.

வாழ்த்து.

அருமறைமுனிவர் வாழ்கவானினம் வாழ்கத்தீதண்ணீர்
விரிதிரையுலகங்காக்கும் விறல் கெழுவேந்தன்வாழ்க
மருவிய திங்கடோறுமழைவளஞ்சுரக்கவெங்கோன்
பொருவற்மொழிந்ததொன்னூல் பொற்பொடும் பொலிகமாதோ-

முதலாவது அத்தியாயம்.

புண்ணிய ஸ்தலதீர்த்த யாத்திராப் போதுவிதிகள்.

தர்மார்த்த, காம, மோக்ஷமென்னும் நான்குவித புருஷார்த்தங்களையும் ஓரே கிரியையில் கொடுப்பது புண்ணிய ஸ்தலதீர்த்த யாத்திரையே யென்பது சுருதி-ஸ்மிருதி புராணேதிகாசங்களாற் றெளிவாயிருக்கிறது. பாபமேமிகுந்திருக்கும் இக்கலியுகத்தில் யதோக்தமாய் விதிப்பிரகாரஞ்செய்து முடிப்பது கடினமாகையால், அவைகளின் முக்கிய கருத்தும்-சாதனமுமாகிய பக்தி என்பதொன்றை மட்டும் பரிபூரண நிலைமையில் வைத்துக்கொண்டு மிகவும் முக்கியமான அடியிற் கூறும் சிலவிதிகளை மட்டும் பின்பற்றி நடந்தால் யதோக்தமாய்ச் செய்வதினாலடையும் முழுப்பலனையும் இக்கலியுகத்திலடைந்து சற்கதி பெறுகிறார்களென்று பராசர ஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது.

ஏராளமான திரவியத்தைச்செலவு செய்து யதோக்தமாய் நடத்தக்கூடிய தனவந்தர்களை இதனால்தடுக்கவில்லை. உதாரணமாக கோதானஞ் செய்யவேண்டுமானால் தங்கத்தினாலும்—சாக்ஷாத்காரமாயுஞ் செய்வது யதோக்தமானாலும் அசக்தர்கள் கடைசி பக்ஷத்துக்கு ஒரு தேங்காயுடன் இரண்டொரு அணாவை வைத்தாவது • செய்யவேண்டுமே யொழிய, கிரியையை எக்காரணத்தாலும் விட்டுவிடக்கூடாது. பக்தி காரணமென்று கிரியாலோபஞ் செய்தால் பலனொன்றுமே கிடையாமல், முன்னிருந்த பக்தியுங் கெட்டு கர்மலோபத்தின் பாபபலனைப் பெறுகிறார்கள்.

பரிசுத்த மனதுடனும், பக்தி சிரத்தையுடனும் செய்யும் யாத்திரைகளின் பலன் பரிபூரணமாயும் நிச்சயமாயும் நிதர்சனமாயுமடைகிறார்கள் என்று, அந்தந்த புராணிகர்கள் பிரதிக்கினைகளுடன் உறுதிகூறுகிறார்கள். உதாரணமாக "ஸேதுஸ்நானம் செய்தால் பிரம்மஹத்தியாதி பாதகங்களும், பிரம்மரக்ஷஸ்யாதி சங்காதோஷங்களும் நிவர்த்தியாய் சத்கதி யடைகிறார்கள் என்னும் வாக்கியத்தின் உண்மையை என் ஸ்வானுபவத்தாலும், பிறர் பெற்றிருக்கும் புத்திரப் பேற்றினாலும் நிச்சயப்படுத்தப் படுகிறது. இக்காலத்தில் இதை நிதர்சனமாய் பரீக்ஷித்தறியப் பட்டிருக்கிறது. ஒருமுறை ஸேதுஸ்நானஞ் செய்வதால் சர்வ சங்கா தோஷங்களும் நிவர்த்தியாகி, தப்பாமல் புத்திர பாக்கியத்தை அடைகிறார்கள். யாத்திரையின் பூர்ண பலனை யடைவதற்கு மேற்கூறிய பக்தி முதலியவைகளுடன் "நம்பிக்கை" என்பதும் இன்றியமையாதது. இவைகளைப்பற்றிய அநேக புராணேதிகாசங்களைப்பற்றி எங்கெங்கும் பிரசித்தமாகையால் அவைகளைப்பற்றி இங்கெடுத்துக் கூறுவதனாவசிய மென்று விடுத்தனம்.

நான்கு வருணத்தார்கள் மட்டிலல்ல, பிறரும் அதிகாரிகளாவர். பத்னி முதலியவர்களோடிருப்பவன் பத்னியை விட்டுத் தனியாயும், விதந்து புத்திர னனுமதியில்லாமலும், சிஷ்யன் குருவி னனுமதியில்லாமலும் யாத்திரை செய்வதில் பயனில்லை. ஆனால் அப்படிப்பட்ட அநுமதி எம்மட்டில் அவசிய மென்பதையும் கண்டுகொள்ளவேண்டும்.

யாத்திரை நியமம் செய்துகொள்ளும்பொழுது யிடையில் எவ்வளவு தீர்த்த விசேடங்களுக்குச் செல்லவேண்டு மென்பதை சங்கற்பஞ்செய்து கொள்ளாவிட்டால் பாதி பலன் கிடைக்கும். கூலிக்கு யாத்திரை செய்பவனுக்கு பதினாறிலொருபங்குதான்.

குடை செருப்பின்றி யாத்திரை செய்பவனுக்குப் பூரண பலன். வாகனங்களில் செல்பவனுக்கு அரைப்பங்கு. வேறு வழியால் முடியாதவிடத்து யாசகஞ்செய்து யாத்திரை செய்தல் குற்றமாகாமல் பாதி பலன் கிடைக்கும். ஒரு ஜாமத்திற்கு மேற்படாத காலத்துக்குப் பிராமணன் ஸ்டீமர் முதலிய வற்றால் யாத்திரை செய்யலாம். மார்க்கத்திலிருக்கும் தீர்த்தவிசேடங்களைத் தவிர்த்து செல்லுதல் கூடாது. இடையில் சூதகம் முதலிய ஆசௌசங்கள் நேரிட்டால், ஒரூரையடைந்து சூதக நிவர்த்தியின் மேல், யாத்திரை செய்யவேண்டும். யாத்திரை, திருவிழா, தீர்த்தம் முதலிய விடங்களில் சண்டாளரை நேரில் தீண்டினாலன்றி மற்றப்படி தீட்டில்லை. முதல் முதல் யாத்திரை செய்வோர் விதித்த பருவகாலங்களிலன்றிப் போகலாகாது. க்ஷேத்திரத்தையடைந்ததும் தீர்த்தத்தில் இயற்கனவே கட்டியிருந்த வஸ்திரத்தோடு ஸ்நாநஞ் செய்து, வபன(க்ஷவரம் சர்வாங்கமாய்)ஞ்செய்து பின்பு பன்னிரண்டு தடவை மூழ்கி, மிருத்திகாஸ்நாநம், மந்திரவத்தான அகமருடணஸ்நாநமிவைகளுடன் தீர்த்த தர்ப்பணம் தீர்த்த சிராத்தமுஞ்செய்து ஸ்தல தரிசனமும் க்ஷேத்திரோபவாசமும் செய்வது கடமை. மூன்று இராத்திரிக்குக் குறைந்து க்ஷேத்திரவாசஞ் செய்யக்கூடாது. அதாவது பூர்ணபலன் கிடைக்காது. விசாலம், புஷ்கரம், கயா, விரஜை இவைகளில் முண்டனம் அதாவது வபனம் இல்லை. பிரயாகையில் திரிவேணி சங்கமத்தில் வேணிதானஞ்செய்யும்போது ஸ்திரீ, புருஷனுடைய தொடையிலுட்கார்ந்து கொண்டு அவனுடைய க்ஷேமத்தை விரும்பியே செய்யவேண்டும். குருக்ஷேத்திரத்தில் சூரியகிரஹணகாலத்தில் ஆயிரம்பாரம் ஸ்வர்ணத்தைத் தானஞ்செய்தபலனை பிரயாகை முண்டனத்தாலும், வேணிதானத்தாலு மடைவர். யுவதிகள் புத்திரசம்பத்தை, சேதுஸ்நாநத்தால் முன்சொன்னபடிசர்வபீடைகளும் தொலைந்து தவறாமல் அடைகிறார்கள்.

மகாதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்யும் பருவகாலங்களாவன:- சூரியகிரகணம், சந்திரகிரகணம், அர்த்தோதய மகோதயங்கள், அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிரவேசம், தை-ஆடி மாதங்கள் அகதி விசேஷம். இப்பருவகாலங்களல்லாத மற்றக்காலங்களிலும் மகாதீர்த்தங்களுக்குச் சென்றால் பருவகாலங்களிற் போலவே க்ஷேத்திரோபவாசம், ஸ்நானங்கள், வபனம், தர்ப்பணம், தீர்த்த சிராத்தங்கள் முதலிய எல்லாவற்றையு மெதோக்தமாய்ச் செய்ய வேண்டும். பிராமணர் அன்னசிராத்தமாகவும் சைவர் வைசியர் ஆமசிராத்தமாகவும் மற்றோர் ஏம சிராத்தமாகவும் செய்வது

ஸ்மிருதியுக்தம். அன்னசிராத்தமல்லாத மற்றிரண்டையுங்க்ஷேத்திரத்துள் வந்ததினமே அன்றிரவு செய்யலாம். சௌகரியப்படாவிடின் மறுநாள் செய்யாவிட்டால் சிரார்த்த லோபபாதகம் சம்பவிக்கும். மறுநாள் தவறினல் பிறகு செய்வதில் பூரண பலன் கிட்டாது. பிராமணனாயிருந்தாலும் வீடு, ஜாகை, சமையல் செய்ய சௌகரியம் முதலியவை கிடைக்காத விடத்து ஆமரூபமாயும் ஹிரண்ய (பணம்) ரூபமாயும் செய்யலாம். சிராத்தாங்கங்கள் செய்யவேண்டிய பத்ததி முதலிய பொருளல்லா விஷயங்களை இங்கெடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. அவைகளெல்லாம் அந்தந்த ஸ்தலங்களின் தொழிற்குரிய அந்தணர்களால் செவ்வனேதெரிவிக்கப்படும். தவிரவும் அச்சில்லரை விஷயங்களின் பாபபுண்ணியங்கட்கு அத்தீர்த்தவாசி பிராமணர்கள் பாத்தியமாவரேயன்றி, யாத்திரைவாளிகளுக்கின்று வாதலானுமவைகளை இங்கெடுத்துக் கூறுமல் விடுத்தனம்.

அன்ன சிராத்தத்தை மறுநாள் இரண்டாஞ்சாமமாகிறவரையில் பசியெடுக்காமலிருக்கும்படி அவ்வளவு திருப்தியாயன்னமளித்து, ஒரு மிருஷ்டான்ன சாப்பாட்டு விலைமதிப்புள்ள தக்ஷிணைக்குக்குறையாமலும் கொடுக்கவேண்டும். ஆமசிராத்தத்தில் குறைந்தது அன்னமளிப்பதின் இரட்டிப்பு மதிப்புள்ள தானியாதிகளையும், ஏம(பணம்) சிராத்தத்தில் அதற்குநான்கு பங்குக்குக்குறையாமலும் கொடுத்தாலன்றி பூர்ணபலன் கிட்டாது. தீர்த்த சிராத்தஞ் செய்யச் சக்தியில்லாதவன் யவை மா, யவை நொய்ப் பாயசம் இவற்றால் பிண்டம் போடலாம். அதற்குஞ் சக்தியில்லாதவன் உபவாசமும் தர்ப்பணமுஞ் செய்யவேண்டும். கங்கை, சேதுமுதலிய மகாதீர்த்தங்களில் தீர்த்த சிராத்தாங்கத்திலொன்றாகவே பிண்டமிட்டு அன்னதானம், சுவர்ணதானம், கோதானம், பூதானம் முதலியவைகளை அவரவர்கள் சக்திக்கியன்றவாறு செய்யாமலிருக்கக்கூடாது.

மேர்கூறியமுறைகளை விடாது க்ஷேத்திர தீர்த்தயாத்திரை செய்வதனலெய்தும் பலனாகிய தர்மம், அர்த்தம், காமம் (சுவர்க்காதி போகங்கள்) இவைகளன்றி மோக்ஷத்திற்குக் காரணமான ஞானத்தை யடைவதற்கு உபகரணங்களான சமம், தமம், விடல், சமாதானம், சகித்தல், சிரத்தையாகிய இவ்வாறினையும்பெற, யாத்திரா மார்க்க மத்தியில் எப்பேர்ப்பட்ட அரசனாகவிருந்தாலும், தனாட்டியனாக விருந்தாலும் பிறருதவியை எதிர் பாராமலிருக்க முடியாது; உதாரணமாக தஞ்சாவூர் அரசனாகிய சரபோஜிமகா

ராஜா தனுஷ்கோடியில் ஸ்நாநகட்டத்துக் கருகில் வேறுவகை யால் முடியாது இக்காலத்தில் தர்மாத்மாக்களாகவிளங்கும் நாட்டுக்கோட்டையார் தர்மசத்திரத்தில் கோமயம் பெற்றுக்கொள்ள வேண்டியவராயினர். இதுபோலவே மேற்கூறிய ஆறும் சாதாரணமாயெல்லோருக்கும் விளங்கக்கூடியதாகையால், அவ்வாறையும் பெறக்கூடியதென்றும், பெற்றபின்னர் ஞானத்தையும், ஞானத்தால் இச்சம்சாரசாகரமாகிய பிறவிக் கடலையும் படிப்படியாய்த் தாண்டி கடைசியில் நிரதிசயானந்தமான சாக்ஷாத்கார கைவல்ய மோக்ஷ சாம்பிராச்சியத்தையும் பெறுகின்றார்களென்பது திண்ணம்—திண்ணம்.

முதலாவது அத்தியாயம்

முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

ஸ்ரீ காசியாதி க்ஷேத்திரங்கள்.

கங்காதி தீர்த்தங்களின் மான்மியங்கள்.

1. ஸ்ரீ காசிமான்மியதிரிசியம்.

இருப்பிடம்:—நெடிய கடல்சூழ்ந்த இப்பூலோகத்தில் சர்வ ஜீவகோடிகளும் தெரிசித்து பந்தபாசத்தொடாறுத்து சத்கதியடையும் பொருட்டு, ஆதியந்தரகிதமாயும், பரிபூரணமாயும், துரியாதீதமாயும், சர்வத்துக்கும் சாக்ஷி பூதமாகவும், மனோவாக்குக் காயங்களாலுணரப்படாததாயும், சச்சிதாநந்தமாயும், ஒப்புயர்வற்ற ஒன்றாயாகவும், நிர்க்குண, நிஷ்களங்க, நிரவயமாயுமுள்ள ஸ்ரீபரமசிவன், சர்வசக்தி ரூபமாயும், சர்வதேஜோரூபியாயும்,சர்வஜீவதயாபரராயும், சர்வலோகரக்ஷணியாயுமுள்ள உமையவளோடுங்கூடி யெழுந்தருளியிருக்கும் சிவ க்ஷேத்திரங்கள் பலவற்றிற்கும் மேலானதாயும் அவைகளெல்லாஞ்சேர்ந்து ஒருங்கமைந்துள்ள இம்மாநகர் கங்காநதியின் பேரில் கல்கத்தாவுக்கு வடமேற்குத் திசையில் 425-மைல் தூரத்திலிருக்கின்றது.

மேலும் ஆரியாவர்த்தமென்னும் இவ்விந்து தேசத்துக்கு ஹிருதயகமலம்போல் (நடுமையும்) மத்தியில் பிரகாசிக்கின்றது. இக்காசியினின்று சற்று வடமேற்குத் திசையாய் சுமார் 120-மைலில் ஸ்ரீமத் அயோத்தியும் அங்கிருந்து சுமார் 100-மைலில் இமயமலையும் வியாபித்திருக்கின்றது.

காசிக்குத்தெற்கே இருபதுமைலிலிருந்து வடக்கே இருபது மைல் வரையில் கங்கா நதியானது தெற்கிலிருந்து வடக்காய் அதாவது உத்தரவாகினியாய் ஓடுகிறது. காசியானது கங்கைக்கு அக்கரை அதாவது மேற்குக் கரையிலிருக்கிறது. காசிப்பட்டணத்துக்கு இரண்டு பக்கத்திலும் அதாவது தெற்கில் அஸிநதியும் வடக்கில் வருணநதியும் வந்து கங்காநதியில் சங்கமமாகிறது. இக்காரணத்தால் இதற்கு "வாராணஸி" என்னும் பெயர் வாய்ந்தது. இவ்விரண்டு நதி சங்கமங்களுக்கும் மத்தியில் கங்கைநதியின் மேல்கரையில் தென்வடல் கங்காநதிக்கரையோரமாக மூன்றரை மைலும் கிழமேல் ஐந்து மைலும் கூடி $17\frac{1}{2}$ சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயிருக்கின்றது. நாளுக்கு நாள் இப்புண்ணிய புராதனநகர் விஸ்தீரணம் முதலியவற்றில் விருத்தியடைந்து வருகிறது.

நகரின் சிறப்பு:—அயோத்தி–ரோகில் கண்ட் ரெயில்வேயிலுள்ள இந்நகர் ரெயில்வே ஸ்டேஷன், ஷை அயோத்தி–ரோகில் கண்ட் ரெயில்வேயும் ஈஸ்ட் இண்டியன் ரெயில்வேயும் கூடுகிற மொகல்சிராய் ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து வடமேற்காக ஏழு மைலிலிருக்கிறது. இக்காசிமாநகருக்கு பெனாரிஸ்ஸிட்டி அல்லது காசி ஸ்டேஷனென்றும், பெனாரிஸ் கண்டோன்மெண்ட் ஸ்டேஷனென்றும் இரண்டு ஸ்டேஷன்களுண்டு. இராஜ காட்டிலிருக்கிற ஷை ஸிடிஸ்டேஷனில் யாத்திரைவாளிகள் இறங்கவேண்டும். இவ்விடத்திலுள்ள கங்காநதியின் பாலம் 3508 அடி அதாவது கொஞ்சங்குறைய முக்கால் மைல் நீளமுள்ளது.

இந்த ரெயில்வே பாலத்தில் நாட்டுவண்டிகள் போவதற்கு தனியாய் ஒருபாதையும், ஜனங்கள் நடந்து செல்வதற்குத் தனியாய் இரண்டு ஓரங்களிலும் ஒரு பாதையும் ஆக மூன்று பாதைகளிருக்கின்றன. ஷை வாராவதியின்மேல் தகரக்கூரையினால் மூடப்பட்டும் பாலத்தின் மத்தியில் அங்கங்கே பெஞ்சு முதலிய வீட்டுகளும் கங்கையிலிருந்து தண்ணீர் பைப்புகளும் வைக்கப்பட்டு உட்கார்ந்து காற்று வாங்க சுகமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. பகீரதன்தேர்க்காலிறங்கி அண்டமுடியாதஆழமுள்ள இந்நதியின் பாகத்தை இதற்கென்று ஸ்பெஷலாய் சீமையில் தயார்

செய்துகொண்டு வரப்பட்ட ஓரே ஒரு இரும்பு கர்டரால் ஓரே கண்வாயர்கச் சேர்த்து அமைத்து கட்டப்பட்டிருக்கிறது. மதிக்கமுடியாத வெகுகாலத்துக்கு முன் ஆரியர்களான நம் முன்னோர்களால் இப்போதைய பட்டணத்துக்குச் சமீபத்தில் வேறொரு நகரம் இருந்திருக்கிறதாக தெரிகிறது. சுமார் 2500 வருஷங்களுக்குமுன்னால் கௌதமபுத்தர் என்பவர் இந்நகரத்தை மத்திய ஸ்தானமாக வைத்துக்கொண்டு பௌத்த மதத்தைப் பரவச்செய்தார். எண்ணூறு வருஷம் வரையில் இந்த பௌத்த மதம் ஓங்கி வந்து மறுபடியும் பூர்வீக மதமாகிய நம்மிந்து மதமே மேம்பாடுள்ளதாய்ப் பரவிற்று. மறுபடியும் 2000 வருஷங்களுக்குப்பிறகு மகம்மது கோரி என்னும் துலுக்க அரசன் இக்காசிமா நகரைப் பிடித்துப்பீடித்து அதுமுதல் 600 வருஷம் வரையில் அவர்கள் வசமாகவேயிருந்து சுமார் 150 வருஷங்களுக்கு முன்னால் இப்போதைய நம்காருண்ணிய பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குக் கொடுக்கப்பட்டது.

அதுமுதல் நம்முடைய மதக்கோட்பாடுகளுக்கு யாதொரு இடைஞ்சலுமின்றி கொண்டாடப்பட்டுவருகிறது. இப்போதைய பட்டணத்திலுள்ள வீடுகள் எல்லாம் இரண்டுமாடி அந்தஸ்துக்குக்குறையாத கருங்கல் கட்டிடத்தாலாகியவை. அநேகம், ஆறு, ஏழு மாடிகள் வரையிலிருக்கிறது. இயற்கனவே குறிப்பிட்டிருக்கிறபடி கங்கைக் கரையோரமாயுள்ள ஹிந்து மதாசாரங்களுக்குரிய வீடிபாகமும், அதற்கு மேற்கில் வியாபார வர்த்தகங்கள், கோர்ட் முதலிய கவர்ன்மெண்டு அவுஸ்கள், ஐரோப்பியர் வாசஸ்தலம் ராணுவம் முதலியவையடங்கிய கண்டோன்மெண்டு பாகம் என இரண்டு பிரிவினையுடையதாயிருக்கிறது. நம்மவர்களுக்கு எல்லா வேலைகளும் முன் சொன்ன பாகத்திலின்றி பின் சொல்லியதிலொன்றுமில்லை. வீடிபாகமாகிய ஸ்ரீகாசிகங்காதீரத்தில் 64 (கட்டங்கள்)-காட்ஸ்களையுடையதாயும் அநேக அரண்மனைகள், உப்பரிகைகள், கோடிக்கணக்கான விலைமதியுள்ள கம்பெனிகள், ஆயிரக்கணக்கான தேவாலயங்கள், நூற்றுக்கணக்கான தர்மசாலைகள் முதலியவைகளால் நிறையப்பெற்றிருக்கிறது. ஷை கங்காதீர முக்கிய காட்ஸ்களிலொன்றாகிய டவுனுக்குமத்தியிலுள்ளதுமான பஞ்சகங்கா காட்டில் "மாடு டாஸ்காடியோஹரா" என்னும் பெயரினையுடைய இரண்டு பள்ளிவாசல்கள் ஔரங்கஜீப்பென்னும் முகம்மதிய அரசனால் கட்டப்பட்டு பட்டணமத்தியில்பட்டணத்துக்கு ஒரு அழகாக காணப்படுகின்றன. அவைகளினுயரம் 146 அடி ஆ! என்னகொடுமை! ஷை கட்டிடங்கள்

நம்முடைய ஸ்நாநகட்டங்களை இடித்தகற்களைக் கொண்டு ஷை ஒளரங்கஜீப்பினுல் கட்டப்பட்டிருக்கிறது!

இது மாத்திரமா! ஷை ஒளரங்கஜீப்பினுல் இப்போதிருக்கிற ஸ்ரீவிஸ்வேஸ்வரர் தேவாலயத்துக்குக் கிழக்கில் கட்டப்பட்டிருக்கிற ஞானவாபி மசூதியும் நம்முடைய பூர்வவிஸ்வேஸ்வரர் தேவாலயத்தை இடித்தகற்கள் முதலியவைகளால் கட்டப்பட்டிருக்கிறது!! இது மாத்திரமல்ல, அந்தத் தளவாடங்களைக் கொண்டு பூர்வவிஸ்வேஸ்வரரிருந்த அதே இடத்திலும்(கீழ்தரை) கட்டப்பட்டிருக்கிறது!!! என்ன அக்கிரமம், இவர்கள் அரசனுயிருந்து இவர்கள் கையில் பலமிருந்தால் இப்படி மதவிஷயத்தில் அக்கிரமம் செய்வது தகுதியா! அப்போது துருக்கர்கள் செய்த அக்கிரமங்களை நினைத்துக் கொண்டால் இப்பவும் உடம்பு நடுங்குகிறது. நமக்கு உயிர்ஸ்தானமாயுள்ள ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வரரே இப்பாடுபட்டிருப்பின் மற்ற ஊரிலுள்ள தேவாலயங்கள் எப்பாடு பட்டிருக்குமென்பதையும் நம் இந்துக்களை இன்னும் எத்தனை விதமாய் வருத்தியிருப்பார்களென்றும் நீங்களே ஊகித்துக்கொள்ளக்கூடும். ஆனுல் தற்காலத்திலோ, நம்மிந்து தேசத்தின் ஷை இரண்டு முக்கியமான பெரிய மதங்களிலுள்ள ராஜதந்த்ரீகமதியூகிகள் இவ்விருமதஸ்தர்களுள்ளும் பரஸ்பரம் நட்பைவிருத்தி பண்ணி சகோதரபாவனையை விளைவித்துவருவதால், நம்மிந்தியவதியின் ஜீவநாடியாகிய ஹிந்துமதம் நாளடைவில் அதன் பூர்வ பூர்ணமாசற்ற நந்நிலைமையை யெய்துமென நம்புகிறோம்.

இவ்வாறு இவர்களுள் ஒற்றுமையுணர்ச்சி யுற்பவித்து விருத்தியடைந்து வருவதின் முக்கிய காரணம் நம்மாக்ஷிமை தங்கிய பிரிடிஷ்கெவர்ண்மெண்டாரின் இங்கிலீஷ் (Western Education) படிப்பேயாதலானும், மேலும் சென்ற 1858-ம்ஸூ த்தில் நம் விக்டோரியா மகாராணியவர்களால் நமக்களித்திருக்கும் ஸ்வதந்திரங்களாலுமாகையால் நாமெப்போதும் நம் முடன்பிறந்த ராஜவிசுவாசத்தை இக்காரணத்தாலின்னுமதிகமாய் விருத்திசெய்து நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்தவ மிஷன் பாதிரிமார்கள் வருஷந்தோறும் கோடிக்கணக்கான திரவியத்தைச்செலவழித்து ஸ்திரீகள், பலசாமான்கள், உத்தியோகங்கள் முதலிய பலவகையான வலைகளால் முயன்றும் ஏதாவது பிரயோசனப்படுகின்றனவா? எவனே ஆயிரத்திலொருவன் தாழ்ந்த ஜாதியிற்பிறந்தவன் மோசம் பண்ணப்படுகிறுன், தவிரவும் மற்ஞெரு விஷயம் கவனிக்கற்பாலது. நம்மவர்களில் கடையர்களான பஞ்சமர்களை அவர்கள் ஞானப்பால்போட்டி தம்

முடன் சேர்த்துக்கொள்ளுகிறார்களே! லட்சரூபாய்க்கொடுத்தாலும் நம்மதத்தில் ஒரு கிறிஸ்தவன் சேர்த்துக்கொள்ளப்படுவனு! இவர்களது மதம் மேம்பாடுடையதாயிருக்கும் பக்ஷத்தில், தனியாயிருந்தால் யோக்கியதை குறைந்து விடுமோ? பூவோடுசேர்ந்த நாறும் நறுமணம் பெறுவதைப்போலாகவில்லையா? ஆ! என்ன பரிதாபம், நம்முடையகோயில்கள் வேதங்கள், சாஸ்திரங்கள், பிராமணர்கள், அக்கிரஹாரங்களிருக்குமிடத்தில் அல்லவாவந்து துன்பப்படுத்துகிறார்கள்! சுவாமி விவேகாநந்தரால் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தற்காலத்து நாகரீகம் மிகுதியாயுள்ள தேசங்களில் நம்மிந்துமதமே உலகத்தின் சர்வ மதங்களுள்ளும் சிலாக்கியமுடையதென்று "உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிஸ்தாபிக்கப்பட்டிருப்பதால்" இவர்களும் மகம்மதியரைப்போலவே ஹிந்துக்களிடத்தில் சகோதரபாவனேயை அதிகமாய் விருத்தி செய்து வருவது தற்கால இங்கிலீஷ் படிப்பின் முறைமையும் பிரதிப் பிரயோசனமுமாகும். மேலே சொன்ன மகம்மதியரிடமிருந்து நம் கனம்பொருந்திய பிரிடிஷ் இராஜாங்கத்தாரின் ஆளுகைக்கு வந்தகாலமாகிய சென்ற 150வருஷத்துக்குள்ளாகத்தான் இப்போதிருக்கிற ஸ்ரீவிஸ்வநாதஸ்வாமி தேவாலயமுள்பட சமஸ்த தேவாலயங்களும், வாபி, கூப, தடாகாதி தீர்த்தங்களும் தர்மசாலைகளும், சுருக்கமாக மதசம்மந்தமான ஒவ்வொரு கட்டிடமும் வர வர நாளடைவில் கட்டப்பட்டுக்கொண்டு வந்திருக்கப்பட்டிருக்கின்றனவைகளாகும். இவ்வளவு பெரிய பட்டணத்தில் மதசம்மந்தமில்லாத கட்டிடம் மான்மந்திர கண்காக்ஷிசாலை ஒன்றே ஒன்றுதான் உளது. காசியில் காணப்படும் ஒவ்வொரு லிங்கத்திற்கும் வாபி, கூப, தடாகங்கள் முதலிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு புராணேக்தப்படி தேவலோகம், பூலோகம், பாதாளலோகமென்னும் இம்மூன்று லோகத்திலுமுள்ள பிரம்மா, விஷ்ணு, ருத்திராதி சர்வ தேவதைகளும் சமஸ்ததீர்த்தங்களும் ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வரரையும், கங்கையையும் வந்தடைந்திருக்கிறதாக ஏற்பட்டிருக்கிறபடி மூர்த்திகளும் தீர்த்தங்களுமாய் ஊசிகூடகுத்த இடமில்லாமல் நிறைந்திருக்கின்றன. ஆகையால் தான் யாத்திரையாகப் போகிறவர்கள் ஒவ்வொரு மூர்த்தியையும் தீர்த்தத்தையும் சேவிக்கப்போதுமான சாவகாச காலமேற்படுத்திக் கொள்வதசாத்தியமென்று கருதியே எல்லாமூர்த்திகளும் ஒருங்கமைந்துள்ள (விஸ்வம்=எல்லாம், ஈஸ்வரன்=மேலானவன்) ஸ்ரீ விஸ்வேஸ்வரரையும் சாகராதி சமஸ்த தீர்த்தங்களையும் தன்னுள்ளடக்கிய ஸ்ரீமத் கங்கையையும் முக்கியமானதாகக்கொள்ளப்பட்டுவருகிறது. ஆனல் போதுமான சாவகாச

மேற்படுத்திக் கொண்டு அதாவது கர்ப்பவாசகாலமாகிய பத்து மாதத்துக்குக் குறையாமலிருந்தாலொழிய, ஒவ்வொரு உட்பிரிவினையாகிய யாத்திரையை செய்துமுடிக்க இயலாது. இது காரணம் பற்றியே கர்ப்பவாசகாலம் ஸ்ரீ காசியில் வாசஞ்செய்ய வேண்டுமென்பது. ஆதிவிஸ்வேஸ்வரர் தேவாலயமானது இப்போதுள்ள விஸ்வேஸ்வராலயத்துக்கு 150-கஜம் தூரத்திலிருக்கின்றது. இப்போதுள்ளவிஸ்வேஸ்வராலயம் 10-கஜசச்சவுக்கமான கருங்கல்லும் சந்திரகாந்தக் கற்களுமிழைத்ததாயும் தங்கத்தாலாகிய விமானமும் நவரத்தினக் கற்களிழைத்த ஸ்தூபியும் திரிசூலமும் விருஷபத் துவஜமுமுடையதாயிருக்கிறது. இம்மண்டபத்தின் மத்தியில் விஸ்வேஸ்வரலிங்கம் திரிசியம் சுமார் ஒருமுழம் உயரமுள்ளதாயும், முப்பட்டைகளோடு கூடினதாயும், அம்மண்டபத்தின் தளவரிசைமட்டத்துக்குட்பட்டதாயுமிருக்கிறது. இம்மஹாலிங்கம் சுத்தமான சாலிக்கிராம சிலையானபடியால் உயர்ந்த கறுநிறமுடையதாயும், எக்ஞோபவீத தாரணமுள்ளதாயும், கற்பூரஹாரத்தி செய்வித்து லிங்கச்சிலையின் ஊடே உற்றுப்பார்க்குமளவில் சுத்த சத்துவ வர்ணத்தோடுங் கூடிய விருஷபாரூடராய் ஸ்ரீபரமசிவனுமையுடன்மூர்த்தீகரித்து விளங்காநிற்கின்ருர். இம்மண்டபத்துக்கு நான்குபக்கத்திலும் வாசல்கள்; ஜனங்கள் எல்லா வாசல்களின் வழியாகவும் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருப்பார்கள். மஹாந்நியாசம், ருத்திரபாராயணம் முதலியவைகளால் அவிடமிருக்கும் விப்ராளைக் கொண்டு யதோக்தமாயும் இஷ்டப்படிக்கும் அபிஷேகம் பூஜைகளைச்செய்துகொள்ளலாம். கற்பூரஹாரத்தி, மற்ற நைவேத்தியங்கள் இவைகளுக்கேற்பட்டிருக்கிற ஒன்றுமுதல் 7 ரூ வரையிலுள்ள கட்டணங்களை அச்சந்நிதியிலிருந்து வரும் உரிமைக்காரர்களான பண்டாக்களிடத்தில் கொடுக்கவேண்டும். மற்றப்படி சாமானியமாய் பிரதிதினமும் கங்காபிஷேக நைவேத்தியாதிகளை அவரவர்கள் செய்து கொள்ளலாம்; சாதாரணமாய் ஜனங்கள் கங்காநதியில் ஸ்னானஞ்செய்து ஒரு செம்பில் கங்கையை எடுத்துக்கொண்டு அதில் ஒரு பைசா அல்லது $\frac{1}{2}$பைசாவுக்கு (இவிடம் ஒருபைசாவென்பது ஒருகாலணு) புஷ்பமும், இலந்தை, கொய்யா, மாதுளை, வில்வம் முதலிய பழங்களை (பழவர்க்கங்கள் கூடியவரை மலிவாயிருக்கும்) நிவேதனத்திற்கும் வாங்கிக்கொண்டுபோய், போகும்போதே மார்க்கத்திலுள்ள அளவிறந்த லிங்கமூர்த்திகளுக்கு ஒவ்வொருஉத்தரணி கங்கையும் ஒவ்வொரு புஷ்பமுமாக சமர்ப்பணஞ்செய்துகொண்டு போய் கடைசியில் ஸ்ரீவிஸ்வேஸ்வரருக்கு அபிஷேகம்பூஜை ஸ்தோத்திரங்களுடன்

தரிசனம் செய்து, பலாதிகளை விஸ்வேஸ்வர லிங்கத்தைச்சுற்றி லும் கட்டப்பட்டிருக்கிற விஸ்தாரமான ஸ்வர்ண ஆவுடையா ருக்குள் (சுமார் $1\frac{1}{2}$ சதுரகஜமும் ஒரு முழ ஆழமுமுள்ளது) போட்டு நிவேதனம் செய்து தக்ஷிணையையும் ஒரு பைசாவுக்குக் குறையாமல் அதற்குள் போட்டுவிடவேண்டியது. பிரபுக்கள் ஆயிரக்கணக்காயும் செலவழிப்போருண்டு.

இம்மூலஸ்தான மண்டபத்தைச் சுற்றி ஒருப்ராகாரமிருக் கிறது, அந்தப்பிராகாரத்தில் பல லிங்கங்களும், சக்திகளும் திவ்ய தேஜஸ்ஸுடன் ஜ்வலிக்கின்றன. இந்தப்ராகாரத்துக்கு வெளியில் ஞானவாபியும் முக்தி மண்டபமுமிருக்கின்றன. இந்தஞான வாபீ தீர்த்தத்தைப் புரோக்ஷணாதிகள் செய்துகொண்டு இம்முக்தி மண்டபத்தில் ஜபஞ்செய்யாதவர்களுக்கு விசுவநாதரைத்தரிசித்த பலன் கிடையாது. இந்த மூன்றாவதான வெளிப்பிரகாரத்திலும் அநேக திருநாமங்களோடுகூடிய மூர்த்திகளிருக்கின்றன. விஸ் வேஸ்வரர் ஆலயம் தனிமையாயிருக்கும்போது சிறியதாகவிருக் கிறதேயன்றி அவ்வாலயத்தைச்சுற்றி எத்தனையோ கணக்கிறந்த மூர்த்திகள் திருக்கோயில்களோடுங்கூடியிருப்பதால் அவைகளை யுஞ் சேர்த்துப் பார்த்தால் பெரிதாகவே இருக்கும். விசுவ நாதராலயத்துக்கு சுமார் 50 கஜத்தில் ஸ்ரீ அன்னபூர்ணி ஆலயமும், அங்கிருந்து 50 கஜ தூரத்துக்குள் துண்டிவிநா யகர் சந்நிதியுமிருக்கின்றது. விஸ்வநாதராலயத்தைவிட அன் னபூர்ணி ஆலயம் சற்று பெரிதாயும், வேலைப்பாடுகளுள்ளதாயும் அழகாயு மிருக்கின்றது. மேற்கூறிய முக்தி மண்டபத்திலும் அன்னபூர்ணி ஆலயத்திலும் நான்கு பக்கங்களிலு முள்ள மண்டபங்களில் புராணாதி சிரவணங்கள் நடத்து கொண்டி ருக்கின்றன. ஷை இரண்டு ஆலயங்களும் சென்ற நூற்றாண் டில் புனா அரசனால் கட்டப்பட்டவை; அவைகள் தசாஸ்வமேத கட்டத்துக்குச் சமீபம், அங்கிருந்து அரை மைல் தூரத்தில் நாட்டுக்கோட்டை செட்டிப் பிள்ளைகளால் மிக சிரத்தை யுடனும் அழகுடனுங்கட்டப்பட்ட ஸ்ரீ விசாலாக்ஷி தேவாலய மிருக்கின்றது. இவ்வாலயம் மீர்காட்டில் தனியாகவிருக்கிறது.

பட்டணத்தின் தென்கோடியான துர்க்கா காட்டிலுள்ள அழகான குளத்துடன் கூடிய துர்க்கையம்மன் தேவாலயமும் சென்ற நூற்றாண்டில், பவானி என்னும் மராட்டி ராணியால் கட் டப்பட்டது. காசியில் தென்னாட்டைப்போல் பிரம்மோற்சவங்க ளாவது மற்றசில்லறை உற்சவங்களாவது கிடையாது. இவைகளை

தான் இக்காசியில் பெயர்போன சந்நிதிகள். பூர்வகாலத்தில் இந்த சந்நிதிக்கு நரபலிகள்கூட கொடுத்துவந்தார்கள். அந்த கொடுமைகளையெல்லாம் நம்காருண்ய கெவர்ண்மெண்டார் நிறுத்தி விட்டார்கள்.

கங்காதீரத்தில் கட்டப்பட்டிருக்கிற முன் சொன்ன 64 காட்களில் எதுவும் அதிக (கிலமாய்) பழயதாயில்லை நதியின் பிரவாகத்தினால் எந்தகாட்டும் இரண்டொருதலைமுறைக்கு மேல் நிலைப்பதில்லை. ஷை காட்ஸ் 64 லும் முக்கியமானவை ஐந்தேயாகும். 1. தசாஸ்வமேத காட். 2. அஸிஸங்கம் காட். (அஸிநதி கங்கையில் கலக்குமிடம்) 3. மணிகர்ணிகா காட். 4. பஞ்சகங்கா காட். 5. வருணசங்கமகாட் அதாவது வருணைநதி கங்கையிற் கூடுமிடம். தசாஸ்வமேத காட்டென்பதற்கு சதுர்முகப் பிரம்மா சிவபிரானுடைய அனுக்கிரகத்தால் இந்த இடத்தில் தசம்=பத்து, அஸ்வம்=குதிரை, தசாஸ்வமேதமென்றயாகஞ் செய்தமையால் காரணப்பெயராயிற்று. மணிகர்ணிகா காட், இந்தக்கட்டத்தில் மணி=இரத்தினம், கர்ணம்=காது, சிவனுடைய காதின் குண்டலம் இவிடத்தில் நழுவிவிழுந்தமையாலிப் பெயர்வாய்ந்தது. இந்த காட்டில்தான் காசிமரணமடைந்தோரை தகனஞ் செய்யவேண்டும். இரண்டாவதாக ஹரிச்சந்திர காட்டிலும் செய்யலாம். வருண சங்கமகாட்—இதில் வருணாநதியும் கங்கா நதியும் சங்கமமாகுமிடம். கூபம்=கிணறு ரூபமாயிருக்கப்பட்ட தீர்த்தங்களில் முக்கியமானவை :— இயற்கனவே சொன்ன ஞானவாபி 1. இதில் பரமசிவன் சதாவசித்துக்கொண்டிருக்கிறார். இரண்டாவது அமிருதகுண்டம். இதின் தீர்த்தப் பிராசனத்தினாலும் புரோக்ஷணத்தினாலும் தேகத்தினமேரிலுள்ள தோலைப்பற்றிய சமஸ்த வியாதிகளும் (குஷ்டரோகமுள்பட) தீர்ந்து தீர்க்காயுசைத் தருகின்றது. மூன்றாவது 'நாககுண்டம்,' எப்பேர்ப்பட்ட பாம்புகடி முதலிய விஷசம்மந்தமான ரோகங்களெல்லாம் இத்தீர்த்தத்தின் பிராசனாதிகளால் பஞ்சாய்ப் பறந்து விடுகின்றன. தவிரவும் இதில்ஸ்நாநம் பண்ணினவர்களை பாம்பு=நாகசர்ப்பம்=தீண்டினாலும் விஷம் ஏறாது. இவ்விடத்தில் வருஷத்துக்கொருமுறை நடக்கும் உற்சவ சமயத்தில் காசியிலுள்ள அனைவரும் வந்து ஸ்நானம் செய்கிறார்கள். புண்ணிய தடாகங்களில் முக்கியமானவை.—மணிகர்ணிகா தடாகதீர்த்தம், இது மணிகர்ணிகை கட்டத்துக்குச் சமீபத்திலுள்ளது. இதில் காசிக்குப் போகும் எந்த யாத்திரிகர்களும் எவ்வளவு அவசரமாயிருந்தாலும் ஸ்நானம் செய்யவேண்டியகடமை. பைசாசமோசன

தீர்த்தம், அதற்குச் சமீபத்திலுள்ள அகஸ்திய குண்டம் இவைகளில் வருஷத்துக்கொருதரம் காசியிலிருப்போரும், பைசாசபாதைகளால் பீடிக்கப்பட்டு வெளியிலிருந்துவருவோரும் தவருமல் ஸ்நாநம் செய்துவர், மற்றவர்களும் ஸ்நாநம் செய்வதால் பைசாச பாதைகளணுகாவண்ணம் ஒரு ரக்ஷாபந்தனமாகிறது.

ஸ்ரீ காசியிற் செய்யவேண்டிய முக்கிய யாத்திரைகள்.

கர்ப்ப வாசகாலம் காசிவாசியாயிருந்து செய்ய வேண்டிய யாத்திரைகள் இருபத்து நான்கு வகையுள்ளனவாயிருந்தாலும் அவ்வளவு சாவகாசம் பெரும்பான்மையோருக்குக் கிடையாமை பற்றி அன்னோர்களுக்கு மிகவும் அத்தியாவசியக (முக்கியமான) யாத்திரைகள் நித்திய யாத்திரையும் பஞ்சக்ரோச யாத்திரையுமாகிய இரண்டேயாம். மேற்கூறிய இருபத்துநான்கு வகை யாத்திரைகளும் அவைகளின் பலாபலங்களும் அடியிற் குறித்தவாறு காண்க:—

1. நித்திய யாத்திரை—தருமார்த்த காமியங்கள்.

2. பஞ்சக்ரோஸ யாத்திரை—க்ஷேத்திரத்திற் செய்த சர்வ பாப நிவர்த்தி.

3. அஷ்ட பைரவ யாத்திரை—க்ஷேத்திரத்திற் செய்த சர்வ பாப நிவர்த்தி. (பஞ்சக்ரோஸ யாத்திரை செய்யமுடியாத சந்தர்ப்பத்தில் இது செய்யத்தகுந்தது).

4. அறுபத்து நான்கு யோகினி யாத்திரை:—உடனே புத்திர லாபம்.

5. ஸப்தாவரண விநாயகர் யாத்திரை—சர்வவிக்கின நிவர்த்தி.

6. ஸப்தப்பிரகாரத்துக்கும் மத்தியிலுள்ள விநாயகர் யாத்திரை—சகல விக்கின நிவர்த்தி பலன்.

7. திதி வார யோகங்களிற் செய்யும் யாத்திரை—தேகாதி பகிர்முக தொண்ணூற்றறு வகை சித்திகள்.

8. ஏகாதச மகாருத்திரயாத்திரை—க்ஷேத்தி ரோச்சாடன பய நிவர்த்தி.

9. அந்தர்க்கிரகயாத்திரை—இம்மைமறுமை சௌக்கிய பலன்

10. சப்தரிஷி யாத்திரை—சகல புண்ணிய பலன்.

11. ஸைலேஸ்வரர் முதல் பதினன்கு ஸ்தல யாத்திரை—ஸாயுச்சிய முத்தி.

12. துவாதசாதித்திய யாத்திரை—சமஸ்தரோக நிவர்த்தி.

13. ஸப்தபுரி யாத்திரை—யமபயங்கர நிவர்த்தி.

14. ஓங்காரேஸ்வரர் முதல் பதினன்கு ஸ்தலயாத்திரை—சிவலோகப்பிராப்தி.

15. அஷ்ட மஹாலிங்க யாத்திரை—ஆயிரத்தெட்டு குற்றங்கள் நிவர்த்தி.

16. அமிருதேஸ்வரர் முதல் பதினன்கு ஸ்தல யாத்திரை—ஸாயுச்சிய பிராப்தி.

17. தக்ஷிண திக்கிற் செய்யும் யாத்திரை—துரிய ஞானப் பிராப்தி.

18. நவ கௌரீ யாத்திரை—ஸர்வ ஸௌபாக்கிய பலன்.

19. நவதுர்க்கை யாத்திரை—சர்வ காரிய ஸித்தி.

20. வடதிக்கு யாத்திரை—சென்ற ஜென்மங்களின் பாப நிவர்த்தி,

21. பஞ்சதீர்த்த யாத்திரை—ஸாரூபபதவி பிராப்தி பலன்.

22. மாதந்தோறும் திதிகளிற் செய்யவேண்டிய யாத்திரை—கைவல்ய முத்தி, ஞான விசேஷ பலபிராப்தி.

23. வார யாத்திரை—சர்வாரிஷ்ட நிவர்த்தி பலன்.

24. யோகயாத்திரை—அணிமாதி அஷ்டயோகபலப்பிராப்தி.

காசிவாசியாய் காசியில் 10ஸ்ரீ தங்கியிருந்து மேற்கூறிய இருபத்து நான்கு வகையாத்திரைகளும் செய்ய வேண்டியவர்களாயிருக்க, சீக்கிர காலத்தில் திரும்பவேண்டியவர்கள் முதலில் சொன்ன இரண்டு யாத்திரைகளைமட்டும் யதோக்தமாயும் அந்தரங்க சுத்தியாயும் செய்தால் மற்ற 22 வகை யாத்திரைகளும் அவைகளுள்ளடங்கி எல்லா யாத்திரைகளும் செய்த பூர்ண பலத்தை அடைகிறார்கள். இதில் எவ்வளவும் சந்தேகம் வைப்பவர்களுக்கு சத்கதிகிடைப்பதரிது. இது சத்தியம்; இந்தப்படி சூதமாமுனிவன் பிரதிஞ்ஞைசெய்து காசிகண்டத்திலும் வாராணவசி மாகாத்மியத்திலும் கூறியிருக்கிறார்.

ஆனாலும் ஷை நித்தியயாத்திரை, பஞ்சக்ரோஸ்யாத்திரைகளுடன், பஞ்சக்ரோஸ்யாத்திரையை யதோக்தப்படி செய்ய எந்தக் காரணத்தாலாவது வாஸ்தவமாய்ச் சக்தியற்றவர்கள் யதோக்த பஞ்சக்ரோஸயாத்திரையின் பலனையடையும் பொருட்டு அதற்குச் சமமான அஷ்டபைரவயாத்திரையையும், புத்திரசம்பத்தில்லாதயுவதிகள் புத்திரசம்பத்தையடையும்படியான அறுபத்து நான்கு யோகினியாத்திரையும், எடுத்தகாரியம் கைகூடும்படியான ஸப்தாவரண விநாயகர்யாத்திரையும் இங்கு தர்ஜிமா செய்தெழுதப்படுகின்றன. மிகுந்த யாத்திராக்ரமங்களை அபேக்ஷிக்கும் காசிவாசிகள் அவிடம் பெரியவாளிடம் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். அப்படி அபேக்ஷிக்கக்கூடிய காசிவாசஞ்செய்யும் விருப்ப முடையயாத்திரைவாளிகள் நூற்றுக்கொருவர்கூட இருப்பதரிதாகையால் அவைகளுக்காக இங்கு இடத்தை வீணாக்காமல் மேற்குறித்த் ஐந்துவகை முக்கிய யாத்திரைகளை மட்டும் அடியிற் கூறுகின்றோமாயினம்.

முதலாவது:—நித்திய யாத்திரை.

பஞ்சபஞ்ச உஷக்காலத்தில் துயிலெழுந்து கங்கைமா நதியின்கண் ஹுளதாயமணிகர்ணிகா காட்டில் யதோக்தமாய்ஸ்நானஞ்செய்து ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வரர் சந்நிதானத்திலுள்ள ஞானவாபிக்குப்போய் அங்கிருக்கும் பிராமணர்களால் சங்கல்பம் சொல்லக் கேட்டுக்கொண்டு யாத்திரை செய்யவேண்டியமுறை அடியில்வருமாறு:—

1. ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வரர், 2, பிந்துமாதவர், 3, துண்டிமகாகணபதி, 4, தெண்டபாணி, 5, காலபைரவர், 6, காசி, 7, குகை 8, கங்கா (பகீரதகங்கை வருவதற்கு முந்தியேயுள்ளது) 9, பவானி, 10, மணிகர்ணிகா இந்த பத்து சன்னிதானங்களையும் மேற்சொன்ன வரிசைப்படி கிரமமாய் தரிசனுதிக்ள் செய்யவேண்டியது சுலோகம்:—விஸ்வேசம், மாதவம், துண்டிம், தண்டபாணிஞ்ச, பைரவம், வந்தேகாசீம், குஹாம், கங்காம், பவானீம், மணிகர்ணிகா.

இவைகளைச்சுற்றி வருவதற்கு சுமார் 3 மைலாகும், இதற்கு வாஸ்தவத்தில் சக்தியற்றவர்கள் அடியிற்கூறும் (எல்லாஞ்சேர்ந்து அரைமைலுக்கு மேலாகாது) மற்றோர்வித நித்திய யாத்திரையை யதோக்தமாய்ச் செய்வதனாலேதே பலனையடைகிறார்கள்.

1.	ஆதித்தியாயநம:	அக்ஷயவடம்
2.	த்ரௌபதியேநம:	ஷை
3.	விஷ்ணுவேநம:	விஸ்வேஸ்வரருக்குச் சமீபம்
4.	தண்டபாணியேநம:	ஞானவாவிக்குமேற்கு
5.	மஹேஸ்வராயநம:	ஞானவாவிக்குத்தென்மேற்கு
6.	துண்டிராஜாயநம:	துண்டிமஹாகணபதி
7.	ஞானவாபியேநம:	முன்சொன்னஞானவாவி
8.	நந்திகேஸ்வராயநம:	ஞானவாவிக்குக்கிழக்கு
9.	மஹாகாலேஸ்வராயநம:	ஷை
10.	தாரகேஸ்வராயநம:	ஞானவாவிக்குத்தென்கிழக்கு
11.	புனர்தண்டபாணியேநம:	முன்சொன்னதெண்டபாணி
12.	விஸ்வேஸ்வராயநம:	சர்வப்பிரசித்தம்
13.	அன்னபூர்ணியேநம:	ஷை

இரண்டாவது

பஞ்சக்ரோஸ யாத்திரை.

காசியாத்திரை செய்யும் ஒவ்வொருவரும், ஸ்ரீகாசியில் காசி வாஸியாயிருந்த காலத்தில் மனோவாக்குக்காயங்களாற் செய்தபாவங்களைப்போக்கி காசிவாஸபூர்ண பலனையடையும் பொருட்டு ஒவ்வொருவரும் தப்பாமல் இந்த யாத்திரை செய்யவேண்டும். மற்ற க்ஷேத்திரங்களில் செய்த எல்லாபாபங்களும் புண்ணிய க்ஷேத்திரத்தில் நீங்குகின்றன, புண்ணிய க்ஷேத்திரங்களிற் செய்தவை காசியில் நிவர்த்தியடைகின்றன; காசியில் செய்த பாவங்களோவென்றால் இப்பஞ்சக்ரோஸ யாத்திரையால் பறந்து விடுகின்றன, எவ்வளவு சிஷ்டாசார சீலமுடையவனாயிருந்தாலும் தேகசம்பந்தமான உபாதிகளைக் கழிப்பதுமுதலிய பாவங்களைச் செய்யாமலிருக்கமுடியாது. ஆகையால் இந்தயாத்திரை செய்யாதவர்களுக்கு காசிவாஸபலன் முற்றிலும் கிடைக்காது. இந்தயாத்திரையால் ஸ்ரீகாசி பட்டணத்தை பிரதக்ஷணம் செய்வதில் ஐந்து க்ரோஸ தூரம் மொத்தத்தில் கூடுதலாகிறபடியால் இப்பெயர் வாய்ந்தது; மேலும் இந்த யாத்திரையை யதோக்தமாய்ச் செய்து முடிப்பதற்கு ஐந்து நாளானாலும், அவசரமுடையவர்களும், சக்தியுடையவர்களும் எவ்வளவு சீக்கிரமாகவாயினும் செய்யலாம். ஆனலிது மத்திமம். அரசர்கள், பிரபுக்கள், ஆசாரியாள், முதலியவர்களும் வியாதிஸ்தர், துர்ப்பலமுள்ளவர்கள், குழந்தைகள் முதலியவர்களும், வாகனங்கள் மூலமாய் யாத்திரை செய்யலாம். எந்த விதத்திலும் இந்த யாத்திரை செய்யத் தவறக்கூடாது. இந்த யாத்திரை செய்ய ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களே உத்தமம்; மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் மத்திமம், இவைகளையனுசரித்து இப்பிராந்தியங்களினின்றும் காசி யாத்திரை செய்யப்புறப்படுகிற புண்ணியாத்மாக்களும் யாத்திரை தொடங்குவது எல்லா விஷயங்களுக்கும் சௌகரியமாயிருக்கின்ற தென்பதையும் இங்கெடுத்துங் கூறலாயிற்று. இப்பஞ்சக்ரோஸ யாத்திரை செய்யஉத்தேசிக்கிறதினத்திற்கு முதல் நாளில், சர்வவல்லமையும் மஹிமையும் பொருந்தியவும் சர்வ காரிய ஸித்தியையுமளிக்கவல்ல ஸ்ரீ துண்டிராஜ மகாகணபதிக்கு அன்புடனும் மிக்கபக்தி சிரத்தையுடனும் இருபத்தொருமோதகத்துக்குக் குறையாமல் மோதக நிவேதனஞ்செய்து கிரமப்படி தரிசித்து வணங்கி அன்றையதினம் ஹவிஸ்போஜனமும் நித்திரையுஞ் செய்து, மறுநாள் உஷக்காலத்தில் கங்காஸ்நானஞ்

செய்து விஸ்வேஸ்வரர், அன்னபூரணியைத் தரிசித்து முக்தி மண்டபத்திற்குப் போய் அவிடத்துள்ள வேதியர்களால் சங்கற்பஞ்செய்துகொண்டு ஏழைகளுக்கியன்ற மாத்திரம் தருமங்களைச் செய்து சர்வஜீவகருணை யமுதவாரிதியனைய ஸ்ரீ அன்னபூர்ணி சமேதவிசுவேஸ்வரரை மனதில் நீங்காமல் தியானித்துக் கொண்டு ஸ்ரீவிஸ்வேஸ்வரரையும் அன்னபூர்ணி தேவியையும் யதோக்தமாய் பிரதக்ஷிண நமஸ்காரங்களுடன் தரிசித்துக் கொண்டு அங்கிருந்து தண்டபாணீஸ்வரரையும், பைரவக்கடவுளையும் தரிசித்துக்கொண்டு, தடஸ்தமாய் சமுத்திரம் போல புஷ்ப வகைகளால் நிறைந்துள்ள—இது காரணம் பற்றியே ஸ்திரீ ஜாதிகள் முதலானவர்கள் காசியிலுள்ள கங்கையை சமுத்திரமென்றும் ஓட்டமில்லையென்றும் எண்ணியிருக்கிறார்கள் போலும். பரமசிவனது ஆக்ஞையினால் இக்காசி பஞ்சக்ரோஸத்துக்குள் இம்மாதிரி பகிர்முகத்தில் தடஸ்தமாயிருக்கும்படியா (யாத்திரிகர்களாய் வந்து ஸ்நாநஞ்செய்யும் குழந்தை குட்டிகள் முதலானவர்களுக்கனுகூலமாயிருக்கும் பொருட்டு)யும் அந்தர்வாகினியாய் சலித்துக்கொண்டு மிருக்கிறாள். மேலும் கங்கையானவள் தேவலோகத்தினின்றும் பரமசிவன் திருச்சடையாகிய இமயமலையினின்றும் அதிவேகமாய்ப் பிரவகித்துவர ஸ்ரீகாசியினருகில் வரவும் பயபக்தி விசுவாசத்துடன் பொறுமையாயிருக்கிறாளென்றும் அறிக. மணிகர்ணிகையில் ஸ்நாநஞ்செய்து அவிடத்துள்ள மணிகர்னிகேஸ்வரரையும், சித்திவிநாயகரையும் தரிசித்துக்கொண்டு கங்கைக் கரைமார்க்கமாய் தெற்காக நோக்கி ஸ்ரீகாசியம்பதியை பிரதக்ஷிணஞ் செய்துகொண்டு போகும் போது மார்க்கத்தில் தெரிசிக்கவேண்டிய ஸ்தலங்கள், மூர்த்திகள், தீர்த்தங்கள் முதலியன.

1.	மணிகர்னிகாயநம:	மணிகர்னிகைகட்டம்
2.	மணிகர்னிகேஸ்வராயநம:	ஷை
3.	சித்திவிநாயகாயநம:	ஷை
4.	கங்காகேசவாயநம:	லளிதாகட்டம்
5.	லளிதாதேவியைநம:	ஷை
6.	ஜாரஸந்தேஸ்வராயநம:	மீர்கட்டம்
7.	சோமேஸ்வராயநம:	மான்மந்திரம்
8.	தாலப்யேஸ்வராயநம:	ஷை
9.	சூலடங்கேஸ்வராயநம:	தசாஸ்வமேதகட்டம்
10.	ஆதிவராகேஸ்வராயநம:	ஷை
11.	தசாஸ்வமேதேஸ்வராயநம:	ஷை

12.	விந்திதேவியேநம:	தஸாஸ்வமேதகாட்
13.	சர்வேஸ்வராயநம:	பாடேகட்டம்
14.	கேதாரேஸ்வராயநம:	கேதாரகட்டம்
15.	ஹனுமந்தேஸ்வராயநம:	ஹனுமந்தகட்டம்
16.	லோலார்க்காயநம:	பதியினிகட்டம்
17.	அர்க்கவிநாயகாயநம:	ஷை
18.	சங்கமேஸ்வராயநம:	அஸிசங்கமம்
19.	துர்க்கைவிநாயகாயநம:	ஷை
20.	துர்க்கைய்தேவியேநம:	ஷை
21.	விஷ்வக்ஸேனேஸ்வராயநம:	மார்க்கத்தில்

முதலாவது நாள்
தங்குமிடம்:—கர்த்தமஹேஸ்வரம்.

1.	கர்த்தமஹேஸ்வராயநம:	கர்த்தமஹேஸ்வரம்
2.	கர்த்தமதீர்த்தாயநம:	ஷை
3.	கர்த்தமகூபாயநம:	ஷை
4.	சோமநாதயநம:	ஷை
5.	விருபாக்ஷாயநம:	எதிர்ப்பக்கத்தில்
6.	நீலகண்டாயநம:	ஷை
7.	நாகநாதாயநம:	ஷை
8.	சாமுண்டாயநம:	ஷை
9.	மோக்ஷேஸ்வராயநம:	தோட்டத்தில்
10.	கருணேஸ்வராயநம:	ஷை
11.	வீரபத்ரேஸ்வராயநம:	எதிரில்தோட்டத்தில்
12.	விகடாக்ஷதுர்க்காயநம:	ஷை
13.	உன்மத்தபைரவாயநம:	ஷை
14.	நீலகணாயநம:	ஷை
15.	காடகூடாயநம:	ஷை
16.	விமலதுர்க்காயைநம:	எதிர்ப்பக்கத்தில்
17.	மஹாதேவாயநம:	ஷை
18.	நந்திகேஸகணாயநம:	ஷை
19.	பிருங்கிரிஷகணாயநம:	எதிர்தோட்டத்தில்
20.	கணப்பிரியாயநம:	ஷை
21.	விருபாக்ஷாயநம:	கௌராக்கௌ
22.	யக்ஷேஸ்வராயநம:	ஷை

23.	விமலேஸ்வராயநம:	ஷை
24.	மோக்ஷதாயைநம:	ஷை
25.	ஞானதேவாயநம:	கௌராக்கௌ
26.	அமிர்தேஸ்வராயநம:	ஷை
27.	கந்தர்வசாகராயநம:	பீமசண்டிதோட்டத்தில்

இரண்டாவது நாள் தங்குமிடம்:—பீமசண்டி.

1.	பீமசண்டிதேவியைநம:	பீமசண்டி
2.	சண்டவிநாயகாயநம:	ஷை
3.	ரவிரக்தாக்ஷகந்தர்வாயநம:	ஷை
4.	ஈரகாரணவதாரக சிவாயநம:	ஷை
5.	ஏகபாதகணாயநம:	ஷை
6.	மஹாமீயாயநம:	எதிரில் தீர்த்தக்கரையில்
7.	பைரவாயநம:	எதிரில் தோட்டத்தில்
8.	பைரவ்யைநம:	ஷை
9.	பூதநாதாயநம:	எதிரில்
10.	சோமேஸ்வராயநம:	ஷை
11.	விந்துசாகராயநம:	பிரஸித்தம்
12.	காலநாதாயநம:	ஷை
13.	கீர்த்தீஸ்வராயநம:	எதிரில்
14.	காமேஸ்வராயநம:	ஷை
15.	கணேஸ்வராயநம:	ஷை
16.	வீரபத்திராயநம:	சவுக்கண்டியில்
17.	சாருமுகாயநம:	ஷை
18.	கணநாதாயநம:	ஷை
19.	தேகலிவிநாயகாயநம:	பிரசித்தம்
20.	ஷோடஸவிநாயகாயநம:	ஷை
21.	உத்தண்டவிநாயகாயநம:	புடவித்தோட்டத்தில்
22.	ருத்ராண்யைநம:	எதிரில்
23.	உத்கலேஸ்வராயநம:	ஷை
24.	தபோபூமியைநம:	ஷை
25.	வருணாதீர்த்தாயநம:	இராமேஸ்வரம்

மூன்றாவது நாள் தங்குமிடம்:—இராமேஸ்வரம்.

1.	இராமேஸ்வராயநம:	இராமேஸ்வரம்
2.	சோமேஸ்வராயநம:	ஷை
3.	பரதேஸ்வராயநம:	ஷை
4.	இலக்ஷ்மணேஸ்வராயநம:	ஷை
5.	சத்ருக்னேஸ்வராயநம:	ஷை
6.	த்யாவாபூமீஸ்வராயநம:	ஷை
7.	நகுலேஸ்வராயநம:	ஷை
8.	அஸம்க்யாததீர்த்தேஸ்வராயநம:	வருணைநதிக்கரையில்
9.	அஸம்க்யாதலிங்கேஸ்வராயநம:	ஷை
10.	தேவஸந்தேஸ்வராயநம:	கமோராவில்
11.	பாஸ்பாணிவிநாயகாயநம:	ஓனில்
12.	பிருதிவீஸ்வராயநம:	கசுரியில்
13.	ஸ்வர்க்கபூமியைநம:	ஷை
14.	பூபசரேஸ்வராயநம:	தீனதயாளாவில்
15.	விருஷபத்வஜதீர்த்தாயநம:	கபிலதாரையில்

நான்காவது நாள்
தங்குமிடம்:—கபிலதாரையில்.

1.	விருஷபத்வஜாயநம;	கபிலதாரை
2.	ஜ்வாலாநரசிங்காயநம:	ஷை
3.	ஆதிகேஸவாயநம:	ஷை
4.	ஸங்கமேஸ்வராயநம:	ஷை
5.	கர்வவிநாயகாயநம:	ஷை
6.	ஆதிவராகாயநம:	ஷை
7.	ப்ரஹ்லாதேஸ்வராயநம:	பிரஹ்லாதகட்டம்
8.	த்ரிலோசனேஸ்வராயநம:	திரிலோசனகட்டம்
9.	பஞ்சகங்காயைநம:	பஞ்சகங்காகட்டம்
10.	பிந்துமாதவாயநம:	பிந்துமாதவகட்டம்
11.	வஸிஷ்டவாமதேவாயநம:	ஸங்கடாகட்டம்
12.	பர்வதேஸ்வராயநம:	ஷை
13.	மஹேஸ்வராயநம:	மணிகர்ணிகாகாட்

14.	சப்தாவரணவிநாயகாயநம:	பிரமனுல்
15.	சித்திவிநாயகாயநம:	பிரசித்தம்
16.	ஜடபஞ்சாக்ஷரஸித்திநாயகேநம:	ஷை
17.	மணிகர்ணிகையே நம:	பிரசித்தஸ்நாநம்
18.	முக்தி மண்டபாய நம:	பிரசித்தம்
19.	விஷ்ணுவே நம:	ஷை
20.	தண்டபாணியே நம:	ஷை
21.	துண்டி மகாகணபதிராஜாய நம:	ஷை
22.	பைரவாய நம:	ஷை
23.	ஆதித்தியாயநம:	ஷை
24.	விஸ்வேஸ்வராய நம:	ஷை
25.	மோதாதி பஞ்ச விநாயகாய நம:	ஷை
26.	அன்னபூர்ணியே நம:	ஷை
27.	சாக்ஷிவிநாயகாய நம:	ஷை

ஷை பஞ்ச க்ரோஸயாத்திரை ஆக மொத்தம் நாற்பத்தொரு மைல். இந்தயாத்திரை ஸ்ரீகாசியில் நிவர்த்தியில்லாமல் செய்யக்கூடிய மனோவாக்குக் காயங்களின் பாப நிவர்த்திக்காகவாதலான், இந்த யாத்திரை முடிந்து ஸம்பூர்ணமானவுடனேயே ஸ்ரீகாசியில் தங்காமல் ஸ்ரீகாசி விஸ்வேஸ்வர ரனுமதியுடனும் கிருபாகடாக்ஷத்துடனும் ஸ்ரீகாசியைவிட்டு பிரயாணம் செய்யவேண்டியது. தங்கினுல் மறுபடி இந்தப்பஞ்சக்ரோஸ யாத்திரை செய்யவேண்டும்.

மேலும் ஸ்ரீ காசியில் இம்மூன்று லோகத்து தீர்த்தங்கள் மூர்த்திகளு மடங்கியிருப்பதால் பஞ்சக்ரோஸ விஸ்தீரணமுள்ள இக்காசியை பிரதக்ஷிணஞ்செய்வதால் இம்மூன்று லோகங்களையும் பிரதக்ஷிணஞ்செய்த பலனைக் கொடுக்கின்றது.

இந்த யாத்திரையை கிரமப்படி மேற்சொன்ன எல்லா மஜிலிகளிலும் தங்கிச்செய்ய சாவகாசமில்லாத சந்தர்ப்பத்தில், ஒரு ராத்திரி வாசஞ்செய்வோன் இராமேஸ்வரத்திலும், இரண்டு ராத்திரி வாசஞ்செய்வோன் பீமசண்டியிலும், இராமேஸ்வரத்தும், மூன்று ராத்திரி வாசஞ்செய்வோன் துர்க்காகுண்டம், பீமசண்டி, இராமேஸ்வரத்தும் நான்கு ராத்திரி வாசஞ்செய்வோன் கர்த்தமேஸ்வரம், பீமசண்டி, இராமேஸ்வரம், கபிலதாரையிலும், ஏழு ராத்திரி வாசஞ்செய்வோன் 1. துர்க்காகுண்டம், 2. கர்த்தமேஸ்வரம் 3. பீமசண்டி, 4. தெகலிவிநாயகர்,

5. இராமேஸ்வரம், 6. பாஸ்பாணி விநாயகர், 7. கபிலதாரை இவ் விடங்களிலும் வரிசைக் கிரமமாய் வாஸஞ்செய்து சம்பூர்ணஞ் செய்யவேண்டும்.

மேலும் காசிவாஸியாக காசியிலேயே நிலையாய் வசித்துக்கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு மாதத்து சுக்லபக்ஷ ஏகாதசி முதல் கிருஷ்ண பக்ஷத்து பஞ்சமிக்குள்ளாகச் செய்வது சௌகரிய மானதாயிருக்கிறது. அல்லாத பக்ஷத்து வேறெந்த திதியிலாவது அதாவது ஒரு மாதத்துக்கொருமுறை தவறாமல் செய்யவேண்டும்.

மூன்றாவது
அஷ்டபைரவர் யாத்திரை.

பஞ்சக்ரோஸ யாத்திரையை ஏந்தக்காரணத்தாலாவது செய்ய முடியாமற் போனால், அதற்குச்சமமான பல பிராப்தியைக் கொடுக்குமிந்த யாத்திரையை ஒவ்வொருமாதத்தின் அஷ்டமி, சதுர்த்தசியில் செய்வது இக்ஷேத்திரத்திற் செய்த சகல பாப நிவர்த்தி பலன். ஆனால் மனப்பூர்வமாயும், வாஸ்தவமாயும் ஷைபஞ்சக்ரோஸ யாத்திரையை செய்யமுடியாமற் போகும் சந்தர்ப்பத்திலல்லது சாமானிய காலத்தில் அப்பலனைக் கொடுக்காது.

1.	இிருபைரவாயநம:	ஹனுமான் காட்
2.	சண்டபைரவாய நம:	துர்க்காகுண்டம்
3.	அஸிதரங்க பைரவாய நம:	விருத்தகாலம்
4.	கபால பைரவாய நம:	லாட்டு பைரவர்
5.	க்ரோதன பைரவாய நம:	காமாக்ஷாமே
6.	உன்மத்த பைரவாய நம:	பீமசண்டிதெருவில்
7.	ஸம்ஹாரபைரவாய நம:	திரிலோசனஸங்கமம்
8:	பீஷண பைரவாய நம:	பூதபைரவர்

இதுவும் முடியாத பக்ஷத்தில் ஸ்ரீ அன்னபூர்ணியம்பிகையை 1008- முடியாவிட்டால் 108 பிரதக்ஷணமாவது கடைசி, அதமாதமபக்ஷமாகச் செய்து காசியிற்செய்த இன்றியமையா பாபத்தை நிவர்த்தித்துக்கொள்ளல்வேண்டும். பஞ்சக்ரோஸ யாத்திராபலன் அவ்வளவு அவசியமானபடியால் அதற்கு இம்மாதிரி படித்தர

முள்ள மூன்று பரியாயயாத்திரைகள் ஏற்படுத்தப்பட்டன வென்பதையும், மனப்பூர்வமாய் அசக்தராயிருந்தாலொழிய மற்றது பிரயோசனப்படாதென்றும் தெரிந்துகொள்க.

நான்காவது

அறுபத்திநான்கு யோகினி யாத்திரை.

சர்வ தோஷங்களையும் நிவர்த்தித்து உடனே புத்திரலாபம் கொடுக்கக்கூடியது. ஒவ்வொரு மாதத்திலும் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியிற் செய்வது:—

1.	கஜாநநாய நம:	ராணுமஹலுக்குச்சமீபம்
2.	கிருத்ராக்ஷயை நம:	ஷை
3.	ஸிம்ஹமுகையை நம:	ஷை
4.	உஷ்டிக்கிரீவாயைநம:	ஷை
5.	வாரத்தியை நம:	மான்மந்திர கட்டம்
6.	ஸர்ப்பாநநாயை நம:	ஸ்ரீராணுமஹல்
7.	உலூக்யை நம:	ஷை
8.	சிவா யவாயை நம:	ஷை
9.	மயூர்யை நம:	லெக்ஷிமிகுண்டம்
10.	விகடாநநாய நம:	ஸ்ரீராணுமஹல்
11.	அஷ்டவக்ராயை நம:	ஷை
12.	கோடராக்ஷயை நம:	ஷை
13.	குஹ்யாயை நம:	ஷை
14.	விகடலோசனையை நம:	ஷை
15.	ஸங்கோதரியை நம:	ஷை
16.	லலசித்தாயை நம:	ஷை
17.	சிவதந்திருஷ்டாயை நம:	ஷை
18.	வானரோநநாயை நம:	ஷை
19.	ரிஷியாயை நம:	ஷை
20.	கேகராக்ஷியை நம:	ஷை
21.	விருகதுண்டாயை நம:	ஷை
22.	கபாலஹஸ்தாயை நம:	ஷை
23.	ரக்தாக்ஷயை நம:	ஷை
24.	ஷுக்யை நம:	இடவுட்டியாவில்

25.	ஸேன்னியை நம:	ஸ்ரீராஜமஹால்
26.	கபோதிகாயை நம:	ஷை
27.	பாஸஹஸ்தாயை நம:	ஷை
28.	தண்டஹஸ்தாயை நம:	ஷை
29.	பிரசண்டாயை நம:	ஷை
30.	சண்டவிக்ரமாயை நம:	ஸ்ரீராஜமஹால்
31.	சிஸுக்னையை நம:	ஷை
32.	பாவஞ்ஞாயை நம:	ஷை
33.	கால்யை நம:	ஷை
34.	ரிதிர்பாயின்யை நம:	ஷை
35.	வஸாதயாயை நம:	ஷை
36.	கர்ப்பபசாயை நம:	ஷை
37.	ஸ்ரவ ஹஸ்தாயை நம:	ஷை
38.	அங்குரமாலின்யை நம:	ஷை
39.	ஸதூல் கேஸ்வராய நம:	ஷை
40.	விரஹஸ்குஹ்யை நம:	ஷை
41.	ஸர்ப்பாஸ்யாயை நம:	ஷை
42.	பிரேதவாஹநாயை நம:	ஷை
43.	தண்டசுக்ராயை நம:	ஷை
44.	கிரோந்திர்யை நம:	ஷை
45.	சுகஷீஸ்யை நம:	ஷை
46.	விருக்ஷாநநாயை நம:	ஷை
47.	க்யா தாஸ்யாயை நம:	ஷை
48.	தூமநிஸ்வாஸாயை நம:	ஷை
49.	வ்யோமைகவஞயை நம:	ஷை
50.	ஊர்த்தட்டஸ்யை நம:	ஷை
51.	தாபின்யை நம:	ஸ்ரீராஜமஹால்
52.	ஷோஷண்யை நம:	ஷை
53.	கோடர்யை நம:	ஷை
54.	ஸ்தூல நாசிகாயை நம:	ஷை
55.	வித்யுத்ப்ரபாயை நம:	ஷை
56.	வலாகாஸ்யை நம:	ஷை
57.	மார்ச்சாரியை நம:	ஷை
58.	காடபூதநாயை நம:	ஷை
59.	காமாக்ஷியை நம:	பிரசித்தம்
60.	அட்டாட்டஹாஸ்யை நம:	ஷை
61.	விசாலலோசனையை நம:	ஷை

ஐந்தாவது ஸப்தாவரண விநாயகர் யாத்திரை.

ஒவ்வொரு மாதங்களிலும் சதுர்த்தசியில் செய்யவேண்டியது:— சர்வவிக்கின நிவர்த்தி பலன்.

முதலாவது ப்ராகாரம்.

1.	ஞானவிநாயகாயை நம:	மங்களகௌரீ சந்நிதியில்
2.	த்வரா விநாயகாயை நம:	ஷை
3.	அபிமுக்த விநாயகாயை நம:	ஷை

இரண்டாவது ப்ராகாரம்.

1.	மணிகர்ணிகை விநாயகாயைநம:	மணிகர்ணிகையில்
2.	ஆஜாவிநாயகாயைநம:	மீர்காட்
3.	சிருஷ்டிவிநாயகாயைநம:	காளிகாகல்லி
4.	யக்ஷவிநாயகாயைநம:	துண்டிராஜகணபதிமேல
5.	கஜகர்னவிநாயகாயைநம:	ஈசானேஸ்வரம் [வீதி
6.	சித்ரகண்டவிநாயகாயைநம:	சாந்தனிசவுக்கு
7.	மித்திரவிநாயகாயைநம:	மங்களகௌரீ சந்நிதியில்
8.	மங்களவிநாயகாயைநம:	ஷை

மூன்றாவது ப்ராகாரம்.

1.	அபயஸ்தவிநாயகாயைநம:	தசாஸ்வமேதகாட்
2.	ஸிம்ஹதுண்டவிநாயகாயைநம:	பிரம்மேஸ்வரம்
3.	கூணிதாக்ஷவிநாயகாயைநம:	லக்ஷ்மீகுண்டம்
4.	க்ஷிப்ரப்ரசாதவிநாயகாயைநம:	பிதிர்குண்டம்
5.	சிந்தாமணி விநாயகாயைநம:	பிரசித்தம்
6.	ஜ்யேஷ்டவிநாயகாயைநம:	ஜ்யேஷ்டேஸ்வரம்
7.	இராஜவிநாயகாயைநம:	பாரபூதேஸ்வரம்
8.	காலவிநாயகாயைநம:	இராமகட்டம்
9.	நாகேசவிநாயகாயைநம:	கோசலாகட்டம்

நான்காவது ப்ராகாரம்.

1.	ஸ்தூலதந்தவிநாயகாயைநம:	மான்மந்திரம்
2.	கலிப்பிரியவிநாயகாயைநம:	மனப்பிரகா
3.	சதுர்த்தந்தவிநாயகாயைநம:	தூர்வேஸ்வரர்சந்நிதி

ஐந்தாவது ப்ராகாரம்.

1.	வக்ரதுண்டவிநாயகாயைநம:	ராணுமஹல்
2.	ஏகதந்தவிநாயகாயநம:	பங்காளிடோலா
3.	த்ரிமுகவிநாயகாயநம:	சிவகிரிக்குச்சமீபம்
4.	தந்தஹஸ்தவிநாயகாயநம:	வடகணேசர்
5.	உத்தண்டமுண்டவிநாயகாயநம:	த்ரிலோசனம்
6.	பிசண்டிலவிநாயகாயநம:	ப்ரஹ்லாதகாட்

ஆருவது ப்ராகாரம்.

1.	லம்போதரவிநாயகாயநம:	சிந்தாமணிவிநாயகர்சந்நிதி
2.	கூடதந்தவிநாயகாயநம:	கிருமிகுண்டம்
3.	சாலகடங்கடவிநாயகாயநம:	மடுஹாடிக
4.	பஞ்சாஸ்யவிநாயகாயநம:	பைசாசவிமோசனம்
5.	ஹேரம்பவிநாயகாயநம:	ஷை
6.	விக்நராஜவிநாயகாயநம:	சித்திரகூடதலாபா
7.	வரதவிநாயகாயநம:	இராஜகாட்வீதியில் [யில்
8.	மோதகப்பிரியவிநாயகாயநம:	ஆதிவிஸ்வேஸ்வரர்சந்நிதி
9.	ப்ரணவவிநாயகாயநம:	த்ரிலோசனகாட்டில்

ஏழாவது ப்ராகாரம்.

1.	அர்க்கவிநாயகாயநம:	லோலார்க்கத்துக்குச்சமீபம்
2.	பீமசண்டவிநாயகாயநம:	பீமசண்டியில்
3.	தெகலிவிநாயகாயநம:	பஞ்சக்ரோஸத்தில்
4.	உத்தண்டவிநாயகாயநம:	இராமேஸ்வரம்
5.	கூஷ்மாண்டவிநாயகாயநம:	புல்வரியாதோட்டம்

6. விகடத்வஜவிநாயகாயநம: தூபசண்டியில்
7. இராஜபுத்திரவிநாயகாயநம: இராஜகாட்டில்
8. பாஸ்பாணிவிநாயகாயநம: சதுர்பஜார்
9. சர்வவிநாயகாயநம: வருணைசங்கமம்
10. சித்திவிநாயகாயநம: மணிகர்ணிகையில்

இது காசியில் மாத்திரமன்று:-முதலில் சங்கற்பம் செய்து கொள்ளும்போதே இன்னவூரில் இன்னகாலத்தில், இன்னகாரியத்தை உத்தேசித்துஎன்று சங்கற்பம்செய்துகொண்டு யாத்திரை செய்வோர்களுக்கு அந்தக் காரியம் நிச்சயமாய்ப் பலிதமாவது சத்தியம், எப்படிப்பட்ட நியாயகாரியமாயிருந்தாலும் சரியே.

ஸ்ரீகாசிவாஸம்.

எச்சாதியானாயினும், எத்திறமை வாய்ந்துளோனாகினும் அவரவருடைய யோக்கியதைக்குத் தக்கபடி தொழில்கள் செய்து ஜீவிக்கப் பலவழிகளு மமையப்பெற்றிருக்கிறது. ஸ்ரீகாசி, அநாதியான இந்துக்களின் மதாசாரசற்கதிகளுக்குரிய சிரேஷ்டமான பட்டணமாதலான் வைதிக சம்மந்தயோக்கியதையுள்ளவர் அவ்வழியிலேயே காமக்குரோதலோப, மோகமத மாற்சரியாதி அறுவகை குற்றங்களுக்கு மிடங்கொடாமல் காலக்ஷேபத்துக்குத் தேவையான பொருளை சம்பாதிக்க மற்ற க்ஷேத்திரங்களினும் இதில் அதிக இயல்புண்டு. இங்லீஷ் முதலியவை கற்றுளோர்க்கு வர்த்தகக் கம்பெனிகளிலும், ஜமீன்தாரி முதலிய பிரபுக்களிடத்திலும், சர்க்காரிலும் அவரவர் திறமைக்குத் தக்கவாறு சம்பாதிக்கப்பல வழிகளிருக்கின்றன. எவ்விதயோக்கியதையுமில்லாமலிருந்தாலாவது அல்லது எந்த விருத்தியிலும் பிரவர்த்திக்கமனமில்லாமலிருக்கும் நிவர்த்தி மார்க்கமுள்ள மஹானுக்கும் அன்னோர்களைப் பின் பற்றுகிறவர்களுக்கும் ஸ்ரீகாசியிலுள்ள 64 காட்களிலும் ஒருகாட்டுக்கு ஒரு தர்மான்னசத்திரத்துக்குக் குறையாமலிருக்கின்றது. அத்தருமசாலைகளில் காலநிர்ணயமில்லாமல் எவ்வளவு காலமானாலும் பகல் ஒருவேளை திவ்யபக்வான்னங்களுடன் புசித்துவரலாம். அவிடம் சாப்பாட்டில் பெரும்பான்மை கோதுமை ரொட்டி சேருகிறபடியால் இராத்திரி சாதாரணமாய்ப் பசியெடுக்காது. அப்படிப் பசிப்பவர்கள் மத்தியானம் தங்களுக்குக் கிடைத்த அரையணாவைக்கொண்டு ஆத்ம

திருப்தி செய்து வைக்கலாம். இவிடத்தில் பழவர்க்கங்கள் முதலியவைகள் வெகு நேர்த்தியாயும் மலிவாயுமிருக்கும்; உதாரணமாக ஒரு காலணுவுக்கு ஒருசேர் (எண்பது ரூபாயெடை) இலந்தைப் பழங்கள் கிடைக்கும். இலந்தைப் பழமென்ருல் இவிடத்திலுள்ளதைப் போல் புளிப்பாயும் சிறுத்துமில்லாமல் சாதாரணமாக ஒரு சிறு கொய்யாப்பழத்தளவும் நல்ல மதுரமான ருசியுடையதாயுமிருக்கிறது. சுருக்கமாக இவிடங்களில் போலவே பெரும்பான்மை சாமான்களும், சில பொருள்கள் இனனும் அதிகமலிவாயுமிருக்கின்றன. இந்நகர் எவ்விதத்தினும் வசிக்க கஷ்டமுடையதல்ல. ஆனல் நாட்டுப்புறத்தில் விஸ்தாரமாய்த் தோட்டந்துறவுகளில் புழங்கினவர்களுக்குக் கொஞ்சம் நிர்ப்பந்தமாயிருக்கும், ஏனெனில் சென்னப்பட்டணம் முத்தியாலுபேட்டையைப் பார்க்கிலும் ஜனநெருக்கமுள்ளதாயும் கோஷ்பாதத்தளவுகூட காலிநிலம் இல்லாதத்தாயுமிருக்கிறது. ஆனலும் இந்தக் காசிக்கு 56 தேசத்து ராஜராஜாக்களும் வருவதினுலும் (நம்மிந்துக்களென்ருல்:-வெவ்வேறு பாஷையையும் மதாசாரமுமுள்ள பெரிய உட்பிரிவு ஜாதிகள் குறைந்தது 100-க்கு மேலிருக்கின்றன.) அந்தந்த ராஜாக்களும் பெரிய பிரபுக்களும் மேற்சொன்னபடி தர்மான்னசத்திரங்கள் மாத்திரமல்ல. யாத்திரையாகவ்ரும் பலதேசத்தாருக்கும் நியதியாய் காசிவாஸஞ் செய்பவர்களுக்கும் ஏனைய அன்னோர்களுக்கும் உபயோகப்படுமாறு தர்மத்துக்காக அநேக மடங்களும் கட்டிடங்களும் தர்மசாலைகளும் கட்டி வைத்திருக்கின்றனர். அவைகளெல்லாம் வரும் யாத்திரிவாளிகள் முதலானேர்க்கு இனமாக ஜாகா கொடுக்கும்படி முதலில் லெட்சம் லெட்சமாய்ப் பொருளைச் செலவழித்துக் கட்டப்பட்டவைகளானலும் ஒரு அக்கறைக்காகவும் ஷை கட்டிடங்களின் கூட்டிசுத்தஞ்செய்தல் முதலிய சில்லறைச் செலவுகளுக்காகவுமுபயோகப்படுமாறு ஒரு அரைக்கு மாதம் 1-க்கு நாலணு மிகவும் பெரிய கொட்டடியாயிருந்தால் எட்டணுவுக்குமேலில்லை; (குடும்பத்துடன் வஸிக்கப்போதுமானது) இந்த வீதத்தில் ஜாகை சௌகுரியமுண்டு. இதே இடமுள்ள ஒரு அரைக்கு, கொஞ்சம் மேற்கே வர்த்தக சம்மந்தமான பாகத்துக்குள் போய்விட்டால் இரண்டு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் கொடுக்க வேண்டும்.

மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட தர்மான்னசத்திரங்களில் மிகவும் பெரியதும் விசேஷதருமஞ் செய்யப்படுவதும் பிரக்யாதி பெற்றதும் மீர்காட்டுக்குச் சமீபமான வஸிந்தியாமஹாராஜா

சத்திரம். அதற்கிரண்டாவதாக நம் நாட்டுக்கோட்டையார் சத்திரமும், மற்றப்படி திராவிடதேசத்து இராஜாக்களான மைசூர், தஞ்சாவூர், கொச்சி, அநந்தசயனம் முதலான தேசராஜாக்களின் சத்திரங்களும், வடக்கு தேசத்தில் எண்ணிறந்துள்ள ராஜாக்கள் முதலியோரது சத்திரங்களும் விளங்குகின்றன. விதவாஸ்திரீகளுக்கு மட்டும் சத்திரங்களில் இனமாக அன்னமளிப்பதில்லை. ஆனாலும் அவர்களுக்கு ஷை சத்திரங்களில் மிகஇலகுவான வேலை செய்தால் அன்னமளிப்பதுடன் சம்பளமும் கிடைக்கும். மற்றப்படி ஸ்திரீபுருஷாள் தங்கள்குழந்தை குட்டிகளுடன் எவ்வளவு காலமானாலும் இனமாக அன்னம் புசித்து வரலாம். ஆனால் வரவர தருமம் குறைந்து வருகிறதும் யுகதர்மம். இம்மாதிரி காசியிலிருக்கும் திராவிடதேசவாஸிகள் சுமார் 2000 மிருக்கும்; திராவிடதேசத்தாரல்லாத கங்காபுத்திராளுள்பட வடதேசத்தார் சுமார் 6000 பேரிருக்கலாம். ஆகவே ஸ்ரீகாசிவாஸமானது இகபரங்களுக்குரிய புக்திமுக்தி யிரண்டினையும், தம்மை யண்டினோர்க்குத் தயவாய்த் தந்தருளுகின்றது.

ஷை தருமங்கள் பிராமணருக்கு மாத்திரமன்று. மற்ற வருணத்தாருக்குமினிதிலளிக்கப் படுகின்றது. சில மடங்கள் கோயில்கள், தருமசத்திரங்களு மன்னோர்பால் பராமரிப்புக்காக விடப்பட்டிருக்கின்றன. ஆகவேமற்றைய வருணத்தாருக்கும் காசியில் இனமாக அன்னமளிக்கப்படுகின்றது. ஆகவே இதுவரையிற் பேசப்பட்டதும் இனி பேசப்படுவதும் பிராமணருக்கு வேறென்றும் மற்றோருக்கு வேறென்றும் நினையாமல் நான்கு வருணத்தாருக்கும் அனைத்தும் பொதுவாயும் குலாசாரத்துக்குத் தக்கமரியாதைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன வென்பதூஉம் என்றும் தெரிந்து கொள்ளுக.

சந்நியாசிகள் :— இக்ஷேத்திரத்தில் சந்நியாசம் பெற்றோயினும் அல்லது வெளியிலிருந்து வந்து காசிவாஸ க்ஷேத்திர சந்நியாசியாக சங்கற்பஞ்செய்து வசிப்பவர்க்குத் தனியாய் மடங்கள் முதலியவைகளிருப்பதுந்தவிர அவர்களுக்கு இவிடத்தில் அதிக சௌகரியங்களும் மரியாதைகளும் செலுத்தப்படுகின்றன. மேலே குறித்த தர்மான்னசத்திரங்களைத் தவிர காசிக்குவரும் யாத்திரைவாளிகள் அவரவர் சக்திக்குத் தக்கபடி ஒரு பிராமணன் முதல் லெக்ஷப்பிராமண போஜனமாக காலபைரவரை உத்தேசித்து சமாராதனைகள் (இவைகளுக்கு காலாஷ்டகம் என்று பெயர்) நாள் தவறாமல் குறைந்தது ஆயிரம் பேருக்கு

ஷ்டி 64 கட்டங்களிலும் நடக்கும். இதற்கு இரண்டணுவுக்குக் குறைந்த தக்ஷிணைசாதாரணமாயிராது. இக்காலாஷ்டகங்களில் முதல் உரிமை சந்நியாசிகளுக்காதலால் அவர்களுக்கும் மற்ற க்ஷேத்திரங்களைப் பார்க்கிலும் இவிடத்தில் அதிகமரியாதை, வசதி முதலியவைகள் உண்டு. இக்ஷேத்திரத்தில் சுமார் 1000 சந்நியாசிகள் க்ஷேத்திர சந்நியாசிகளாக இருக்கிறார்கள்: காசி வாஸிகளாயிருக்கும் இதரர்களுக்கும், சாதாரண தர்மான்னசத்திரத்துக்குப் போகவேண்டிய அவசியமிராது. மாதத்தில 20 நாளாவது காலாஷ்டக சமாராதனைகளுக்கு வருந்தியழைக்கப் படுவார்கள். சந்நியாசிகள் மாத்திரமல்ல, மற்றோரும்:—சாதாரண அந்தணர் முதலானோர்.

மேற்சொல்லிய பஞ்சக்ரோஸ யாத்திரையை க்ஷேத்திர சந்நியாசியும் மற்றோரைப்போலவே செய்யக்கடமை பெற்றிருக்கிறபடியாலும், ஆனால் மற்றோர்களைப் போல காசியின் புறம்பே எல்லையைத் தாண்டிப்போகக் கூடாமையாலும் க்ஷேத்திர சந்நியாசிகள் பஞ்சக்ரோஸ யாத்திரை செய்யுந்தினம், மணிகர்னிகை ஸ்நாநம் செய்து விசுவேஸ்வரர், அன்னபூர்ணி பஞ்சவிநாயகர், துண்டிராசன், தண்டபாணி, காலபைரவர் இவர்களைப் பூஜித்து கங்கைக்கரையினின்றும் முன்போல பிரதக்ஷிணமாக அங்கிருக்கின்ற மூர்த்திகளைப் பூஜித்து, ஐம்பத்தாறு விநாயகரிருக்கின்ற ஸப்தப்ராகாரங்கள் புறம்பே ஏழவதான ஆவரண மொழிந்து ஆறாவதாவரணத்தினின்று, அவிவருணைக்குள் பிரதக்ஷிணஞ்செய்யுங்கால் தமக்கு இடது பாரிசத்திலிருக்குந் தேவதைகளை அபிமுகமாகத்தரிசித்து ஒருராத்திரி, இரண்டு ராத்திரி, மூன்று ராத்திரி சௌகுரியப்படி வஸித்து [ஜாஸ்தி ராத்திரிகள் வஸிப்பது யதோக்தமாகும்] தண்டபாணியைப் பிரார்த்தித்துக் கடைசியில் விஸ்வேஸ்வரரைத் தரிசித்துப் பூரணஞ்செய்யவேண்டும்.

காசியிற் செய்யும் புண்ணியங்களைப்போலவே, பாவங்களும் நூறுபங்கு பாபபலனைக் கொடுக்கிறபடியால் காசிவாஸஞ் செய்வதும் சுருதிப்பிரமாணப்பிரகாரம் ஆராய்ந்து வாஸஞ்செய்வதும்கடினமோர்காரியமேயாகும். அதுபற்றியே"காசிவாஸமோ ஊசிவாஸமோ" வென்னப்பட்டதென்க. காசிவாஸத்தில் முதல் கவனிக்க வேண்டியது:—வருணாச்சிரம வழி தவறாது க்ஷமை, சாந்தம், சன்மார்க்கம் முதலிய சற்குணங்களோடு கிரஹஸ்தனாயிருக்கப்பட்ட பிராமணன் வெளியில் சன்மார்க்கத்தால் சம்பாதித்து வந்த பொருளை நாலிலிரண்டு பங்கு சற்பாத்திரத்தில் தரும

நெறியால் விநியோகப் படுத்தியும், பிராமணரல்லாத மற்றோர் நியாயவழி தவறாமல் சம்பாதித்த பொருளில் மூன்றுபங்கு சற்பாத்திரத்தில் செலவுசெய்து ஒரே ஒருபங்கைத் தாமுபயோகப் படுத்திக் கொள்ளவேண்டும். காசியிற் சம்பாதித்தபொருள் சிவத்திரவியமாதலால் அதனை வெளியிலிருக்கிற பந்துக்களுக்குபயோகப்படுத்தக்கூடாது. அப்படி உபயோகப்படுத்துவதினால் அக்குடும்பஸ்தர்கள் சிவத்திரவிய அபகாரிகளாவார்கள். காசியினின்றுமிருத்திகையும் வெளியிற்கொண்டு போகுதல்குற்றமாம். காசியில் வசிக்கும் யாவரேனும் பிரதிதினமும் கங்காஸ்நாநம் நித்திய கன்மம் விஸ்வேஸ்வரர் தரிசனஞ் செய்தன்றி லௌகிகத்திற் பிரவேசிக்கக்கூடாததுடன், கடன் வாங்குதலும் பரான்னபோஜனஞ்செய்தலுங் குற்றமாகும். மேலும் காசியிற் பாபஞ்செய்து இறந்தால் ஒரு பாவத்துக்கு முப்பதினாயிரம் வருஷம் வயிரவவீதனை அநுபவித்தல் வேண்டுமாதலால், கர்ப்பவாஸம் முதலிய நியதகால வாஸஞ்செய்பவருள் சக்தன் நிர்ணய ஏகாஹாரமுடையவனாகவும் அசக்தன் நியத ஆகாரமுடையவனாயுமிருந்து தானிருக்குமளவும் சர்வ நியமத்தோடு வசித்துப்போகாவிடின், காசியிற் செய்த பாவத்துக்கு எண்ணிலா நரகவாதனையில் முடிந்து மடியவேண்டும். பின்னும் காசியிலிருந்து க்ஷேத்திர சந்நியாசம்பெற விருப்பமுடையோன் மாக மாச கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் மணிகர்ணிகை, ஞானவாபி ஸ்நாநஞ்செய்து சுத்தவஸ்திரந்தரித்து, அன்று பிராமண போஜனமும் உபவாசமுஞ்செய்து துண்டிராஜ கணபதி, தண்டபாணி அன்னபூர்ணி சகித விஸ்வேஸ்வரரைப்பூஜித்து, முத்திமண்டபத்திலிருந்து பஞ்சக்ரோஸத்துக்கு வெளியே போகாமல் க்ஷேத்திரவாஸம் செய்கிறேனென்று வேதியரால் சங்கற்பஞ்செய்து இதற்குச் சாக்ஷியாக ஷை துண்டிவிநாயகர் முதலான தெய்வங்களைப் பிரார்த்தித்து அந்தப்படி க்ஷேத்திர நியாசஞ்செய்தேனென்று ஸப்தாவர்த்தி உச்சாரணம் மந்திர பூர்வமாய்ச்செய்து நியமத்தோடிருக்கக்கடவன். இவ்வாறடைந்தவன் எல்லா தீர்த்தங்களும் மூர்த்திகளும் காசியிலிருத்தலால், வேறு தீர்த்தங்களையாவது மூர்த்திகளையாவது அபேக்ஷித்து வேறிடத்திற்குச் செல்லாமல் காசியிலேயே வாசஞ்செய்து முக்தியடையக்கடவன். அவ்வாறின்றி காசியை விட்டுப்போனால் பெரியோர்கள் அவனோடு பிரியவார்த்தை சொல்லாமலும் அவனது அன்னத்தைப் புசிக்காமலும் அவனை மகாபாபியாகமதித்து ஒருதவியும் அவனுக்குச் செய்யார்கள். அன்னோனின் பேதமைத்தன்மையை பஞ்சபூதங்களும் இகழ்ந்து பேசும். வியாதி முதிர்ந்தவனும் விருத்தாப்பியனும் காசியை

யடைந்தால் க்ஷேத்திர சந்நியாசியைப்போல் நீங்காதிருக்கக்கடவன்.

காசிவாஸத்துக்குரியபலன்:—காசியிற்செய்யும் ஜபதபாதிஹோமங்களுக்கு மற்றவிடத்திற் செய்பவைகளைக் காட்டிலும் லக்ஷம் பங்கு அதிகபலனைக்கொடுக்கின்றதி. ஒரு நூறாயிரம் காயத்ரீ ஜெபித்த வந்தணர்கள் நான்குவேதத்தையும் அத்தியயனஞ்செய்த பலனையும், சிவபக்தராயிருப்பவர்களிருக்கவேண்டிய முறைமைப்படி தூப, தீப, நைவேத்திய, சமித்தியோபசாரங்களின் பலனைக் கணக்கிட்டு முடியாமல் எல்லையிலாக்காலம் சாரூபிகளாயிருந்து இறுதியில் மோக்ஷத்தையடைவர். காசிவாசிகளில் விசேஷ தனவந்தனுயிருக்கப்பட்டவன் சிவாலயங்கள்—மடாலயங்கள்—ஜெபாலயங்கள் முதலியதை ஜீரணோத்தாரணஞ் செய்வராக. இவர்களுக்கும் விசேஷ சாரூப்பிய பலன். மாஸசிவராத்திரி முதலியவைகளில் உபவாசஞ்செய்து பிராமணபோஜனஞ்செய்தவன் அநேகமாயிரம் அஸ்வமேதயாகம் செய்த பலனையும், ஒருநாள் நியமத்தோடிருந்தால் அன்னிய தீர்த்தங்களில் விதிப்படி சத்பிராமணர்களிடத்தில் நூறாயிரம் பசுவைத்தானஞ் செய்த பலனையும், மூன்று ராத்திரி சிவபூஜை முதலிய நியமங்களோடு வசிப்பவன் மோக்ஷசாம்பிராச்சியத்துக்கருகனுயும் தடையின்றி ஆகின்றான்.

ஏழையாய்க் காசி வாஸஞ்செய்கிறவருக்கும் க்ஷேத்திர சந்நியாசிக்கும் செய்யும் அன்னதானத்தால் விசேஷ பலன் அடைவர்கள். தீர்த்தஸ்நானம்—க்ஷேத்திர வாஸத்தால் மற்ற இடங்களில் சித்தசுத்தி பரிபாகத்துக்குக் காரணமாயிருந்தும், அதுவே காசியில் முக்திக்குக்காரணமாயிருப்பதும் யுக்தி அநுபவமாமெனக்கொள்க. இவ்வாறு பலன்களேற்பட்டுளதாயினும் காசிவாஸிகள் அப்பல னுத்தேசமாகக் கருமங்களைச் செய்தல் நெறியன்று. புண்ணிய க்ஷேத்திரங்களிற் செய்யும் பாவம் மற்ற சாமானிய இடங்களைப் பார்க்கிலும் நூறாயிரம் பங்கு அதிகமாய் விருத்தியடைவதால் இவ்விஷயத்தில் காசியை இழிந்ததாகக்கொண்டு எள்ளளவேனும் பாவஞ்செய்யாமல் காசிவாஸிகளிருக்கக் கடவர்.

காசிமரணம்:—காசியில் இறக்கின்றவர்களுக்கு சர்வஜீவ கருணாநிதியாகிய பரமசிவன் சாயுச்சியபதவியையுணர்த்தும் தாரகோபதேசத்தை வருணாசிரமபேதமின்றி மானிடவகுப்பாருக்கும் ஸ்தாவரஜங்கமாதிகளுக்கும் மரணாந்தகாலத்தில் திவ்யதேஜோ

சரீரத்தைத் தந்தருளி உபதேசிக்கின்றனர். இவ்வாறு காசி காண்ட முதலியவைகளில் மாத்திரமன்று, சுருதிஸ்மிருபுரேணேதிகாசங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன.

காசிகாண்டத்தில்:—

இத்தலை யெய்தியிறக்குநர்யாரு மிளைப்பாற
உத்தரியங் கொடுமாதுமைவீசிட உமையோர்பால்
வைத்தவரும் பொருள்மேவருதாரக மறையோதி
முத்தியளித்திடுமிப்பதி யார்விட முயல்வாரே.

இச்செய்யுளால் காசியிலிறக்கும் யோனிபேதமின்றி 84 லக்ஷம் ஜீவராசிகளுக்கும் மரணந்த காலத்தில் ஸ்ரீபார்வதி தேவியானவள் தன்னுடைய உத்தரீயவஸ்திரத்தால் இளைப்பாறும்படி வீசவும், பரமகருணாநிதியாகிய சிவபெருமான் அவர்களுக்குத் தாரகப்பிரம்மோபதேசஞ் செய்து முத்தியளிக்கின்றாராகிய இப் புண்ணியமா நகரை யார் தான் விட்டகல முயல்வார்கள்!

மாசறு பேதைமைதம்மை மறைப்ப மறைந்தானை
வாசையெனுஞ் சுறவெற்றுபவக் கடலாழ்கின்றோ
ரீசனுவந்தமை யோடகலாம லிருந்தோங்கு
காசியெனும் புணையன்றி யெவ்வாறுகடப்பாரே.

செய்யவழுத்தலை நின்றுதவம்பல செய்தாலு
மெய்தரும் யோகமளப்பிலநாளு மிழைத்தாலு
மையறுகாசியை வார்பிறைசென்னி வனைந்தாடு
மையனருட் சிறிதின்றி யடைந்திடலாகாதே.

அறம்பொருளின்ப மியற்றுதவத்தி னடைந்தாலுங்
கறங்குதிரைக் கடனஞ்சநுகர்ந்தருள் காமாரி
யுறைந்தவனங்கெழு காசியினல்லதை யொன்றானு
மிறந்துபிறந்துழல்வோர் தனிமுத்தியி னெய்தாரே.

அருமறையாகம மாகியநூல்களனைத் தேயும்
பொருவறுகாசியை யன்றிவழுத்தல் பொருந்தாவா
லிருவினைவிட்டொரு மும்மலமாயை யிகழ்ந்தோர்கள்
திருவமர்காசியை விட்டயலோர்பதி செல்லாரே.

இடைகலைபிங்கலை வாலைசிறந்துட னிவைகூடு
முடிவறுவாராணசி நடுவுயர்சுழிமுனை யென்றோ
விடைமறுத்துயர் மெய்த்தவ மேவியகாபாலி
யடைவினுரைத்தன னிந்நகருக்கிணை யாதேயோ.

ஆசில்வளங்கெழு மூவுலகத்தினு மாயுங்காற்
காசிநகர்க்கிணை யாகியநற்பதி காணேமால்
மாசறுதிங்கண் முடித்துயர்மன் றுண் மகிழ்ந்தாடு
மீசனையொப்பவர் தேவரினத்திடை யாரேயோ.

பின்னும் மேற்கூறிய செய்யுட்களால், இம்மூவுலகத்தினும் முத்தியை அன்புடன் இனிதுநல்கும் நகர் காசியைத் தவிரவே றில்லையென்றும், அக்காசியில் சிவபெருமான் உமையவளோடு ஜீவகோடிகளுக்கு பேதாபேதமின்றி தாரகோபதேசஞ்செய்ய அல்லும்பகலும் கண்டுயிலாது நீங்காதிருக்கின்றனரென்றும், முப்பத்துமுக்கோடி தேவர்களுள்ளும் சிவபெருமானே சிரேஷ்டமான தேவாதிதேவனென்றும், இத்துணை வசதிகளமையப் பெற்ற காசியையடைந் துய்யாரது பேதைமையை என்னென்று ரைப்பதுவென்றும், நைமிசாரண்யரிஷிகளுக்கு சூதமாமுனிவர் கூறுகிறார்.

இற்க மோக்ஷத்தையடைய இரண்டு வழிகளுண்டு:—சற்குருவையடைந்து சாதனசதுஷ்டயங்களால் வேதாந்தவிசாரஞ் செய்து வீடடைவது ஒன்று; ஸ்ரீகாசியையடைந்து தர்மாத்மாவாய் வசித்து இறத்தலால் முத்தியடைவது மற்றொன்று. இதனையனுசரித்துக் காசியும் இரண்டு வகையாயுள்ளது:—அஷ்டாங்கயோகாப்பியாசங்களா லடையக்கூடிய நம் கண்ணின் புருவமத்தியிலுள்ள காசி ஒன்று, கங்காதீரத்திலுள்ள காசி மற்றொன்று; ஆகவும் முன்னது ஆதியான்மிகக் காசியென்றும், பின்னது ஆதிபௌதிகக் காசியென்றும் விளக்கப்படலாயிற்று. முற் சொன்னபடி சற்குருகடாக்ஷத்தினால் தத்துவஞானம் பெற்று ஆதியான்மிக காசியைத் தரிசித்து வீடடையக்கூடிய துரியாதீதபதவியைப்பெற்ற ஞானிகளுக்கு கங்கைக்கரையிலுள்ள இந்தக் காசிக்குப் போகவேண்டிய அவசியமில்லை. ஆனால் அத்தகையஞானி இப்புவியில் கோடியிலொருவனே யிருப்பன்- அவருடைய மகிமையைப் பற்றியும் வேதாந்தரகசியங்களைப் பற்றியும் கைவல்யம் முதலாயநூல்களை ஆராய்ந்துணர்க.— கைவல்யத்தில்:—

தேகத்தனலனாகி யகர்த்தனாகிச்சீவனின்றிப் பிரமமாய்த்தெளிந்தமுத்தன்
போகத்தையுண்பனென்னுற் கர்த்தாவாமேபூரணமா மகர்த்தனுக்குப்போக [முண்டோ
சோகத்தையறுத்தருளுங்குருவே யிந்தத்துகளறுக்கவேண்டுமென்று சொ [ன்னயாகின்
மாகர்த்தமாபோகிமாத்தியாகி வகைமூன்றுயவரிருக்கு மகிமைகேளாய்.

செய்கையுஞ்செய்விக்கையு மற்றிருக்குங்காந்தச்சிலேமலே முன்னிரும்புகள்
[சேட்டிக்குமாபோற்
செய்கையுஞ்செய்விக்கையு மற்றிருக்குமென்முன்சடமான வுலகெலாஞ்
[சேட்டைசெயும்
மெய்கலந்தவிந்திரிய விகாரரூபவிவகாரவிருத்திக்கும் விருத்திதானய்
மெய்கலந்தசமாதிக்குஞ் சாக்ஷியேநான்வெயில் போலென் றுரைத்தவனே
[விபுமாகர்த்தன்.

அறுசுவையின்குணங்குற்றம் சுத்தமசுத்தம்பத்தியமபத்திய மெனவூணய்ந்
[திடாமற்
பொறுமையுடன்கிட்டினதை காட்டுத்தீப்போற்போகங்கள் புசிப்பவன்மா
[போகியாகுஞ்
சிறிதுவலிதுகடனதன்னியங் கணன்மைதீமைகள்சேரினும் படிகச்செயல்
[போற்சித்தம்
வெறிதிருக்குமவ்னே மாத்தியாகியாவன்விரத மிம்மூன் றுள்ளோரேவீடு
[ளோரே.

அஃதாவது:-இவ்வுடலே நானென்பதல்லாதவனய் கர்த்தத்துவமும் ஜீவேஸ்வரத்துவமுமில்லாமல் கூடஸ்தபிரமவைக்கியமாகி இப்பவக்கடலேத்தாண்டின ஜீவன் முக்தனனவன் விஷயாதிபோகஙகளேப் புசிப்பனென்றால் கர்த்தாவாகவில்லேயோ, பரிபூரணமான அகர்த்தனுக்கு விஷயபோகங்களேது? பிறவித்துன்பத்தை நீக்கி அருளும் என்குருவே இந்த சந்தேகத்தை நீக்கிக் கிருபை செய்யவேண்டுமென்று கேட்பாயாகில், அச்சீவன் முத்தர்மாகர்த்த, மா்போகி, மாத்தியாகியென்று மூன்று வகையுள்ளவர்களாயிருக்கிருர்கள். அவர்களின் மஹிமையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:-தொழில் செய்தலும், தொழில் செய்வித்தலுமில்லாதிருக்கின்ற காந்தக்கல்லின் சந்நிதானத்தில் இரும்புகள் அசைவது போல பிரேரக, பிரேரியங்களில்லாதிருக்கின்ற எனது சந்நிதியில் அசேதன ஜடப்பொருள்களாகிய உலகங்களெல்லாம் கூத்தாடிக்கொண்டிருக்கும், தேகத்திற்சேர்ந்த ஞானேந்திரிய கன்மேந்திரிய பேதரூபங்களான பிரேரகபிரேரியமான அவ்விருத்திகளடங்கித் தன்மயமான நிஜஸ்வரூபமான ஸ்வரூபசமாதிக்கும், சூரிய கிரணத்தைப் போலசர்வசாக்ஷியே நானென்று ஸ்திரமானவனே சர்வவ்யாபகமாகிய மாகர்த்தனய், அத்துவிதமான எனது சந்நிதியில் நடக்குந்தேக முதலிய வியாபாரங்களுக்கும் இவைகளிறந்து நின்ற ஞானசமாதிக்குஞ் சாக்ஷிநானேயென்றவைகளோடுங் கூடாமற் கூடியிருப்பவனே மாகர்த்தனென்பதாம்:—ஆறுவகை ரசங்களின் குணகுணங்கள், சுத்தாசுத்தங்கள், பத்தியாபத்தியமென உணவை ஆராய்ந்து பாராமல்

சாந்தத்தோடும் நேரிட்டதை காட்டுத்தீயைப்போல் போகங்களை யனுபவிப்பவன் மாபோகியாவன். அற்பமகத்துக்கள், அந்நியா வந்நியங்கள் நல்லது கெட்டதுகளாகிய இவைகள் அடைந்தாலும்,ஸ்படிகக்கல்லின் திறமையைப்போலசித்தமானது பற்றின்றி நிற்பவனே மாத்தியாகியாவன், இந்த மூன்று விரதங்களும் உடையவர்களே ஜீவன் முத்தர்களாவர்கள். இவ்வகை இலக்ஷணங்களமையப்பெற்ற, பெறற்கரிய ஞானிகள் மட்டும் கங்காதீர ஆதிபௌதிக காசிக்குப் போகவேண்டிய தில்லையேயொழிய ஏனையோரனைவரும் போகாதிருப்பரேல், இப்பிறவிக்கடலைத் தாண்டி முத்திபெறுதற்கூடாதென விளக்கப்படலாயிற்று. பின்னும் முத்திநகர்களேழுளதாயினு மவைகளோரொன்றில் ஓரோர் அமிசங்குறைவாயிருத்தலானும், அவ்வேழும் ஒருங்கேகூடி பரிபூரணமாயிருப்பது இக்காசியம்பதியேயென்றும், இது காரணம் பற்றியே சர்வதீர்த்தங்களும் சர்வ மூர்த்திகளும் ஸ்ரீகாசியை யடைந்திருக்கின்றன் ரென்பது பற்றியும், அது காரணத்தாலேயே ஸ்ரீகாசி சிவராஜதானியாயிற்றென்றும், காசியே ஜீவன் முத்தரல்லாத மற்றோர்க்கு முத்தித்தலமென்றும் நிதர்சனப்படுத்தப்படலாயிற்று—ஸ்ரீ மகாவிஷ்ணு காசியையடைதல்:—

வள்ளிதழ்க்கமலப்பொகுட்டில் வீற்றிருக்குமணங்கொடு வடவரைப்பொரு
புள்ளரசோடும்பூவைபோல் மேனிப்புங்கவ னருளொடும்போகி [வும்
யள்ளலஞ்சேற்றிலாமைகண் படிப்பவருஞ்சிறைத் துய்பிதாலாட்டும்
வெள்ளநீர்ப்பழனம் விளிம்புடுத்தோங்கு காசியில்விரைவின்வந்தடைந்தான்.

மணிதெளித்தனையவான் புனற்றடத்தின்மாதவன்றன் விளக்குதலா
லணிகிளர்வாவிக்கன்று தொட்டியர்பாதோதக மெனபவெவ்வழற்கட்
பணியரவுச்சிநடித்தவன்றனது படிவமொன்றமைத்தனன்கரையிற்
றணிவருமாதிகேசவனெனும்பேர் சாற்றினன்பூசனைப்புரிந்தான். பின்னும்
[விசுவநாதன் காசியையடைதல்:—

ஒரெழுகோடியைங்கரர்கோடி வயிரவரொன்பதுகோடி
சீர்கெழுமெண்டோணிகள் மயில்மேல்செல்லும் வேலுழவரெண்கோடி
யேர்பெறுமியக்கரொன்றரைக் கோடியிசைநவில்கின்னரர்கோடி
கூர்நுதிப்பிறைப்பற்புயங்கமோர் மூன்றுகோடிதானவரிருகோடி.

முப்பதிகோடிமேலு முக்கோடிவானவர் முனிவரெண்பான்மேல்
வைப்புறுமாறாயிரர்மனைவாழ முனிவருமத்துணைவகுத்துச்
செப்புறுகணமோர்கோடி மேலிருபானுயிரந்திவ்வியாழ்வல்லோ
ரெப்பிலெண்பதினுயிர ரறுபதினுயிரவர் வானுறைந்தகூத்தியரே.

ஏயநற்கோடியுறையும் விஞ்சையர்களிரண்டு நூறுயிரத்தொருபா
னுயிரர்காமதேனுவெட்டிலக் கங்காருடமகளிராறிலக்க
மீயுயர்வரையெண்ணுயிரஞ் சிறந்தவான்பதிவிளம்பு மூந்நூறு
பாய்திரைக்கடலேழெண்டிசைக் கிரியைம்பத்துமூவாயிரநதிகள்.

உலகெலாம்பூத்தவுந்தியங் கடவுளொளிர்மணிமலர்க்கரந்தாங்க
மலர்செழுங்கமலப்பொகுட் டுறைபிரமன்வாசவன்சாமரையிரட்ட
வலகில்பல்கணங்கள்வணங்கி யேத்தெடுப்ப வந்தரதுந்துமிமுழங்க
விலகொளிக்குடமிக்கொடுஞ்சியந்தேரி னெம்பிரான்விரைவினிலிவர்ந்தான்.

ஆகவே மேற்கூறிய செய்யுட்களாலும் பிறிதாலும் ஸ்ரீகாசியில் விராட்புரு டாம்சங்களான 1008 அண்டங்கள் 33 கோடி தேவர்கள் 48000 ரிஷிகள் சப்தசாகரங்கள் 14 லோகங்கள் முதலிய பலவுமடங்கியிருப்பதால் விஸ்வேஸ்வரனென்று பெயர் காரணத்தான் வாய்ந்தது. ஸ்காந்த புராணத்தில் காசிகாண்டத்தில் மேற்குறித்த ஒவ்வொரு சமஷ்டியாம்ஸங்களும், ஒவ்வொரு சமஷ்டியின் வியஷ்டிபாகங்களும், அவைகளின் ஒவ்வொரு அம்ஸாம்ஸங்களும் வந்தடைந்திருப்பதின் காதைகள் தனித்தனியாயும் பூர்ணமாயும் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீகாசியின் நாமரூபபேதங்களும் வரலாறும்:—

பெனுரிஸ் என்று சொல்லப்பட்ட காசிக்கு வாராணஸி, அவிமுத்தம், ஆநந்தவனம், உருத்திரவாஸம், கௌரிமுகம், மாமயானம் என்னும் வேறு நாமங்களும் உண்டு. எந்த பதார்த்தத்தினிடத்துப்ரப்பிரம்மஸ்வரூபமாகிய சுத்தசத்துவாம்ஸமான தேஜஸ்பிரகாசித்துக்கொண்டிருக்கிறதோ அது காசியென்றும், விஷ்ணுதேவரின் அங்குட்டங்களினின்றும் பிரவகித்து வரும் வருணை, அஸி என்னும் இரண்டு நதிகளுக்கு மிடையிலிருப்பதால் வாராணஸியென்றும், சிவபிரானிதினின்றும் நீங்கமனமில்லாது நீங்காமல் மறைந்திருத்தலான் இதற்கு அவிமுக்தமென்றும், சிவபிரானுக்கு பரமாநந்தத்தை இடைவிடாதளிப்பதினால் ஆநந்தவனமென்றும், அஷ்டருத்திரர் முதலாயினோர் இப்பதியிலிடைவிடாது வசித்துக் காசிவாஸிகளை உருத்திராம் ஸமானதனதம்ஸமாய்ச் செய்தருளுகின்றமையாலே உருத்திரவாஸமென்றும், விராட்முதலிய பகிர்முககாரியப்பிரபஞ்சகங்களொடுங்கும்ஸ்தானமாதலின் மாமசானமென்றும், காஞ்சிமுதலிய சப்தசக்திபீடங்களுள் காசிமுதற்பீடமாகிய முகபீடமாதலான் கௌரிமுகமென்றும் காரணப்பெயர் பெறலாயிற்று. சிவாபராதஞ்செய்த தக்ஷன்

புத்திரியாயிருத்தற் கூடாதென்று சக்திசம்மந்தமான திருமேனியைநீக்கி உமாதேவி அத்திருமேனியின் முகம் முதலாய அங்கங்களைக்காசி, ஜ்வாலாமுகி, ஹேமகூடம், காஞ்சி முதலிய ஸ்தலங்களிலிடும்படியாக திருவாஞ்ஞையயளித்தபடி அவைகள் சிவசக்திக்குக்காரணமான பீடங்களாயிற்றென்று தேவிபாகவதத்திற் கூறப்பட்டுளது. இவோதாதனுக்கு அளித்தவரப்படி காசியைவிட்டுச் சிவபிரான் மந்தரகிரியை அடைந்திருந்தகாலத்தும் ஸ்ரீகாசி பஞ்சநதத்திலொரு இலிங்க ரூபமாய்ச் சிவபிரான் மறைந்திருந்தனரென்பதும் பிரளயத்தினிறுதியில் சர்வப்பிரபஞ்சமு மொடுங்குமிடத்து காசிமட்டும் திரிசூலத்தின் அக்கிராம்ஸத்தில் தேஜோரூபமாய்ப் பிரகாசித்து அதனுள் சிவனொருவனே முடிவில்நிலைத்திருந்துப் பிரகாசித்தலான் அவர்க்குச்சுடலையாடியெனவும் பெயர் வந்தமை காசிகாண்டத்தான் காண்க. "காசி" யென்றுச்சரிப்பதால் அஞ்ஞானத்தைப் போக்கி முத்திக்குக் காரணமாகிய திவ்யஞானத்தை அருளுகின்றது, காசி என்னுமிரண்டெழுத்துக்களை ஒருதரம் உச்சரிக்கின்றவன் சிவலோகத்துக் கருகனாகின்றானென பாத்மபுராணத்தும், மூன்றுதரம் ஸ்மரிக்கின்றவன் பரோக்ஷஞானத்தை யடைகின்றானெனவும் மற்ற வேறுநாமங்களையும் ஜபிகின்றவனுக்கு யமவாதனையணுகாதென்றும் ஸ்ரீஸ்காந்தத்திற் கூறப்பட்டுளது. இக்காசியினது திருநாமங்களை பக்திசிரத்தையோடு படிப்பவர், கேட்பவர், சொல்பவர் நாவுக்கு இன்பரசத்தைத் தருவனவாயும், செவிக்கு ஆனந்தத்தைவிளைவிப்பதாயுமிருத்தலன்றியும், எல்லா க்ஷேத்திரமான்மியங்களையுங் கேட்டதனாலாய முழுப்பலனையுமடைவார்கள். பின்னும் காசியைக்குறித்து நடந்து செல்லும் கால்களே கால்களாகவும், அதன் நாமங்களை யுச்சரிக்கும் நாவேதிருநாக்காகவும், அக்கதைகளை கேட்கும் காதுகளே காதுகளாகவும், காசியை இன்புடன் நோக்கும் கண்களே கண்களாகுமென்றும் காசிரகசியத்தில் கூறியுளது. மேலும் நரகமனுபவிப்பவனும், மிகுந்த தீத்தொழிற்களால் யமவாதனையடைந் தனுபவிப்பவனும், காசியென்றுச் சரிப்பதால் அந்தயயமவாதனையினின்றும் நீங்கி சற்கதியடையக்கூடுமென்று மதற்கோரிதிகாசம் காசிரகசியத்துள்ளபடி, மதுராபுரியில் மாலுகியென்னும் பிராமணனது புத்திரன் கிரிஜனென்பவன் தர்மனென்னும் பிராமணனிடத்தில் வேதாத்தியயனம் செய்தும், தர்மவழியில் நில்லாது துஷ்டச்செய்கையால் கலிங்கதேசத்தை யடைந்து கொடியவியாதியால் இறக்குங்காலத்தில் முன்தான் கேட்ட காசிமகாத்மியத்தை ஞாபகப்படுத்திக் கொண்டமையால்

நரகயாதனையினின்றும் விடுபட்டு சற்கதியடைந்தானென்ற பிறி தோரிதிகாசத்தையும் உய்த்துணர்க.

சிற்சில வீண்வாத நாவலர் ஸ்ரீகாசி சிவக்ஷேத்திரமென்றும், விஷ்ணுக்ஷேத்திரமென்றும் பயனொன்றுமிலாத குதர்க்கவாது செய்வர் "ஹரியுஞ்சிவனுமொன்று அறியாதவன் வாயில் மண்" என்று சாதாரண ஜனங்கள் சொல்லுவதும் பிரசித்த மல்லவா; அங்ஙனமாயினும், ஆகாதிருப்பினும் எங்ஙனமாயினும் ஸ்ரீகாசி திரிமூர்த்திகளுக்கும் உரித்தாய ஸ்தானமென்றுய்த்து ணர்த்துவதும் இச்செய்யுளாலறிந்து ஸமரஸபாவத்தைப் பெற்று ஸ்ரீகாசியை திரிமதஸ்தர்களு மினிதிலடைந்து சற்கதிபெற்றுய் வாராகவும். அகத்தியர் விந்தியத்தையடைந்த அத்தியாயத்தில்:—

மூவரிருப்பிடமாய் முகிலூர்திமுதற்றேவர்
மேவருதற்கரிதாயருண் முத்தியின்வீடாய்ப்
பாவமகற்றுறுகாசியின் வாழ்வுபடைத்தோர்கள்
யாவரவர்க்கரிதாய விழுப்பொருள்யாதேயே.

யுகாந்த-கற்பாந்த, காலமாதி முடிவுகளிலும் காசியொன் றுமே எஞ்சிநிற்றல்:—

வையகமேழுமிடிந்திடு காலையுமாயாதே
ஐயனெடுத்தொளிர்சூல நுதிக்குளமைந்தோங்கு
மெய்யுணர்வோருறை காசியைவிட்டொருநற்றான
மெய்தமனத்தைவிடக்குநர் பேதைமையென்னேயோ.

ஜீவரெல்லாம் பிறந்திறந்து படும்துன்பத்தை வேரறுக்கும் வண்ணம் கர்மம் பக்தியாலெய்தும் ஞானமார்க்கத்தைக் கற்பித் தும், அவற்றின் அருமைபெருமைகளை யறியா தசேதனராய் தம் மனையில் மாய்ந்து பிறந்துழலுமவர்கள், பவக்கடலை யொழித் துய்யு முளத்தாராய், நங்கருணா நிதியாகிய பரமன் ஸ்ரீகாசிக்ஷேத் திரத்தைப் படைத்தானென்பதும் சிருஷ்டித்தல், காப்பாற்றுத லன்றி அழித்தல்-ஸம்ஹரித்தலும் அருட்கிருபாகடாக்ஷத்தா லென்னும் துணிபெய்துக. முக்தியைநாடி காசிவாஸம் செய்தா லும் ஊழ்வினைப்பலத்தாலன்றி அப்பதவி கிட்டுதலரிது. எண்ணி றந்தகாலம் அகத்தியமாமுனிவர் காசிவாஸஞ்செய்தும் தேவர்க ளாலதைப் பிரிந்து பொதியஞ்சார்ந்தனர்; மற்றும் பிறவற்றானும் காசியையடைந்த மாத்திரத்தாலே சாதுசங்க சகவாசங்களால் சாதன சதுஷ்டயங்களைப்பெற்று சற்குருவினுபதேசத்தால் திட ஞானத்தையடைந்து காசிமரணத்தாற் பின் முத்தியடைக. செத்தாரைச்சாவோர் சுமந்து செல்வது எங்குமுண்டு. ஆனால்

காசியிலோ சாவாரைச்சாவோர் சுமப்பதுளது. ஸ்ரீகாசிமரணத்தைவிரும்பியவர்கள் தமக்குமரணம் சீக்கிரத்தில் நிச்சயமென்று தெரிந்தவுடன் தம்மை ஒரு கட்டிலில் வைக்கச்சொல்லி மணிகர்ணிகை கட்டத்திலுள்ள தத்தாத்ரேயக் கடவுளினது பாதபத்மங்களின்மேல் தருப்பையைப்போட்டு அதின் மேல் தங்கள் சிரஸை வைத்துக்கொண்டு நாவுணரும்போது கொஞ்சம் கங்கை யாமமிர்தத்தைப் பருகி சர்வேஸ்வரன் திருவடி நீழலையடைவரநேகர். அவ்வளவுக்குச் சக்தியிலாத அநாதைகள் ஷை மணிகர்ணிகை கட்டத்திலும் அதற்குச் சமீபமான கங்காதீரங்களிலும் மரணத்தருவாயை விருப்புடன் வரித்து சாதாரண பூமியில் படுத்திருந்து மாய்கின்றனர். அன்னோர்களுக்கு அம்மரணாந்த காலத்தில் அன்னவாகாராதிகளும் கங்காமிருதமும் தருமத்துக் குதவும்படி தர்மாத்மபிரபுக்கள் வேலைக்காரர்களை நியமித்து உதவிபுரிகின்றனர். இப்படி உயிர்மாயப் பிராயோபசேவஞ்செய்யும் மக்களது மாண்பும் எய்தும் பேறும்யார்க்குமியம்புதலரிதாகும். நாதனில்லாதுயிர் துறக்கும் பிணங்களை தகனமின்றி கங்கையிற் போடுவர். கங்காதீரத்துக் கெட்டியிருக்கும் பாகங்களிலிறக்குமவர்களை ஒற்றை மூங்கிலில் கீழ்நோக்கக்கட்டி இருவராய்ச் சுமந்து தகனஞ்செய்தாகிலும் தகனமில்லாமலேயாகிலும் கங்கையிற் போடுவார்கள். நம் திராவிட தேயத்தாரில் மற்ற வகுப்பாரைக்காட்டிலும் நாட்டுக் கோட்டையாரே அதிகமாய்க் காசிக்கு யாத்திரை செல்லுகின்றனர். காசியாத்திரை செல்லும் தானாட்டியனைவிருக்கும் ஒவ்வொரு நாட்டுக்கோட்டை செட்டிப்பிள்ளையும் ஒருவருக்கு ஒரு வருஷத்துக்கு அன்னத்துக்குப் போதுமான வட்டியைத் தரக்கூடிய முதல் ரூபா 600 வைக்கவேண்டுமென்பது அவர்கள் ஜாதிக்கட்டு விதியாம். ஒருவரால் ஏகதேசத்தில் கூடாதபோது பலர் சேர்ந்தும் செய்யலாம். இவர்களின் தர்மசிந்தனையையும் ஒற்றுமையையும் பாருங்கள்! இப்படி இவர்கள் ஒத்து தர்மஞ்செய்வதினால் பெரிய ராஜாராஜாக்களின் தருமத்தைக் காட்டிலும் அதிகமான தருமத்தைச் செய்கிறார்கள். கையாலாகாத லோபிகளும் துஷ்பிரவர்த்தியுமுள்ள சிலதுராத்மாக்கள் அவர்கள் அதிக வட்டி வாங்குகிறார்களென்றும், மற்றும் பல அதர்மமான வியாபாரங்கள் செய்கின்றார்களென்றும் வீண்வாதம் செய்கின்றனர். அது பொருந்தாது. எத்தொழிலை எம்மாதிரி செய்தாலும் முடிவில் தர்மம் செய்வது மேன்மையுடைத்தாம். வட்டி முதலியவைவாங்குவதில் அவரவர்களின் இலாபத்தைக் கருதி அதிக வட்டிக்கு வாங்குவோரிடத்தில், தக்கலாபம் சம்பாதிக்கிறார்களேயன்றி ஒருவரையும் அதர்மமாகக் கட்டுப்

படுத்தவில்லை. ஆனால் நாம் கேள்விப்படுகிறபடி, வாயில்லாஜீவப் பிராணிகளின் ஜீவஹிம்சைக் கேதுவான எவ்விதமான தொழிலும் அது சம்மந்தமான வியாபாரமும் தர்மஞ்செய்தல் காரணத்தால் மேம்பாட்டைப் பெற்றிருக்கும் நம் நாட்டுக்கோட்டை செட்டிப்பிள்ளைகளுக்கடுத்த தன்று. யாதாமொரு குற்றத்தைச் செய்கிறவனைக் காட்டிலும் செய்விக்கிறவனுக்கும், அப்படிச் செய்ய சாதகம் செய்கிறவனுக்கும், அது விஷயமாய் எந்த விதத்திலாவது உதவி செய்கிறவனுக்குமே அதிக பாவம் சம்பவிக்கிறதென்றும்,குற்றங்களுக்கெல்லாம் முதல் குற்றமாகியஜீவஹிம்சை, ஜீவவதை (பிராணிகளைக் கொல்லல்) எந்த சந்தர்ப்பத்திலும் எவ்வகையானுமிகழ்ந்து மறுக்கத்தக்கதென்று திருவள்ளுவநாயனாரும் மற்றும் பலரும் நீதிகூறியிருக்கின்றனர். அதினும் நம்மிந்துக்களுக்கு சர்வோத்கிருஷ்டமான கோ-என்பது பசுமாடு. கோவின் ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு தேவதையும் குக்ஷி, வயிற்றில் சர்வதீர்த்தங்களும் ஆகவே கோவில் 33 கோடி தேவர்களும் கங்காதி சர்வதீர்த்தங்களும் மற்றுமுள்ள ரிஷிகணங்கள்-யக்ஷ-கின்னர கிம்புருஷ-நாகாதிகளும் அதாவது விராட் விஸ்வமும் அடங்கியிருக்கின்றன. நம்ஹிந்துக்களுக்கு நேர் சத்துருக்களான துருக்கர் கோஹிம்ஸை செய்து நம்மதவிஷயத்திற் பிரவேசித் ததினாற்றான் தங்கள் சக்கிரவர்த்தியத்துவத்தையும் சர்வத்தையுமிழந்து போயினாராயினர். நமக்கு மதசம்மந்தமான பலத்தினாற்றான் இந்த ஸ்திதியிலாவது நம்மிந்தியாவிருக்கிறது;மேலும் நமக்கு இராஜனே தெய்வம். இந்துட்பங்களையறிந்த நம்காருண்ய பிரிடிஷ்கவர்ண்மெண்டார் நம்மதவிஷயங்களிற் பிரவேசிக்குமவர்களைப் பல சட்டதிட்டங்களாற் கண்டித்து நம்மதத்தை அவர்களும் ஏற்றிப் போற்றிக் காப்பாற்றிவருகின்றனர். அங்ஙனமாகவும் நாமே அப்படிப்பட்ட ஜீவஹிம்ஸை காரியங்களுக்கிடங்கொடுப்பது எவ்வகையானும் பொருந்தாது. ஜீவஹிம்ஸையான கொலைத்தொழில் மிலேச்சர்-பஞ்சமர் முதலியோராகிய கீழ்ஜாதியாருக்குரியவையேயன்றி எவ்வளவேனும் கல்வியாலும், நாகரிகத்தாலும், செல்வத்தாலும், திருவருட் கடாக்ஷத்தினாலும் மற்றும்பல மேம்பட்ட குணாதிகளிலேதாவதொன்றை யுடையவர்களானாலும் அன்னோர்களுக்கு எள்ளளவு மடுத்ததன்றென்று, தங்கள் மேன்மை பொருந்திய ஜீவகாருண்ணிய மனதிற்கொண்டு மேலும் மேலும் ஜீவகாருண்ணியத்தை விருத்திசெய்து இவ்வுலகில் பேரும் கீர்த்தியும் பெற்று பரமகருணாநிதியாகிய சிவபெருமானது திருவருட்கிருபா கடாக்ஷத்தையுமடைவார்களென்று கோரப்படுகிறது.

பின்னும் சுருதிசம்மந்தமாய் வேதங்களிற்கூறிய விதிப்படி யாகஞ்செய்தபோது வபையையெடுப்பதற்காக ஆடுகளை அறுத்துத்தள்ளி பூமியில் இரத்த ஆறுவெள்ளங்கொண்டு கிடக்கும் பிராணிகளை குலம், சிஷ்டாசாரம், படிப்பு-சற்குண விசேஷங்கள் முதலியவற்றால் மேன்மைதங்கிய பிரம்ஹஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரவர்கள் கண்ணுற்ற மாத்திரத்தில் திகிலடைந்து அளவில்லா மனக்லேசமுற்று ஸ்மரணையற்று "வேதமே உன்னை நம்பினேன்" என்று சொல்லிக்கொண்டே அடியற்றமரம்போல் திடீரென்று பூமியில் விழுவாராயினர். உடனே சூழ்ந்திருந்தோரால் சைத்தியோபசாரங்கள் செய்யப்பெற்று எழுந்து நின்று சர்வஜீவதயாபராகிய கைலாசநாதனைத் தியானித்து தம்பாற்பெற்றுள்ள தீர்த்தத்தை பூமியில் உயிர்மாய்ந்து கிடக்கும் அஜங்களின்மேற் புரோக்ஷிக்கவும் மே-மேயென்றுசந்தோஷத்தால் கத்திக்கொண்டு ஓடிப்போய் விட்டன. அப்போது தீக்ஷிதரவர்கள் சந்தோஷமடைந்து வேதத்திற்கூறியிருக்கும் "பசுபந்தனம்" என்பதின் பொருள் இந்த ஜீவப்பிராணியாகிய அஜம்-ஆட்டைக் கொல்வதென்பதருத்தமல்ல. பசு என்றால் ஜீவன், மனது-பந்தனம் என்றால்கட்டுப்படுத்துவது ஆகவே மனதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்பதேயல்லது மற்றது பொருந்தாதென்று பிரசங்கித்திருக்கிறார். இது போலவே மற்ற வாக்கியங்களுக்கும். ஆனாலவ்வாறுமனதைக் கட்டுப்படுத்துவதென்றால் சாமான்னியமாய் கூடாதாகையால் சுருதி சம்மதப்படி ஒரு யாகத்தைச்செய்தமுடிவில் யாககர்த்தா-எஜமானன் ஆ! இவ்வளவுகிரியைகளும் ஜீவஹிம்சையும் திரவியவிரயமும் இந்த ஒருமாஷம் உளுந்துபரிமாணமுள்ள மாமிசத்துணிக்கையை யருந்துவதற்காகவா வென்று நினைத்தலும், கருமத்தைவெறுத்து கருமபரிபாகத்தின் முடிவாகிய ஞானத்தைப்பெறலும் அப்போது சுருதி, அதுவும் தேவையில்லை வாசனைபார்த்தாற் போதுமானதென்று இடங்கொடுக்கிறது. யாகாதிசமஸ்த கருமங்களும் ஞானத்தையடையும் சித்தாந்தத்துக்காக வென்பதை கைவல்யோபநிடதத்திற் கூறியவாறு:—

தினமுமண்ணுகர்பிள்ளை நோய்க்கிரங்கியே தீம்பண்டமெதிர்காட்டிக்
கனமருந்துகளொளித்து வைத்தழைக்கின்ற கருணையாந்தாய்போல
மனையறங்கள்செய்மகங்கள் செய்நன்றென்று மலர்ந்தவாசகஞ்சொல்லு
நினைவுவேறுகாண் சுவர்க்ககாமிகளந்த நிர்ணயந் தெரியாரே.

போகமநுயிர்கண்டதையுண்பதும் புணர்வதுமியல்பேகா
ணாகமங்களுஞ்சுபாவத்தை விதிக்குமோவத்தனைதெரியாதோ
காகமேகருத்திடுநெருப்பே சுடுகசந்திடுவேம்பேநீ
வேகுவாயுவேயசையென வொருவரும்விதித்திடல்வேண்டாவே.

கள்ளுமூனுநீவிரும்பினான்மகங்கள் செய்காமத்தின் மனதானாற்
கொள்ளும்பெண்டொடுகலவிசெய் யெனிலிவன்குறையெலாந்தொ
டானென்றே, தள்ளும் வேதத்தின்சம்மதஞ் சகலமுந்தவிர்வதேகருத்
தாகும், விள்ளுமிவ்விதியென்னிற் பூருவநியமமாம்விதியன்றே.

மதுவிரைச்சிகளுண்ணென்ற சுருதியின்மணந்து பாரெனிற்பாராய்
மிதுனவிச்சையும் பூத்திரோற்பத்தியால் விரும்பென்றவிதிபாரா
யிதையும்விட்டொழியநைஷ்டிக வன்னிக் கிகழ்ச்சியற்றதும்பாரா
யதையறிந்துகன்மங்களாசைக ளொழிந்தானந்த மடைவாயே.

மேற்கூறியவற்றின் தாத்பரியம் வருமாறு:—பிரதிதினமும் மண்ணைப் புசிக்கின்ற குழந்தையின் வியாதியை நிவர்த்திக்கும் பொருட்டு மேலான ஔஷதங்களை ஒளித்து வைத்திருந்து எதிரில் தித்திப்பான பண்டங்களைக் காட்டிக்கொடுப்பதுபோல,யாகாதி இல்லறங்களைச்செய் என்றுசொல்லும்படியான சுருதிதாற்பரியம் வேறு என்பதை சுவர்க்காபேக்ஷையுள்ளவர்கள் அறியமாட்டார்களென்றும்,:—போகத்தைப் புசிக்கின்ற ஜீவர்கட்குக் கண்ணாற் கண்டத்தைதின்பதும் சேர்வதும் சுபாவமேயாகும், வேதாகமங்களும் சுபாவத்தைக்கூறுமோ, அவ்வளவு தெரியாதா, காக்கையே நீ கறுத்திடுவாய், அக்கினியே நீ சுடுவாய் நிம்பமே நீகசந்திடுவாய் அதிவேகம் பொருந்திய காற்றே நீ சலிப்பாயென்று ஒருவரும் நியமிக்க வேண்டுவதில்லையென்றும்;—வேதம் இகவின்பத்தை நீக்குவான் பரவின்பத்தைக்கூறியஃது நீக்கின பின்னரிஃதையும் நீக்கிப்பரமசுகமாகும் பொருட்டங்ஙனங் கூறினதென்பதும், வேதம் போக போக்கியமேபயனான கன்மத்தை விலக்கினதேயன்றி விதித்ததன்றென்பது மாகவும்.-மதுவையும் மாமிசத்தையும் நீயுண்ணவிச்சித்தால் யாகங்களைச் செய்து புசிப்பாய், காமவேட்கையுண்டானால் விதிப்படி விவாகஞ் செய்யும் மனையாளோடு கலவிசெய்யென்றால் இந்தக் காமியான ஜீவனானவன் மற்றவைகளைத் தீண்டானென்று விலக்கும்படியான வேதத்தினுடைய சம்மதமானது அனைத்தையும் நீக்குவதே அபிப்பிராயமாகும், கருமகாண்ட விதிகளனைத்தும் பூர்வபக்ஷமேயன்றி சித்தாந்தமல்லவென்பதும்.—மதுமாம்ஸங்களைப் புசியென்றவேதமானது, பின்பு ஆக்கிராணஞ் செய்தாற்போது மென்பதைப்பார், மனைவியோடு புணர்ச்சியின்பமும் மக்கட்பேறடைவதின் பொருட்டென்பதையும் அறி, இவைகளையும் விட்டொழித்த சந்நியாசிகளுக்கும் நைட்டிகப்பிரமசாரிகளுக்கும் இகழ்ச்சியில்லாதிருப்பதையும் உணர், அக்கருத்தினையாராய்ந்து கன்மங்களின் ஆசைகளையொழித்து ஞானத்தால் ஆனந்தமடையென்பதையும் தெரிந்து கொள்வாயாகவெனவும், வேதங்கள் கர்மகாண்டத்திற் கூறும்

வர்ணாசிரம தருமங்களும் அதனாலுண்டாகும் போகவின்பங்களை யெல்லாம் பின் துன்பங்களாக வருத்துதலைக்கண் டவற்றை விடுத்துப் பரமசுகத்தைத் தேடவேண்டுமென்ப ததனபிப்பிராய மாதலாலிவற்றை யொழித் தச்சுகத்தைத் தேடவேண்டுமென்பதாம்.

மேற்கூறிய வேதத்தின் பூர்வபக்ஷசித்தாந்த அபிப்பிராயங்களை அறிவதற்காரம்பிக்கு முன்னம் நான்குவேத ஆறுசாஸ்திரங்களையுங்கற்று அவற்றின்படி சிஷ்டாசார முடையவனாயிருத்தல் வேண்டும். யாகாதி விசேஷகருமங்களின் அந்தரங்க கருத்தையறியாமல் ஆயிரக்கணக்கான திரவியத்தை ஜீவஹிம்சையுடன் செலவழித்துச் செய்துவரும் கர்மபரிபாகிகளுக்கு சொல்லப்பட்டதேயன்றி; கேவலம் வேதசாஸ்திரங்களைப் படியாதவனையும் கர்மசண்டாளனையுமிருக்கிற அவிவேகிகளுக் கெவ்வளவும் பயன்படாது. ஸ்திரீயிச்சையுண்டானால் விலைமாதரை ஜாதிமதாசாரங்களை யொழித்துப் புணருதலும், மதுமாம்ஸ இச்சையுண்டானால் கடைகளிலும் ஷாப்புகளிலும் பாடில் பாடிலாய் வாங்கியருந்துவதுமான அத்துணைத் தடித்த நினைவுள்ளவர்கள் கெட்டுப்போகாமலிருக்கும்படி கர்மகாண்டவிதிகளை எவ்வளவும்வழுவாது அனுட்டிக்காவிட்டால், இகபரநிந்தைக்குட்பட்டு சர்வஜீபரமகருணாநிதியாகிய சர்வேஸ்வரனாலும் அருவருக்கப்பட்ட மகாபாபியாய் விடுகிறான். யாகப்பசுவின்பேரிலுள்ள ஒவ்வொரு ரோமத்திற்கும் ஒவ்வொரு பிராமணனுக்கு அன்னமிடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறபடி செய்யச் சக்தியேற்பட்டாலொழிய யாகத்தைச் செய்ய ஆரம்பிக்கக்கூடாது. இப்படிக்கடினமாக விதித்தால், யாகஞ்செய்யும் கர்த்தாவுக்குத் தனக்குத்தானகவே புலப்பட்டு சித்தாந்தத்தை யெய்துவானென்பது வேதத்தின் முடிவான கருத்தாகும். ஆனால் "யத்பாவயேத்தத்பவதி" என்றபடி "யாககர்த்தர்கள் வேதத்தின் பூர்பக்ஷசித்தாந்தங்களை அறியாமலே அந்தக பாரம்பரியமாகவும், சிஷ்டாசாரமென்பதை மட்டும் நம்பிச் செய்கிறவர்களுக்குப் பூரணமான சுவர்க்காதி போகங்கள் மட்டும் (முத்திக்குமிவர்களுக்கும் வெகுதூரம்) கிடைப்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை" சதுர்வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து சிஷ்டாசாரமுள்ள கர்மபரிபாகிகளல்லாத ஏகதேசஞானத்தையடைந்த மற்றோர் எள்ளளவும் தங்கடங்கள் வருணாச்சிரமவழிகளை திவ்யஞானமடையும்வரை தவறுவரேல்ரௌரௌவாதி நரகத்துக்குப் பாத்தியஸ்தராய் எல்லையிலாக்காலம் துன்புறவேண்டுமென்பதிற் றடையில்லை. மேற்கூறிய திவ்யஞானத்தையடைகிற வரையில் கருமத்தை எள்ளளவும் தவற விடக்கூடா தென்பதையுணர்த்த:-

திரராய்ப்பிரமவித்தாய்த் தெளிந்தவர்தெளியுமுன்னம்
வாரமாயிருந்ததங்கள் வருணமாச்சிரமஞ்சொன்ன
பாரகாரியமானுலும் பலர்க்குபகாரமாக
நேரதாச்செய்வர்தீர்ந்த நிலைவிடாச்சீவன்முத்தர்.

இதனுல்.—திரமுள்ளவர்களாய் பிரமவித்தாய்த் தெளிவுற்ற வர்கள் அங்ஙனம் பரிபூர்ண நிலைமையடைகிற வரையில் முன்பு தங்களுக்குரிமையாயிருந்த தங்களுடைய வர்ணச்சிரம தருமங் களைக் கர்மகாண்டத்திற் சொல்லியபடி வருத்தமான கருமங்களா யிருந்தாலும் லோகோபகாரமாக முடிவான நிச்சயத்தை விட்டு நீங்காத ஜீவன்முத்தரும், கிரமமாக தங்கடங்கள் சிஷ்டாசார கரு மங்களை எள்ளளவும் தவிராது செய்து வருவர்.—ஸ்வரூபஞான முள்ள ஜீவன் முத்தருக்கு கருமத்தின் அவசியமென்ன? அவர் கள்கூட ஸ்வரூபத்திற் சேரும் வரையில் கருமங்களைச் செய்கி ருர்களென்ருல் மற்ருேரைப்பற்றி என்ன சந்தேகம்? ஏதோ இரண்டொரு விஷயங்களை வாக்கால் மட்டுந்தெரிந்துகொண்டு அனுஷ்டானத்தி லெவ்வளவுமில்லாத குதர்க்கவாதங்களால் ஞானிகளென்று தம்மைத்தாமே போற்றிக்கொள்ளும் அசேத னர்களுக்கு எட்டுணையுமீது பொருந்தாதென்க.

ஆகவே கருமபரிபாகிகளான கர்மகாண்டத்திற் சொல்லிய விதிப்படி யாகஞ்செய்வதால் ஏற்படும்ஜீவஹிம்ஸைகூட வெறுக் கப்பட்டதென்பதை மேற்கூறியவற்ருல் நிருபணஞ் செய்யப்பட் டபடியால் இயற்கனவே விவரித்திருக்கிறபடி ஹிந்துமதத்தின் பிரதமாங்கமாகிய "ஜீவஹிம்ஸா நிவர்த்தியும், ஜீவகாருண்ய மும்" ஹிந்துவாயிருக்கிற ஒவ்வொருவனுக்கு முரியதென்பதைத் தெளிந்து பிராணிவதை முதலியவைகளுக் கெவ்வளவுமிடங் கொடாது, அது வொழிந்தமற்றை வழிகளில் ஜீவனேபாயஞ் செய்தும், புலாலருந்தலை அடியோடே வெறுக்கவுங்கடவர்.

மேற்கூறிய நாட்டுக்கோட்டையார் தருமத்தைப் பற்றிப் பேசுங்கால் "கொலைமறுத்தலை"ப்பற்றி விவரிக்கப்படவேண் டியதாயிற்று. நிற்க, காசியில் தங்குகிறவர்கள் துர்க்கைபூஜை முதலிய தேவிபூஜைகளைச் செய்யாதவர்களையும், யாத்திரை வந் தோர்களின் திரவியத்தை முற்றிலும் அபகரித்துக் கொள்ளக் கூடிய இயல்புடைய சில க்ஷேத்திர வாசிகளையும் தெரிந்து ஓரிடம் சேரவேண்டும். காசியில் நடுஇராத்திரியிலிறப்பினும் தகனசஞ்சயனஞ்செய்து வீடுசேர்வர். சந்நியாசிகள் மோக்ஷமடை ந்தால் கருங்கற்பலகையாற் செய்த பெட்டியில் சிவப்பிரதிமைக்

கௌப்பானமாய்வுற்ற உடலை அதனுள்வைத்து செய்யவேண்டிய மதாசார கருமங்களைச் செய்து அதைத் தோணியிலேற்றி திரிபதகையில் ஆழ்த்துவர். தகனஞ்செய்யக்கூடாத சிறு குழந்தையிறப்பின் அதனோடு ஒரு கருங்கல்லைக்கட்டி பாகீரதியில் விடுவர். ஸ்ரீகாசி மஹாஸ்மஸானமும் ருத்திரனுக்கு மிகப்பிரியமுமான ஆநந்தவனமுமா யிருக்கிறபடியால் அதில் இறக்கும் பிரேதங்களைத் தீண்டுதலால் ஆசௌசம் கிடையாது. அப்பிரேதங்கள் சிவப்பிரதிமைகளென்றும் பூஜிப்பதற் கேற்றனவென்றும் சொல்லப்படுகிறது. சம்வர்த்த தேவன் (பிரஹஸ்பதியின் சகோதரன்) விஸ்வேஸர் பூஜைசெய்துத் திரும்பிவருங்கால் எதிர்ப்பட்ட யாதாமொரு பிரேதத்தைப் பூஜைசெய்வதும் பிரதிதினமும் விஸ்வேசர் தரிசனத்தைப்போலவே சிவப்பிரதிமை பூஜையுமில்லாது ஆகாரஞ்செய்வதில்லை; அப்படி சிவப்பிரதிமை பூஜைசெய்த பிறகு ஸ்நானஞ்செய்வதில்லையாமென்ற இதிகாசம் காசிரகஸ்யத்திலுள்ளது. இப்போது மேற்சொன்னபடி பூஜைகள் மட்டும் செய்வோரைக் காணுவிடினும் மற்றப்படி இவிடங்களிற் போல இழிவாயும் ஆசௌசமாயும் பாவிக்கிறதில்லை. சில சமயங்களில் ஹைறோட்டில் சந்தடியால் சவமெடுத்துப்போவோரை நிர்ப்பந்தமாய்த் தீண்டவேண்டிவரும். அவர்கள் மற்ற சாமான்களைக் கொண்டுபோவது போல் சர்வசாதாரணமாய் எடுத்து வருகின்றனர். அவர்களை எவரும் தடைப்படுத்தக் கூடாது. மணிகர்ணிகை கட்டமயானம் இராப்பகல் அறுபது நாழிகையும் ஓயாது எரிந்துகொண்டிருக்கும். ஹரிச்சந்திர மயானத்தில் இதில் பாதியிருக்கும். இப்போதும் வீரபாகுவம்ஸத்தைச்சேர்ந்தவர், சம்பள ஆட்களைக்கொண்டு மயானங்காக்கின்றனர். ஆனால் அவர்களின் செல்வமிகுதியால் அரசருக்கொப்பான பெரிய அரன்மனைகளில் கல்கத்தாவிலும் காசியிலும் பெரிய வர்த்தகக் கம்பெனிகள் ஸ்தாபித்து மேன்மையுற்றிருக்கின்றனர்.

இவிடத்தில் சூத்திரரும் (சில சமையத்தில் பஞ்சமர்கூட) பார்ப்பாரும் (காசிச்சுதேசிப்பிராமணர்) லௌகிககாரியங்களில் ஒருவரையொருவர் தீண்டிக் கொள்ளுகின்றனர். மேலும் சாதாரணமாய்ப் பார்த்த மாத்திரத்தில் இவர்களுக்குள் வித்தியாசந்தெரிவதில்லை. மேல் ஜாதி முதல் கீழ்ஜாதி வரையிலெல்லோருக்கும் ஒரேவித உடைதான்; அதாவது தலையில் தலைக்குட்டை அல்லது டொப்பி உடம்பில் ஒரு சட்டை, இடுப்பில் கன்னங்கறேலென்ற (பெரும்பான்மையும்) பஞ்சகஞ்சமுள்ள வேஷ்டி, காலில் ஒரு ஜோடு, இவைபிக்ஷாதிகாரி முதல் இலக்ஷாதிகாரி வரையில்சமமா

யுள்ளது. இவிடத்தில் காய்கறிகளில் நிஷேதமில்லாமல் முள் ளங்கி, மொட்டக்கோஸ், சுரைக்காய் முதலியவைகளை சிரார்த்தங் களிலும் சேர்க்கிறார்கள். இவிடத்தில் திருஷ்டி தோஷமென்பது கொஞ்சமும் கிடையாது. ஸ்பரிசதோஷமும் வெகு சொற்பம். பிராமணர் அன்னமருந்தும்பொழுது சூத்திரர் பார்ப்பதினாலும் (சூத்திரருள் இடையர் சாதியாலுயர்வு பெற்றவர்) இடையர் கொணர்ந்துவரும் கங்காதீர்த்தத்தை பிராமணர் சிரார்த்தாதிக ளுக்கு முபயோகிப்பதாலும் தோஷமில்லை. சந்திரமதியை விலைக் கேற்ற சவுக் என்ற அரிச்சந்திர பஜாரும் காலகண்டையர் கிரக முமிருக்கின்றன. லோகிதாஸனை சர்ப்பந்தீண்டின நாககுண்டமி ருக்கிறது. அதில் இப்போது ஸ்நானஞ்செய்கிறவர்களுக்கு சர்ப் பந்தீண்டுவதால் விஷமேறாது. அரிச்சந்திர மயானத்தில் ஹரிச் சந்திரனும் சந்திரமதியுமிருக்கிறார்கள். காசிராஜா இப்போது காசிபட்டணத்திலில்லாமல் காசியின் எதிர்ப்பக்கத்திலுள்ள இரா மநகரில் வசிக்கிறார். இவிடத்தில் ராஜனுக்குரிய அரண்மனை, யானை, ஒட்டகங்களுடனும் வசிக்கிறார். இவருக்குக் காசிபட்ட ணத்திலும், அரண்மனைகளும் அநேக கட்டிடங்களும் பஜார்களு மிருக்கின்றன. இப்போது இவருக்கு "மஹாராஜா" என்னும் பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவர் தம்மிருப்பிடத்தில் சில தருமங்களும் செய்து வருகிறார். ஷை இராம்நகருக்கு ஒருமைல் வடக்காகவும் வருணை சங்கமத்துக்கெதிராகவு முள்ள வியாஸ காசிக்கு ஏகாதசியன்றையத்தினம் தரிசனம் செய்தல் விசேடம். ஆனால் அவிடத்திலிறப்போர் கார்த்தபமாய் ஜனிக்கவேண்டும் என்னும் சாபமுள்ளது. தரிசனம் செய்து விட்டு இராத்தங்காமல் காசியை வந்து கூடாவிட்டால் ராம்நக ரையாவது சேரவேண்டும். காலணா அல்லது அரையணா கொடு த்தால் கங்கையின் அக்கரைக்குப் படகுகளில் கொண்டுபோய் விடுவர். கங்கையில் ஸ்டீமர்கள் படகுகள் முதலியவைகள் வியா பாரத்தின் பொருட்டு போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருக் கும். நான்கணா அல்லது எட்டணாவுக்கு ஒரு தனிபடகு வாட கைக்கேற்று காசிப்பட்டணத்தின் கங்காதீரகாட்களை யெல்லாம் சுற்றிப்பார்ப்பது மனதுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக் கும். நூற்றுக்கணக்கான படகுகளை இப்பட்டணத்துள்ளுறை யும் பங்காளி முதலிய ஜாதியார்கள் கலியாணங் கார்த்திகை முத லிய சுபகாரியங்களில் நடந்தேறும் ஊருகோலமாக கங்கையின் காட்ஸ்களை மணமகன் மணமகளோடும் சேர்ந்து சுற்றிவருவர். அத்துடன் அவர்களைச் சேர்ந்த பந்துக்கள் ஸ்திரீ புருஷாள் சுமார் 50-60 பேருக்குக் குறையாமல் கும்மி கோலாட்டம்

முதலியனவகளை விளையாடிக்கொண்டும் இந்துஸ்தானி பாட்டுக ளைப்பாடிக்கொண்டும்போவதைப்பார்த்தால்ஆநந்தமாகவும்அபூர் வமாகவுமிருக்கும். அஸ்தமித்த சிறிது நேரத்துக்குள் அதாவது சுமார் 8-மணிக்குள்ளாக இம்மாதிரி அநேக விளக்குகளுடன் கூடிய படகுகளும், தோணிகளும் கூடிய கங்காகாட்ஸ்களு டன் சேர்ந்த காசிப்பட்டணத்தினழகை எதிர்க்கரையிலிருந்தா வது, அல்லதுரெயில்வே வாராவதியின் பேரிலிருந்தாவது பாராத கண்களை என்னென்று சொல்வது!! கங்கையெடுப்பது பிரயாகை யிலுள்ள திரிவேணியிலாயினும் அதற்குத் தேவையான பாத்தி ரங்களைக்காசியிலேயே வாங்குவதுநயமாயும் மனதுக்கிசைந்த பல தினுசுகளுள்ளதாயுமிருக்கும். பிரயாகையிலும் பாத்திரங்கள் ஒருவாறு கிடைக்கும். எந்தக் காரணத்தாலாவது பிரயாகைக் குப் போகக்கூடாமல் காசியிலிருந்தே திரும்பவேண்டியவர்களி னுபயோகத்துக்காகவும், மற்றவைகளுக்காகவும் காசியிலுள்ள நாட்டுக்கோட்டையார் சத்திரத்தில் பிரயாகை சுத்த கங்கையை யெடுத்து வந்து வைத்திருக்கின்றனர். ஒருசேர் 80 ரூபாயெடை நாலணு; இப்படி கங்கையை விலக்குவாங்குவது எவ்வகையாற் பொருந்தும்? செலவு செய்யக்கூடிய தனுட்டியனென்று தெரிந் தபோது கங்காபுத்திராள் அவர்கள் குமாஸ்தாக்கள், மற்றும் யாசகர்களுடைய உபத்திரவம் ஜாஸ்தி. இனுவினங்களைத் தெரிந்துகொண்டு அவசியமான கிரியைகளை எல்லைக்குட்பட்டு செய்யாத பக்ஷத்தில் ஊருக்குத் திரும்பிவர ரயில் சார்ஜ் மீதியி ராது. அப்படிச் செலவு செய்துவிட்டு மறுபடியும் ஊரிலிருந்து பணத்தைத் தருவித்துக்கொள்ளமுடியாமல் வருந்துவாருமுண்டு. காசியில் குரங்குகளினுபத்திரவமும் மிகுதியே. அவைகளுடன் நாமெதிர்க்காவிட்டால் ஒன்றுஞ்செய்யாது. தின்னக்கூடியவை களையும் துணி மணி முதலியவைகளையும் மேல்மாடிகளில் மறந் துவைத்து விட்டால் நம்முடையதன்று. இக்காசி க்ஷேத்திரத் தில் பில்வாரண்யங்கள் ஜாஸ்தி; இக்கனிகள் இவிடம் உண்ணத் தகுந்த மதுரம் பொருந்திய வைகளாயிருக்கின்றன. தனுட்டிய ரல்லாத சாமான்னிய நிலைமையுள்ளவர்கள் காசியில் க்ஷேத்திரா டனம் தீர்த்தசிரார்த்தம் விஸ்வேஸ்ர் முதலிய தரிசனங்கள் கால பைரவ சமாராதனை இவைகட்கு இருபத்தைந்து ரூபாயில் செய் தால் சிறக்கத்தக்கதாயிருக்கும். அதமபக்ஷமாய் பத்து ரூபாயி லும் செய்யலாம். இவைகளில் ஒருவன் எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவுக்குக் குறையாமல் பனரிஸ் பட்டுகள், தாவ ளிகள், ரவிக்கைகள், கங்கை யெடுப்பதற்கான செம்புகள் முதலி யன்வ வாங்காவிட்டால் மனது சம்மதிக்காது. இவைகளைத்தவிர

காசியில் தங்கள் காலக்ஷேப செலவுக்கும் பஞ்சக்ரோஸ யாத்தி ரைக்கும் செலவுவேறே. ஹரிச்சந்திர பஜார் முதலிய பெரிய பஜார்களைப் பார்த்த மாத்திரத்தில் எதையும் கொள்ளல் வேண்டு மென்னும் ஆசை எல்லோருக்கு முண்டாகும். காசியில் பார்க்க த்தகுந்தவை:-சௌக்பஜார்என்னும் ஹரிச்சந்திரபஜார், விஜயநக ரம் ராஜாமுதலிய சிலராஜாக்களி னரன்மனைகள், கபீர்தாஸ்முத லான பக்தசிரேஷ்டர்களின் மடாலயங்கள்; ஸிந்தியாமகார்ராஜா, நாட்டுக்கோட்டையார் அன்னதானசத்திரம்,சௌக்பஜாரிலிருந்து மேற்காகப்போகும், விலைமாதரின் தெரு சங்கீதம்முதலியவைகள், பனாரிஸ்கண்டோன்மென்ட், இவிடமுள்ள கலெக்டராபீஸ்-டிஸ் டிரிக்ட்கோர்ட் பஞ்சாலைமுதலிய யந்திரசாலைகள், ஷை கண்டோ ன்மென்ட் ரெயில்வேஸ்டேஷன்கட்டிடம், விஜயநகரம் ராஜாமுத லிய சிலராஜாக்களுடைய சிங்காரத்தோட்டங்கள்-சென்டரல்ஹிந் துகாலேஜ், ராம்பூர்ஹைறோட்முதலியன.

காசிப்பட்டணத்தின் கீழ்பூமியானது எத்தனையோதரம் மக மதியஅரசர்களாலும், புத்தமதஅரசர்களாலும் பட்டணத்தின் கட்டிடங்கள் இடிக்கப்பட்டுமறுபடியும் மறுபடியும் கட்டப்பட்டு இம்மாதிரியாக கீழ்நிலமானது வெகுசாய்உயர்ந்துபோனது மாத் திரமல்ல; கீழ்நிலத்தின் நீரூற்றுக்கண்வாய்களும் கருங்கல்-கா ரைச்சுண்ணாம்பு செங்கல்கள் முதலியவைகளாலடைபட்டு கிண றுகள்வெட்டப்படுவதற்குலாயகற்றதாய் சாதாரணஉபயோகங்கட் குக்கூட கங்காநதியினின்றே கங்காஜலம்எடுத்துக்கொண்டுவந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள்; கங்காநதியின் நீர்மட்டமோ சாதாரணகாலங்களில்(பிரவாககாலங்கள்தவிர)எப்போதும் நூறுக் குமேல் இருபதுபடி-த்துறைகளுக்குக் குறையாத ஆழத்திலிருக் கும். சரியான பலமுள்ளயுவதிகளாயிருந்தாலொழிய ஒரு சிறியசெ ம்புஜலங்கூடஎடுத்துவரமுடியாது. அசக்தர்களும்விருத்தாப்பியர் களும் ஸ்நானத்துக்குக்கூட இறங்கிஏறமுடியாது. இப்பொழுதோ பெனாரிஸ் முனிசிபாலிடியார் ஹைறேட்கள்-சிறியகல்விகள்-சந் துகள்-வீடுகளின் மேல்மாடிகள்-அடுப்பறைகள்முதலிய எங்குபா ர்த்தாலும் கங்கைமாநதியின் பிரவாகத்தை 'வாட்டர்பைப்' குழா ய்கள்வைத்து பூர்வீகஜலகஷ்டத்தை நிவர்த்தித்து ஜலவசதியை வெகுவாய் விருத்திசெய்திருக்கிறார்கள். மற்றும்சென்னைமுதலிய பட்டணங்களைப்போல் இதுவுமொருபெரியநகரமாதலால் காலை மாலைகளில் ஹைறேட்டுகளில் ஜலங்களைத்தெளிப்பதுமுதலான ஒருபெரியநல்லமுனிசிபாலிடியில் செய்யவேண்டிய எல்லாவேற் பாடுகளையும் இந்த பனாரிஸ்முனிசிபாலிடியார் மிகவும்கவனித்துப்

பல சௌகூரியங்களை நாளடைவில்விருத்திசெய்து வருகிறார்கள். இயற்கனவே பிரஸ்தாபித்திருக்கிறபடி நகரத்தின் மல ஜலதாரைகளை கங்காநதியில் விழுவதை முற்றிலும் தடுத்துவரும்படியான ஏற்பாட்டைமுடிப்பதுதான் பாக்கியிலிருக்கிறது. இந்நகரத்துக்கு ஹெட்டாபீஸைத்தவிர ஸிட்டி பெரியபோஸ்டாபீஸூம் தந்தி ஆபீஸ்களுடன் கூடிய ஒன்பதுஸப்போஸ்டாபீஸ்களும், அதற்குச்சேர்ந்தபிராஞ்சாபீஸ்களும், பதினேழு போலீஸ்டேஷன்களுமிருக்கின்றன. இந்தியாவின் எண்ணிறந்தபாகங்களான தேசதேசாதிகளினின்றும் வரக்கூடிய ஒவ்வொரு மூலை முடுக்கின் ஜனசமூகங்களையும் இந்தஒருநகரில் பிரதிதினமும் விஸ்வேஸ்வரர் கிருபாகடாக்ஷத்தை யடையும்பொருட்டு வெகு ஆவலுடன் தாங்கள் அரும்பாடுபட்டுத் தேடியபொருள்களைச்செலவழித்து வரும் பக்தகோடிகளை ஆனந்தமாய்ப்பார்க்கலாம்.

நம்மாரியர்களுக் குறைவிடமாயிருக்கிற நம்மிந்தியவதிக்கு ஹிருதயகமலம்போல் நடுமையஸ்தானமாகிய இக்காசியின் வரலாறுகளையும் மஹாத்மியங்களையு மொருவாறு விளக்கினோம். பூர்ணமாயெடுத்துரைக்க ஆயிரம் நாவினைப்படைத்த ஆதிசேடனு மரிதாகவும், புல்லறிவுடையோனாகிய வென்னாலசாத்தியத்தினு மசாத்தியமாதலால் மற்றவைபவங்களை நேரில் போய் தரிசித்து ஸ்ரீ விஸ்வேசரது கிருபாகடாக்ஷத்தை அடைவராகவும்; அவ்விஸ்வேஸ்வரரது மஹிமைகளுக்கு முக்கிய காரணமாகிய கங்கையின் மகிமையை சிறிது உரைப்பாம்.

வருபெருந்தவத்து நான்மறைக்கிழவர் யாவருமுளமகிழ்கூர
வருளொடுமமைத்த விலிங்கபூசனைசெய் தன்பொடுமினிதுவீற்றிருந்தார்
பொருவிலிக்காதை யுரைத்துளோர் கேட்டோரெழுதி னோருளமகிழ்பூத்
விரிகடலுலகமுழுவது மேத்தவெளிதினில் வீடுபெற்றுறைவர். [தோர்

கங்கை மாநதியின் பௌராணிக வரலாறும் மஹிமையும்.

ஆதியுகத்தில்யோகத்தான் முத்தியடையுமதன்பின்ன
ரோதுமுகத்திலருந்தவத்தான் முத்தியுளதாமோங்கரிய
சோதிஞானத்தான்முத்தி முகத்திற்றுன்னுமுயிர்
காதலோடுங்கலியுகத்திற் கங்கைபடியின்வீடடையும்.

கிருதயுகத்தில் யோகத்தாலும், திரேதாயுகத்தில் அருமையாகிய தவச்சித்திகளாலும், துவாபரயுகத்தில் ஞானத்தாலும் அடைந்துவந்தமுத்தியானது இக்கலியுகத்தில் கங்காஸ்நான பல விசேஷத்தினாலடையப்படுகிறது. புரத்தல் அதாவது இரக்ஷிக்கும் தொழிலுக்கதிபனாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர், அழித்தல் அதாவது சம்ஹரிக்கும் தொழிலுக்கதிபதியாகிய முக்கண்ணபிரானை நோக்கி, கங்கைக்குச்சென்று பிரத்தியக்ஷத்தில் ஸ்நானஞ்செய்யச் சக்தியற்றவர்களுக்கும் அதேபலனைக் கொடுக்கக்கூடியதெவ்வழியென்று கேட்கும்போது, அக்கங்கையின் ஆயிரநாமங்களையுரைப்பதாலும், எழுதுவதாலும், கேட்பதாலும், அந்நாமங்களை

இல்லத்தில்வைத்துப்பூசிப்பதாலும், கங்கையில்பிரத்தியக்ஷத்தில் சென்றுஸ்நாநஞ்செய்தபலனை யடைகிறார்களென்று இனிதுநவில, அத்திருநாமங்களைச் சொல்லியருளவேண்டுமென்றுகேட்க, அடியிற்குறித்த ஆயிரநாமங்களையும் பரமகருணாநிதியாகியசிவபிரான் உரைப்பாராயினர்.

'அமுதோதகை, அச்சுதை, அனகை, அதுலை, அநந்தை, அபிராமை;
கமலை, கவுரி, கந்தவதி, கங்கை, காந்தை, கலியாணி;
உமை, ஆமளை, ஆநந்தவல்லி, ஏகை, உதாரை, ஓங்காரை;
விமலை, தாரை, பராநந்தை, விபூதி, தேஜை, ஆசாரை.

கருணை, அகோரை, பராசக்தி, காந்தி, துர்க்கை, நிராலம்பை;
வரதை, காமரூபை, திரிபதகை, அப்யை, வசு, தாரை;
பரஈஸ்வரை, வல்லபை, ஸ்வரூபை, பாநுமதி சூலினி, விஜயை;
பிரதை, அனுதகாதை, தவரூபை, மாதா, விபாவை, வரியை.

சத்தி, வனிதை, சிலவதி, தாணு, ஆசாரை, குணாதீதை;
பத்திரை, லீலாவதி, சாந்தை, பவானி, பாகீரதி, நிமலை;
முத்தி, மருண், மானினி, வேதமுதல், ஆரியை, காயத்திரி.

வேகவதி, அம்பிகை, இந்திரை, துதி, சங்கினி, ஜான்னவி;
போகவதி, கலாவதி, யோகினி, மாதவி, புண்ணியை, சுவர்க்கை.

பூர்வம் திரேதாயுகத்தில் அயோத்திமாநகரையாண்ட சூரிய வம்ச அரசனாகிய ஸகரமகாராஜன் அஸ்வமேதயாகம் செய்யும் பொருட்டு சர்வ லக்ஷணங்களுமமையப் பெற்ற அசுவமொன்றை வரித்து பூப்பிரதக்ஷிணமாக விட (அஸ்வமேதயாகஞ்செய்தலினு லிந்திரப்பட்டத்துக்கிடைஞ்சலாமாதலால்) அக்குதிரையை இந்திரன் பிடித்துப் பாதாள லோகத்தில் பகவதாம்ஸங்களுடன் ஸ்வரூபஞானத்தில் மெய்ம்மறந்துதவஞ்செய்துவரும் கபிலமகாமுனிவருக்குச் சமீபத்தில் கட்டிவிட்டுப் போயினன். ஸகரன் அஸ்வத்தை இப்பூவுலகமெங்குங்காணாது கடைசியாகத் தமது அறுபதினாயிரம் புத்திரர்களையும் தேடிக்கொண்டு வரும்படி இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு, விண்ணுலகம், மண்ணுலகமிரண்டினுங்காணாது பாதளத்திற்குட்புகுந்து தேடிப்பார்க்கையில், அக்கபில மகாமுனிவர் பக்கமிருத்தலைக்கண்டு, அம்மாமுனிவனுடைய தவத்தைப்பங்கம் செய்தபடியால் அம்முனிவன் தன்னுடைய தபஸ்ஸை பங்கம் செய்த தூர்த்தனெவனென்று கோபாக்கினியுடன் கண்களை விழித்துப்பார்க்கவும், எதிரிலிருந்த அவ்வறுபதினாயிரம் ஸகரபுத்திரர்களும் சாம்பலாய்ப்போய் விட்டனர்; அப்போது ஸகரமகாராஜன் தம் புதல்வரின் விருத்தாந்தத்தைத் தம் குலகுருவால் தெரிந்துகொண்டு மற்றொருத்தியின்

குமாரனாகிய அஸமஞ்சனுடைய புதல்வனை அக்குதிரையைப் பிடித்து வரும்படி ஏவினான். (ஸகரமகாராஜனுக்கிரண்டு மனைவிகள், ஒருத்திக்கு அறுபதினாயிரம்பேரும் மற்றொருத்திக்கு முன் சொன்ன அஸமஞ்சனும் புத்திரர்களாகப் பிறந்தனர்.) அவ்வாறே அம்சுமான் சென்று கபிலரை வணங்கிக் குதிரையைக்கொண்டு வரவும் ஸகரன் வேள்வியை முடித்துத் தன் பேரனாகிய அவ் அம்சுமானுக்குப் பட்டங்கட்டித்தான் சுவர்க்கம் புகுந்தனன். பிறகு அம்சுமான் வெகு காலம் ஆண்டுத் தனது புத்திரனாகிய திலீபனுக்கு முடிசூட்டித்தான் தவமியற்றும் பொருட்டு வனமேகினனேயொழிய, தங்குல பிதிரர்களைக் கரையேற்ற வில்லை. பிறகு திலீப மஹாராஜன் வெகுகாலம் தர்ம ராஜ்யபரிபாலனஞ்செய்தும்மக்கட் பேறுண்டாகாமையின் காரணத்தைத் தம் குலகுருவாகிய வசிஷ்ட முனிவரால்:—"நீ முன்னொருக்கால் தேவகாரியமாய்த் தேவலோகஞ் சென்றிருந்த காலத்தில் உன் திரும்புகால் மார்க்கத்தில் கற்பக மரநீழலிற் படுத்திருந்த காமதேனுவை வலம்வந்துப்பூசித்து வராதகாரணத்தால் அந்தக்காமதேனு தனது வமிசமான ஒரு பசுவையாவது பூசித்தாலல்லது உனக்கு மக்கட்பேறு உண்டாகாமலிருக்கக்கடவதென்று இட்ட சாபத்தை நிவர்த்தித்தால் உனக்கு புத்திர பாக்கியம் கிடைக்கு" மென்று திருவுளம் பற்றினதை அவ்வரசன் பூர்த்தி செய்து பிதிர்பக்தியுள்ள பகீரதனைப் பெற்றெடுத்து அவனுக்கரசீந்து தான் மாதவஞ்செய்யும் பொருட்டு ஆரண்யஞ்சென்றனன்.

பிறகு அப்பகீரத சக்கிரவர்த்தி கபில முனிவரின் சாபத்தால் சாம்பலாய்க்கிடக்கிறத் தமது மூதாதைகளை சற்கதியடைவிக்கும் பொருட்டு கோகர்ணத்தையடைந்து தவஞ்செய்தனன். அத்தவத்துக்கு மகிழ்ந்து பிரமதேவன் பிரத்தியக்ஷமாகவும் சாகரர்கள் நற்கதியடைய தேவ கங்கை பூமிக்கு வர அருள்புரிய வேண்டுமென்றுப் பிரார்த்திக்க, அக்கங்கையின் வேகத்தைத் தாங்க இப்பூமியில் நெற்றிக்கண் படைத்த சிவனொருவனாலேயல்லது பிறரால் கூடாதெனவும், பின்னும் சிவனையும் கங்கையையும் குறித்து வெகுகாலம் கடின தவம் செய்ய, மகேஸ்வரன் அத்தேவகங்கையைத் தாரணம் செய்வதாய் ஒற்றுக்கொள்ளவும், அம்மந்தாகினி தன்னைத் தாங்குவதாய்த்துணிந்த சம்புவும் பாதாளத்தில் அழுந்தும்படியான தனது பூர்ணவல்லமையுடனும் வர, பரமசிவன் அக்கங்கையைத் தனது சடைக்குள்ளொளித்தனன். பகீரதன் கங்கையைக்காணுமற்போகவே பெருமூச்செறிந்து திகைத்து நிற்க, அம்மாதேவன் பகீரதனுடைய தவத்துக்கு மகிழ்ந்து

ஒரு துளியை விட நதியாகப் பிரவஹித்து அதிவேகமாய்ப் பகீரதனுடைய தேர்க்காலைப் பின்பற்றிச்செல்லும் போது மார்க்கத்தில் ஜன்னு மகாரிஷியின் யாகச்சாலையுடன் யாகத்தை அழிக்கவும், அம்முனிவன் அந்நதியை ஆசமனஞ்செய்துவிட்டனர். மறுபடியும் இராஜன் அம்மாமுனிவனைக் குறித்துப் பிரார்த்திக்கவும் அந்தரிஷி தனது செவியால் வெளிவிட்ட கங்கையை பாதாளத்திலுள்ள அறுபதினாயிரம் சகர சாம்பலிற்றோய்தலும், அச்சாகராள் சற்கதி பெற்று சுவர்க்கம் சென்றனர். இவ்வாறு புராணோக்தத்தின்படி பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தபடியால் பாகீரதியென்றும், ஜன்னு மாரிஷி தன் செவி வழியாக விட்டமையால் அவரது புத்திரியாக "ஜான்னவி" என்றும் காரணப் பெயர்களமையப் பெற்றதுடன், அளகநந்தை முதலிய இயற்கைப் பெயர்களுடனும் மேலே கூறியிருக்கிற ஆயிரம் சிறப்பு நாமங்களுடனும் விளங்காநின்ற இக்கங்கைமா நதியின் தற்காலம் பிரவஹிக்கும் மார்க்கம் தேசவளப்பம் முதலியவைகளைக் கூறுகின்றோம்.

கங்கைமாநதியின் த்ரிஸ்யாம்வலம்.

கங்கைமாநதியானது ஹிமோத்கிரியின் தென்சாரலில் உற்பத்தியாகிறது. இந்நதியின் உற்பத்தியில் மனிதர்போகக்கூடிய (அதற்கப்புறம் சாதாரணமனிதர்போகக்கூடாத. அவ்வளவு நெருங்கிய மஹாரண்ணியமாயும் புலிகள்முதலிய துஷ்டமிருகங்களால் நிறைந்துள்ள அபாயஸ்தலமாயுமிருக்கிறது) கடைசி இடத்துக்கு கங்கோத்திரி=கங்கோற்பத்தியென்று சொல்லப்படுகிறது. இந்த கங்கோத்திரியிலிருந்து ஷை மஹாதாரண்ணியத்தின்வழியாய் ஆயுதங்கள் முதலிய உதவிகளால் அறுபதுமைலுக்கப்பாலிலிருக்கும் வாஸ்தவமான கங்கோற்பத்திக்கும் போகக்கூடும். அதற்கப்பால் சூரியரஸ்மைகிடையாதபடியால் வெளிச்சமென்பதேயில்லாததோடு முற்றிலும்பனி உறைந்தப்ரதேசமாயிருக்கிறது, பனியாலுறைந்துகிடக்கும் ஒவ்வோர்சமயத்தில் இப்பிரதேசத்தில்படும் சூரியவெளிச்சத்தால் சுத்தஸ்படிகம்போலும்,உயர்ந்த வெள்ளிபோலும்பிரகாசித்தலின், அதையேபரமசிவனிருப்பிடமாகிய கைலாச பருவதமென்று சொல்லப்படுகிறதும் எண்ணப்படுவதுமாயிருக்கிறது. இந்தப்ரதேசம் மேகமண்டலத்துக்கு மேற்பட்டிருப்பதால் மழைக்காகப்பயப்படவேண்டியதில்லை, வெயிலைக்கண்டால் இறந்த தாய், தகப்பனைப் பார்த்தது போலிருக்கும். மரஞ்செடி

களும் சுத்தமாய்க்கிடையாது,வாயுவும் பலமாயடிக்காது, விஷசம் மந்தமான பாம்புமுதலிய பூச்சிகளும் தேள் வகையறுக்களாவது புலி முதலிய துஷ்டஜந்துக்களாவது கிடையாது-மிருத்திகைசம்ம ந்தமான பூமியேவெகு சொற்பமாகையால் ஜீவப்பிராணிகளென் பதே இவிடம் கிடையாதென்றும் சொல்லலாம். ஆகவேமஹாத் மாக்கள், முனிவர் முதலிய பெரியோர் வசிப்பதற்கேற்றவிடமாயி ருக்கிறபடியாலிவிடங்களில் அநேக பெரியவாளிருப்பதாகவும்தெ ரிகிறது-சற்குருவின் அனுமதியின்பேரிலும் கிருபா கடாக்ஷத்தின் பேரிலும் இவிடங்களுக்குப்போகிற மகான்களுக்கு அவிடங்களி லிருக்கப்பட்ட சாதுக்கள் இப்படிப்புதிதாய்வந்து சேருபவர்களு க்குச் சிறிதுகாலம் வரையில் அவர்களால் கூடிய உபகாரங்களைச் செய்கிறார்களென்றும், அவிடங்களில் குகைகளாக உள்ளஜாகை, தவத்திருக்கவிடம், மரவுரி,பசியாற்ற காய்,கிழங்கு, பச்சிலைவகை யறுக்கள் முதலாய சாதனங்களைக் காட்டிக்கொடுத் துதவிபுரி கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

சாதாரணமாய்ப் போகக்கூடிய கங்கோற்பத்தியென்றுசொல் லப்பட்டஇடத்தில்கங்கையானது கோமுகத்தைப்போலும்தோற் றமுடையதோர்குகையினின்றும்பிரதானமானதாரைான்றும்,மற் றது ஆறுமாக வெளிப்பட்டு பிரவஹித்துவருகின்றது. கங்கோற் பத்தியினின்று 170 மைல் தூரத்திலுள்ள தேவப்பிரயாகையென் னுமிடத்தில் அளகநந்தையென்றுமற்றோர்நதிவந்து கூடி,விசேஷ பிரவாகமுடையதாய் ஷை தேவப் பிரயாகையிலிருந்து முப்பது மைல்தூரத்திலுள்ள ஹரித்துவாரத்துக்குச்செல்லுகிறது. இந்த ஹரித்துவாரம் வரையில் ரெயிலிருக்கிறது. இங்கிருந்து கங்கா நதியானது படகுகள் ஸ்டீமர்கள் போகக்கூடிய ஆழமும் விஸ்தா ரமுமுள்ளதாயிருக்கிறது, இவிடமிருந்து கங்காசாகரமென்னும் கங்கைசமுத்திரத்தில் சங்கமமாகுமிடம் 1400 மைலிருக்கிறது கங்கோற்பத்தியிலிருந்து ஹரித்துவாரம் வரையிலுள்ள 200 மை லும் நதி தக்ஷிணவாஹினியாயும், அங்கிருந்து பிரயாகைவரையில் தென்கிழக்குத் திசையாகவும்,அங்கிருந்துநேர்கிழக்காய்த்திரும்பி காசிக்குச் சமீபத்தில் சுமார் 40 மைல் உத்தரவாகினியாயும், அங் கிருந்து, மணி ஹரிகாட் வரையில் நேர்கிழக்காயு, மங்கிருந்து நேர் தெற்காய்த் திரும்பி சமுத்திர சங்கமத்துக்கு 200 மைல் தூரத் தில் பத்மா, பாகீரதி என்னும் பெயரோடுங் கூடிய இரண்டு பெரிய கிளைகளாய்ப் பிரிந்தும், மற்றும் ஓராயிரம் முகத்துவாரங் களுடனும் கல்கத்தாவுக்குத் தெற்கிலும் கிழக்கிலும் சுமார் 80 மைல் தூரத்திலுள்ள வங்காளகுடாக்கடலில் சமுத்திர சங்கம

மாகிறது. ஷை இரண்டு கிளைகளில் மேற்குப் பக்கத்தில் பிரிந்தோடும் பாகீரதிக்கு; கல்கத்தாவுக்கு சுமார் 40 மைல் வடக்கேயிருந்து சமுத்திர சங்கமம் வரையில் ஹூக்லி நதி யென்று சொல்லப்படுகிறது. கீழ்ப் பக்கத்தில் பிரிந்தோடுகிற மேலே சொன்ன பத்மா யென்றழைக்கப்பட்ட கங்கையானது பிரமபுத்திரநதியின் மேற்குக்கிளையாகிய (கங்கையைப்போலவே பிரமபுத்திரநதியும் சமுத்திரசங்கமத்துக்கு சுமார் 200மைலில் மெக்னு-கொனெய்என்னும்இரண்டு பெரியபிரிவுகளாய்ப்பிரிந்து சங்கமமாகிறது) கொனெய் என்னும் நதியுடன் கோலண்டு என்னுமிடத்தில் கூடி அங்கிருந்து இரண்டு நதிகளுமொன்றாய்ச்சேர்ந்தோடி சமுத்திர சங்கமமாகிறது. கங்கைநதியின் மொத்த நீளம் 1600 மைல்; அதனுடைய தென்கரை அல்லது வலது பக்கத்தில் சாம்பல் வந்து கூடுகிற யமுனையும், ஸோண பத்திரையும், கர்மநாஸாவும், வடகரை அல்லது இடது பக்கத்தில் ராமகங்கை, கோமதி, கண்டகி, கௌஸிகை, என்னும் உபநதிகளும் வந்து சேருகின்றன. மேலே சொன்ன உபநதிகளென்று சொல்லப்பட்டவை கங்கைக்குச் சமானமுள்ளவைகளாயும் சிலபெரியதாயுமிருக்கும்! இவைகளைத் தவிர கணக்கில்லாத எத்தனையோ சிற்றாறுகளும் உபநதிகளும் கங்கையில் சங்கமமாகின்றன. இம்மா நதியின் பேரிலுள்ள முக்கியபட்டணங்களாவன:-தேவப்பிரயாகை, ஹரித்துவாரம், பொரகபாத், கான்பூர், அலஹபாத்தென்னும் பிரயாகை மிர்ஜாபூர், ஸ்ரீகாசி, பாடலீபுரம், மாங்கிர், மணிஹரிகாட், ராஜ்மெஹால், கோலண்டே, மூர்ஷிடாபாத், தாமுக்தியாகாட்,-கல்கத்தா, கங்காசாகரம். மேலேசொல்லியிருக்கிறபடி கங்கைஸஹஸ்ரமுகங்களுடன் சங்கமமாகிறதால் மத்தியிலுள்ளபூமிகள் சிறு சிறு தீவுகளாயிருக்கின்றன. இத்தீவுகள்பெரும்பாலும் புலி முதலிய துஷ்டமிருகங்களால்நிறைந்தும், தரைசாகுபடிக்குலாயக்கில்லாத சதுப்புநிலமாயுமிருக்கிறது. அத்தீவுகளில்பெரிதானது கங்காசாகரமென்னும்க்ஷேத்திரமே. இதுவொன்றுதான் வஸிப்பதற்கு ஏகதேசவசதியுள்ளது. கங்காநதிமிகவும் அகலமான இடங்களில் மூன்றரை மைலுள்ளதாயும், ஆழமான இடங்களில் ஜாதியடி 40 (கோடைகாலத்தில்)உள்ளதாயுமிருக்கிறது. இந்நதி ஸ்டீமர்கள் செல்லலாயக்குள்ளதாயிருப்பதால் ஏராளமான வியாபாரம்-வர்த்தகம்-ஏற்றுமதி-இறக்குமதி வெகுஜாஸ்தியாய் நடப்பதாலும் இந்தியாவின் மற்றநதிகளைப்பார்க்கிலும் அதிக உபயோகமுள்ளதாயிருக்கிறது. ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் இந்நதியின் பிரவாஹத்தால் ஏறக்குறைய சமுத்திரத்திலிருந்து 200-மைல் வரையிலுள்ள கீழவங்காள தேசத்தின் தாழ்ந்த பூமியானது

முழுகடிக்கப்படுகிறது. கங்காநதி பாயும் இந்த கங்காதீரப்ரதேசத்தின் செழிப்பைப்போலுள்ள பூசாரம் இதர நதிதீரப்பிரதேசங்கள் இவ்வுலகத்தில் வெகு சொற்பம். நங்காவிரிநதியைப்போல் குறைந்தது சராசரியில் பத்துப்பங்கு அதிக செழிப்புள்ளதும், சிற்சில விடங்களில் நூறுபங்கு வரையிலுள்ளதாயுமிருக்கிறது. கங்காநதியானது சில சமயங்களில் சமுத்திரத்தினின்றும் பதினைந்தடி உயரம் பொங்கி, மணிக்கு 20-மைல் வேகத்துடனும், சுமார் 120-மைல் வரையில் நதியை எதிர்த்தும் ஓடுகிறது. கல்கத்தாவில்இந்த ஓட்டத்தினுடைய அலைகளின் உயரம்அநேகமாய் ஏழெட்டடியிருக்கும்,இத்துணை சிறப்பமையப்பெற்றகங்காநதியையும், வங்காளதேசத்தின் ஜனசமூகமும், கங்காமிருத மஹிமையினாலே மற்ற நதிதீரவாசிகளைக்காட்டிலும் பதின்மடங்கதிகமாய் யுக்தி புத்தி, வீரியம், சௌரியம், செல்வம் முதலியவைகளில் மேம்பட்டிருப்பதினாற்றான், நம் ராஜதந்திரமும் காருண்யமும் பொருந்திய பிரிடிஷ் கவர்ண்மெண்டாரும், இந்நதி முக்கியமாய் பாயப்பெற்ற ஷை வங்காள தேசத்தையும் அதற்குப் பிரதானமான கல்கத்தா நகரையும் ஹிமஸ்ஸேது பரியந்தமுள்ள நம்மிந்தியாவுக்குத் தலைமை நகராய் செய்து கொண்டிருக்கிறார்கள். புண்ணியத்துக்கு முக்கிய காரணம் பரோபகாரமானபடியினாலேயும் அக்குணமுற்றிலும் இக்கங்கைமாநதிக்கு எவ்வளவும் குறைவின்றிப் பொருந்தியிருத்தலாலுமே மற்றெல்லா நதிகளிலும் விசேஷமாண்புடைய புண்ணிய நதியாய் விளங்காநிற்கின்றதும் சுவானுபவமாயிருக்கிறது.



காசிகங்கை சிவகெங்கையே.

முற்கூறிய ஆயிர நாமங்களைப் பெற்றதும் ஆயிர முகங்களையுடையதும், விண், மண், பாதாளமென்னும் மூன்று லோகங்களில் பிரவஹிப்பதுமான ஸ்ரீகாசியிலோடும் கங்கை சிவகங்கையேயலது விஷ்ணுகங்கையன்றென்பதை அடியிற் குறித்த ஸ்ரீஸ்காந்தத்தின் நியாயத்தால் காண்க. மைநாகபர்வதத்தை மாமியாகவும், மேனையைத்தாரமாகவுமடைந்த ஹிமவான், முக்கண்படைந்த பரம கருணாநிதியாகிய பரமசிவனை மாப்பிள்ளையாகப் பெறும்படி மிக்கவரிதாய தவஞ்செய்து இரண்டு புத்திரிகளைப் பெற்றெடுத்தனன். இவ்விருவரில் ஜியேஷ்ட புத்திரிக்கு குடிலா சக்தி யென்றும், இளையவளுக்கு உமாசக்தி யென்றும் பெயர். உமையவள் தவஞ்செய்து சிவபிரானைப் பதியாக அடையுமுன்னர், தாரகாசுரன் முதலிய அசுரர்களால் பீடிக்கப்பட்ட இந்திராதி தேவர்கள் குமாரக்கடவுளை உற்பவித்து, அவ்வசுரர்களைச் சம்ஹரிக்கும் பொருட்டு இமவானிடம் சென்று சிவவீரியத்தைத் தரித்ததற்குத் தவமஹிமையால் யோக்கியதை பெற்ற குடிலா சத்தியைச், சிவபிரானுக்களிப்ப, சிவபிரானை வரனாகவரித்து வாக்குத்தத்தஞ்செய்து கொடுக்கப்பெற்று, சத்தியலோகாதிபனை பிரமனுடைய ஆசீர்வாதத்துக்குக் கொண்டுபோயினர். த்ரிகாலவர்த்தமானங்களையறிந்த நான்முகன் இக்குடிலை சிவவீரியத்தை

விஜரூபமாகவும் தீர்த்த ரூபமாகவும் முன்னால் தரிக்கவேண்டிய வளாகவிருக்கின்றாளென்பதைத் தெரிந்து, அச்சிவ வீரியத்தை ஏற்க இவளிப்போது அருகளல்லரென்றனர். அப்போது குடிலை மகாக்கிலேசத்தையும் கோபத்தையுமடைந்து விஷ்ணுவாசீர்வாதம் பெற்று நான் அதைத் தரிக்கின்றேனெனவே சதுர்முகன் கோபங்கொண்டு, என் வாக்கை அலக்ஷியஞ் செய்து மறுத்தமையால் நீ தீர்த்த ரூபமாகக்கடவையென்று சபித்தனர். அப்போது அக்குடிலாசத்தி தீர்த்த ரூபத்தையடைந்து சத்திய லோகம் முழுவதும் வியாபித்து மற்ற உலகங்களுக்கும் வெளிப்பட்டமையின், பிரமதேவன் திவ்யமந்திரங்களால் கட்டுப்படுத்தி அதைத் தனது லோகத்துள்ளிருக்கும்படி செய்தனன்; பிறகு சிவபிரான் உமாசத்தியைத் திருமணஞ் செய்தனர். அப்பால் பிரமாதி தேவர்கள் குமரேசருற்பத்தியை நாடி மஹேஸ்வரனைப் பிரார்த்திக்கவே அவர் தமது நெற்றிக் கண்ணினின்றும் ஒருவராலும் தாங்கமுடியாத தேஜோமயமான சிவவீரியத்தை உற்பவித்துவிடவே, தேவர்கள் அக்கினிதேவனை அதைத்தாங்கி கங்கையிற் சேர்க்கும்படி அநுமதித்தனர். அக்கினி தேவனால் அத்திவ்யதேஜஸ்ஸைத் தரிக்கமுடியாமல் தனது சுயதேஜஸ்ஸையும் இழந்து, அச்சத்தியவுலகத்துள்ள அக்குடிலை கங்கையின் கண் சிவவீரியத்தைப் பெய்து, ஹே-குடிலே? நீ இச்சிவவீரியத்தைத் தரித்தால் உதிக்கின்ற புத்திரன் உனக்குரியவனாவானெனவே அகமகிழ்ந்துதரித்து கருப்பவதியாய், ஐயாயிரவருடத்துக்குமேல் பிரமாவிடஞ் சென்றனள். அப்போது பிரமனுடைய ஆக்ஞையின்படி உதயாசலத்தில் சிவசம்மந்தமாய நூறு யோசனை விஸ்திரணமுடைய சரவணப் பொய்கையில் இக்கருப்பத்தை வைக்கவே, அவ்விடத்தில் பதினாயிர வருடத்துக்குமேல் அச்சரவணவாவியில் சுப்பிரமணியக்கடவுளையுற்பவித்து மறுபடியும் அக்குடிலாகங்கை சத்தியவுலகத்தைச் சார்ந்தனள். பிறகு சுப்பிரமணியக்கடவுள் தாரகாதிவசுரர்களைமாய்த்து பிரம்மேஹந்திராதிதேவர்களிடுக்கண்களையகற்றித் தேவர்சேனாதிபதியெனப்பெயர் பெற்று விளங்குவாராயினர். இக்குடிலை கங்கையையல்ல, சத்தியவுலகத்து கங்கையைத் தான், முன் சொன்ன பகீரதன் இறுதியில் கோகர்ணத்தையடைந்து சிவபிரானைக் குறித்து கடினதவஞ் செய்து சத்திய லோகத்தினின்றும் பரமசிவனது சிரசிலேற்கச் செய்து கபில முனிவரின் சாபத்தால் பாதாளத்தில் சாம்பலான தன் பிதாமஹர்களை இக்கங்கையை அழைத்துக்கொண்டு போய் சற்கதியடைவிக்கச் செய்தனன். ஆகவே கங்கைக்குத் திரிபதகையென்றது காரணப் பெயராயிற்று.

பிற்க் சிலபுராணங்களில் விஷ்ணுபாதாங்குட்டத்தில் உதித்த
தென்பதும், ஷை குடில கங்கையே பிரமன் திரிவிக்கிரம அவ
தாரகாலத்தில்பிரம்மாண்டத்தின் ஏழாவதாவரணமாகியஜலரூபா
வரணம்பேதிக்கப்பட்டு வியாப்தமானகங்கையை பிரமன்கமண்ட
லத்திலேற்றிப்போற்றி வைத்திருந்தனனேயன்றி, அக்கங்கையை
திரிவிக்கிரமாவதார காலத்திலும் உபயோகிக்கவில்லை. திரிவிக்கிர
மாவதார மூர்த்தியினது பாதாங்குட்டங்களை பிரக்ஷாளனஞ்
செய்தது முன் சொன்ன குடிலகங்கையையேயன்றி மற்றதல்ல,
அக்குடிலை கங்கை பிரக்ஷாளனஞ் செய்ய உபயோகப்படுத்தப்
பட்ட பின்பு அம்மூர்த்தியின் அங்குட்ட நுனிவழியால் சுவர்க்க
லோகம் புகுந்து தேவர்களுக்கு ஸ்நானத்துக்குபயோகப்படலா
யிற்றேயொழிய அக்கங்கை பாதளத்தில் புகுந்து ஸாகரர்களைச்சற்
கதியடைவிக்கவில்லை; பிறகு மேருவில் விழுந்ததென்பதும் அக்
காலத்தில் துருவன் அதைத் தரித்து கிழக்கு, மேற்கு இரண்டு
திசைகளிலும் பரவச்செய்தனனென்பதும் வாயுபுராணவசனத்
தாலும், கேதாரகண்டவசனத்தாலும் நிர்ணயிக்கப்பட்டிருப்ப
தைக் காண்க. பின்னும் அக்குடில கங்கையானது புஷ்கரத்தில்
கோரூபந்தரித்து பாதலஞ்சென்று, திரிமூர்த்திகளின் பெயரால்
மூன்று தீர்த்தங்களாயினவென்றும் புட்கரமான்மியத்திற் கூறப்
பட்டிருக்கிறது. இவ்வாறே விஷ்ணுபதியென்னும் பெயரையும்
அக்காலத்து அடைந்தது அக்குடிலை கங்கையேயன்றி இச்சிவ
கங்கையன்றென்பதும், அவ்விஷ்ணுபதியை மஹேஸ்வரன் தரிக்
கவில்லையென்பதும், பகீரதப்பிரயத்தனத்தால் சத்தியலோகத்தி
னின்றும் வந்த கங்கையையே தரித்தனரென்பதும், அப்படிபூமி
க்குவரும்போது தனது சூக்ஷ்மரூபமான ஏகதேசவோரமிசத்தை
மட்டும் சத்தியலோகத்தில் வைத்துவிட்டு மற்ற தன்னுடைய உக்
கிரமானவேகத்தாலும், சிவபிரானையன்றி ஏனையோராலதைத்
தரிக்கமுடியாதென்றென்பதையும், சத்தியவுலகத்தினின்று சிவசிர
சில் விழுந்தமையானும், முன் அக்குடில கங்கைய்ய விஷ்ணுபக்
தனான துருவன் தரித்திருப்பதால், அதே கங்கையாயிருக்கும்
பக்ஷத்தில் இச்சிவனைக் குறித்து இவ்வளவு கஷ்டப்பட்டு தவஞ்
செய்யவேண்டிய ஆவஸியமின்றென்பதும், பிரமனைக் கேட்குங்
கால் சிவனையன்றி மற்றோரால் கங்காதாரணஞ்செய்தல் கூடா
தென்றதும், கங்கையுமதே மாதிரி இயம்பினதும் பயனற்றதாய்ப்
போய்விடு மென்பதற்குமுள்ள நியாயங்களால், ஸ்ரீகாசியில் வியா
பித்திருக்கும் கங்கை மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட விஷ்ணுபதி
கங்கையன்றென்பதும் தெற்றென உணர்த்துவதை பாத்மோத்தர
புராணம், கேதாரகண்ட வசனங்களாலும் உணர்க.

பின்னும் ஸ்ரீமத் ராமாயணத்தில் சத்தியலோகத்தினின்றும் வந்தஹைமவதி கங்கையானது, சிவனது திருச்சடையில் வீழ்ந்து வெளிப்படசக்தியின்றி பகீரதனால்பின்னும் சிவபிரான் பிரார்த்திக்கப்பட்டு பகீரதன்பின்பாதாளஞ்சென்று,சாகரானைச்சற்கதி புகுவித்ததென்பதையுமறிக இவ்வாறுசாதாரணரும் எளிதிலறியக்கூடுமாதலின், பாகவதமுதலியவற்றில் விஷ்ணு கங்கையைச்சிவன்தரித்து மங்களமுடையவரானரென்பதும், பின்னால்சிவபிரான்தரிக்கும் ஹைமவதியின் ஓரம்சமே விஷ்ணுபாதகங்கை என்னுங்கருத்தால் ஸ்துதிபரமாயக்கூறியதென்பதை அறியாது, குதர்க்கஞ்செய்வதும் வெகுஜனவிரோதமென்பது ஸ்ரீமத்அப்பய தீக்ஷிதரவர்களும் பரிகாசஞ்செய்தமை பிரமதர்க்கஸத்வவியாக்கியானத்திற்காண்க. பின்னும் அசிவனாகில்சிவனாகவேண்டும், சிவன் சிவனானரென்றதும் பொருந்தாது. "அறிவுக்குமறிவு செய்யுமறிவு வேறுண்டென்றெண்ணும், அறிவற்றகுதர்க்க மூடர்களவஸ்தைக்கனமாய்த்தீரும்" என்று கைவல்லியநூலாருங் கூறியிருப்பதையுங் கண்டுதெளிக.

கங்காமான்மியம் (காசிகாண்டம்)

அன்பின் மலர்தூய்ச்சிவலிங்கமருச்சித்தோர்களமரரெல்லா
மின்பமெய்தவழிபட் டமலனெய்துதல் போலடைந்தவர்தந்
துன்பமகற்றும் புனற்கங்கைதோய்ந்தோர் கடவுணதியனைத்து
நன்குபடியும்பேறனைத்து மொழியாதினிது நண்ணுவரால்.

கடவுட்கங்கைநதிப்படிவான் செல்லவொருவன் கருதுமுன்
னிடர்கூர்பாவமனை யொழிந்தியாண்டு செல்வோமெனக்கருதும்

விடயமிதனின் மனம்போகாதடக்கி ஞானவெறுவேளியி
லடையு மவருங் காசிநகரடைவார் பெறும்பேறடையாரால்.

கும்பமொருகைதனிலேந்தி யொருகைகுளிர்பூம்புனல்சொரிய
வம்பொற்கரமொன்றருள்வரத மபயமொருகையாகவமைத்
தும்பர்மதியமொருகோடியொளிர்வதென்ன வொளிபரப்பும்
பம்புதிரைவான் புனற்கங்கைதன்னை யுளத்திற்பாவித்தே.

அருளினேமெருக்கியமே முதல்வழிபாடினிதாற்றித்
தெருளாலென்னை நான்முகனைத் திருமாறன்னையிமவானை
மருளிறவத்துப்பகீரதனை மலயச்சாந்தால்வாலரியால்
விரகினமைத்துக்கெழுமலர்தூய் விருப்பினேடும்பணிந்தேத்தி.

கன்னிவாழைக் கவிழ்தாற்றுக் கனியோட்பயறுசெழுந்துவரை
யுன்னமறையோர்மகிழ்வெய்த வியந்துநல்கிமீ ஞமை
யின்னந்தவளை நீர்க்காக்கை குரண்டமுதல்வனிளெர்செம்
பொன்னின்மாவில் வெள்ளிதனிலமைத்துக் கங்கையிடைப்போக்கி.

இன்னவாறுமகிழ்சிறப்பப் பூசைபுரிந் தோரெழுபிறப்பு
முன்னவரிய கொடும்பாவமனைத்து நீங்கிமுதக்குறைவாற்
றன்னையுணர்ந்து முழுதுலகந்தாளு யுறைந்தவத்தோனுந்
துன்னவரிய பேரின்பத்துறைவாய்ப்படிந்தி ளைத்திடுவார்.

வெய்யகொடும்பாதகம் புரிந்துவிளைந்தோ ரென்புகங்கையிடைப்
பெய்யினவர்தீவினை யொருவிப்பெறுதற் கரியவான்சேர்ந்
துய்யுந்தன்மை யுரைத்தியெனவுலகம் பூத்ததிருவுந்தி
யையன்றெழுது கேட்டிடலுமானே றுயர்த் தோனறைகுவனுல்.

எரிகட்புகுவாய்ப் புலிப்போத்தாலிறந்த மறையோனிடக்காலை
விரிமென சிறையகழுகொன் றுகவ்வி விசும்பினேகுங்காற்
றிருகுசினத்தினேடும் வேறோர்தீவாய்க் கழுகுபறித்திடலும்
பெருகுதிரைவான் புனற்கங்கைப்பேரியாறதனில் வீழ்ந்ததுவே.

உய்க்குங்காலையவனிடக்காலதனை யொழுகுபசுங்குருதி
கக்குந்தீவாய்க்கழுகு புனற்கங்கையாற்றின் வீழ்த்தியதால்
புக்குநமதுகணமவனைப் பொன்செய் விமானத்தினேற்றி
நக்கபசும்பொன் சுடர்பரப்புநாகலோகந்தனில் விடுத்தார்.

அனையகடவுட்பெயராற்றங் கரையினுனென்றலங்கரித்துப்
புனலினேடுமுளமகிழ்ந்து புனிதமறையோர்க்கினி தளிப்பின்
வினையினீங்கியப்பசுவின் மயிரொன்றொன்றினுக்குக்
கனைவண்டிமிர் பூந்தருநிழலிற் கற்பகாலமினிதிருப்பார்.

மூவுலகத்துங் கீர்த்தி பெற்ற இக்கங்கையில் சமஸ்த நதிகளும் மூர்த்திகளும் வந்தடைந்திருப்பதால், இக்கங்கை யொன்றில் ஸ்நாநஞ்செய்வதால் சமஸ்த தீர்த்தங்களில் ஸ்நாநஞ்செய்த பலனையும், சர்வ மூர்த்திகளையும் தரிசித்த பலனுங்கிடைக்கிறது.

கங்கையினின்றும் வேறு தீர்த்தங்களை நாவாலெடுத்துரைப்ப
வன் ரௌரவாதி நரகங்களை யடைகிறானென்றும், அன்னிய
தீர்த்தாதிகளை மனதால் ஸ்மரிக்கின் பாவியாகிறானென்றும்,
பௌடியம், ஸ்காந்தம் முதலிய புராணங்கள் கூறுகின்றன. என்ன
கொடும் பாவங்களைச் செய்தவனாயிருந்தாலும் அவனுடம்பின்
ஓரெலும் பேனும் கங்கையில் சேர்வதால் அப்பாவங்களினின்
றும்உடனே விடுவிக்கப்பட்டு சுவர்க்கத்தையடைகின்றான். இதற்
கோரிதிகாசம் மேற்செய்யுளிற் காண்க. பின்னும் கங்கா ஸ்நா
நத்திற்கென்று மனப்பூர்வமாய் சிறிதடிகள் எடுத்து வைத்துப்
பின் வேறு நிமித்தங்களால் தடைப்படினுமவர்க்கும், கங்கா
ஸ்நாந பலன் கிடைக்கும். இக்கங்கா ஸ்நாநத்துக்கு ஸ்வரூப
ஞானத்தைப் பெற்றவர்களும், விருப்பினோடுமேகி முத்தி பெறு
வார்களாகையால் விஸ்வேஸ்வரர் தரிசனத்திலும் விசேடமுடை
யது; இந்த ஞானிகள் விஸ்வேசர் தரிசனத்துக்குப் போகவேண்
டிய தவசியமின்று. கங்கா ஸ்நாநஞ் செய்யுமுன் வேறு தீர்த்தத்
தில் ஸ்நாநத்தால் சரீர சுத்தி செய்து கொண்டு பூர்ணகும்பத்தை
யேந்தி கங்கையின் ஆயிர நாமங்களையும் விருப்புடன் கோஷித்
துக்கொண்டு போய் கங்கா தீரத்திலுட்கார்ந்தமர்ந்து, கங்கையை
மனதில் பாவித்து அருக்கியமாசபனாதிகளுடன் கூடிய வழிபாடு
கள் செய்து, பின் பரமசிவன், சதுர்முகன், திருமால், இமவான்,
பகீரதன் இவர்களையும் பணிந்தேத்தி, வாழை முதலிய பழங்
களையும், பயறு, துவரை, கடலை முதலிய தானியங்களையும் அக
மன விருப்புடனீந்து, மீன், ஆமை, அன்னபக்ஷி, நீர்க்காக்கை
கொக்கு, முதலியவைகளினுருவங்களைச் செம்பொன், வெள்ளி.
அல்லது மாவினாற் செய்து கங்கையில் விடுத்து ஸ்நாநத்தை
முறைப்படி யொருக்கால் செய்த புண்ணியவானின் எழுபிறவியி
லுண்டான பாவங்களுமுடனே நீங்கி மிக்க மேலான பதவியை
யடைகின்றானெனலாமே யன்றி, அப்பலனை இன்னின்னவென்று
வரையறுத்துரைக்க வாதிசேடனாலுமியம்புதலரிதாகும்.

மணிகர்ணிகா மான்மியம்.

ஸ்ரீ காசிக்குப் பகீரதனாற் கங்கை வருவதற்கு முன்னமேயே ஸ்ரீ மகாவிஷ்ணு தம் சக்கிரத்தால் ஒரு மடுவையுண்டாக்கி அதில் தம் வியர்வை நீரைப்பூரித்து, இவ்வாவியின் கரையினின்றும் செய்த தவத்துக்கு விஸ்வேஸ்வரர் சந்தோஷமடைந்து சிரக்கம் பஞ்செய்தபோது காதிலணியப்பட்டிருந்த குண்டலத்தின்நாகரத் தினம் நழுவி விழுந்தமையாலிப்பெயர் காரணமாயிற்று. பின்னும் விஷ்ணுவின் சக்கரத்தால் வெட்டப்பட்ட படியால் சக்கரதீர்த்த மென்றும், அவரது திருமேனி வியர்வையாலுண்டான படியால் பிரமத்திரவமென்னும் பெயரினையடைந்ததும் காசிகாண்டத்தால் கூறப்பட்டுளது. இம் மணிகர்ணிகா மடுவில் கங்கைவந்து சேர்ந்த பிறகு அதிக மஹிமையயடைந்து முப்பத்து முக்கோடி தேவர்களும் இதில் மாத்தியான்ன ஸ்நாநத்துக்கு வருவாராயினர். தவிரவும் காசியிலுள்ள மற்ற சமஸ்த தீர்த்தங்களும் இதனிடத்தில் ஸ்நாநஞ்செய்யும் விசேஷத்தையுமடைந்து மற்றெல்லா கட்டங்களினும் இம்மணிகர்ணிகாகாட் விசேஷ மஹிமையுடையதாயிருக்கிறது.

களங்கனியனைய மேனிகண்ண னின்றவத்தென்சென்னி
துளங்கலுங் குழையிற்றாழ்ந்தசுடர்மணி விழுந்தவாற்றால்
வளங்கெழுமிந்த வாவிக்கொளிற்மணி கன்னிகைப்பேர்
விளங்குவாவிதனிற்றோய்ந்தோர் பெறலரும்வீடுசேர்வார்.

நால்வகைத்தோற்றத்துள்ள வுயிரெலாநலங்கொள்வாவிப்
பாலுயிருலப்பின் மீளாப்பதத்தினிற் சேருமியாருங்
காலவன்பாசமறுத்தங்குதூய் துறப்பட்டதன்மை
மாலறவுணர்ந்து மென்னோகாசியில் மருவல்செய்யார்.

யோசனை நூற்றுக் கப்பாலுறையுனரேனுமிந்தக்
காசினையகினைந்து வீயிற்கற்பகத்தருவினீழற்
றேசொடு மமர்ந்து பின்னராசராய்ப்புவியிற் சேர்ந்து
மாசிலிந்நகரின்மேவி மருவரும்வீடுசேர்வார்.

உருவரும்பொருளுமாக்கை யிளமையுமொருங்குநோக்கி
யரிவையர்மயக்கி னுள்ளமகிழ்ந் துவெவ்வழல்கட்கூற்றி
னெருமையேறணிந்தகண்டையொலி செவிக்கிசைத்ததென்னு
மருவருங்காசிசேரார் மக்களுட்பதடியாவார்.

பஞ்சநதிமான்மியம்.

மணிகர்ணிகா காட்டுக்குத் தெற்கிலுள்ள பஞ்சகங்கா காட்டில் பஞ்சநதிகளாகிய, ஆதியில் தர்மநதியும் தூதபாவையுஞ் சேர்ந்து ஒன்றாய், அதனோடு கிரணை, கங்கை, யமுனை, சரஸ்வதி யென்னும் நான்கும் சேர்ந்து பஞ்சநதியாயிற்று. இத்தீர்த்தத்திற் குரித்தாய விசேஷபலன் பாஞ்சபூதபௌதிகமான சரீரத்தைப் போக்கி தேஜோமயமான திவ்யசரீரத்தைக் கொடுக்கின்றது.

விரிபுனற்றறுமந்தவமுயர் தூதபாவை சொல்விந்து நற்றீர்த்த
மருவியபஞ்சநதமென முன்னையுகமுதல்வரன்முறை முழங்கும்
பொருவறு நாமமிந்த மதனிற்படிந்துளோர் பூதமோரைந்தி
னுருவுடையாக்கை யெடுத்திடரெய்தா முத்திவீடுறைந்தினிதிருப்பார்.

இதன் பூர்வவிருத்தாந்தம்:—பூர்வத்தில் வேதசிரஸ்ஸென்ற இருஷியின் நற்புத்திரி பிதாவினனுமதிப்படி, தனக்குரிய நாயகனையடைய நெடுங்காலந்தவம் புரிந்தமையால், எல்லாப்பாவத்தையும் போக்கத்தக்க யோக்கியதை பெற்றவளாய்த் தூதபாவையென்னும் பெயரினைப்பெற்றாள். அப்போது யமதருமராஜனவளைக் காந்தருவவிவாகம் முடிக்கக் கோரினபோது, பிதாவினனுமதியின்றி உன்னோடு சேரமாட்டேனென்று கல்மனதோடுங்கூடி மறுத்தமையால் அத்தருமனவளையுங் கல்லாகச் சபிக்கவே, அவளும் "நீ சஞ்சலமுடையோனாதல் பற்றி ஜலரூபமடைவை" யென்றுசபித்தாள், பிறகு பிதாவினிடம் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்ல, நீவரயோக்கிய முள்ளவனை அங்கீகாரஞ் செய்யாதபடியால், சந்திரகாந்தச் சிலையுருவையடைந்து அத்தன்ம நதியோடுஞ்சேரென்று ஆக்ஞாபித்தபடி சேர்ந்தொன்றாயிருந்தனள். அதனோடு சூரியனுடைய தபசினாலவன துவியர்வையாலுண்டான கிரணையென்னும் நதியும் சேர்ந்து, அவிடத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதியென்னும் மூன்று நதிகளுங்கூட பஞ்சநதியாயிற்றென்று மேற்காசிகாண்டச் செய்யுளாற் கூறப்பட்டது. இது கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமிவற்றில் முறையே தர்மநதி, தூதபாவை, பிந்து தீர்த்தம், பஞ்சநதமென்னும் பெயர் பெறுவதாயிற்று.

காசிப்பிரயாகை மான்மியம்:—இக்காசிப்பிரயாகை என்று சொல்லப்பட்டது மேற்கூறிய பஞ்சகங்கா காட்டுக்குத் தெற்கிலுள்ள தசாஸ்வமேத காட்டிலுள்ளது. தசாஸ்வமேத காட்டின் விருத்தாந்தம் மற்றோரிடத்தில் சொல்லப்பட்டிருக்க, அந்த

காட்டிலுள்ள சூலடங்கேஸ்வரர் சமீபத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதியென்னு மிம்மூன்றில் கங்கை உத்தரவாகினியாயும், யமுனை பூர்வவாஹினியாயும், சரஸ்வதி அந்தர்வாஹினியாயும் வருவதால் இதற்கு காசிப்பிரயாகை என்றும், சாக்ஷாத், (அலஹாபாத்) பிரயாகையினும் மிக்க விசேஷமுடையதென்றும் (விஸ்வேஸ்வரர் சந்நிதியும் சேர்ந்திருப்பதால்) சொல்லப்படுகிறது. மணிகர்ணிகையிற்போலவே இதிலும் வபனம், சிரார்த்தம், தர்ப்பணம், தானாதிகளும் செய்தல் விசேஷமுடைத்து. இந்த மூன்றினுள் பிராதக்காலத்தில் பஞ்சநதத்திலும், தசாஸ்வமேதத்திலும், மத்தியானத்தில் மணிகர்ணிகையிலும் ஸ்நாநஞ்செய்தல் மற்றெல்லா தீர்த்தங்களின் பூர்ண பலனையும் அடைவார்களென்று ஸ்காந்தம், காசி காண்டம், பிரம்ஹ கைவர்த்தமிவைகளிற்கூறுகின்றன. பஞ்சநதத்தில் கார்த்திகைமாதத்திலும், காசிப்பிரயாகையில் மாகமாதத்திலும் விசேஷம். மேற்கூறிய மூன்று கட்டங்களுடன், அஸிஸங்கமகாட், வருணஸங்கமகாட் ஆகிய இவ்வைந்தும்தான், காசிகாட் அறுபத்திநான்கிலும் அதிக விசேஷமுடையவை.

ஞானவாபிமான்மியம்:—மேற்குறித்த கங்காஸ்நாந கட்டங்களைத்தவிர விஸ்வேஸ்வரர் சந்நிதானத்திலிருக்கும் ஞானவாபியில் ஸ்நாநஞ்செய்பவர்களுக்கு விசேஷ திடஞானத்தை அளிக்கும் மஹிமை பெற்றதாயிருக்கின்றது. இதன் விருத்தாந்தம்:—ஈசானருத்திரர் இங்கு தவஞ்செய்தகாலத்து சூலாயுதத்தாலொரு வாபியுண்டாக்கி அந்தத்தீர்த்தத்தை விசுவநாதருக்குக் காட்டி, அதன் தீர்த்தத்திலிருந்து தவம்புரியவே விஸ்வேஸர் சந்தோஷமடைந்து, பிரசன்னராய் வரமளித்த காலத்தில், இவ்வாபியில் ஸ்நாநஞ்செய்பவர்களுக்கு பரமஞானத்தைத் தந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க அவ்வாறு கொடுத்தவரத்தினுலதற்கு, அப்பெயர் காரணப்பெயராயிற்றெனவும், இஃதன்றி திரிவிஷ்டேஸ்வரர், மஹார்லிங்கம், கிருத்திவாசமிவைகளுக்குச் சமீபத்து முறையேயுள்ளவிரஜா, மஹாகூபம், கிருத்திவாஸ தீர்த்தங்களும் விசேஷமுள்ளவை.

ஆதியான்மிகக் காசிவாஸி இலக்ஷணங்கள்.

இதன் முன் 44-வது பக்கத்தில் தொட்டிருக்கிற, கங்காதீரக்காசியாகிய ஆதி பௌதிகக் காசிக்குச் செல்லவேண்டியது அவசியமாக, சந்தேகத்தின் புருவமத்தியின்கணுளதாய ஆதியான்

மிகக் காசிவாஸியிலக்ஷணங்களைக் கைவல் யோபநிடதப்படி யித னடியிற்குருசிஷ்யக்கிரமமாகக் கூறுவாம்:—

அழிவிலாத தற்பதந்தனை மைந்னே யகமுகத்தவர் சேர்வார்
வழி நடப்பவர் பராமுகமாயினுன் மலர்ந்த கண்ணிருந்தாலுங்
குழியில் வீழ்வர் காணப்படி வெளிமுகங்கொண்டு கர்மிகளானோர்
பழிதரும் பிறவிக்கடலிலுழலுவர் பரகதியடையாரே.

அகமுகமின்றிப் பகிர்முகயாகச் செல்லுதலே கன்மங்களிற் செல்லுதற்கேதுவென்னலும், சிவச்செயலிவை, ஜீவச்செயலிவை யெனத்தெளியுனிமித்தம், ஜீவன் பகிர்முகமாதலின் அஃது ஈசன் செய்விக்குஞ் செயலேயன்றிச் சீவர்களென் செய்வார்கள் ?

சிறந்த நன்மையுந் தீமையுமீசனார் செய்விக்குஞ்செயலன்றோ
பிறந்த சீவர்களென்செய்வாரவர்கள் மேற் பிழை சொலும் வகையேதோ
துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண் மார்க்க
மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்தி நூண்மைந்தனே யதுகேளாய்.

திகழ்ந்தவீசனார் சிருட்டியுஞ்சீவனார் சிருட்டியும் வெவ்வேறே
சகந்தனிற்பொதுவீசனார் சிருட்டிகள் சரர்சரப்பொருளெல்லா
மகந்தையாமபிமானங்கள் கோபங்களாசைகளிவை யெல்லா
நிகழ்ந்தசீவனார் சிருட்டிகளாகுங்கா ணிமலனார் செயலன்றே.

இவ்வீரேழு லோகங்களிலும், அண்டபிண்ட பிர்ம்ஹாண்டங்களிலுமுள்ள சராசரப்பொருள்களை மாத்திரந்தான் பஞ்சபூத பௌதிகங்களால் ஈஸ்ரவன் சிருஷ்டித் திருக்கிறரேயன்றி, அகங்கையாகிய அபிமானங்கள், த்வேஷங்கள், ஆசைகள் முதலானவைகளெல்லாம் இந்தச்சீவனுடைய சிருஷ்டி அல்ல; பின்னும்,

மூவராம்பரன் சிருட்டிகளுயிர்க்கெலா முத்திசாதனமாகும்
சீவனாரதுசிருட்டி கடங்களைச்செனிப்பிக்கும் பிணியாகுந்
தாவராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சனனங்க ணசியாவாங்
கோவமாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும்பிறவிகள் போமே.

ஈஸ்வர சிருஷ்டியான பஞ்சபூத பௌதிகமுதலிய தத்துவங்கள் முத்திக்குச்சாதகமும், ஜீவசிருஷ்டியான காமக்குரோதாதிகள் பவபாசக்கடலுக் கேதுவர்மென்பதையும் பகுத்துக்கூறினாம்; பின்னும்,

ஈசர்காரியம் பிரளயத்தொழியவு மெவர்பவ மொழிந்தார்க
டேசகால தேகாதிகளிருக்கவுஞ் சீவகாரியமோக
நாசமாகியவ் விவேகத்தினுயிரொடு ஞானமுத்தர்களானார்
பாசமோகங்கள் பசுக்களின் செயலன்றி பசுபதிசெயலன்றே.

அதாவது ஈஸ்வரசிருஷ்டியிருக்க, ஜீவசிருஷ்டி நசிக்கினப்போதே விடடைதலாற் காமமாதிகள் ஜீவச்செயலேயன்றி, சிவச்செயலன்றென்ப; பின்னும்,

அச்சுவத்தமென்ெெரு மரமதிலிரண்டரும் பறவைகள்வாழு
நச்சுமங்கொருபறவை யம்மரக்கனிநன் று நன்றெனத்தின்னு
மெச்சுமங்கொருபறவைதின்ஞெ வியங்கிப்பொருளாக
வைச்சுமாமதைச்சீவனே யீசனேன் வகுத்தவா றறிவாயே.

அச்சுவத்தமென்பது தலைகீழான மாயாவிருக்ஷமெனவும், மாயையில் வாழ்கின்ற ஜீவேஸ்வர தார தம்மியமு மிஃதெனப் பகுத்துக்கூறினதாம்; பின்னும்,

இந்தச்சீவனுல் வருமறுபகையெலாமிவன் செயலச்லாம
லந்தத்தேவனுல் வருமென்ற மூடர்களதோகதியடைவார்க
ளிந்தச்சீவனுல் வருமறுபகையெலாமிவன் செயலல்லாம
லந்தத்தேவனுலன்றெனும் விவேகியே யமலவீடடைவாரே.

இதன்கருத்து:—காமமாதிகளை ஈஸ்வர சிருட்டியெனக்கருதாமற் சீவசிருட்டியெனக் கொண்டவற்றை விசாரத்தாற்கெடுக்கின் முத்தி யுண்டாமென்பதாம்.

முன்பீஸ்வர சிருட்டிப்பொது வென்றமையாலவரும்பொதுவாகவேண்டுமே, யங்ஙனமாயிற் சீவர்களிடத்திற் பக்ஷபாதம் வருவானேனென்ற வினுவிற் குத்தரம்:—

நலமெய்யையனே யெல்லவர்க்குந் தெய்வநாயகன்பொதுவானுற்
சிலரைவாழ்வித்துஞ்சிலரொடு கோபித்துஞ்செய்வதேனென்ருயேற்
குலவுமைந்தரைத்தந்தை போற்சிட்டரைக்குளிர்ந்து துட்டரைக்காய்வன்
கலைகணல்வழி வரச்செயுந்தண்டமுங்கருணை யென்றறிவாயே.

கருத்து:—ஜீவர்கள் சுகப்படும்பொருட்டு, வருத்தின், அஃதும் கருணையேயன்றி பக்ஷபாதமன்றென்பதாம்; அங்ஙனமாயின் ஈசன்யாவரையுமேன் இரக்ஷிக்கவில்லை யெனவரும் சங்கைக்குத்தரம்:—

மனேவிலங்கறுமைந்தனே கற்பகமரங் கனல் புனன்மூன்றுந்
தனேயடைந்தவர்வறுமையுஞ் சிதமுந்தாக மூந்தவிர்த்தாரு
மனேயவீசனுமடைந்தவர்க்கருள் செய்வ ரகன்றவர்க்கருள்செய்யா
வினேயகுற்றங்க ளவர் குற்றமாகு மென்றெண்ணி நீ யறிவாயே.

கற்பகவிருக்ஷம் முதலியவற்றைச் சார்ந்தவர்க்குத் துன்பம் நீங்கி யின்பமுண்டாவதுபோல, ஈசனைச் சார்ந்தவர்களுக்குப் பவத்துன்பம் நீங்கி, வீட்டின்பமுண்டாவதுண்மையென வறிந்து, அவனைச்சார முயலாதது ஜீவன் குற்றமே யென்றறிக; மேலும்,

ஒன்றுகேண் மகனே புமான் முயற்சியாலுரைத்த மானிடர்க்கீச
னன்றுசெய்யவே காட்டிய நூன்வழிநடந்து நல்லவர் பின்னே
சென்றுதிட்டவாதனை விட்டுவிவேகியாச் செனித்தமாயையைத் தள்ளி
நின்றுஞானத்தையடைந்தவர் பவங்கள்போம் நிச்சயமிதுதானே.

ஜீவன்றனது முயற்சியாலீஸ்வ ரானுக்கிரகம் பெற்று, அவர் வாக்கியமான வேதாந்தமுடிவைச் சற்குருமுகமாக விசாரித்ததனால், விவேகமுண்டாய் அஞ்ஞானம் நீங்கி ஞானமுதயமாகிற் பவநீங்குமென்பதாம்; அங்ஙனமாகவும் எதினாலிந்த ஞானமுதிக்குமெனின்:—

இந்தஞானந்தான் வருவதெப்படி யெனிலிடைவிடா விசாரத்தால்
வந்தடைந்திடும் விசாரந்தா னேதெனின் மனாதியாஞ்சரீரத்தா
லிந்தநானெவன் சித்தெது சடமெது விரண்டுமொன்றாக்கூடும்
பந்தமேது வீடேதென வுசாவுதல் விசாரமென்றறிவாயே

சிற்சடவிலக்கணங்களைப் பகுத்தறியும் விசாரமே ஞானமுதித்தற்கு மூலமென்பதாம்; அந்த ஞானத்திற்கு மூலகாரணமாகிய நான்குவேத மஹாவாக்கியங்களையு மிங்கெடுத்துக் கூறுவான்றொடங்கி; அம்மஹா வாக்கியங்களைக்கற்கு மாண்பினைப்பெறு மதிகாரி விலக்ஷணங்களைக் கூறுவாம்.

நித்திய வனித்தியங்க ணிண்ணயந்தெரி விவேக
மத்தியவிகபரங்கள் வருபோகங்களி னிராசை
சத்தியமுரைக்கவேண்டுஞ்சமாதி யென்றாறுகூட்ட
முத்தியைவிரும்பு மிச்சை மொழிவர் சாதனமிந்நான்கே.

சமந்தமம் விடல்சகித்தல் சமாதானஞ் சிரத்தையாறுஞ்
சமமகக்கரணதண்டந் தமம்புறக்கரணதண்ட
மமர்மனை விவகாரங்க ளருகலே விடலென்றாகு
மமர்செயுஞ் சுகதுக்காதி யனுபவிப்பது சகித்தல்.

சிரவணப்பொருளைத்தானே சித்தஞ்சிந்திக்குமாறு
சரசமாய்வைக்குமித்தைச் சமாதானமென்பர்மேலோர்
பரமசற்குரு நூலன்பு பற்றலே சிரத்தையாகும்
வரமிகுசமாதி யறுவகையாஞ் சொற்பொருளீதாமே.

இம்மூன்று செய்யுட்களால் அநித்திய வஸ்துக்களிவையெனக்கண்டு, நித்தியவஸ்துவை யடைவதற்கேதுவான குணங்களையே சாதன சதுஷ்டயங்களாகக் கூறினதாம்; மேலும், அச்சாதனங்க ளின்றியமையாமையும், அதனாலுண்டாகும் பயனிஃதெனவுமீண்டு கூறப்படுகின்றது.

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
யாதலா லிந்நான்கு மடைந்தவர்க் கறிவுண்டாகு
நூதன விவேகி யுள்ளி னுழையாது நுழையுமாகிற்
பூதஜன்மங்கள்கோடி புனிதனும் புருடனாமே.

மேற்கூறிய சாதன சதுஷ்டயங்களைத்தன் முயற்சியாற் பெற்று, பின் சற்குருவின் கிருபாகடாக்ஷத்தால் அடியிற்கூறும் சதுர்வேத மஹாவாக்கியங்களைச் சிரவண,படந, மனனதிதன்

செய்யும்முறைமையில் (அதாவது பக்தி, யோகாப்பியாஸ முதலானவைகளால்) ஸ்வானுபவத்தைப் பெற்று மேற்கூறிய ஆதியான்மிகக்காசியைற் றரிசித்து அவ்வழியே முத்தியைப் பெறுதல் முறைமையாகுமென விளக்கினா மேலோர்.

நானென்ற பிரமமான நானே நானறியே னென்று
ஞனென்ப தேது பின்னை நம்முடைய புந்தியென்னிற்
ஞனது மயக்கந்தன்னிற் சாகுமோசாவ தாகி
ஞனென நிறைந் திருந்த ஞானமா நானேநானே.

இருக்குவேத மகாவாக்கியப்படி "ஞானமேபிரம"மென்பார், நானென்ற பிரமமென்றூர், நானென்பது ஞானமாகிய வித்தையெனவும் பிரமமென்ப தானந்த மெனவுங்கொள்க; அதாவது கூடஸ்தனே பிரம்ஹம்.

நிறைந்தவா றெவ்வாறு நிலைதெரிந்தில னென்றுயே
லறிந்தாஞ் சுழுத்தி தன்னி லானந்த மதுவேயாகும்
குறைந்ததுக் கானந்தந் தான் குவலயந் தன்னி லில்லை
நிறைந்ததே விந்தவான்மா ஆநந்தமு மவ்வறிவு தானே.

யஜுர்வேத மஹாவாக்யப்படி" அஹம் பிர்ம்ஹாஸ்மி,யென்பார் நிறைந்ததே யிந்தவான்மா நிதானமு மிவ்வறிவுதானே யெனக்கூறினர்.

பிறந்த துண்டாகு லன்றோ பிறகு சாவது தானுண்டாம்
பிறந்ததே யில்லை யென்னும் பிரம்ம மாவதுவு நானே
பிறந்தநா னன்றுகிற் பிரமமென் றந்தநானே
பிறந்த மிறந் தந்தப் பிரம்மமா நானே நானே.

சாமவேத மஹாவாக்யப்படி தத்வமஸி " அதுநீயாகு " யென்பர் ப்ரம்ஹம் நானேயென்றூர், பிரம்ஹமென்பது அதுவென்றும், ஆநந்தம் நான் என்பதும், நீ யென்னும் வித்தையும் ஆமென்று மைக்கியமா மெனக்கொள்க.

மனத்தினு லெண்ணித்தானே வந்ததிவ் வுலகமாகு
நினைத்திடி லனேகலோக நிற்ப தவ்வறிவி லன்றோ
வினைத்தையுங் கடந் தப்பாலு மந்தமற் றறிவிலன்றோ
றெனைத் தனி விசாரித்திட்டா லேகமாய் நிறைந்தே ஞனே.

அதர்வணவேத மஹாவாக்யப்படி " அயமாத்மாபிரம்ஹ " மென்பார் ஏகமாய் நிறைந்தோனுனேயென்றூர்.

மேற்கூறியவாறு, காசிமான்மிய, கங்கா மான்மியத்துடன் சம்மந்தப்பட்ட ஜீவேஸ்வரபேதம், ஜீவன் முத்தரிலக்ஷணங்கள், ஆதியா[illegible] பௌதிகக்காசி முதலானவைகளை ஒருவாறு எடுத்து[illegible]னி, இராமேஸ்வர முதலான மற்றக்ஷேத்திரங்களை[illegible] இடைக்கமட்டி லடைவினி லினிது நவில்வாம்.

Printed at the "Poornachandrodaya Press" Tanjore, from pages 1—80.

சன்று யாத்
த்யில்•தங்குவ
ங்களுமுண்டு.
னபடியால்கிழ்
ம் சமுத்திரத்
யகரமாயிருக்
ரன்னும் விஷ்
, இராமேஸ்வர
கர ஸேதுபதி
பவானின் பக்தி
உருவம் பர்வத
ரிலும் வைக்கப்

தி நித்தியம் ஆறு
உற்சவங்களும்
பும் நடத்தப்படு
ர நாட்டுக்கோட்
சை செய்யப்பட்டு

காலம்:—திருவநந்
இராமேஸ்வரம்.
ம், நைவேத்தியம்.
ந்தசயனம் ராஜா
ராஜா கட்டளை—
—சம்பா, பொங்கல்,
, சாயரக்ஷை:- புளி
சயப்பமுதலி கட்
டயார் பால்கங்கை
ருகுசம்பா, பள்ளிய
:—காலசந்தியிலும்,

இராமேஸ்வரம்:—ஸ்ரீ ராமரால் முதல் ப்
செய்து பூஜித்த இலிங்கமாதலால் இராமேஸ்
பெயர்வாய்ந்தது. அதாவது ஸ்ரீராமர் ராவண
ஹத்தியாதி தோஷத்தை நிவர்த்தித்துக்
பிரானை இலிங்கரூபத்தில் பிரதிஷ்டைசெய்து
இக்ஷேத்திரத்துக்குப் போகிறவர்கள் மண்
றங்கி மத்தியில் 4மைல் தூரமுள்ள பாம்ப
ஸ்டீமர் அல்லது படகால் தாண்டி மறுபடி கிருஷ்ணபக்ஷ சஷ்
யிலேறி இராமேஸ்வரம் ஸ்டேஷனி லிறங்காத்திரிக்கு தீர்த்தங்
னிலிருந்து கோயில் ஒருமைலிருக்கிறது. ள்ளிசப்ரம், இரவும்
தில் பிரம்ஹ ஹத்தியாதி பைசாச தோஷங்வள்ளிச்சப்ரம், இரவு
சமஸ்தமும் நிவர்த்தியாகி நாகப்ரதிஷ்டை மயில், சப்ரம் இவை
தால் மக்கட்பேறு முதலிய ஸந்தான விழா:—பகல் கந்தமா
அடைகிறார்களென்பது சத்தியம்-சத்தியகனம், ஸிம்ஹவாஹன
பூஜைக்கு முந்திய சுப்பிரமணியக் கடாவணன்தாமரை. 5-ம்

ம் பூஜிக்கப் பெற்றிருக்கிற குஹேஸ்வரர், அகஸ்
ங்களுக்கு பூஜைகள் செய்யப்படுகின்றன. இவி
ந்தமாதன பர்வதத்துக்கு-சுப்பிரமணியரதைத் தாங்
காரணப்பெயராயிற்று. சென்னப்பட்டணத்திலி
மஸ்வரத்திற்கு ரயில் சார்ஜ் ரூ.5—2—0 இராமேஸ்
து சேதுஸ்நான கட்டத்திற்கு 20மைலிருக்கிறது.
ரெயிலிருக்கிறது. இவிடத்திலும் நம் நாட்டுக்
ர் தர்மான்ன சத்திரம் எல்லாச்சாதியாருக்கும்
லிய தருமங்கள் மிகவும் சிரத்தையாகவும் பிரபல
ந்துகிறார்கள். இதைத்தவிர சேதுஸ்நானகட்டத்
டக்கே முகுந்தராயர்தர்மான்ன சத்திரமும், இரா
னில் தஞ்சாவூர் முதலிய ராஜாக்களின் சத்திரங்
கின்றன. ரெயில்வே ஸ்டேஷனில் பண்டாக்கள்
ங்களை நடத்தி வைக்கும் பிராமணர்கள்) எப்போ
ப்பார்கள். மற்றப்படி கடைகண்ணிகள் ஜலசௌக்
வ்களுக்கு எவ்வளவும் குறைவில்லை. இவிடத்தில்
திரியள், மத்தூர் ராமாசாஸ்திரியள், காசிமுத்து
தலானவர்கள் பிரசித்தமான க்ஷேத்திரவாஸிகள்.
களை சௌகரியம்போல் நடத்திவைக்கிறார்கள்.
நக்கு வருவதற்கு முன்னால் ஆதிஸேது என்றும்
மன்றும் பெயர்பெறும் தேவிபட்டணத்துக்கு
திலிருந்து 8மைல்)ச் சென்று சமுத்திரஸ்நானம்
செய்துகொண்டு வருவது யதோக்தமாகும்.
)ராமநாதபுரத்திலிருந்து தெற்கே ஏழுமைலி
க்கவாசகஸ்வாமிகளால் பாடல்பெற்ற திவ்ய
உத்தரகோசமங்கைக்கும் அங்கிருந்து 8மைலி
ஸேதுபந்தனத்துக்காக தர்ப்பையில் படுத்து
) தர்ப்பசயனத்துக்குச் சென்று ஸ்வாமிதரி
ண்டியது முறைமையாகும் தர்ப்பசயனத்தில்
ாலான மஞ்சட்பெட்டிகள் முதலியவையும்
பலவித சோழிகளும் நயமாய்க்கிடைக்கும்.
ன் ரெயிலில்வரவேண்டியது அவசியம் பாம்
கட்டு பெற்று ரெயில்மார்க்கமாய்ப் பிரயா
நந்து (இராமேஸ்வரம் தீவு ஆரம்பமாகிறது)
புண்ணியஸ்தலங்களாகிய இராமேஸ்வரத்
தனுஷ்கோடியென்ற சேது ஸ்நாநகெட்
ால்நடையாய்முடியாவிட்டால் நாட்டுவண்
லப்பமாய்க்கிடைக்கும்) பாம்பனுக்கும் இரா
மைல். இராமேஸ்வரத்துக்கும் தனுஷ்கோ

டிக்கும் 20மைல் ஆ 28மைல். பாதசாரியாய்ச்சென்று யாத்திரை செய்வது விசேஷபலனைக்கொடுக்கும்; மத்தியில் தங்குவதற்கு சௌகரியமான மஜிலிகளும் விசேஷ தருமங்களுமுண்டு. இது சமுத்திர மத்தியிலுள்ள ஓர் புண்ணிய தீவானபடியால்கீழ் பூமி எல்லாம்மணற்சாரியாயும் காடுகள் நிறைந்தும் சமுத்திரத்தின் பேரிரைச்சலாலும் அழகாலும் வெகு ரமணீயகரமாயிருக்கும். இராமேஸ்வர சிவாலயத்தில் ஸேது மாதவரென்னும் விஷ்ணுவாலயமும் மாதவதீர்த்தமும் சேர்ந்திருக்கிறது. இராமேஸ்வர ஆலயத்தை வெகுவாய் விருத்திசெய்தவர் பாஸ்கர ஸேதுபதியாகிய இராமநாதபுரம் மகாராஜா. இப்புண்ணியவானின் பக்தி சிரத்தையை எழுதிமுடியாது. இவருடைய உருவம் பர்வதவர்த்தனி யம்மன் சந்நிதியிலும் மற்ற இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் காசியைப்போலல்லாது பிரதி நித்தியம் ஆறுகால பூஜைகளும் பிரம்மோற்சவம் முதலாய உற்சவங்களும் வெகு ஒழுங்காயும் சிரத்தையாயும் விமரிசையாயும் நடத்தப்படுகின்றன. இப்பிரசித்ததேவாலயத்திலிப்போது நாட்டுக்கோட்டையாரும் சம்மர்தப்பட்டு இன்னுமதிக விமரிசை செய்யப்பட்டு வருகின்றன.

ஷை ஷட்காலபூஜை விவரம்:—1. உஷக்காலம்:—திருவநந்தல், பொரி, தாம்பூலம், ஸ்படிகலிங்காபிஷேகம், நைவேத்தியம். 2. விளாபூஜை:—சுத்தசம்பா தோசை, அநந்தசயனம் ராஜா கட்டளை. 3. காலசந்தி:— புதுக்கோட்டைமகாராஜா கட்டளை—கோயிலில் சேர்க்கப்பட்டது. 4. உச்சிகாலம்:—சம்பா, பொங்கல், சர்க்கரைப் பொங்கல், வடை, பால்பாயஸம். 5. சாயரக்ஷை:- புளியோதரை, கோயிலார் விசாரணையில் பச்சையப்பமுதலி கட்டளையில் சேர்க்கப்பட்டது. நாட்டுக்கோட்டையார் பால்கங்கை அபிஷேகம். 6. அர்த்தஜாமத்துக்கு:—மிளகுசம்பா, பள்ளியறைக்கு, பால், பொரி, தாம்பூலம்; குறிப்பு:—காலசந்தியிலும், சாயரக்ஷையிலும் நித்தியோற்சவமுண்டு.

பிரம்மோற்சவ விவரம்:—மாகமாதத்து கிருஷ்ணபக்ஷ சஷ்டியில் த்வஜாரோகணஞ் செய்து மஹாசிவராத்திரிக்கு தீர்த்தங் கொடுப்பது. முதல் திருவிழா:—பகல் வெள்ளிசப்ரம், இரவும் அதுவே. இரண்டாம் திருவிழா:—பகல் வெள்ளிச்சப்ரம், இரவு கற்பகவிருக்ஷம், காமதேனு, பெருச்சாளி, மயில், சப்ரம் இவைகளில் பஞ்சமூர்த்தி புறப்பாடு. 3-ம் திருவிழா:—பகல் கந்தமாதனபர்வதத்துக்குப்போதல், இரா பூதவாகனம், ஸிம்ஹவாஹனம். 4-ம் திருவிழா:—பகல் சப்ரம், இரவு-இராவணன் தாமரை. 5-ம்

திருவிழா:—பகல் சப்ரம்-இரவு-யானை-பல்லக்கு. 6-ம் திருவிழா:—பகல் சப்ரம்-இரவு-விருஷபவாஹனம் 7-ம் திருவிழா:—பகல் சப்ரம், இரவு சப்ரம், பின்,சபானுதர் புறப்பாடு. 8-ம்திருவிழா:—பகல் சபானுதர், இரவு குதிரை, கிளிவாஹனங்கள் 9-ம் திருவிழா:—பகல் இரதோற்சவம்-இராத்திரி சண்டாளாபிஷேகம். மஹாசிவராத்திரி விசேஷம். 10-ம் திருவிழா:—தீர்த்தம் ஸ்ரீ இராமனுதர் சந்நிதியிலிருக்கின்ற சமுத்திர ஸ்நாநகெட்டமாகிய அக்னிதீர்த்தத்தில் கொடுக்கப்படுகிறது. சாயந்திரம் வசந்தோற்சவம், ராத்திரி பிக்ஷாடனம் அவரோஹணம். 11-ம் திருவிழா:— இராத்திரி சண்டோற்சவம்.

ஆடிப்பூர உற்சவம் வெகுவிமரிசையாய் பஞ்சமூர்த்தி புறப்பாடுடன் இராமதீர்த்தக்கரையில் நடக்கிறது. இவைகளைத்தவிர மற்றப்படிக்குள் மாசிமகம், உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்கள், மஹாளயஅமாவாசை முதலிய விசேஷகாலங்களில் ஸ்வாமிபுறப்பாடும் தீர்த்தமுமுண்டு.

இராமேஸ்வரத்திலுள்ள முக்கியதீர்த்தங்கள்:—இருபத்திரண்டும், உபதீர்த்தங்கள் இருபத்தெட்டு முள்ளன. இவைகளின் விருத்தாந்தங்கள், பெயரைப் பார்த்தமாத்திரத்தாலே விளங்கக்கூடியதே. அவைகளை இங்கெழுதின் விரியுமாதலால் ஆவஸியகமுள்ளவர்கள் ஸேதுபுராணத்தால் தெரிந்துகொள்ளலாம்.

1. சக்ரதீர்த்தம்:—நவபாஷாண மென்னும் தேவிப்பட்டணத்தில் பெருமாள் கோவிலுக் கெதிரிலுள்ளது. (சமுத்திரம்) இந்த தீர்த்தமாகிய சமுத்திரம் சீதாபிராட்டியார் ஸ்நாநஞ் செய்தகாலத்து அலைகளடங்கினதா லதுமுதலப்படியேயிருக்கிறது.

2. பேதாள தீர்த்தம்:—தில்லைநாச்சியம்மன் கோவிலுக்குத் தெற்கு, வெற்றிலைமண்டபத்துக்கு மேற்கில் ஆறுமைலிலிருக்கிறது.

3. பாபவிநாசம்:—வெற்றிலை மண்டபத்துக்கு வடக்கில் சமீபம்.

4. சீதாகுண்டம்:—தங்கச்சி மண்டபத்துக்கு வடக்கில் கால்மைல்.

5. மங்களதீர்த்தம்:—தங்கச்சிமண்டபத்துக்குக் கிழக்கு சாலையில் கால்மைல்.

6. அமிருதவாபிதீர்த்தம்:—ஏகாந்த இராமஸ்வாமிகோயிலில்.

7. பிரம்ஹதீர்த்தம்:—இராமேஸ்வரத்துக்கு வடக்கு அரை மைல்.

8. ஹனும்ந்ததீர்த்தம்:—இராமேஸ்வரத்துக்கு வடக்கு கால் மைல்.

9. அகஸ்தியதீர்த்தம்:—இராமேஸ்வரத்துக்குக் கிழக்கு கால் மைல்.

10. இராமதீர்த்தம்:—இராமேஸ்வரத்திற்கு மேற்கு காலமைல்.

11. இலக்ஷ்மணதீர்த்தம்:—இராமேஸ்வரத்திற்கு மேற்கு ஒரு மைல்.

12. ஜடாயுதீர்த்தம்,—இராமேஸ்வரத்திற்குத் தெற்கு மூன்று மைல்.

13. மகாலக்ஷ்மிதீர்த்தம்:—கீழக்கோபுரவாசலில் ஹனுமார் கோவில் சந்நிதிக்குத் தெற்கு.

14. அக்கினி தீர்த்தம்:—இராமேஸ்வர இராமனுதராலயத்துக்குச் சமீபம், கிழக்கு-சமுத்திரம்.

15. சக்ரதீர்த்தம்:—இராமநாதராலயத்தின் இரண்டாம் ப்ராகாரத்துள்.

16. சிவகங்கை:—இராமநாதராலயத்துக்குள் ஸ்வாமி அம்மன் கோயில்களுக்கு மத்தியில்.

17. சங்கதீர்த்தம்:—இராமநாதராலயத்தின் இரண்டாம் ப்ராகாரத்துள்.

18. யமுனுதீர்த்தம், 19-கயாதீர்த்தம், 20-கவாதீர்த்தம், இம்மூன்றும் ஷை ஆலயத்தின் இரண்டாம் ப்ராகாரத்திலிருக்கின்றன.

21. சர்வதீர்த்தம்:—இராமனுதஸ்வாமி சந்நிதியில் கோயிலுக்குள்.

22. தனுஷ்கோடி:—பிரசித்தம் இராமேஸ்வரத்திலிருந்துதென்கிழக்காக இருபதுமைல்.

உபதீர்த்தங்கள்:—1:—பைரவதீர்த்தம்:—பாம்பன் சமுத்திரம்.

2. கபிதீர்த்தம்:—பாம்பனில் திருக்குளம்.

3. இரணவிமோசன தீர்த்தம்:—ஏகாந்த இராமஸ்வாமி கோயிலுக்கு வடக்கு.

4. தனுசுதீர்த்தம்:—அதாவது வில்லூன்றி தீர்த்தம்:—தங்கச்சிமடத்துக்கு ஒருமைல்-சமுத்திர சுத்தஜலம்.

5. சுக்ரீவதீர்த்தம்:—கந்தமாதன பர்வதத்தின் பிரதக்ஷிணத்தில்.

6. அங்கதுதீர்த்தம்:—7-ஜாம்புவதீர்த்தம் இவ்விரண்டும் ஷை கந்தமாதன பிரதக்ஷிணத்தில். கந்தமாதன பர்வதசிகரத்தில் ஸ்ரீராமர் பாதங்கள் தெரிசன விசேஷம்.

8. தர்மதீர்த்தம்:—9-பீமதீர்த்தம்-10-அர்ஜுனன் தீர்த்தம்.

11. நகுல தீர்த்தம்:—12-ஸஹதேவ தீர்த்தம்-13-த்ரௌபதா தீர்த்தம்-14-தேவதீர்த்தம்-15 இலங்கைமகாகாளிதீர்த்தம். இவைகளும் ஷை கந்தமாதன பர்வதபிரதக்ஷிணத்தி லமர்ந்திருக்கின்றன.

16. மாதவதீர்த்தம்:—பெரியகோயில் மேலக்கோபுர வாசலினருகில்.

17. நளதீர்த்தம்:—18-நீலதீர்த்தம்-19-கவாக்ஷதீர்த்தம்.

20. கவேதீர்த்தம்:—21-கந்தமாதனதீர்த்தம்-இவ்வைந்தும்சேதுமாதவர் சந்நிதியிலிருக்கின்றன.

22. பிரம்ஹஹத்தியாவிமோசனதீர்த்தம், 23-சூரிய புஷ்கரணீ தீர்த்தம்-24-சந்திரபுஷ்கரணீ தீர்த்தம் இம்மூன்று தீர்த்தங்களும் பெரியகோவிலின் இரண்டாம் ப்ராகாரத்திலமைக்கப் பெற்றிருக்கின்றன.

25. காயத்ரீதீர்த்தம்:—26-சாவித்ரீதீர்த்தம்-27-சரஸ்வதீ தீர்த்தம் இம்மூன்றும், கீழகோபுரம் ராஜாசத்திரத்திற்குப்பின்னுள்ளன.

28. நாகதீர்த்தம்:—தர்மகர்த்தா மடத்தில்.

மற்றப்படி க்ஷேத்திரதீர்த்தவிதிகள் முதலத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கிறபடி க்ஷேத்திராடனம், தீர்த்தசிராத்தம், தர்ப்பணம் வடனம் முதலியவை அவரவர் சக்திக்குத்தக்கபடி ஐந்து

ரூபாய் முதல் செய்யலாம், நிற்க; மேற்கூறிய முக்கியதீர்த்தங்களுக்குச் செலுத்தவேண்டியவும் ஸ்ரீஇராமநாதராலயத்தில் யாத்திரைவாளிகள் நடத்தும்படியான உபயங்களுக்குச்செலுத்தவேண்டிய கட்டணவிகிதங்களும் அடியிற்காண்க. இக்கட்டணங்களில் சரிபாதி சர்க்காருக்குச் சேருகிறது.

கோடிதீர்த்த அபிஷேகக் குடம் ஒன்றுக்குக் காலணா; தேங்காய் உடைத்து நைவேத்தியம்செய்ய காய் ஒன்றுக்கு ஒருஅணா, அஷ்டோத்ர அர்ச்சனை ஒன்றுக்கு ஐந்தணா, சகஸ்ரநாம அர்ச்சனை ஒன்றுக்கு ஒரு ரூபாய், பாயஸநைவேத்தியத்துக்கு ஒரு ரூபாய், வடை பாயஸ நைவேத்தியத்துக்கு இரண்டு ரூபாய், கங்காபிஷேகம் தீர்த்தச் செம்பொன்றுக்கு ஒன்றே முக்கால்ரூபாய். உபயாபிஷேகம் நைவேத்தியமுள்பட ஐந்தரை ரூபாய், தங்கப் பல்லக்கு உற்சவத்திற்குப் பதினேழரை ரூபாய், பஞ்சாமிருதாபிஷேகத்துக்குப் பத்தொன்பதேமுக்கால் ரூபாய், பஞ்சமூர்த்திகள் அபிஷேகத்துக்கும் உற்சவத்துக்கும் நூற்றைம்பது ரூபாய், சங்காபிஷேகத்துக்கு முந்நூற்றைம்பது ரூபாய், மஹாபிஷேகத்துக்கு ஐந்நூறு ரூபாய்.

ஸ்ரீகாசியில் இந்த நிர்ப்பந்தங்களொன்றுமில்லை. எந்ததீர்த்தத்தில் யாரெப்படி எவ்வளவெடுத்தாலும் கேள்விமுறையில்லை. ஸ்ரீ விஸ்வேசர் முதலான சந்நிதிகளிலும் யாதொருநிர்ப்பந்தமும் கிடையாது. பரமஏழையாகிய ஒருவனும் மஹாராஜனான மற்றொருவனும் ஒரேவிதமாய்ப் பாவிக்கப்பட்டு இவ்விருவரும் தங்கள் சொந்தக்கையினாலேயே அபிஷேகாதி அர்ச்சனைதீபாராதனைகளுடன் நைவேத்தியாதிகளும் செய்யலாம். கங்காபுத்திராள் முதலானவர்களுக்குக் கொடுப்பது நிர்ப்பந்தமல்ல; அவரவரிஷ்டம். காசியாத்திரையில் பிரயாகையில் கங்கையையெடுத்துவருவது போலவே இவ்விடத்திலும் சர்வதீர்த்தம் கோடிதீர்த்த மிவைகளை யெடுத்துவந்து இல்லத்தில் பூஜைசெய்து அத்தீர்த்தங்களை பந்துமித்திராதிகளுக்கீந்து பிராமணசமாராதனையுஞ்செய்துயாத்திரையை சம்பூர்ணஞ் செய்யவேண்டியதும் யுக்தவிதியாம்.

ஸ்ரீமத்கயா.

ஸ்ரீமத்கயா:— இந்த க்ஷேத்திரம் மற்ற க்ஷேத்திரங்களைப் போன்றதன்று. இக்ஷேத்திரத்தைப்பற்றி வேதத்தில் விரிவாயெடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இதிஹாஸசிரேஷ்டமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தாலும் நன்கு ஆதரிக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் பலபுத்திரர்களைப்பெறவேண்டுமென்பது யாதுகாரணத்தாலெனின் அப்புத்திரர்களிலெவரேனுமெக்காரணத்தாலேனும், இந்த கயா க்ஷேத்திரத்துக்குச் சென்று பிண்ட ப்ரதானம் செய்வான் என்னும் கருத்தால் தருமசாஸ்திரங்களுமவ்வாறு கூறுகின்றன. பின்னும் கயாசிரார்த்தம் செய்யாத புத்திரனும் புத்திரனல்லன், அவனைப்பெற்றோரும் புத்திரனைப்பெற்றோரல்லாமல், மிருகத்தைப்பெற்றவராவர். இது ரெயில்வேஸ்டேஷனிலிருந்து மூன்றரை மைலிருக்கிறது. வண்டிகளுங் கூலிகளுமன்றி கயாவாளிகளின் குமாஸ்தாக்களும்ஒவ்வொரு வண்டித்தொடருக்கும்வந்துயாத்திரைவாளிகளையழைத்துப் போகக்காத்துக்கொண்டிருப்பர். கயாவாளிகளி லநேகர் பிரக்யாதிபெற்ற வேதசாஸ்திர பாரங்கதபண்டிதர்களாயும் ஸி., ஐ., இ., முதலிய பட்டங்கள் பெற்றவராயும் லக்ஷப்பிரபுக்களாயுமிருக்கிறார்கள்; கயாவாலர்கள் மட்டும் பிராமணரேயன்றி அவரதுமனைவிகள் சூத்திரஸ்திரீகள் போல்வராகையா லவர்சமையல்செய்ததை உண்ணார்; போகத்துக்கல்லது மற்றக் காலத்திலவர்களைத்தொடார் கயாவாலர்களுக்கு இதர பிராமணர் சமையல்செய்துவைக்கிறதைத் தாங்களே யெடுத்துண்டமிச்சத்தைத் தங்கள் ஸ்திரீகளுக்குப்போட அவரருந்தியபிறகுபாத்திரங்களைச் சுத்திசெய்து வைப்பர். (மலையாளத்தில் பிராமணர்வைத்திருக்கும் அச்சிமாரைப்போல) காசியில் பட்டுப்பீதாம்பரங்கள், ருத்திராக்ஷங்கள், சாலிக்கிராமங்கள், பாணலிங்கங்கள் பலவித பாத்திரங்கள், காசிபடங்கள் முதலியவைகளைப் போல இக்கயாவில் செம்பினாலும் கறுப்புக்கல்லினாலும் தேவையானால் பொன்னிலும் வெள்ளியிலும் ஸ்ரீவிஷ்ணுபாதங்களும், தசாவதாரம் முதலிய விக்கிரகங்கள் நகாசு போட்டுப் பலவித பித்தளை செப்புப்

பாத்திரங்களும் கற்பாத்திரங்களும் நார்மடி முதலியவைகளும் உயர்ந்த தினுசில் சரசவிலைக்குக்கிடைக்கும். இதற்கு ஏழுமைலி லுள்ள பௌத்தகயாவும் பார்க்கத்தகுந்தது. காசி, பிரயாகையி லுள்ள நம்திராவிடதேசத்தார் இக்கயாவுக்கு வருமுன்னரே, நம் மிடத்தில் இக்கயாவாலர்களுக்குச் சீட்டுக்கொடாமல் விடார். ஏனெனில் அவருக்கிதில் தரகுண்டு. முன்னாளில் ஒருவனுடைய ஆஸ்தியில் பாதிவிலையிலிருந்த கயாசிரார்த்தமானது இப்போது ஐந்து ரூபாய்விலைமதிப்பிலிருக்கிறது; ஐந்து ரூபாய் முதல் அவ ரவர்கள் சக்திக்கியன்ற வரையில் செய்யலாம். கயாசிரார்த்தத் தில் விஷ்ணுபாதமொன்றில் மட்டும் பிண்டம்போடுவது எல்லோ ரும் செய்யத்தகுந்தது. இதைத்தவிர பஞ்சகயை, அஷ்டகயை, மகாகயை எனமூன்றுவகையுண்டு. அஷ்டகயைகிரௌஞ்சபதம், 2-அகத்தியபதம், 3 சூரியபதம், 4 கார்க்கேயபதம், 5 பஞ்சாக்னி பதம், 6 கசியபபதம், 7 உருத்திரபதம், 8பிரமபதமிவைகளில்பிதி ரர்களுக்கும் உயிரோடிருக்கும் ஒருவன் தனக்கும் தன்னைச்சார் ந்தவர்களுக்கும் ஸ்ரீஜனார்த்தனன் கரத்திலும் இந்தக்ஷேத்திரத் தில் பிண்டப் பிரதானஞ்செய்து சற்கதியடையவும் ஸ்ரீமத்கயா மான்மியம் கூறுகிற்கின்றது.

கோயிலுக்குச்சிறிது தூரத்தில் வடமகாவிருக்ஷமும், அதை ச்சுற்றி விஸ்தாரமாய் வரும் யாத்திரைக்காரர்கள் சிரார்த்தம் சமையல் முதலியவைகளைச்செய்வதற்காக விசாலமானகட்டிடங் களும் சௌகரியமாயமைக்கப்பெற்றிருக்கின்றது. இக்ஷேத்தி ரத்தில் வபனம் க்ஷேத்திரோபவாஸமிரண்டும் அவஸியமில்லை, விஷ்ணுபாதம் முதலியவைகளில் சாதிபேதமின்றி எல்லாச்சாதி யாரும் எப்போதும் பிண்டம் போட்டுக்கொண்டிருப்பார்களாத லின் திராவிடதேயத்தாரில் ஆசாரமிருந்திருப்பவர்கள் சிலர் தனு ட்டியராயுமிருந்தால் இவர்கள் பிண்டம் போடுகிற சிறிது நிமிஷ ங்களுக்கு மற்றவரைவரவிடாமல் வெகு பிரயத்தனத்துடன் தடு த்து விஷ்ணுபாதத்தில் பிண்டம் போடுகிறார்கள்; அது அனுவ்வஸி யம். இதுதேவ பூமியாகையாலும் விஷ்ணு சந்நிதானமாகையாலும் க்ஷேத்திரபுராணமே இதற்கு இடங்கொடுத்தலானும் அப்படிச் செய்வதேஸ்மிருதி சம்மதம். சூத்திரர் ஆமசிரார்த்தத்தைத்தவிர இரணியசிரார்த்தமும் அன்னசிரார்த்தமும் செய்யக்கூடாதென்ற விதியை இந்தக்கயாவில் கண்டிப்பாய் அநுசரித்து வருகிறார்கள். எவ்வளவு ஸ்ரீமானாயினும் சூத்திரனாயிருப்பவன் ஆமரூபமாயல்ல து,பிரிதால் செய்வதற்கிடங்கொடார். அன்னசிரார்த்தத்தை விஷ் ணுபாதத்திலும் கோயிலிலும் நதிதீரத்திலும் பருவத சிகரத்திலு ஞ்செய்யலாம். தம்மிருப்பிடத்தில்தங்குலத்தாரைவரித்து அன்ன

சிரார்த்தஞ்செய்யும் சில சங்கரஜாதியார்களான சூத்திரர்களின் ஜம்பம் இங்குபலியாது. அவன் என்னபிரபுவாயிருந்தாலும் கயாவாலரையன்றி மற்றவர்களைக்கொண்டு கயாஎல்லைக்குள் வேறு விதமாய் நடத்தமுடியாது. இவர்கள் ஆதியில் சதுர்முகனாலுமிப்போது நம் கவர்ண்மெண்டாராலும் அதிகாரம் பெற்றிருக்கின்றனர். அதமபக்ஷம் ஐந்துரூபாய்க்கொடுத்தாலும் கயாவாலர், தங்க இடம்கொடுத்து சிரார்த்தம் செய்துவைத்து அனுப்புவர். பிண்டப்ரதானம் செய்தவுடனே அக்ஷயவடத்தின்கீழ் கயாவாலருட்கார்ந்து சிரார்த்தம் செய்தோனுக்குச் சந்தனம் பூசி பூமாலைபோட்டு "பிரயாகைமுண்டம், காசிதண்டம், கயாபிண்ட"மென்பவைகளைச்சொல்லி ஒரு பூமாலையால் முதுகில் அடித்துத் தட்டிக்கொடுத்து "உன்பிதிரர்களெல்லாம் சுவர்க்கஞ்சார்ந்தனர்" என்றுச்சாகப்படுத்தி சுபலம் முதலியதானங்கள் கேட்பர். சுபலத்துக்கு இருபத்தைந்து ரூபாயாவதும், மற்றவைகளுக்குப் பத்து ரூபாயாவதும் கொடுக்கவேண்டும். இதுமிகவும் குறைந்தரேட்டு. மேலே சொன்ன ஐந்து ரூபாயில் சிரார்த்தஞ் செய்கிறவர்களுக்கு மற்றவை யெல்லாஞ் செய்து அக்ஷயவடத்தின் கீழ் ஒன்றுஞ் செய்யார். கயாவாலர்களில் பெரும்பான்மையோர் உற்சாகத்துக்காக பக்ஷிகளைவளர்த்து வருகிறார்கள். இந்தக் கயா மிகுந்த ஜன நெருக்கமுள்ளவும் விசேஷவர்த்தகமுள்ளவுமோர் பெரிய பட்டணம். இதிலிருக்கும் பல்குனிநதியில் பெரும்பாலும் ஜலம் இருப்பதேயில்லை. ஆற்றில் வெட்டப்பட்டிருக்கும் ஓடைகால்களிற்றான் எல்லாச்சாதியாரும் ஸ்நாநம் பண்ணவேண்டும். சமீபத்தில் 50, 60கஜ தூரத்தில் பிரேதங்கள் ஆற்றின்மத்தியிலே ஸ்நானஞ் செய்வோருக்கு மேற்குப்பக்கத்திலே தகனமாய்க்கொண்டிருக்கும்:—ஆதலின் ஜலகஷ்டம் மிகுதியே. காவேரிதீரவாசிகளுக்கு இவ்விஷயத்தைக்காண அருவருப்பாயிருக்கும். இதற்கு ஒருதகுந்த ஏற்பாடு கயா முன்ஸிபாலிடியார் செய்தாலல்லது தீராது. இவிடம் ஒன்றிரண்டுதர்மான்ன சத்திரங்களுமிருக்கின்றன. மேற்குறித்தகாரணத்தினால் கயாவில் த்ரிராத்ரம் க்ஷேத்திரவாஸஞ் செய்வதே கஷ்டமாயிருக்கும்.

விஷ்ணுபக்தனாகிய கயாசுரன் திருமாலைக்குறித்து கோலாஹல கிரியில் தவஞ்செய்து எவராலும் கொல்லப்படாத வரனைப் பெற்று மகாபரிசுத்தனாகி அவனைப்பார்த்த யாரும் புண்ணியர்களாயினார்கள். இதனால் இயமனுலகம்பாழ்த்து அத்தருமன், சதுர்முகன், சங்கரன் முதலானவர்களுடன் திருமாலையிதற்கோருபாயங்கேட்க, அவர் பிரமாவை அவ்வசுரனிடம் யாசித்து அவனுடைய உடலில் யாகஞ்செய்யும்படியாக அனுமதிபெற்று,

யாகஞ்செய்யென்று ஆக்ஞியாபித்தபடி, பிரமா அவ்வசுரனிடம் சென்று, உன் சரீரம் மகாபரிசுத்த முடையதாயிருப்பதால் அதில் யாகஞ்செய்ய அநுமதிகொடுக்க வேண்டுமென்று கேட்கவேஅவ் வசுரனும் சம்மதித்து கோலாஹல கிரியில் நிருதி திக்கிற் றலையை வைத்து தென்திக்கில் காலைநீட்டிப் பூமியிற் படுத்தான். அப்பொழுது பிரம்மா, யாகத்ரவ்யங்களையும், ஹோதா, அத்வர்யூ, இருத்துவிக்குகளாக கசியபாதிமுனிவர்களையும் சிருஷ்டித்து அவன் சிரசில் செய்யும் யாகசாலையில் ஹோமஞ் செய்வித்தனர். அக்காலத்து அவனது சிரஸ் அசையவே சத்தியலோகத்திருந்த தர்மசிலையை அவனது சிரசில் கொணர்ந்துவைக்கும்படி ஆக்யாபித்தபடி தருமராஜன் வைக்கவும், பின்னும் சலிக்கக்கண்டு ஒவ்வொருவராய் சடைசியாக மகாவிஷ்ணு உள்பட பிரமா முதலிய தேவர்களும், பிதாமஹர், ப்ரபிதாமஹர், பல்க்கீசர், கேதாரேசர், கனகிபா முதலிய மூர்த்திகளும், காயத்ரி, சாவித்ரி, சரஸ்வதி முதலிய தீர்த்தங்களும், அகஸ்தியாதி முனிவரும், அத்தருமசிலையின்மேல் பாதம்வைத்தனர். அப்பொழுது கயாசுரன் நான்கேட்கும் வரமளிப்பீராகில் சலியாதிருக்கின்றேனென்று கேட்டதற்கு, மும்மூர்த்திகள் முதலானோருமுடன்பட்டமையால் "நக்ஷத்திரங்களும் பூமியுமிருக்குமளவும் ப்ரம்ஹா விஷ்ணு மகேஸ்வரர்களும்இதரதேவர்களும் சர்வதீர்த்தங்களுமிச்சிலையிலேயேயிருக்க வேண்டுமென்றும் இதை ஸ்பரிசித்தவர்களது பாவம் பறந்துபோக வேண்டுமென்றும், இதில் பிண்டமிட்டவரது பிதிரர்கள் சுவர்க்கமடைய வேண்டுமென்றும் வரங்கேட்டான்." அவ்வாறே அவன் கேட்டவரத்தைக் கொடுத்தன ரதனாற்றான், இக்கயாவில் எல்லாமூர்த்திகளது பாதங்களும் தீர்த்தங்களுமிருக்கின்றன வென்று வாயுபுராணம் கூறுகின்றது.

இந்த மத்தியில் மேற்குறித்த யாகம் பிரம்மா செய்யுங்காலத்தில் இக்ஷேத்திரவாஸிகளான பிராமணர்கள் பிரம்மாவின்கட்டளைகளை அலக்ஷியஞ் செய்தபடியால் முதலில் சாபத்தைப் பெற்றவர்கள் யாகத்தினிறுதியில், அவ்வந்தணர் செய்த பக்தி முதலிய ஸ்தோத்திரங்களாலும் கிரியைகளாலும் அவ்விப்பிரர்களையே அவ்விடத்தில் நடக்கும் கயாசிரார்த்தங்களில் உண்ணக்கூடிய யோக்யர்களாகவும் பௌரோகிதர்களாகவும் உரிமைக்காரர்களாகவுமிருக்கவரமளித்தனன். இந்தசதுர்முகப்பிரம்மாவின் ஆக்ஞைப்படி இக்ஷேத்திர வாஸிகளான அந்தணர்கள்அதுமுதல் அத்தொழிலை மிக பக்தியுடனேற்று சிரார்த்தஞ் செய்யுமவர்களின் பிதிரர்களை சுவர்க்கத்துக்கனுப்பவும், புத்திரபௌத்திர பாரம்பரிய அவ்வம்சவிருத்திக்கு அப்பிதிரர்களின் ஆசீர்வாதங்களை

இவர்கள்நேரில் அளித்தும்வருகிறார்கள். பிராமணருள் ஸ்ரீவைஷ்ணவர், மத்துவர் முதலிய எச்சாதியாரும் அவரையேவரித்து சிரார்த்தம் செய்வர். அவர் ஆசாரமிலரென்பதும் ஒரு தினத்தில் பலவிடங்களில் பிராமணார்த்தஞ் செய்வரென்பதும் அவர்கள் ஆதிகாலத்தில் பிரமதேவனிடத்தில் பெற்ற வரத்தின் மஹிமையேயன்றிவேறல்ல. பூர்வத்தில் ஸ்ரீராமபிரான், பீஷ்மர், தருமபுத்திராிவர்கள் பிண்டப்ரதானம் செய்தபோது முறையே தசரதசக்கிரவர்த்தியும், சந்தன்மகாராஜனும், பாண்டுமகாராஜனும் எதிர்த் தோன்றிப் பிண்டத்தை அங்கீகரித்திருக்கிற உண்மையைக்கொண்டு பிரத்தியக்ஷமாய் அக்காலத்தில் எல்லோருடைய பிதிரர்களும்அவ்வாறே ஏற்று திருப்தியடைந்து வந்தனரென்றும்; பிறகு கலியுக ஆரம்பத்தில் பரத்துவாஜமுனிவர் கயபதத்தில் பிண்டப்ரதானஞ் செய்தபோது தன்பிதாவைத்தவிர பிதாவுடன் மற்றொருவனும் பிண்ட மேற்கவந்தகாலத்தில் பிண்டப்ரதானத்தை நிறுத்தி அதன் வரலாற்றை அம்முனிவரது மாதாவினால் க்ஷேத்திரம் பீஜம் என்ற இரண்டு பிரபாவங்களையும் காரணத்தையுந் தெரிந்துகொண்டு, மறுபடியும் சிரார்த்தஞ்செய்து அவ்விருவருக்கும் சமமாய்ப்பிண்டப்ரதானஞ் செய்தனர். இவ்வாறு கலியுகத்தில் அதர்மங்கள் அக்காலமுதற்கொண்டே ஏற்பட்டுவிட்டபடியால் அதுமுதல் பிரத்தியக்ஷமாய்ப் பிதிரர்கள்வருவதை நிறுத்தி மறைந்திருந்து பிண்டங்களை ஸ்ரீஜனார்த்தனன் மூலமாய் ஏற்றுக்கொள்ளுகிறார்களென்றும், ஸ்ரீமத் கயாமான்மியங் கூறுகின்றது. காசி, பிரயாகை இரண்டிலும் போலவே இவிடத்திலும் நம் திராவிடதேயப் பிராமணர் அநேகர் குடியேறியிருக்கின்றனர். இந்த கயா நந்தஞ்சாவூரைப்பார்க்கிலும் பெரியதான ஒரு ஜில்லாபட்டணம். காசியைப்பார்க்கிலும் அதிக யாத்திரைக்காரர்கள் நாடோறும் இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்குகளினின்றும் பரமஏழைகளும் பெரிய மகாராஜாக்களும் பிதிர்ரணத்தைத் தீர்க்கும்பொருட்டு வந்துகொண்டிருப்பார்கள். காசியாத்திரை நம்சொந்த நன்மையை நாடிச்செய்வது. கயாயாத்திரை அப்படிக்கல்லாது பிதிர்களின் கடனைச்செலுத்தி அவர்களைச் சற்கதியடைவிக்கச் செய்யவேண்டியது ஒவ்வொரு சற்புத்திரனுக்கும் முதன்மையான இன்றியமையாக் கடமையாகையால் காசியாத்திரையினும் இக்கயா யாத்திரையே அதிக அவசியமும் முக்கியமுமுள்ளது. அது காரணம்பற்றியே காசிக்குச்சென்று ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வரர் தரிசனஞ் செய்வதற்கு முன்னமேயே கயாசிரார்த்தத்தைச்செய்து கடனைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதே சுருதி சம்மதமார்க்கமாதலால் ஸ்ரீ காசி க்ஷேத்ர

பாலகரும் விஸ்வேஸ்வரரும் இவர்களுக்கு நேரில் தம்மிடம் வருபவர்களைக் காட்டிலும் அதிக பலனைக் கொடுக்கிறார்கள். மற்றொருகருத்து ஒருவேளை காசியில் சேர்ந்தவுடனே இறக்க நேர்ந்தாலும் இந்த பிதிர்க்கடன் பாக்கிக்காக மற்றோர் ஜன்மமெடுக்க வேண்டிவரும்.

நம்மிந்து மதவுண்மைகளைப் பெரும்பாலும் பின்பற்றிவரும் பௌத்தமதம் பூர்வம் சுமார் 1500 வருஷங்களுக்கு முன் பிரக்யாதியுடன் செழித்தோங்கி வந்தகாலத்தில், இந்தகயையை அம்மதாசாரியர்கள் முக்கியமான நடுநாயகமாக வைத்துக்கொண்டு அதில் அனேகமடங்கள், கோயில்கள் முதலானவைகள் கட்டியிருக்கிறார்கள். தற்காலத்திலும் மேலே பிரஸ்தாபித்த பௌத்த கயாவில் பௌத்தமத சந்நியாசிகளும், மடாதிபர்களும், ஜப்பான் தேசத்திலிருந்து கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிற ஒரு மிகவும் அற்புத அழகமைந்த பௌத்தவிக்கிரஹ மொன்றும் வைக்கப்பட்டிருக்கிறது. இக்கட்டிடங்கள், மடங்கள் முதலியவைகளுடன் கயாவிலிருக்கிற பௌத்தமத சம்மந்தமான அனேக கோயில்கள், மடாலயங்கள் முதலியவைகளும் கயாவாலர்களின் பராமரிப்புக் குட்பட்டிருக்கின்றமையா லவர்கள் இககட்டிடங்கள் முதலியவைகளை நம்மிந்துக்களாகிய பிராமணர் முதலான மேல்ஜாதியாருக்கு சிரார்த்தாதிகள் செய்வதற்கும், ஜாகாமுதலியவைகளுக்கும் கொடுத்து உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கயையைத்தவிர்த்து வெளியிலிப் பரதகண்டத்துக்குள் எந்தப்பிரதேசத்தில் சிரார்த்தஞ்செய்தாலும் இந்த "கயை"யையுச்சரிக்காமலும், ஜனார்த்தனருக் கர்ப்பணஞ் செய்யாமலுமிருந்தால் சிரார்த்த சம்பூர்ணபலன் கிடையாதென்பதும் சுவானுபவமாயுளது.

பிரயாகை.

பிரயாகை:—அலஹாபாத் என்று சொல்லப்பட்ட இப்பிரசித்தக்ஷேத்திரம் கங்கை, யமுனை, ஸரஸ்வதியென்னுமிம்மூன்று

நதிகள் கூடும்படியான திரிவேணி சங்கமத்திலுள்ளது. இது காசியிலிருந்து சுமார் நூறுமைல் மேற்கேயிருக்கிறது. இதற்கு மேற்கே மதுரா, கோகுலம், பிர்ந்தாவனம், ஹரித்துவாரம் முதலிய க்ஷேத்திரங்களிருப்பதாலே அவைகளுக்கு மத்தியஸ்தானமாகிய பிரசித்திபெற்ற டில்லிமாநகரினிருப்பிடத்தை விளக்குமாறு, பிரயாகையிலிருந்து வடகிழக்கே கல்கத்தா 514 மைலும், வடமேற்கே டில்லி 389 மைலும் அந்த டில்லிக்கு வடமேற்கே நம்மிந்தியாவின் எல்லையாகிய ஸிந்துதீரத்திலுள்ள பெஷாவர் கண்டோன்மெண்ட் 588 மைலுமிருக்கிறது. அதாவது கல்கத்தாவுக்கும் பெஷாவருக்கும் 1491 மைல். கல்கத்தாவுக்கு வடகிழக்கே அஸாம் சுமார் 600 மைல்தூரம் நம்மிந்துதேசம் வியாபித்திருக்கிறது. கோட்டையும் சைனியங்களும் லெப்டினெண்டு கவர்ண்மெண்டு, ஹைகோர்ட் முதலியவைகளுடன், காசியைப்பார்க்கிலும் பெரியபட்டணம். கங்கா, யமுனை சங்கமத்திலுள்ள இக்கோட்டைக்குள் முப்பதடி உயரமுள்ள பௌத்தவிக்கிரஹமொன்று சுமார் 2000 வருஷங்களுக்கு முன் பௌத்த அரசனாகிய அசோகாவினால் கட்டப்பட்டிருப்பதையும் மற்றவைகளும் பார்க்கத்தகுந்தவைகள். ஸ்டேஷனிலிருந்து சுமார் மூன்றரை மைல்தூரத்தில் நந்திராவிட தேசத்தாருள்ள தாராகஞ்சமிருக்கிறது. ஜாகைமுதலானவைகளுக்குச் சௌகரியம். சமீபத்தில் நாட்டுக்கோட்டையார் அன்னதான சத்திரமிருக்கிறது. கடைகண்ணிகள் முதலியவை சமீபம். ஸ்டேஷனில் பிரயாகைவாலரின் குமாஸ்தாக்களும் வண்டிகளும் தயாராயிருக்கும்.

மேற்குறித்த திரிவேணிசங்கமத்தில் கங்கை பச்சிமவாஹினியாயும், யமுனை பூர்வவாஹினியாயும், சரஸ்வதி அந்தரவாஹினியாயும் ஓடிவந்து கூடுகிறது. வருஷம் 360 நாளும் இவிடம் விசேஷமுடையதானாலும் மாகமாதத்தில் மாகஸ்நானம் அதிக விசேஷமுடையது.

காசிகாண்டத்தில்:—

உடை திரைநீர்ப்பிரளயத்து மார்க்கண்டன் முதன்முனிவருறைவதாய
வடதருவைப்புனிற்று மதியலைபுரட்டுங் கங்கையொடு வனைந்தவேணிக்
கடவுளைவெண்மதி கொழிக்கும் பாலாழி துறந்து செழுங்கமலையோடு
மடியர் துயரகற்றுவ லென்றினிதடைந்தமாதவனையாங்கு கண்டான்.

பெறலரிய தருமத்தின் பேரெல்லாம் விரிதெண்ணீர் பிரயாகையாற்று
ளுறலிலொரு நுண்மணற்கு நிகர்தூங்கா கொடும்பாவமனைத்துமன்ன
துறுபெயர் கேட்பினினடுங்குமாடு நருமாண்டு வதிந்துயிர்விட்டோரும்
குறைவில் பரகதியடைந்து வீற்றிருப்பரௌனமறைகள் கூறக்கேட்டான்.

செங்கதிர் செல்வனுமாதி கேசவனுங்கண்களாய்த் தெய்வ நன்னீர்ப்
பொங்குதிரைமணி கொழிக்கும்வானைய சிகைகளாய்ப்புனலிற்றேய்ந்தோா
வெங்கொடும்பாதகந்துலேந்து வீடதருந்திருவேணி வேணியாய
கங்கைவிரிபுனலாடைக்காசியணங்கினை நோக்கிக்களித்தானன்றே.

மதிதவழுமுயர்பொலங் கோட்டிமைய நெடுவரை முதலவரைகள்யாவுந்
தழைதமலர்ப்பைந்தரு முதலதருக்களுமெண்ணறும்புவனந்தனிலுள்ளோரும்
விதிமுறையினுங்கடைந்து புகழ்மாகத்திங்கடனில் விளங்கும்வெய்யோன்
கதிர்மணித்திண்டேர் கடவுட்புலரியின் வாய்ப்புனலாடக் கண்ணிற்கண்டான்.

யமுனைநதியில் ஸ்ரீ மகாவிஷ்ணுவாகிய கண்ணபிரான் முற்றிலுங்களித்து நீராடினமையால் கங்கைக்கொருவாறொப்பான இந்நதியுங் கூடுதல்பற்றி பிரயாகைதிரிவேணி சங்கமத்தைத் தீர்த்தராஜா என்க. பிரயாகைமான்மியங் கேட்ட அர்ச்சுனன் மார்க்கண்டேயரிஷியை நோக்கி இந்த க்ஷேத்திரத்தைக் குறித்து புராணப்பிரமாணமன்றி, வேறு பிரமாணமுளதோவென வினவியபோது, இந்த திரிவேணி சங்கமத்தில் நீராடுவோர் முத்தி பெறுவரென்ற சுருதி சம்மதத்தையும் மேற்செய்யுளாற் காண்க. பிரயாகாமுண்ட மென்றபடி இத்திருவேணிசங்கமத்தில் ஸ்திரீகளும் புருஷனுடைய தொடையில் சந்தோஷத்துடன் பார்த்தாவின் மேன்மையை நாடிமுண்டனஞ்செய்து கொள்ளலும், அல்லது முண்டனத்துக்குப்பதிலாக சிகையின் நுனியையாவது கத்தரித்து வேணிதானஞ்செய்வது மகாவிசேஷ பலனைக்கொடுக்கின்றது; பின்னும் அப்பிரயாகைமான்மியத்தில்:- திரிவேணி சங்கமத்தில் ஜலத்திலிறங்கியேனும்,தேகத்தைக்கண்டங்கண்டமாய்ச்சேதித்து பறவைகட்கு இரையாக்கியேனும் பிராணனையிழக்கவேண்டுமென பிரயாகைமான்மியம் பஞ்ச மோத்தியாயங் கூறுகின்றது. இந்த வழக்கத்தைமட்டும் நம்காருண்ய கவர்ண்மெண்டார், சஹகமனம்-புருஷனோடு மனைவியுமுயிர் விடுதலைப்போல்,தடுத்துவிட்டார்கள். மாகமாதத்தில்இத்திருவேணிசங்கமத்தில்ஸ்நானத்துக்குவரும் பல தேசஅரசர்கள் முதல் வாயில்லாமிருகங்கள், அறிவில்லாபக்ஷிஜாதிகளும் ஸ்ரீகாசி, அயோத்தியிலுள்ளக்ஷேத்திரவாசிகளும் நிறைந்துள்ளஸ்நாநகட்டத்தையும் படைத்த இப்பிரயாகையைப்பார்க்க என்னபாக்கியஞ் செய்யவேண்டுமோவென்று மார்க்கண்டேய பௌராணிகருமெடுத்துரைக்க அசக்தராயினர். யாத்திரைகளையெல்லாம் முடித்துக்கொண்டு கடைசியில் பிரயாகையில் வந்துதீர்த்தமெடுக்கும்போது மூன்று புடைவைகள் அல்லது வஸ்திரங்களோடும் உடுக்கப் பெற்று பூஜாத்திரவியங்களோடும் சென்று, கங்காயமுனைசரஸ்வதிகளை மந்திரோக்தமாய்ப் பூஜித்து கங்கையை யெடுத்து பத்திரப்படுத்தின பிறகு

ஷை வஸ்திரங்களைப் பிராமணஸ்திரீகளுக்கோ புருஷர்களுக்கோ தத்தஞ் செய்து விட்டு வேதியரைக்கூடவைத்துக்கொண்டு அறு சுவைகலந்த இனிதடிசில் உண்ணுவதும் முறைமையாகும். பிரயாகைக்குச் சமீபத்தில் பரத்வாஜராச்சிரமமிருக்கின்றது. ஸ்ரீராமர் வனவாஸஞ்செய்தபோது அவ்வாச்சிரமத்தில் தங்கி யிருந்து சித்திரகூடம் எழுந்தருளினதும், பிறகு பரதனும் ரகுநந்தனனைத்தரிசனம் செய்யவந்தபோது அதே ஆச்சிரமத்தில் தங்கி சென்றதும் ஸ்ரீ மத்ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமத் அயோத்தி.

அயோத்தி:— ஸரயூநதிதீரத்தில் காசியிலிருந்து சற்றுவட மேற்குத்திசையாக 128 மைல் தூரத்திலும் பிரயாகையிலிருந்து நேர்வடக்காய் 98 மைல் தூரத்திலுமிருக்கின்றது. இது சூரிய வமிசத்தரசர்களுக்கு ராஜதானியாயும், ஸ்ரீராமராகிய மகாவிஷ்ணு பூர்ணாவதாரஞ் செய்தஸ்தலமாயுமிருக்கிறது, இதுவுமொரு அழகிய பாரிபட்டணம். வண்டிகள் முதலியவைகளும் கடைத்தெருக்களுடன் நாட்டுக்கோட்டையார் அன்னதான சத்திரமும் அதில் இரண்டொருதிராவிடருமிருக்கிறார்கள். நகர், ஸ்டேஷனிலிருந்து இரண்டரைமைலிருக்கிறது; இங்கிருந்து நந்திக்கிராமம் இருபது மைலுள்ளது. நந்திக்கிராமம் என்னும் ஸ்தலம் ஸ்ரீ ராமர் வனவாசஞ்சென்றிருந்த காலத்தில் அவரதநுமதிப்படி பரதர் ஸ்ரீ ராமபாதுகையை சிம்மாசனத்தில் எழுந்தருளச்செய்து அரசாண்ட இடம். வேதத்திற்கூறுகிறபடி அயோத்தியே வைகுண்டமெனவும் அயோத்தியை வைகுண்டத்தினின்றும் சுவாயம்புவமநுவால் திரேதாயுகத்தில் கொண்டு வரப்பட்டு இப் பூமியில் பொருத்தாமல் மகாவிஷ்ணுவின் சக்கரத்தின் பேரிலே ஸ்தாபிக்கப்பட்டதெனவும், சரயுமாநதி தென்கரை முதல் தமசாதீரம் வரையில் அகன்று ஆதிபகவானது அவதாரமாகிய

மச்சாகாரமாய் சாகேதம், சந்தி, விமலை என்னும் நாமங்களோடு கூடிய தெனவும், அவந்தியைத்திருவடியாகவும், காஞ்சியை இடையாகவும், துவாரகையைஉந்தியாகவும், மாயையைமருமமாக வும், மதுராவைக்கண்டமாகவும், ஸ்ரீ காசியை நாசியாகவுங் கொண்ட ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸ்ரீ அயோத்தி முகம் எனவும், அவ் வயோத்தியில் ஸ்ரீ மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீ ராமர் ஜனித்தகர்ப்பஸ் தானம், அயோத்தியாபீடம், ரத்னமண்டபம், கனகமண்டபம், தருமஸ்தானம், தேவஸ்தானம், ஹரிஸ்தானம், பிராட்டியார் பா கசாலை, பொக்ஷசாலை, அக்கினிகுண்டம், யாகவேதி, உத்தியான வனம், சித்தபீடம், விஷ்ணு ஹரிஸ்தானம், ரமணஸ்தானம் அகஸ் தியாச்சிரமம், பராசரராச்சிரமம், மகஸ்தானம், சுக்கிரீவ அங்கதா திஸ்தானம், வசிஷ்டஸ்தானம், கணேசஸ்தானங்களோடு பலஸ் தானவிசேஷங்களும், தந்ததாவனகுண்டமுதல்ஹநுமத்குண்டம், கஜேந்திரகுண்டம், சீதாகூபம், சுக்ரீவகுண்டம், விபீஷணகு ண்டம், வசிஷ்டை திலோதகைசங்கமம், சீதாகுண்டம், கர்ஜுகு ண்டம், வித்தியாகுண்டம், கணேசதீர்த்தம், தசரதகுண்டம், கோ சலைகுண்டம், சுமித்திராகுண்டம், யோகினி குண்டம், ஊர்வசிகு ண்டம், மகபரம், துர்பரம், பிரஹஸ்பதிகுண்டம், ருக்மணி குண் டம், க்ஷீரோதக தீர்த்தம், தனக்ஷயதீர்த்தம், வசிஷ்டகுண்டம், சக்ரதீர்த்தம், ப்ரம்ஹகுண்டம், ரணவிமோசன தீர்த்தம், பாபவி மோசனதீர்த்தம், வைதரணீதீர்த்தம், கோஷார்க்கம், ரதிகுண் டம், கந்தருவகுண்டம், குசுமாயுதகுண்டம், மந்தரேஸ்வரதீர்த் தம், இந்திரதீர்த்தம், கோப்ரதாரகதீர்த்தம், துர்க்காகுண்டம், நா கர்குண்டம, நாராயணகுண்டம், வால்மீகிதீர்த்தம், ஹரிகுண்டங் களோடுமமையப்பெற்ற பலதீர்த்தங்களும் இப்பூலோகவைகுண் டத்திலுள்ளதெனவும், சரயுமாநதி இக்ஷுவாகு அரசனதுவே ண்டுகோளின்படி வசிஷ்டபகவானது மானஸவாவியினின்றுங் கொண்டுவரப்பட்டதானும், அச்சரயுமாநதியும் ஸ்ரீமந்நாராயண ரைப்பிரத்தியக்ஷத்தில்சதாகாலமும்சேவித் தவரருகேயிருக்கும் படியான ப்பாக்கியத்தைப்பெறலாமென்று இப்புவியிலுற்பவித்த தென்றும், அம்மாநதிக்குச்சரயு, வசிஷ்டை, ராமகங்கைஎனநாமங் களுள்ளனஎனவும் (மேலேசொல்லப்பட்டவிஷ்ணுபதிகங்கையை இச்சரயுநதியென்றும்சொல்வர்) அதனுள்சஹஸ்ரதாரைஸ்வர்க்க த்துவாரங்களோடு அனேகதீர்த்தவிசேஷங்களுள்ளனவென்றும் ஸ்ரீ அயோத்திமான்மியம் கூறுநின்றது. பின்னும்காசிகாண்டத்தில்:-

சரயுநதிப்புனல்படிந்துதென்புலத்தோர் கடன்கழித்துத் தழல்செய்வேள் யருமறையோரினிதுவப்ப வமுதுறழுமின்னடிசிலமையவூட்டிப் [வி ரிவினோடு மங்கரிற் பஞ்சராத்திரியுறைந்துபவளஞ்சிந்தி [னே விரிகதிர் வெண்மணி கொழிக்கும் வீங்குபுனற் பிரயாகைதனின்மேவிஞ
பின்னும்புண்ணியஞ்செய்தோர் சுவர்க்கம் புகுவராகையால்

அச்சுவர்க்கமே அயோத்தியாதல்பற்றி அதுவேபோகமுறை விடமாயிற்றன்றோ. இம்மாநகரோடு வரிசையாய் மதுரா, மாயா, காசி, காஞ்சி அவந்திகா, துவாரகை, இவைகளை ஒப்பிடப்பட்ட தேயன்றிதேவேந்திர ராஜதானியாகிய அளகாபுரியை ஒப்பிடப் படவில்லை. இக்கருத்தமைந்த,

கோவை யிந்நகரோடெண் குறிக்கலாதவத்
தேவர் தந்நகரியைச் செப்புகின்றதென்
யாவையும் வழங்கிடத்தி கவியிந்நகர்
ஆவணங்கண்ட பினளகைதோற்றதே

பின்னும் முத்திநல்குந்திறன் அளகாபுரிக்கின்றுதலானுமத் துணை பெருமைதங்கிய அயோத்தியினது கடைத்தெருவீதி களைக்கண்ணுற்றும், இம்மாநகரத்துச் செல்வத்தைக் கண்ணுற் றும் அளகைவெட்கப்பட்டதென்று கூறுவதுமொருபெரிதோ! சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனே வைகுண்டத்துடனிழிந்து வந்திரு க்குங்கால் இவ்வளவுபெருமைதங்கிய அயோத்திமாநகரை சூரிய குலத்தரசர்களாகிய இக்ஷ்வாகுமுதல் குக்ஷி, விகுக்ஷி, புரஞ்ஜயன், அநரண்ணியன், பாணன், பிருது, திரிசங்கு, ஹரிச்சந்திரன், ரோகிதாக்ஷன், குவலயாஸ்வன், யுவனாஸ்வன், மாந்தாதா; அம் பரீஷன், முசுகுந்தன், சுசந்தி, திருவசந்தி, பரதன், அசிதன், சகரன், அம்சுமான், திலீபன், பகீரதன், ரகு, மித்திரசகன், அஸ்மகன், கட்டுவாங்கன், சிபி, அஜன், தசரதன், முதலாய பல அரசர்கள் ஆண்டவிவரத்தையுமவர்களது திவ்யசரித்திரங் களையும் ஸ்ரீமத்ராமாயணம், மகாபாரதம், பாகவதம், விஷ்ணுபுரா ணம், அயோத்தியா மான்மியமிவற்றில் விரிவாய்க்காணலாம். இல ங்கேசனாகிய இராவணன் சதுர்முகனையும், முக்கண்ணனையுங்குறி த்து அரியதவம்புரிந்து மஹத் வரங்களைப் பெற்றுத்தேவர்களை யும் திரிலோகங்களையுமழித்துவர, தேவர்கள் அவனோடெதிர்க்க இயலாது காலம்நோக்கி அடங்கிக்கிடந்து, தசரதசக்கிரவர்த்தி கலைக்கோட்டு மஹரிஷியை எழுந்தருளச்செய்து அஸ்வமேதயா கத்தைச்செய்த காலத்தில் ஹவிர்ப்பாகத்தை யுண்ண ஆங்குவந்த தேவர்களனைவரும் ஒன்றுகூடி ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் திருவடிதா ழ்ந்துத்தேவரீர் திருவவதாரஞ்செய்ய இதுவேதக்கஇடம், பொ ருள், ஏவல்களுடையனவென்றுப் பிரார்த்தித்தலும் ஸ்ரீமந்நாரா யணனுமங்கீகரித்துத் தசரதனுக்குப் புதல்வனாய்த் திருவவதா ரஞ் செய்து இராவணாதிகளைச் சம்ஹாரஞ்செய்து சீதாபிராட்டி யாருடன்பன்னீராயிரம்வருடம்தர்மபரிபாலனம்சர்வவிபவங்களு டனும் அயோத்தியை அரசாண்டுப்பிரத்தியக்ஷத்தில்எழுந்தருளி யிருந்தும், இப்போதும் சூக்ஷ்மரூபமாய் யுகதர்மத்துக்கேற்றபடி எழுந்தருளி விளங்காநிற்கின்ற இத்திவ்விய க்ஷேத்திரத்தை ஒப்

புள்ளது யாது! ஸ்ரீ அயோத்தியின் கிழவாசலில் ஆஞ்சநேயர் சந்நிதி மிகப்பிரபலமாயிருக்கிறது.

அச்சந்நிதியில் பல தேசத்தரசர்களும் ஸ்ரீமத்ராமாயண பாராயணஞ் செய்விக்கின்றார்கள். இதற்குச்சாஸ்வத நிதி ஏற்படுத்தியிருக்கிறார்கள் மோக்ஷகாமிகளாகிய அநேகபெரியோரிவிடம் வசிக்கிறார்கள். சரயுநதிமத்தியிலும் தீரத்திலுமுள்ள வனங்களில் ஆச்சிரமங்களை இயற்றிக்கொண்டு தவங்களைப் புரிந்துவரும் அநேக ரிஷிகளிவிடம் வஸிக்கின்றார்கள். அற்புதசித்திகளையுடைய சித்தர்களும் அரிய பெரியயோகாப்பியாசங்களைப் பெற்றயோகிகளும் ஸ்ரீகாசியிலிருப்பதைக்காட்டிலுமிவிடம் அதிகவசதியானபடியால் அதிகமாய்வசிக்கிறார்கள். இவிடத்துள்ளசில யோகிகளின் சரித்திரங்களை யிங்கெடுத்தெழுத இடமின்மையால் அயோத்திக்கு நேரிற்போகும்போது அவிடத்தோரால் தெரிவிக்கப்படலாகும். யாத்திரைக்காரர்கள் சரயுமாநதியிற்படிந்து தீர்த்த சிரார்த்தமுதலியவை செய்து ஜநநஸ்தானத்தையும் வாயுபுத்திரரையுஞ்சேவிப்பர். வாயுசுதரைஉருத்திராவதாரம் என்ப பிரமனிடத்திலும், வாயுவினிடத்திலும், ஆதிசேடனிடத்திலும் முறையேஉதித்த வைகாரிகருத்திரன், தையஸருத்திரன், தாமஸருத்திரன் என்றும் வராகபுராணம் சாதுர்மாஸ்யமஹாத்மியம் சதுர்த்தசோத்தியாயத்தில் கூறுகின்றது. இவ்வாஞ்சநேயர் சந்நிதியில் மேற்குறித்த சாதுக்களைப்போலவே அநேக (மனிதனுயரமிருக்கும்) வானரங்களும்ஸ்திரமாய்குடியேறி யாத்திரைக்காரரிடும் தின்பண்டங்கள் அன்னம்முதலியவைகளைத்தின்று பருத்துக் கொழுத்திருக்கின்றதைப் பார்க்க வெகு விநோதமாயிருக்கும். புதிதாயப்பார்க்கும் அந்தப்புர ஸ்திரீகளும் குழந்தைகளும் பயப்படுவார்க ளாகையால் அவர்களைஜாக்கிருதையாயிச் சந்நிதியில் வழி நடத்திக்கொண்டு போகவேண்டும். ஸ்ரீ அயோத்தியில் கிரஹங்கள்தோறும் ஸ்ரீ ராமசந்திரன் விக்கிரஹரூபமாயெழுந்தருளிச் செய்யப்பட்டு (ஸ்ரீகாசியில்விஸ்வேஸ்வரன் ஒவ்வொரு பெரியகிரஹத்திலும் இலிங்கரூபமாய் பிரதிஷ்

டைசெய்யப்பட்டு பூஜிக்கப்பட்டு வருவதைப்போல) ஆராதிக்கப் பட்டு வருகின்றார். சிலபுண்ணியாத்மரது மனைகளில் சுவர்ணவிக்கிரஹங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அயோத்திமுழுதும் சுவர்ணமயமென்று பொருள்பட முன்னாளில்இராமாயண சிரவணஞ்செய்த பக்தனொருவனுக்கு அச்சிரவணத்தையடைந்த வானரசிரேஷ்டங்கள் பட்டாபிஷேககாலத்தில் ஒருசிலையைப்பரிசளித்ததை எடுத்துக்கொண்டுவர அதுபிறகுஸ்வர்ண மாயிற்றென்று சொல்லும் கதையும், மற்றோரிடத்தில் விரிவாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. திருவயோத்திக்கோயிலிலெழுந்தருளியிருக்கும் சீதாலக்ஷ்மண பரத சத்துருக்ன ஹநுமத்சமேத ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியை ஏகாதசிதினத்தில் தக்ஷிணையின்றி இனமாகச்சேவிக்கலாம். மற்றசாதாரண தினங்களில் தலைக்குஒருரூபாய்க் கொடுக்கவேண்டும்.இந்தவிர்ப்பந்தம்ஸ்ரீகாசிவிஸ்வேசருக்கின்று. சரயுநதிக்கரையில்அநேகஸ்நாநகட்டங்களும், கட்டிடங்களுமமையப்பெற்றிருக்கின்றன. நகரத்துக்குள்ளும் அநேககட்டிடங்கள் யாத்திரைக்காரர்வசதியாய்வசிக்கக்கூடியவையாயிருக்கின்றன. சரயுநதியில்(ஆமைகள்) கூர்மங்கள்மிகஜாஸ்தியாதலால் அவைகளாலுபத்திரவமில்லாவிட்டாலும் அவைகளையுங்கவனித்து ஸ்நாநஞ்செய்யவேண்டும். மேலேசொல்லப்பட்டநந்திக்கிராமத்திற்குச் சமீபத்திலுள்ள மஹாரண்யத்தில் பூர்வம் ஸ்ரீராமர்வசித்த ஆரண்யங்களும், மாளிகைகள், கோயில், குளங்கள், தெருக்கள், வீடுகள், நிதிநிக்ஷேபங்களும் தனியாய்அவைகளெல்லாம் இப்போது இடிந்து கிலமாய்க் கிடக்கின்றனவென்றும் சொல்லுகிறபடி காணப்படுகின்றது. இவிடமிருந்து இமயமலையை ஒருவாறுதரிசிக்கலாம். இங்கிருந்து ஹிமாசலம் சுமார்நூறுமைலிருக்கலாம். மகதீர்த்தங்களில் படிந்து தபசியற்றவும், குளிர், வெயில், மழைமுதலியவைகளைப் பொறுக்கும்படியாக நான்முகன் வடதேயத்தோரைச்சிருஷ்டித்தும் திராவிடரை அவைகளுக்கஞ்சும்படியாக சரீரதர்மங்களைக் கொடுத்திருப்பதும் யாருடையகுற்றமென்று யோசிக்கும்படியாய் வடதேசத்தோர் க்ஷேத்திராடனம் தீர்த்தாடனம் செய்யும்பக்தியை நோக்கின் வியக்கத்தக்கதாயிருக்கும்.

ஸ்ரீமதுரா.

மதுரா:—யமுநாநதியின்தென்கரையிலுள்ள ஸ்ரீகிருஷ்ணபகவான் திருஅவதாரஸ்தலமாகிய இம்மாநகர்ப்ரயாகையிலிருந்து 305மைல்தூரத்திலுள்ளதும்,நேற்மேற்காகாமல்சற்றுவடமேற்குத்திசையாய்கான்பூர், டூண்ட்லா ஜங்ஷன்வழியாய் ஆக்ராவுக்குச்சென்று அங்கிருந்து இதற்குச்செல்வதுநேர்மார்க்கமாகும். இதுமிகவும் பிரசித்திபெற்றஸப்தபுரிகளில்ஒன்றாகியமுத்தியருள்க்ஷேத்திரமல்லாமலும் அநேககோயில்களும், அழகியபெரிய கட்டிடங்களுமுள்ள வெகுபுராதன நகரம்; இதுஒருபெரியஜில்லா; இதில்ஒருபட்டாளமிருக்கிறது. நமக்கு உயிர்க்குச்சமானமுக்கியமுள்ள அநேககோயில்களையும் மதசம்மந்தமான கட்டிடங்களையும் மிலேச்சகொடுங்கோலரசர்கள் (மகம்மது கஜனி- அவுரங்கஜீப்- லோடிமுதலானோர்)கருவறுத்து இடித்துத்தள்ளிப் பாழாக்கிவிட்டார்கள். நம் காருண்யபிரிடிஷ் கவர்ண்மெண்டார் காலத்துக்குப் பிறகு சமீபகாலங்களில்பம்பாய்குஜராத்திதேசத்துப்பிரபுக்கள் இப்போதைய கோயில் குளங்கள் முதலியவைகளை இலக்ஷக்கணக்கான பொருள்செலவழித்துக்கட்டியிருக்கிறார்கள்; மிலேச்சர்கள் முதலான இதர மதஸ்தர்கள் நமக்கும் நம்கோயில்குளங்களுக்கும் என்ன கெடுதிகள் செய்தாலும் அவைகளின் மஹிமைமட்டும் முன்னிலும் அதிகமாய் விருத்தியாகிறதென்பதை இனியாவதுநம்கிறிஸ் தவப்பாதிரிமார்கள் கவனிப்பாராக. இந்நகரில்யாத்திரைக்காரர்களின் சௌகரியார்த்தமாய்ப்பல பொதுச்சாலைகளும் சத்திரங்களும் தர்மங்களுமுண்டு. இவிடத்து இராதாகிருஷ்ணனென்னும்

ஒருதனாட்டியன் இக்ஷேத்திரத்துக்குயாத்திரைவரும் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவருக்கும்ஐந்துரூபாய் இனாமளித்துவரும்படி ஏற்பாடுசெய்திருக்கிறார். ஸ்ரீவைஷ்ணவர்களுக்குஎத்தனைகாலமிருந்தாலும்கோயில்களில் இனாம்பிரசாதம் குறைவின்றியளிக்கப்படுகிறது.

பெரியாழ்வார் முதலியோரது மங்களாசாஸனப்படி:—

செல்வமுயிருடம்பு சேரவுரித்தாக்கி
வல்வினையினீங்குமினோ மாந்தர்காள்—தொல்லை
வடமதுரையான்கழலேவாய்த்த தஞ்சமென்று
திடமதுரைசெய்தான்றிறத்து

தேவாசுர யுத்தத்தில் மகாவிஷ்ணு அசுரர்களை யுத்தகளத்திற்றோற்கடிக்க அவர்களெல்லாம்பூமியிற்கொடுங்கோலரசராய்ப் பிறந்து கொடுங்கோன் செலுத்திய காரணத்தால் தருமங்குறைந்து அதர்மமேமேலிடவே பூபாரந்தாங்காமல் பூமிதேவியானவள் பிரம்மா விடஞ்சென்று முறையிடலும் சதுர்முகன் திருமாலிடம்விக்ஞாபனஞ்செய்யலுமாங்குபிறந்த அசரீரிவாக்கதனையுணர்ந்துபிரம்மாதேவர்களைப்பார்த்துஸ்ரீமந்நாராயணன்வசுதேவருக்குத்திருக்குமாரனாய்ப்பிறந்து பூபாரத்தையொழிப்பான். தேவஸ்திரீகளும் நீங்களும் திருமாலுக்குத் திருவிளையாட்டளிக்க கோபஸ்திரீகளாகவும் யாதவர்களாகவும் அவதரியுங்கள். ஆதிசேஷன் பகவானுக்கு ஜியேஷ்டனாயும், மகாமாயை ஒரு ஸ்திரீயாகவும் அவதரித்து தருமத்தை நிலைநாட்டுவார்களென்று சொல்லிஉத்தரவு கொடுத்தனுப்பிவிட்டார். அவ்வாறாகவும் இம்மதுராபுரியில் உக்கிரசேனமகாராஜனுக்குக்குமாரனாகிய கம்ஸன் தன் சகோதரியாகிய தேவகியைவசுதேவருக்குத் திருமணஞ்செய்வித்து ஊர்வலம் வருங்காலையில் அசரீரிவாக்காக ஹே கம்ஸா! இவ்வளவுசந்தோஷமாய்க் கலியாணஞ்செய்து வைக்கிறாயே, இந்தத்தேவகியினது அஷ்டமகர்ப்பத்திற்பிறக்கும் குழந்தையால் நீமரணத்தை யடைவாயெனவும், கம்ஸமகாராஜன் திடுக்கிட்டு மனமவருந்தி அந்தக்ஷணமே அத்தேவகியினதுகூந்தலைப்பற்றி அவளைவாளால் வெட்ட ஓங்கவும்,வசுதேவர்வந்துகையைப்பிடித்துக்கொண்டு ஹேகம்ஸா இவள்பெரியவளாய் கர்ப்பந்தரிக்கும்பக்குவகாலமடைந்து பிறகு இவள் எட்டாவதுகர்ப்பத்தாலல்லவோ நீ சாவாய், அவள்பெறும் குழந்தைகளை யெல்லாம் உன்னிடம் கொடுத்துவிடுகிறேன். நீ அவைகளை உன்னிஷ்டப்படி செய்துகொள். இப்போது அவளை விட்டுவிடென்று வேண்டிக்கொண்டதை கம்ஸனேற்று இவளைக் கொலைசெய்யவேண்டிய அவசியமில்லையென்று மணமக்களிருவரையும் அவர் கிரஹத்துக்கு விட்டேகினான்.

பிறகு தேவகியார் பக்குவமடைந்து கர்ப்பந்தரித்து பெற்ற

சிசுவை வாக்குத்தத்தப்படி கம்ஸனிடம் வசுதேவன் கொண்டு போய்க்கொடுக்கவும் கம்ஸன் இரக்கமுற்று எட்டாவதுகர்ப்பத் தாலல்லவோ என்உயிர்மாயும், இவ்வழகிய சிசுவைக்கொல்வதில் யாதுபயனென்று சிசுவைத்திருப்பிக்கொடுத்துவிட்டான். பிறகு நாரதமாமுனிவன் கம்ஸனிடம்வந்து ஏழெட்டாவெவ்வொன்றும் எட்டாவதுபிள்ளையேயாகும்,தேவகிகர்ப்பத்தால்நீமுடிவதில்சிறிதும் சந்தேகமில்லை;நீபூர்வஜன்மத்தில் காலநேமியென்ற அசுரன், உன்னைச்சேர்ந்தமற்றவர்களும் இப்பூமியில் பிறந்திருக்கிறார்கள், இப்பிறப்பிலும் உங்களைமாய்க்கதேவகிநந்தனை அவதரிக்கப்போகிறான். சிலதேவர்களும் யாதவர்களாய் அவதரித்திருக்கின்றனர் என்று சொல்லிப்போயினர்; இவ்வாறு சொன்னவுடனே மறுபடியும் அக்குழந்தையைக் கொண்டுவரச் செய்து அக்குழந்தையை உயிர்க்கொலைபுரிந்து தேவகிவசுதேவரையும் விலங்கிலிட்டுசிறையிலடைத்து அவர்பெறும் குழந்தைகளை யெல்லாம்கொலைசெய்து வந்ததுமல்லாமல் ஜராசந்தன்,பிரயம்பன், பகன்,சாணூரன், த்ருணாவர்த்தன், முதலியோரைத் தனக்குஉற்றவராகச் செய்துகொண்டு யாதவர்களைக் கருவறுக்கும்படி விரோதித்துக் கொண்டிருந்தான். அந்தக்காலத்தில் யாதவர்களெல்லாம் திக்குவிதிக்குகளிலும்பறந்தோடி உயிர்வாழ்ந்திருந்தனர். தேவகியினது ஆறு குழந்தைகளையும் கொன்றபின் ஏழாவது கருப்பந்தரிக்கவே அக்கருப்பத்தை ஆகருஷித்துவசுதேவனது மற்றோர் மனைவியாகிய ரோகிணிதேவியினது கருப்பத்தில் மாயோன்வைக்கவேதேவகியினது கருப்பங்குலைந்ததென்று கம்ஸன் சந்தோஷமடைவதற்குள்ளாக, அஷ்டம கர்ப்பத்தையடைதலும் மிகவும் வருந்தி கம்ஸன் காவலாளர் முதல் ஏவலாளர்களையும் வெகு கண்டிப்பான உத்திரவுகளுடன் அமர்த்தி சிசுவைப் பிறந்தவக்ஷணமே தன்னிடம் கொண்டுவந்து கொடுக்கும்படி ஆக்யாபித்திருந்த காலத்தில், சிம்ஹமாதத்தில் கிருஷ்ண பக்ஷாஷ்டமியில் உரோகிணி நக்ஷத்திரத்தில் விருஷப லக்கினத்தில் சந்திரோதய சமயத்தில் காளமேக முதித்தாற்போல் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி சங்கு சக்கர கதாதாரியாயும், நீலமேகஸ்யாமள மூர்த்தியாயும் சதுர்ப்புஜங்களுடனேயும், கிரீட கேயூர குண்டலங்க ளுடனேயும் கௌஸ்துப மணிமார்புடனேயும், பீதாம்பரதாரனாயும் தேவகிதேவருக்கு ப்ரசன்னமாதலும் அத்தரிசன பலத்தால் அவரிருவரும் திவ்யஞானத்தை யடைந்து பரந்தாமனைத் துதித்து பிரமதேவனும் பெறற்கரிய பேற்றை அடியேங்கள் பெற்றோம். இங்ஙனம் பெற எத்தவம் புரிந்தோமோ வென்று மறுபடியும் துதிசெய்து நிற்றலும்லக்ஷ்மீகாந்தன், "நீங்களிருவரு முன்னமேயே எம்மைக்

குறித்து புரிந்த அரியதவத்துக்கு மெச்சி பிரசன்னமாய் வேண்டிய பேற்றை கேண்மினென்ற காலத்தில், நீங்கள் யோகமாயையினால் மூடப்பட்டு மோக்ஷத்தை விரும்பாமல் உங்கட்குப் புதல்வனைய் மூன்றுதரம் அவதரிக்க வேண்டுமென்று கோரியபடிவரத்தையீந்து நீங்கள்பிரச்சினியாகவும், சுதபசாகவும் பிறந்தபோது உமதுவயிற்றில் நாம்பிரச்சினிகருப்பனென்றும், பின்பு நீங்கள் அதிதியாகவும், காஸ்யபபிரஜாபதியாகவு முதித்தகாலத்திலுமது உந்தியில்பிறந்து வாமனனுகவும் திரிவிக்கிரமனுகவும் ஆயினம். இப்போதுமூன்றும் அவதாரமுஞ்செய்தோம் இந்தஜன்மத்திலே நீங்கள்மோக்ஷசாம்பிராச்சியத்தையடைவீர்க"ளென்றுநவின்று யோகமாயையினலவர்களை மூடவும்தேவகியார் அச்சுதனைநோக்கி இத்திவ்யசின்னங்களோடுந் தேவரீரெழுந்தருளி யிருந்தால் கம்ஸன்வதைப்பனேயென்று வருந்தவும் கேசவபிரான் வசுதேவரைக்கடைக்கண்பார்த்து "யெம்மைகோகுலத்தில்நந்தகோபன் திருமாளிகையில்விடுத்து ஆங்குபிறந்திருக்கும் யசோதையின் யோகமாயைப்பெண்ணை இவிடம்கொண்டுவந்து வைமின், உங்கள்விலங்குகள் தெரிக்கும் கதவுகள் ஹஜாரங்கள்திறக்கும், யமுனையும் வழிஒதுக்கியருளு"மென்றருளிதிருமாலும்சிசுவடிவமெய்தினன். அக்காலத்து பகவத்மாயையினுல் அல்பமழையுடன் குமறலுமகும்பிருட்டுமாயிற்று. காவலாளரும் ஏவலாளருடன் பேருறக்கமுற்றனர். உடனேவசுதேவன், மாதவனுகியசிசுவைத்தம்மிருகரங்களிமேலற்கவும் விலங்குகள் தெறிபட்டு பூட்டுக்கள்கதவுகள் திறந்தும், ஆதிசேடன்குடையாகஆகவும்; யமுனையாறு எதிர்கொண்டழைத்து மத்தியில்ஜலதாரையை ஒதுக்கிவழிவிடவும் நந்தகோபன் மாளிகைக்குச்சென்று ஆங்குமாதவனைவிட்டு, அவனதுமாய்கையினு லப்போதுதான் அவிடம்பிறந்திருந்தயோகமாயைசிசுவை ஒருவருமறியாமலே எடுத்துக்கொண்டுவந்து தன்முன்னிருப்பிட சிறைச்சாலையில்வைத்தலும்கால்களில் விலங்குமாட்டிக்கொண்டது. கபாடங்கள்மூடிக்கொள்ளவும் பெண்ணுருவாகவந்த மாயைஅப்போதுதான் பிறந்தாற்போலவாய்விட்டழுதது. காவலாளர்களுடனே ஓட்டமாயோடிவந்து பார்த்துக் கம்ஸராஜனிடம் அதிவேகமாயோடி சமாசாரத்தைஇயம்பலும் வசுதேவன்வழக்கம்போல் கொண்டுவருவானென்று சற்றுந்தாங்காமல்தானேகத்தியுடன் நேரில்வரவும் தேவகியார்அம்மாயக்குழந்தையை மார்போடணைத்துக்கொண்டு ஆணுயிருந்தாலல்லவோயுன்னைக்கொல்லக்கூடும்; இப்பேதையாலென்னகுமென்று தான்பெற்றகுழந்தையைப்போல்நடித்து அதனைக்கொல்லாதிருக்கவேண்டினள். அதற்குக் கம்ஸன ஆண்பெண் என்று பேதமறையவில்லை, அஷ்டமகர்ப்பமென்றுசொல்லியிருக்கிறபடியால்சிசுவைக்

கொண்டுவாவென்று அச்சிசுவினது இருகால்களையும்பற்றி உருவி வைத்திருக்கும் வாளுக்கிரையாகும்படி சிசுவைமேலேவீசி மந்திரவாளைநேராய்ப் பிடித்தலும்மேலெறிந்த அக்குழவி கீழேவிழாமல் ஆகாயத்திலிருந்துகொண்டே "உன்னைக்கொல்பவன்நந்தகோகுலத்திலிருக்கிறான், என்னைஏன் நீகொல்லவேண்டு" மென்றுசொல்லிப்பறந்தோடிப்போயிற்று. தெய்வச்செயலெப்படியோயிருக்கிறது. அதுதெரியாமல் உங்கள்குழந்தைகளைக்கொன்று உங்களையும்வருத்தினதற்கு என்னைமன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவ்விருவரையும் சிறைச்சாலையினின்றும் விலங்கைத்தெறித்துவிடுவித்தனன். அப்போதுங்கடந்தவிருத்தாந்தங்களை மந்திரிகளுடன் யோசிக்கும்போது இவ்வுலகில்பிறந்திருக்கும் குழவிகளையெல்லாம் கொல்விக்கும்படி பூதனைமுதலியோரைஏவியும் மற்றும்பல உபாயங்களைச்செய்தும்பயன்படாமல்கடைசியில் கம்ஸன்வதைப்பட்டதையும், கோபஸ்திரீகளுடன் யமுனாதீரத்தில் பலவிதகேளீலீலாவினோதங்கள் செய்ததையும்பிறவற்றையும்பாகவதத்தில் விரிவாய்க்கூறியிருக்கிறது. அத்திருவிளையாடல்களையும் அவரதுமற்றஅவஸரங்களையும் இம்மதுரா, கோகுலம், பிர்ந்தாவனம், கோவர்த்தனம்முதலியவைகளிலும், கோயில்களிலும்மற்றவிடங்களிலும் சித்திரங்கள் படங்கள் சின்னங்கள் மூலமாயும் நன்குதரிசிக்கலாம். இதன்ஜனத்தொகைஅறுபதினாயிரம். தொலைவியாபாரமகம்மி, உள்நாட்டுவியாபாரமேமிகுதி. சென்றபஞ்சங்களில் இந்நகர் அதிகமாய்வருந்திற்று. பாகவதத்திற்சொல்லப்பட்ட கோபஸ்திரீகளினழகுக்கு ஏறக்குறைய சமமானவர்களாயிப்போதுமிருக்கிறார்கள். சுருக்கமாய், பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு அம்சத்தின் சின்னத்தையுமிங்குகவனித்தால் பார்க்கலாம்.

கோகுலம்—இவ்வரியஸ்தலம் மதுராவிலிருந்து தென்கிழக்காக (இவிடம் யமுனையாறு தென்கிழக்குத் திசையாய் ஓடுகிறது)

யமுனாதீரத்தில் மஹாபன்பட்டணத்துக்கு ஒருமைல் தூரத்தில் ஒருகிராமமாயிருக்கிறது. இது பலராமர் திருவவதாரஞ்செய்த ஸ்தலமாயும், ஸ்ரீ கிருஷ்ணபகவானும் வளர்ந்தஸ்தலமாயுமிருக்கிறது. இதற்குத் திருவாய்ப்பாடியென்று பெரியாழ்வார் முதலானோரருளிச்செய்த நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் பெயரீந்து பாடப்பெற்றிருக்கிறது. இதிலிப்போதும் விளங்கிவராநின்ற நந்தகோபனது திருமாளிகையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் இப்போது பிறந்த குழந்தைபோலவே தங்கத்தொட்டிலில் ஷை அரண்மனைப் பிரதான ஹாலில் ஆடிக் கொண்டிருக்கிறதையும், எசோதை தன் திருமகனுக்குஅன்புடன் வெண்ணெயைக் கடைந்தெடுத்துக் கொடுப்பதையும், கோபஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வேணு பில்லாங்குழலை ஒளித்து வைத்து விளையாடலுமானவுமிவைபோலும் மற்றும் முக்கியமான சில திருவிளையாடல்களும் ஆங்கமைக்கப்பெற்றிருக்கிறதைப் பார்த்துக்களிக்காத கண்களுமென்னே! தவிரவும் தங்கள் சிறு குழந்தைகளின் தேக சம்ரக்ஷணைக்காகவும், சௌக்கியத்துக்காகவும், தீர்க்காயுளுக்காகவும், ஸ்ரீகிருஷ்ணபகவானிடம் வளர்ந்து விருத்தியடைந்தது போலவே தம்குழந்தைகளுமாகுவர் என்னும் கருத்தால் இவ்விடத்துக்கு யாத்திரை பிரபலமாய் செய்கிறார்கள். பம்பாய் குஜராத்தி, முதலியதேசப் பிரபுக்களுக்குப்பிறக்குமதங்கள் ஜீயேஷ்ட ஸ்ரீமந்த புத்திரர்களுடன் இக்கோகுல யாத்திரைக்கு வரத்தவறமாட்டார்கள்.

பிருந்தாவனம்.

பிர்ந்தாவனம்:— இம்மஹா க்ஷேத்திரம் மதுராவுக்கு ஒன்பதுமைல் வடக்கே யமுனா நதியாலாக்கப்பட்ட ஒருத்வீபகல்ப (மூன்றுபக்கங்கள் நீரால் சூழப்பெற்றபூமி) மாயிருக்கிறது. கம்ஸனால் வருத்தப்பட்ட யாதவர்களெல்லாம் கிருஷ்ணாவதாரமா

னவுடன் இவிடத்துக்குக்குடியேறினார்கள். பதினாறுயிரம்கோபஸ்திரீகளுடனும் யாதவஸ்திரீகளுடனும் கண்ணன்களித்து யமுனை தீரத்தில் அநேக திருவிளையாட்டுகள் செய்தவிடம். இவிடம் யமுனையின் கருநிறமான பளிங்குபோன்ற சுத்த தீர்த்தத்தினழகையும் முற்றிலும் புன்னைமரங்களடர்ந்த சுத்தவெள்ளிபோன்ற மணல் வெளிகளான யமுனை தீரத்தின் முன்னழகு பின்னழகையும் பார்க்கப்பதினாயிரங்கண்களும் போதுமோ! மதுராவிலும் கோகுலத்திலும் ஸ்ரீ கிருஷ்ணன் வினைவறியாத பாலகனாயிருந்தார். இவிடத்திலோ பகவானின் பூர்ண யௌவனகாலமும் மிகவும் மனோகரமாயும் ஆனந்தகரமாயும் களித்துப்பல லீலைகளைச் செய்து பக்தர்களைக்காப்பாற்றியும், சந்தோஷப்படுத்தியும், பக்தர்களுக்காகத் தம் திருமேனியை யுழைத்துமிருக்கிறபடியால் இப்புவியின் மற்றவிஷ்ணு க்ஷேத்திரங்களினும் விசேஷமுடையது. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்கு இந்த பிர்ந்தாவனம் சாக்ஷாத் வைகுண்டத்தைப்பார்க்கிலும் அதிக பிரியமுள்ளது; கொடும்பாவியாகிய மகம்மதுகஜினி முதலியவர்களால் மற்ற காசி முதலாய ஸ்தலங்களிற் போலவே இவிடமுள்ள பிரசித்த கோயில் குளங்களும் நிலமட்டஞ்செய்யப்பட்ட பிறகு சமீபகாலங்களில் பம்பாய் குஜராத்தி தேசபிரபுக்களால் லெட்சக் கணக்காய்ப்பொருள் செலவழித்து பஞ்சப்ராகாரத்துடன் கூடிய கிருஷ்ண பரமாத்மாவின் கோயிலும்,மகாபரிசுத்த தீர்த்த விசேஷமாகிய மானஸ கங்கையென்ற அற்புதமான ஸரோவரமும்கட்டப்பட்டிருக்கின்றன. பரான்ன போஜனம் செய்யாத வடதேயத்து ஆசாரசீலர்களான பெரியவாளுமிச்சந்நிதியில் மட்டும் பிரசாதம் ஸ்வீகரித்துக் கொள்வர். மாதவன்நிவேதனத்தையுண்போர் நித்தியராய் அவனையடைவரென்று இருக்வேதம் த்விதீயாஷ்டகம், த்வதீயாத்தியாயம், சதுர்விம்சோத்தியாயத்திலும், யஜுர்வேதசாகை த்விதீயாஷ்டகம், சதுர்த்தியோபருத்ஸம் சஷ்ட்யோ வநுவாகத்திலும், பகவத் பிரசாதத்தைப் புசிக்க பஞ்சாகுதிகள் தேவையில்லையென்று அதர்வணவேதம், பரத்வாஜ, சாண்டில்ய ஸ்மிருதிகளும், பிர்ம்மாண்டம், ஸ்ரீ பாகவதம், ஸ்மிருதிசம்ஹிதை, பௌஷிகம், ஹரிபக்திசுகோதயம் பிரம்மேஸ்வரசம்ஹிதை, நாரதீயத்தில் விஷ்ணுதத்வம், ஆரிதஸ்மிருதி பரத்வாஜ, சாத்வித, வசிஷ்ட, மகாசம்ஹிதைகளும், ஸ்ரீமந்நாராயணன் பிரசாதத்தை ஏற்றதினம் சுத்த உபவாசதினமாகுமென்றும், தேவபிதிர் காரியங்கள் மஹாவிஷ்ணு சந்நிதானத்தில் செயின் விசேஷ பலனடைவர்களென்றும் பத்மபுராணத்திலும் ஆரிதஸ்மிருதியிலும் உறுதிகூறி மொழியப்புட்டிருக்கிறது.

கோவர்த்தனகிரி.

கோவர்த்தனகிரி:—மதுராவிலிருந்து வடமேற்குத் திசையில் ஒன்பதுமைலிலுள்ள கோவர்த்தனமென்னும் இம்மலை ஸ்ரீகிருஷ்ணனால் யாதவர்களுக்குக் குடையாகப்பிடித்துக் காப்பாற்றப் பட்டது. கோபாலரனைவருங்கூடி இந்திரயாகம் செய்யப் பிரயத்தனப் படவும் த்வாரகாபுரிவாஸன் அந்த யாதவர்களை நோக்கி இந்திரனுக்குச் செய்வதை இம்மலைக்குச் சமர்ப்பியுங்களென்றோதலும் அவர்களதற்குடன்பட்டு திவ்யான்னஞ் சமைத்துப் படைத்து இம்மலையை ஆராதித்து வணங்கலும் தேவேந்திரன் அதிகோபங்கொண்டு பிரளயகாலத்தைப்போல் சப்தமேகங்களையுமொன்று சேர்த்து பிரமாதமான இடிமின்னல் குமறல்களுடனே மழைபொழிய ஆரம்பிக்கவும் கோபாலர்கள் பசுமாடுகளுடன் சகித்தற்கரிய கொடுந்துன்பத்துக்குள்ளாய் ஆதிபகவனைத் துதி செய்யவும் கண்ணன் பக்தர்களுக்காக அம்மலையைத் தம்மிரு திருக்கரங்களில் ஏழுநாள் வரையில் உயர்த்திப்பிடித்து அவர்களனைவரையுங் காப்பாற்றினர். சுமார் பத்துமைல் சுற்றளவுள்ள இப்புண்ணிய மலையை கிரிப்ரதக்ஷணஞ்செய்து ஆராதித்தல் விசேஷபல னுடைத்து. பிரதக்ஷணஞ் செய்யும் மார்க்கமத்தியில் தங்குவதற்கு வசதியான இடங்களிருக்கின்றன. இப்பிராந்தியங்களில் தென்தேச (தமிழ்நாட்டு) ஸ்ரீவைஷ்ணவர்களை விசேஷமரியாதைகளுடனும் பாதகாணிக்கைகளுடனும் வணங்குகிறார்கள். அதினும் கொஞ்சம் சங்கீத ஞானத்துடன் ஸம்ஸ்கிருத பாகவத பாரதங்களைப்படிக்கும் திறமைபெற்றிருக்கின் விசேஷபொருள் சம்பாதிக்கலாம்.



ஆக்ரா.

ஆக்ரா:— மேற்குறித்த டேண்ட்லா ஜங்ஷனிலிருந்து மதுராவுக்குவரும் மார்க்கமத்தியில் யமுனை தீரத்திலுள்ளது. இந்த பட்டணத்தழகையும், இதைச்சூழ்ந்திருக்கிற உத்தியான வனங்களினழகையும், ஸ்தோத்திரத்திற்காக வல்ல, வாஸ்தவத்தில் இவ்வுலகத்தின் கட்டிடங்களெல்லாவற்றுள்ளும் முதன்மையான அழகுடன் முழுசந்திரகாந்தக் கற்களால் அமையப் பெற்றிருக்கிற "தாஜ்மஹால்" ஸ்காரியையும் பார்க்க ஆசைகொள்ளாதாரை இவ்வுலகப் பற்றை முற்றும் வெறுத்த ஞானிகளென்னலாம்.

இந்திரப்ரஸ்தம்:— டில்லி யென்னும் நவீனப் பெயரமைந்துள்ள யமுனை நதியின் பச்சிமதீரத்திலுள்ள இம்மாநகர், பஞ்ச பாண்டவர்கள் ஹஸ்தினபுரத்தைவிட்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் தியானித்து காண்டவப்பிரஸ்தமென்னும் வனத்தையடைந்தக்கால் பக்தவத்ஸலனாகிய அக்கண்ணபிரான் பாண்டவர்களவ்வனத்தில் வசிக்கும்படியாக கடாக்ஷித்து தேவதச்சனாகிய விஸ்வகர்மாவை அழைத்து அவ்வனத்தை யழித்து நாடாக்கி கோட்டை கொத்தளங்களுடனும் பெருமைதங்கிய மதில்களுடனுமற்றும் இந்திரன் பட்டணத்துக்குச் சமானமான மற்றவைகளையு மமைக்கச்சொல்லி அம்மாநகர்க்கு இந்திரப்ரஸ்த மென்னும் பெயரையுமிட்டான். பிறகு துஷ்ட கொடுங்கோல் மகமதிய சக்கிரவர்த்திகளுக்கு வெகுகாலம் இராஜதானியாயிருந்தது. இதன் ஜனத்தொகை இலக்ஷத்து பதினையாயிரத்தில், எண்பத்தெண்ணாயிரம்பேர் முகம்மதியர். முன்சொன்ன ஆக்ராவில்

தாஜ்மஹால் கட்டிடம் ஒன்றைத்தவிர மற்ற கோட்டை கொத்தளங்கள் முதலியவைகளில், இம்மாநகரமதனினும் சிறந்து விஸ்தாரமுள்ளதாயிருக்கிறது. இந்நகரின் வியாபார வர்த்தகங்களையும் (கடைத்தெரு) மெயின பஜார்களையும் ஒருவன் பார்த்ததினால் அளகாபுரி பட்டணத்தின் சிறப்பை ஊகிக்கும் திறமுடையவனாவான். இப்பட்டணத்தைச்சுற்றி இருபதுமைல் சுற்றளவில் பாரதபாகவதங்களிற் பிரஸ்தாபிக்கப்படும் பல அறிகுறிகளையும் பார்க்கலாம். நாம் மதசம்மந்தமாயிப்போது பேசிவராவிட்டால் இப்பட்டணத்தின் சிறப்பைப்பற்றி வெகுவாய்ப் பேசவிடமிருக்கிறது. இதேமாதிரி மதசம்மந்தமில்லாத மற்ற பட்டணங்களைக் குறித்தும் நாம் ஒன்றாக எடுத்துச் சொல்வதை பத்தாகப்பாவித்துத்தெரிவராக—இதுகல்கத்தாவிலிருந்து 903 மைலும், பம்பாயிலிருந்து 848 மைலும், ஆக்ராவிலிருந்து 140 மைலுமிருக்கிறது. இப்பட்டணத்திலுள்ள ப்ரிவிகௌன்வில் சேம்பரென்று சொல்லப்பட்ட டில்லிதர்பார்ஹால் இந்திர சபையேயன்றி வேறில்லை லண்டன், அமெரிகா முதலிய விடங்களெல்லாவற்றிலும், அதாவது இவ்வுலகத்தில் இவ்வளவு அழகுபெற்ற கம்பீரமான கட்டிடம் வேறு கிடையாது. இதேமாதிரி இதற்குச் சமீபத்திலிருக்கும் 238 அடி உயரமுள்ள குடப்மைனார் என்னும் கோரியின் கட்டிடச் சிறப்பும் வேறு இவ்வுலகத்தில்லை. சிற்பத்தொழில் வல்லோர்கள் மேற்சொன்ன கட்டிடங்களைப் பார்க்காவிட்டால் நரகத்தையடைவார். சிற்பசாஸ்திரத்தின் திறமையும் மஹிமையும் விளங்கும்படியான கட்டிடங்கள் இவ்வுலகத்தில் இதற்குச் சமானமானவைகள் கிடையாது. ஆதியில் விஸ்வகர்மாவினால் சிருஷ்டிக்கப் பட்டவைகள்தாம் இன்னும் கெடாமல் அப்படியே இருக்கின்றனவோ வென்று பிரமிக்கும்படியா யிருக்கிறது. சொல்லப்பட்டவைக ளெல்லாம் வர்ணனைக்கென் றெண்ணவேண்டாம், நேரில்போய் பார்த்து அளந்துரிகார்டு செய்யப்பட்ட சரியான தஸ்தாவேஜுகளினின்றுமெடுத்தெழுதப்பட்டது. பின்னும் நம்மிந்திய நகரங்களில் கைத்தொழிலாற் சிறந்தமுதன்மையான பட்டணமுமிதுவே. பம்பாய், கல்கத்தா இதற்குப்பிறகுதான். நானெழுதமுன்வந்திருக்கும் மதசம்மந்தமானகிரந்தமிதன அதிகவர்ணனைக் கிடங்கொடாததால் என்னிறகைத்தாழ்த்தலாயினன்.

ஹரித்துவாரம்

என்னும்

மாயாபுரி.

ஹரித்வாரம் என்னும் மாயாபுரி:—ஸப்த புரியிலொன்றாகிய இதற்கு, இதுவரையில், கங்கையானவள் ஹிமயமலையின் பேரில் வந்தவள், இவிடத்தில்வந்து சமபூமியிலிறங்குகிறபடியால கங்காத்வாரமென்னும் பெயருமமைந்தது. ஹரித்வாரம் அதாவது வைகுண்டத்துக்கு ஏறும்ஏணியாகிய இம்மாநகர் கங்கைக்கரையின்பேரில் காசியிலிருந்து வடமேற்காய் சுமார் 550 மைலும் டில்லியிலிருந்து 120 மைலுமிருக்கிறது. கங்கோத்தரிக்குப் போகிறவர்கள் இவிடத்தில் ரெயிலிறங்கவேண்டும்.

இதற்குப்பிறகு இமயமலையின்பேரிலுள்ள பாதையின்பேரில் நடந்துசெல்லவேண்டும். ஹரித்வாரமென்றும், ஹரத்வாரமென்றும்வைஷ்ணவ, சைவர்கள் கங்கையின் வறலாற்றைப்பற்றி வாதாடுவர்: இதனுண்மையைக்குறித்து கங்காமான்மியத்தில் இயற்கனவேகூறப்பட்டிருக்கிறது. ரெயில்வே ஸ்டேஷனுக்குச்சமீபமான இப்பட்டணத்தில் தர்மசாலைகள் ஜாகைக்கு சௌகரியமாய்ப்பல இருக்கின்றன. இவிடத்தில் கங்கைவடக்கினின்று தெற்குமுகமாய்ஓடுகிறாள் இக்ஷேத்திரத்தின்கண்ணுள்ள முக்கியமானகோயில்கள் சண்டிபஹார், மாயாதேவி-தேவாலயம் திருமூர்த்திகளுக்குரியத்ரிமதஸ்தர்களுக்கும்பொதுவான சர்வநாததேவாலயம்(ஸ்ரீஜகந்நாதம்போல்) முக்கியமானஸ்நாநகட்டம ஹரிசரணகாட் இந்தகட்டத்துக்குச் சமீபத்திலுள்ள கங்காத்வாரம் தேவாலயமும் அதன் ப்ராகாரத்தில் உள்ள ஸ்ரீவிஷ்ணுபாதமும் இக்ஷேத்திரதரிசனத்துக்கு முக்கியமானவை. இவிடத்தில்நடக்கும்வைசாகமேளா உற்சவம்மிகவும் பிரசித்தமானது வெகுஜனங்கள் கூடுவார்கள் நாட்டுக்கோட்டையார்தருமத்துடன் இதர தருமங்களுமிங்குண்டு, இவிடம்பெருமாள் பள்ளிகொண்டிருக்கிற மற்றோர் தேவஸ்தானமும் முக்கியமே.

காசிகாண்டத்தில்:—

பொன்னனிருமுயர்வாயாத் துவாரமென்றும் பொருவிலரித் துவாரமென் று
தன்னுடங்கலைக்கங்கைசூழ்த் திடை கோதவிற்கங்கா த்துவாரமென் றுநீ
மின்னணுப்பெயருடைத் தாய் வைகுந்தத்தினிதேறுமேனியாக
மன்னியமாயாபுரியிலினிதிருந்தாளருந்தவத் துமறைநவல்லோனே.

இதற்குத்தென்கிழக்கில் இரண்டுமைலி லுள்ள காங்காலென்று மிடத்தில் கபிலமாமுனியும், சப்பிரம்மயோகிகளாரும் முறையே யெழுந்தருளியிருக்கிறதுமின்றான், நீலதாரை என்னும் ஸ்தலங் களும் ராஜா தக்ஷப்பிரஜாபதியினது யாகசாலையும் சதி குண்டமும் இன்னும் அநேகதேவாலயங்களும், பரிசுத்தமாக காட்டியிருக்கின்றன. சதிகுண்டமென்பது:— வாக்தேனராஜா வின்புத்திரியும் பரமசிவனதுபாரியாளுமாகிய சதியென்பவள் அவளுடையதகப்பனான தக்ஷப்பிரஜாபதிராஜா பிரவிர்த்தயாகஞ் செய்தகாலத்தில் அழைக்காத காரணத்தாலுங்கூட, பரமசிவனை யும் நிந்தித்தபடியால் அச்சதிதேவி நிராமைத் மனக்கிலேசமுற்று உயிர்துறந்தஇடம். இவ்வரித்துவாரத்தில் கங்கைபெருகித்து வரு வது பிரயாகையினும் சிரேஷ்டமுடையது.



ஸ்ரீகாஞ்சீபுரம்.

ஸ்ரீ காஞ்சீபுரம்:— முத்திநல்கும் சப்தபுரிகளி லொன்று கிய இவ்வழகியபட்டணம் அரக்கோணத்தினின்று பிரிந்து

23 JUN 1914

செங்கற்பட்டுக்குச்செல்லும்கிளை இருப்புப்பாதையிலிருக்கிறது. அநேக தீர்த்தங்களும் மூர்த்திகளுமுடையது. மற்றேரிடத்தி லிப்பட்டணத்தைப்பற்றி விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பதியின் விஷ்ணுவாலய வைசாக பிரம்மோற்சவத்தின் கருட சேவை உலகப் பிரசித்தம்.



காசிகாண்டத்தில்:—

காதலிற்சென்றிறந்தோர்க்குச்சாரூபஞ்சிவனளிக்குங்காஞ்சிக்கேகி [ட்
யாதரத்தினேழ்பகலாண்டிருந்திறந்தோரென்பனேத்துமலங்கற்றிண்டோ
சிதான்றன்வளையாழியுருவாகுந்துவாரகையிற்சென்றுபின்னர்
மாதவத்தோரெஞ்ஞான்றுமுவந்துறைமாயாபுரியின்வந்துசேர்ந்தான்.

இவிடம்நாணயமான பட்டுப்புடைவைகள்,வேஷ்டிகளுடன் ரவிக்கைகளுக்கும் பேர்போனது.

உஜ்ஜினியென்னும் அவந்திகை:-சப்தபுரிகளிலொன்ருகிய இப் புராதன பெரியபட்டணத்துக்குமேலே பிரஸ்தாபித்தகாசியின் மேலமார்க்கத்திலுள்ள கண்டுவாஜங்ஷனில் பிரிந்து அங்கிருந்து மாவ்ஜங்ஷன், இண்டூர், பேடஹபாத்ஜங்ஷன்வழியாய் இந்நகருக்குப்போகவேண்டும். கண்டுவாவிலிருந்து இண்டூர்(ஸமஸ்தானம் ராஜனிருக்குமிடம் பண்டிதபாமரர்களை யாதரிக்குமிடம்) 85 மைலும் அங்கிருந்து இவ்வவந்திகை 41மைலுமிருக்கிறது. இப்பட்டணத்தின்கண்ணுள்ள சாந்திபனமகரிஷியிடத்தில் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா வேதாத்தியயனம் செய்தருளினன். கண்ணபிரான்திருச்சந்நிதியும், சங்கராலயமுமிருக்கின்றன.

காசிகாண்டத்தில்:—

ஆதியுகமொழிந்தவருமூன்றுகத்துமகாகாளமவந்திமற்றை
யோதுவளஞ்சிறந்தோங்குமுச்சினியெனுநகரிலுடன்றுகூற்றைக்
காதியிடமாடகேசுரர் தாரகேசுரர் மாகாளரென்னச்
சோதிவடதருவினிழலினிதுறையும் பரமனடி தொழுதுபோனுன்:—

திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகங்களில், இந்நகருக்கு முறையே மகாகாளம், அவந்தி, உஜ்ஜயினியென்றும் அவிடத்தில எழுந்தருளியிருக்கின்ற பரமனுக்கு மாடகேஸ்வரன், தாரகேஸ்வரன், மகாகாளரெனவும் பெயர்பெறும். ஸிப்ராநதிதீரத்திலுள்ள இப்பட்டணத்துளொரு கோட்டையும் விஸ்தாரமான வியாபாரமுள்ள கடைத்தெருக்களும் சௌகுரியமாய்த்தங்க தர்மசாலையுமுண்டு.

ஸ்ரீத்வாரகை.

ஸ்ரீத்வாரகை:-சப்தபுரிகளிலொன்ருகிய இது பம்பாய்க்குவடக்கில் குஜராத்திதேசத்தில் கதியவார்என்னும்த்வீபகல்ப(மூன்று புறத்திலும் சமுத்திரத்தால் சூழப்பெற்றது) த்திலிருக்கின்றது.

இது ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சங்குசக்கிர மென்றும் இதை ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அரசாண்டதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன்மற்றசரித்திரங்களை பாகவதத்தில் விஸ்தாரமாய்ப்பார்க்கலாம். இத்துவாரகை பம்பாயிலிருந்து ஸ்டீமர்மார்க்க

மாய்,சுமார் 280மைலிருக்கிறது. இதுதான்மிகவும்சௌகுரியமும் குறைந்தசெலவுள்ளவுமான மார்க்கம்.பம்பாய்ரேவில்இரவுஎட்டு மணிக்கு உண்டுடுத்து ஸ்டீமரேறி அந்தராத்திரி முழுவதும் மறு நாள் பகல் 12 மணி சுமாருக்கு சாப்பாட்டுக்குப் போய்ச்சேர்ந்து விடுகிறது. ஸ்டீமரின் கட்டணவிதம் பிரயாணசௌகுரிய முதலிய எல்லாம் இருப்புப்பாதையைப்போலவே. இதன் மத்தியில் வீரர்வல்துறைமுகத்திலிறங்கி அவிடத்துக்குச்சமீபத்திலுள்ள ஸோமநாத் (இதற்குச்சமீபம் பிரபாக மென்னும் மற்றோர் க்ஷேத்திரமிருக்கிறது)தென்னும் பிரசித்தசிவக்ஷேத்திரத்துக்குச் சென்று தரிசனம் செய்துகொண்டும், ஆகாராதிகள் பார்த்துக்கொண்டும் வரலாம். இவ்விந்தியாவின் தேவஸ்தானங்களுள் அதிக ஐஸ்வரியம் பெற்றிருந்த இக்கோயிலையும் மகாபாபி கொடுங்கோலரசனான முகம்மதுகஜினி என்பவன் கொள்ளையடித்துவிட்டான். பம்பாயிலிருந்து த்வாரகைக்குச் செல்லும் மார்க்கமத்தியிலுள்ளமேற்குறித்த வீராவல் துறைமுகத்தைத்தவிர போரீபந்தரென்பது மற்றோர் துறைமுகம். இவ்விரண்டுதுறைமுகங்களிலும் இருப்புப்பாதையும் வந்து கூடுகிறது. மேற்குறித்த போரீபந்தரிலிருந்து த்வாரகை சமீபமானபடியால் கரைமார்க்கமாயும் நடந்து போகலாம். பம்பாயிலிருந்து துவாரகைக்கு ஸ்டீமரில் போக இனாம்டிக்கெட்டுகள் பம்பாயில் சிலதர்மபிரபுக்கள் கொடுக்கிறார்கள். இருப்புப்பாதை மார்க்கமாய்ச் செல்லவேண்டுமானால் மேற்குறித்த 280 மைலுக்குப்பதிலாக சுமார் 550 மைலாகிறது. இதன் மார்க்கம் பம்பாயிலிருந்து பம்பாய் பரோடா ஸெண்ட்ரல் இந்தியா இருப்புப்பாதை வழியாய் நேர்வடக்காய் சூரத்து, அங்கலேஷ்வர் ஜங்ஷன், மியாகம் ஜங்ஷன், விஸ்வாமித்திர ஜங்ஷன் வழியாய் பரோடாவுக்கு (இது ஒருதர்மசமஸ்தானம்-பண்டிதபாமரர்களை யாதரிக்குமிடம் ராஜாவசிக்கிறார்) ச்சென்று அங்கிருந்து ஆனந்தா ஜங்ஷன்வழியாய் ஆமத்பாத் ஜங்ஷனுக்குச்,சென்று அங்கிருந்து தென்மேற்காய்ப் பிரியும் கதியவார் இருப்புப்பாதையில் வீரம்காம், வாட்வான், வங்கனர், ராஜ்காட்,ஜெடல்சர்ஜங்ஷன் களின்வழியாய்முன்சொன்ன போரிபந்தர்ஸ்டேஷனிலிறங்கி கரைமார்க்கத்தில் கால்நடையாயாவது ஸ்டீமரிலாவது போகவேண்டும். இவிடம் மஹாராஷ்டிரம் குஜராத்தி பாஷைகள் பேசப்படுகின்றன. இப்பட்டணத்தின் பெரும்பாகம் கிலமாய்ப் போயிருக்கின்றது. இதில் மீன்பிடிக்கும் செம்படவர்களைத்தவிர மற்றப்படி ஜாதி-தொழில்-ஐஸ்வரிய முதலியவற்றிற்சிறந்தோரில்லை. ஸ்ரீ கிருஷ்ணனைத்தவிர இதரவிசேஷகோயில்களும் கிடையாது. இக்கோயிலில் திராவிடதேசத்து ஸ்ரீவைஷ்ணவர் சிலர் அர்ச்சகராயிருக்கிறார்கள். பெருமாள் சந்நிதியில்

விநியோகம் ஒருவாறுண்டு. ஸமுத்திரமத்தியிலிருப்பதால்ஸ்நான பானத்துக்கு வசதியாக கோயில் புஷ்கரணி தீர்த்தங்களைத்தவிர மற்றவைகள் கிடையாது.

காசிகாண்டத்தில்:—இந்நகரைப்பற்றி மேற்குறித்த காஞ்சியோடு சொல்லப்பட்டிருக்கிறது.

மேலேகாசியாத்திரையைபூப்பிரதக்ஷணமாகச்செய்யவேண்டிய கிரமத்தில் இந்த த்வாரகையை வடகோடி எல்லையாக வைத்து, இங்கிருந்து ஸ்ரீ கிருஷ்ணவதார ஸ்தலமாகிய வடகிழக்குத்திசையிலுள்ள மதுராவுக்குச் செல்லும் மார்க்கம் அடியில் வருமாறு:— முன்சொன்ன போரீபந்தர் ஸ்டேஷனில் ரெயிலேறி ஜடல்சர், ராஜகாட், வங்கனர், வட்வான், வீரம்காம் ஜங்ஷன்களின் வழியாய் ஆமதபாத்துக்குச் செல்லாமல் மேஸனா, பலன்பூர் ஜங்ஷன்களின் வழியாய் (இப்போது ராஜபுதனம், மால்வா ஸ்டேட் இருப்புப்பாதையின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கிறோம்) மார்வாருக்குச் சென்று அங்கிருந்து ஆஜ்மீருக்குச் சென்று அங்கிருந்து புலேரா ஜங்ஷன் வழியாய் ஜயப்பூருக்குக் சென்று அங்கிருந்து ஸங்கனர், பண்டிகூப், பர்ட்பூர் ஜங்ஷன்களின் வழியாய் மதுராவுக்குச் செல்லவேண்டும். போரீபந்தரிலிருந்து மதுராவுக்கு சுமார் 720 மைல். ரெயில் சார்ஜ ரூ 9—10—0

மதுராவிலிருந்து ஹரித்வாரத்துக்குச் செல்லும் மார்க்கம்:—

மதுராவிலிருந்து நேர் வடக்காய் பிர்ந்தாவனம்—கோவலி மார்க்கமாய் டில்லிக்குச் சென்று அங்கிருந்து பரௌட், ஷாம்லி, ஸஹரான்பூர் ஜங்ஷன், லக்ஸர் ஜங்ஷன் மார்க்கமாய் ஹரித்துவாரத்துக்குச் செல்லல் வேண்டும். மதுராவிலிருந்து ஹரித்வாரம் 218 மைல். சார்ஜ ரூ 2—12—0.

ஹரித்வாரத்தினின்று ஸ்ரீ காசிக்குச் செல்லும் மார்க்கம்:—ஹரித்துவாரத்திலிருந்து தென்கிழக்குத் திசையாய் லக்ஸர் ஜங், நாஜிபபாத் ஜங், மொரடபாத் ஜங், பாரிலி ஜங், பாலமௌ ஜங்ஷன்களின் வழியாய் லக்னௌவுக்குச் சென்று (இங்கிருந்து அயோத்தி சமீபம். பாராபங்கி ஜங்ஷன் வழியாய் சுமார் 60 மைலிருக்கிறது.) அங்கிருந்து றெய்பரிலி, பர்ட்ப்கார், ஜாங்கெய் ஜங்ஷன்களின் வழியாய் ஸ்ரீ காசிக்குச் செல்லவேண்டும். காசியினின்று ஹரித்துவாரம் 512 மைல். ரயில் சார்ஜ ரூ 4—10—0



கிஷ்கிந்தை.

கிஷ்கிந்தை:—பல்லாரிக்கு மேற்கே ஹோஸ்பெட் ஜங் ரெயில்வேஸ்டேஷனிலிறங்கி வடகிழக்கே எட்டுமைலில் துங்கபத்திரா தீரத்திலுள்ள இதற்குப் போகவேண்டும் வானர ராஜனாகிய சுக்ரீவனுடைய ராஜதானி யென்பதற் கடையாளமாக இப்போதும் இவிடத்தில் பல் விசித்திர ரூபமான பெரிய குரங்குகளும் ரிசியமுக முதலிய பருவதங்களும் வானரங்கள் களிப்புற்று

உண்டு பருக்கும்படியான வனங்களு மிருக்கின்றன. இவிடம் ஸ்ரீ ராமர் சுக்கிரீவனை ஸ்நேகித்து சரத்கால முழுவதும் நான்கு மாதங்கள் தங்கியிருந்துசீதையினுடைய இருப்பிடத்தைத்தெரிந்து கொண்ட இடம். இவிடம் ஸ்ரீ ராமர் சந்நிதானமிருக்கிறது. மாக மாதத்தில் உற்சவம் பிரபலமாய் நடக்கிறது. இதற்குச் சமீபத்தில் பம்பா சரோவரமும் ராமாயணத்தில் கூறியிருக்கிற மற்றவைகளு மிருக்கின்றன. வஸிப்பதற்கு வெகு ஆசையும் மனோக்கியமாயு மிருக்கும். இதற்கருகிலுள்ள மலையின் பேரிலிருக்கும் கோடிலிங்கங்களிருக்கின்ற சிவ க்ஷேத்திரத்திற்கு ஹம்பீவிரூபாக்ஷ மென்று பெயர்.

பண்ட்ராபுரம்.

பண்ட்ராபுரம்:—காசிக்குப்போகும் மேலை மார்க்கத்தில் சொல்லியிருக்கிற பார்ஸி ஜங்ஷனில் பிரிந்து 25 மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூரோடு முடிவு பெற்றிருக்கும் இருப்புப்பாதையை தென்மேற்கில் 80 மைலிலுள்ள மிராஜ் ஜங்ஷனுக்கு லயன் தயாராகிறது. பீமாநதிதீரத்திலிருக்கும் இப்பிரபலமான விஷ்ணுக்ஷேத்திரம் நாதப்பிரமம் எனவும் பாண்டுரெங்க மெனவும் சொல்லப்படுகிறது. ஸ்ரீவைஷ்ணவர்கள் அல்லாமல் மத்துவர்களிக்கோயிலிலிருப்பதால் பூதஞ்சிகளும் மற்றவைகளு மில்லாமல் பரந்தாமனை "ஜே-ஜே-விட்டல், விட்டல விட்டல" என்று சந்தோஷமாய் வாயைவிட்டு பஜனை செய்துகொண்டு ஆராதிக்கவும் தரிசிக்கவும்

இருகண்களும் மனமும் ஏகமாய் ஐக்கியமாய் லகித்துவிடும். தங்குவதற்கு ஜாகா வசதி வசிப்பதற்கு மனோக்கியம். தர்மான்ன சத்திரங்களும் தாமங்களுமுண்டு.

பஞ்சவடி.

பஞ்சவடி:—பம்பாயிலிருந்து (ரயில்சார்ஜ் ரூ-1-13) வடகிழக்காக 117 மைலுள்ள நாசிக்ரோட் ஸ்டேஷனிலிறங்கிச் செல்ல வேண்டும். ஸ்டேஷனிலிருந்து 5 மைலிருக்கிறது. தேவையான வண்டிகள் எப்போதும் தயார். இப்போதுதான் டிராம்வேயும் போடப்பட்டிருக்கிறது. வெளியிலிருந்து வரும் யாத்திரைக்காரரிடத்தில் ஆள் 1 க்கு நாலணு இந்த முனிசிபாலிடியார் ஆள்வரி வாங்குகிறார்கள். பிச்சைக்காரர் முதலானவர்களுக்கு வரிகிடையாது. கோதாவரிதீரத்தின் இருபக்கங்களிலும் யாத்திரைவாளிகளுக்காக அநேக தருமசாலைகளும் நாட்டுக்கோட்டையார் அன்னதான சத்திரமும் வேறு சிலவுமிருக்கின்றன. இது மிகவும் சமசீதோஷ்ண முடையதாய்ப் பிணியாளர் இங்கு சிறிதுகாலந்தங்கியிருந்தால் எவ்வகைப்பட்ட பிணியும் நீங்கிவிடும். இதின் பூசாரமோ.-உதாரணமாக ஒரு செங்கரும்பு

தொடையளவு பருமனும் இரண்டாள் உயரமும், ஒரு கத்திரிக்காயை (சுமார் ஒரு சுரைக்காயளவு பெரிதாயிருக்கும்) சமைத்தால் இரண்டு மூன்று பேருக்குப் போதுமானது. விலையோ வெகுசரசம், இந்தக்கத்திரிக்காய் ஒன்று 2 பைசா அல்லது மூன்றுபைசாவுக்குமேலில்லை. இதில் எண்ணிறந்த சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் வாபி, கூப, தடாகங்களும், தீர்த்தங்களும் நிறைந்துள்ளதாயும், ஸ்ரீ காசிக்குத்தெற்காக இதுவே காசியாகவும் கோதாவரியே கங்கையாகவும் விளங்குகின்றன. இவிடம் கோதாவரிக்கு இரண்டு தீரங்களிலும் எண்ணிறந்த கட்டிடங்களும் அநேக கட்டங்களும் படித்துறைகளும் கோயில்களும (இவிடத்தில் விசேஷ ஜலம வராததால நதியின்மத்தியிலும சில கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன.) உயர்ந்த மாளிகைகளும் நிறைந்து பிரகாசிக்கின்றது. இம்மா நதிக் காலையில் புஷ்பங்களாலும், சாயரக்ஷையில் எண்ணிறந்த தீபங்களாலும மலங்கரிக்கப்பட்டுப் பார்க்கப் பதினாயிரங்கண்கள் வேண்டும். இவிடமிருக்கும் பிராமணர்கள் தலைப்பாகையும் சட்டையுமணியாது வெளிவரார். ஆனால் வெகு ஆசாரசீலர்களாயும், பிரயாகை முதலிய விடங்களிலிருக்கும திராவிட தேசத் தாரைப்போல் பேராசையில்லாமல் ஒருபைசா கொடுத்தாலும் அதைக்கோடியாக மதித்து மனமகிழ்ச்சி யடையுமியல்புடையவராயுமிருக்கின்றார்கள். சதகாலக்ஷேபஞ்செய்வதற்கு எல்லா விஷயங்களிலும் இவ்வளவு சௌகரியமுள்ள இடம் (தென்தேசத்தில உடுப்பி, சுப்பிரமணியம்முதலிய சிலஸ்தலங்கள் தவிர) இவ்விந்தியாவுக்குள் எங்குமே கிடையாது. இப்பஞ்சவடி தீரத்தில் அநேகசாதுக்களும், சந்நியாசிகளும், சத்காலக்ஷேபம் பண்ணுகிறவர்களும், தவம்புரியும் பெரியோரும், யோகர், சித்தர்களும் வசிக்கிறார்கள். இவிடம் யாத்திரையாக வருபவர்கள் இவர்களைப் பலவிதத்திலும் நன்கு ஆதரிக்கிறார்கள். வேதமோதியப் பிராமணருக்கு இங்கு தக்க வருமபடி கிடைக்கும். ஸ்ரீ ராமச்சந்திரனுமிதை விட்டுப்பிரியமனமிலர்து தங்குவாராயினர்.

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில்:—

அனையதோர் தன்மையால் அவ்அருவிநீர் ஆற்றின்பாங்கர்
பனிதரு படிவப்பஞ்சவடியெனும் பருவச்சோலை
தனியிடமதனைநண்ணித்தம்பியால் சமைக்கப்பட்ட
இனிய பூஞ்சாலை யெய்தி யிருந்தனன் இராமனிப்பால்.

ஓங்கும் மானோங்கி மலையோங்கி மணலோங்கி
பூங்குலைகுலாவு குளிர் சோலைபுடைவிம்மி
தூங்குதிரையாறு தவழ்குழலதோர்குன்றின்
பாங்கருளதாலுறையுள் பஞ்சவடிமஞ்ச.

ஸ்ரீ ராமர் எழுந்தருளியிருந்த பஞ்சவடி கோதாவரியின் வடகரையில் ஐந்து ஆலவிருக்ஷமுள்ள காரணத்தால் அப்பெயர் காரணமாயிற்று. இவ்விருக்ஷங்களின் மத்தியில் சுரங்கமொன்றிருக்கிறது. தாசரதி கரதூஷணாதி யுத்தஞ்செய்தகாலத்தில் திருமகளை இப்பிலத்துக்குள் எழுந்தருள வருளினர். சீதாலக்ஷ்மண பரதசத்ருக்ன ஹனுமத் சமேதராய் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியினது திருக்கோயிலை புனா ஸ்ரீமந்தனால் அழகான அர்த்தமண்டப மஹாமண்டபங்களோடுங் கட்டப்பட்டிருக்கிறது. ஓங்காரேஸ்வரர் முதலிய பல சிவாலயங்களுமிருக்கின்றன. காசியினின்று இம்மார்க்கமாக கங்கை கொண்டுவருவோர் (கீழமார்க்கத்தில் இராஜமகேந்திரம்) இவிடம் பூஜைகள் செய்து இவ்விருத்த கங்கையை அக்காசிகங்கையுடன விதிப்படி சேர்க்கவேண்டும் இளையபெருமாள், கொடிய சூர்ப்பநகி (இராவணனது சகோதரி) யினது நாசியை அறுத்த இடமாதலால் இதற்கு நாசிகை என்னும் பெயர் காரணமாயிற்று. நாசிகையென்பது கோதாவரியாற்றின் தென்கரையில் ஒரு பெரிய பட்டணமாயும், பஞ்சவடியென்பது அந்நதியின் உத்தர தீரத்தில் ஒரு சிறு கிராமமாயுமிப்போது இருக்கிறது. இவிடமிருந்து 45 மைல் தூரத்தில் வடகிழக்கிலுள்ள மண்மாடு ஜங்ஷனுக்கு ரெயில்சார்ஜ பதிமூன்றணா.

திரியம்பகம்:—மேற்சொன்ன பஞ்சவடியிலிருந்து வடமேற்காக இருபது மைலிருக்கிறது. இது கோதாவரி நதியின் உற்பத்தி ஸ்தானம். வண்டிகள் சாதாரணமாய்க் கிடைக்காது. நடந்து செல்ல மார்க்கமுண்டு. ஜாகா ஒருவாறு கிடைக்கும். த்ரிமூர்த்திகளுக்கும் இவிடம் ஆலயங்களுள்ளனவாயினும் சிவசந்நிதானம் பிரசித்தம். ஆரண்யமத்தியில் குளிர் மிகுதியான விடமாயிருப்பதால் அதிகமாய்த் தாமதித்தல் கூடாது. மார்க்கமத்தியில் ஆறுமைல் தூரத்திலுள்ள கங்காப்பூரில ஒன்பது ஆலயங்களும் கோதாவரி மலையுச்சியினின்று விழும் காக்ஷியும் அபூர்வமானதாய்ப் பேரானந்தத்தை விளைவிக்கிறது. திரியகம்பகத்தில் கோமுகிபோன்ற ஒரு கற்பாறையினூடேயுள்ள குகையினின்றும் கோதாவரி உற்பத்தியாகிப் பிரவகிக்கிறது. நாசிகையிலிருந்து பன்னிரண்டு மைலில் மத்தியில்தங்க ஒரு குப்பமிருக்கிறது.

சித்திரகூடம்:—காசிக்குச் செல்லும் மேலமார்க்கத்தில் ஜப்பல்பூரிலிருந்து 166 மைலும் பிரயாகையிலிருந்து 62 மைலுமுள்ள மாணிக்பூர் ஜங்ஷன் ஸ்டேஷனில் பிரிந்து அங்கிருந்து மேற்கே 25 மைலிலுள்ள சித்திரகூட் ரெயில்வே ஸ்டேஷனி

லிறங்கிச் செல்லவேண்டும். ஸ்டேஷனுக்குச் சமீபத்திலுள்ள சித்திரகூட பருவதத்தில் சீதா லெக்ஷ்மணருடன் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி பத்தேசில்லனா வருஷகாலம் எழுந்தருளி யிருந்தனர். அதாவது வனவாசம் பதினான்கு வருடத்தில் முக்காற்பங்கை இவிடம் செலவிட்டருளினர். அதாவது வைகுண்டாதிபதியே இச்சித்திர கூடத்தை உவந்து வியந்து வதிய திருவுளம் பற்றக் கூடிய அவ்வளவு மகிமைகளைப் பெற்றதா யிருக்கின்றதென்கிற விவரத்தை இராமாயணத்தில் பார்க்கலாம். இப்புண்ணிய மலையின் முற்பக்கத்தி னடிவாரத்திலுள்ள ஸ்ரீ காந்தாநாத ஸ்வாமியை ஆராதித்து வணங்கி கிரியை பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். மலையின் நான்கு பக்கங்களிலும் அநேக தேவாலயங்கள், மடாலயங்கள், தருமசாலைகள், சத்திரஞ்சாவடிகள், அன்னசத்திரங்களும் நிறைந்திருக்கின்றன. இப்பருவதத்துக்குச் சமீபத்தில் இலக்ஷ்மண ஜூலா வென்றொரு சிறு குன்றிருக்கிறது. இம்மலையடியில் ஒரு ஜமீன்தார் வசிக்கிறார். இவரது வருஷவருமானம் சுமார் நாற்பதினாயிரம் ரூபாய்.

நைமிசாரண்யம்:—காசியிலிருந்து ஹரித்துவாரத்துக்குச் செல்லும் மார்க்கத்தில்221-ம் மைலிலிருக்கப்பட்ட ஸாண்டிலி ரெயில்வேஸ்டேஷனிலிருந்து 20 மைல்தூரத்தில் கங்கா தீரத்துக்குச் சமீபத்தில் பூர்வத்தில் ஆரண்யமாயிருந்த இந்த ப்ரதேசத்தின் மத்தியஸ்தானம் இப்போது நைமிசாரண்ய மென்னும் பெயருடன் கூடிய ஒரு ஊராயிருக்கிறது-இவிடத்தில் மகாவிஷ்ணுவின் கோயிலும் தீர்த்தங்களு மிருக்கின்றன. ரிஷிகள் சதுர்முகனைப் பிரார்த்தித்தபோது குசை (தருப்பை) யை நேமி (சக்கரம்) போலச் சுருட்டிச் சிருஷ்டித்த ஸ்தலமாதலின் இது காரணப் பெயராயிற்று. சமஸ்த புராணங்களும் சூதமகா முனிவரால் பிருகுமகரிஷியினது குலதிலகர்கள் எண்பத் தெண்ணாயிரம் சௌனகாதி ரிஷிகளுக்கும் இப்புண்ணிய பதியில் திருவாய் மலர்ந்தருளப்பட்டு வரும்போது பாரத யுத்தத்தில் பந்துகலகத்தைப்பார்க்கச் சகியாத ஆதிசேஷா வதாரமாகிய ஸ்ரீ பலராமர் தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்டுச் சென்று வரும் மார்க்கமத்தியில் இந்நைமிசாரண்யத்தை யடைந்த காலத்திலிந்த சூதமாமுனிவர் மட்டும் எழுந்து மரியாதை செய்யாததால் கொன்றருளினர். அப்போது மற்றரிஷிகளின் புராண சிரவணந்தடைப்பட்டது மன்றி, பகவான் பிரம ஹத்தியையு மடைந்தன ரென்றறைதலும் பயந்து உரோமஹர்ஷனர் புத்திராகிய உக்கிரசிரவஸுக்கு பாக்கி புராணங்களை கிரமப்படி சொல்லும்படி வரமளித்து, அந்தரிஷிகளின் பிராயச்சித்த விதிப்படி, அந்தரிஷிகளைத்

துன்பப்படுத்தி வந்த இல்வலபுத்திரன் பல்வனைக் கொன்று மேலே சொல்லப் பட்டிருக்கிற பாரதவருஷ (கங்காயாத்திரை) யாத்திரையை யதோக்தமாய் செய்தருளினார். ஷை சாண்டிலி ஸ்டேஷனில் ஜாகாவும் நைமிசாரண்யஞ் செல்ல வண்டிகளுங்கிடைக்கும்.

ருஷிகேஸம்:—ஹரித்துவாரத்தி னின்று சுமார் பதினைந்து மைல் தூரத்தில் கங்கோத்பத்திக்குச் செல்லும் மார்க்கமத்தியில் கங்காதீரத்தில் ஹிமயமலைச் சாரலிலிந்த க்ஷேத்திரமிராநின்றது. இத்தலத்திலிருக்கும் பரதாள்வார் ஆஸ்ரமத்துக்குச் சுற்றிலும் அநேகம் பெரியோர் மேனோக்கி வஸித்து வருகின்றனர்-தவம்-யோகாப்பியாச முதலியவைகள் செய்வதற்கேற்ற ரமணீய ஏகாந்தவாஸஸ்தானமா யிருக்கிறது. இச்சிறுவூர் இரண்டொரு கடைகளும் ஏழெட்டு குடிசைகளுஞ் சேர்ந்தது. இப்பிராந்தியங்களில் பிரயாண சௌகுரியம் குறைவு.

வான்மீகியாச்சிரமம்:—மேலே கூறியிருக்கிற சித்திர கூடத்துக்கு ஐந்து மைலுக்குக் கிழக்கிலிருக்கிற கர்வீ ஸ்டேஷனிலிறங்கிச் செல்லவேண்டும்-வண்டிகளகப்படும். இப்பகவானது ஆச்சிரமம் வான்மீகி நதிக்கரையில் இப்போதுள்ள வான்மீகியாச்சிரமமென்னும் ஊரிலுள்ளது. இந்த ஆச்சிரமத்தைச் சுற்றிச் சில பாகவதர்கள் ஸ்ரீராமபஜனை ஸதா செய்துகொண்டிருக்கின்றனர். இம்மகரிஷி ஸரஸ்வதி அவதாரமாய் வரப்பிரசாதத்தின் பேரில் ஸ்ரீமத் ராமாயணத்தைச் செய்தருளினர். இவரது சரித்திரம் உலகப் பிரஸித்தம்.

பரத்வாஜாச்சிரமம்:—மேற்குறித்த வான்மீகி யாச்சிரமத்தினின்று வடக்கே சுமார் 35 மைலில் யமுனாதீரமுள்ளது. இவ் யமுனையின் உத்தரதீரத்தில் இப்பரத்வாஜாச்சிரம முளது. இதற்குமேற் குறித்த மாணிக்பூர்ஜங்ஷனின்றுவடகிழக்காய் பிரயாகைக்குப்போகும் மார்க்கத்திலுள்ள சங்கர்கார் ஸ்டேஷனிலிறங்கிச் சென்றால்சுமார் பதினெட்டுமைலாகிறது, வண்டிகள்சொல்ப விசாரணையின்மேல் அமர்த்தலாம். இவிடத்தில் சீதா லெக்ஷ்மண ஸ்ரீராமச்சந்திரனுக்கும்பரிவாரங்கள்சகிதமாய் இம்மாமுனிவரால்தெய்வப்பசுவால்பக்குவஞ் செய்துவிருந்தளிக்கப்பட்டது.

தலைக்காவேரி என்னும் காவேரி உற்பத்தி:—மைசூருக்கு இருப்புப்பாதை வழியாய்ச்சென்று அங்கிருந்து சற்றுவடமேற்குத் திசையில் சுமார் 76மைலுள்ள குடகுமடிகேரிக்கு,ஹுன்சூர், குசால்நகரம், பெரியபட்டணம், ஸொண்டிகுப்பங்களின்வழியாய் இரண்டு குதிரைகள்கட்டினடோங்கா வண்டி, அல்லது கட்டை

வண்டிகளின்வழியாய்ச்சென்று (ஷி டோங்காவண்டி 12 மணி நேரத்தில்போய்ச்சேர்ந்துவிடுகிறது. கட்டைவண்டிகளானால் மூன்றுநான்குநாட்செல்லும், ஆனால்மரங்களடர்ந்தவிஸ்தாரமானகப்பிரோட்டாயும்மார்க்கமத்தியில்தர்மான்னசத்திரங்கள்முதலிய பிரயாணசௌகரியமுமுண்டு)மடிகேரியிலிருந்து வண்டிகள்போகாதகால்மார்க்கமாய் மலைக்கணவாய்களின் வழியாய்ச்சென்றால் இருபதுமைல், வண்டிரோட்டுமார்க்கமாய்ச் சென்றால் 50மைல், தலைக்காவேரி உற்பத்தியாகும் மலையினடிவாரமாகிய பாகமண்டலம்வரையில் வண்டிகள் செல்லும், அங்கிருந்து அம்மலையின்மேலேநான்குமைல் ஏறிச்சென்றால்அவிடத்தில்மலைப் பாறையினுள்ள ஒருவாவியினின்றும்காவேரிமாதா பிரவஹிக்கிறாள். துலாமாதப்பிறப்புக்கு ஆயிரக்கணக்காய் யாத்திரைசெய்வார்கள். துலாகாவேரிபுராணத்தினால் மற்றமஹிமைகள் விளங்கும்.



ஸ்ரீ சுப்பிரமணியம்.

ஸ்ரீ சுப்பிரமணியம்:—ஆறுமுகக்கடவுளுக்குரிய இம்மஹாஸ்தலம் காடாரண்யத்தின் மத்தியில் நிர்மலமான சரவணநதியால்சூழப்பெற்றதாயும், தர்மசத்திரங்கள், மடாலயங்கள் நிறைந்துவாஸயோக்கியத்துக்கு மிகவுமேற்றதாயும் திருமுருகக்கடவுளின்பூர்ணமிசம்விளங்கும்படியான திவ்யக்ஷேத்திரமாயும் பிரகா

சிக்கின்றது. ஷை தலக்காவேரியிலிருந்து வடமேற்குத்திசையாய் காட்டுமார்க்கமாய் சுமார் 35 மைல் தூரமும்வண்டிமார்க்கமாய் 50மைல்தூரமுமிருக்கிறது. இச்சுப்பிரமணியரது கோயில்பிரகாரத்துக்குள்ளாகவே பிரதிதினம் யாத்திரைவாஸிகள் சமாராதனைகள்செய்து அப்பிராமண உச்சிஷ்டங்களில் ஆநந்தபரவசமாய்ப்புரண்டுகந்தனது திருவருளையடைவர். இத்தலம்புக்திமுக்தியிரண்டினையுங்கொடுப்பதாயும் அரியதவமியற்றுவதற்கு ஏற்றக்ஷேத்திரமாயுமிருக்கிறது. இங்குசிலபெரியோர்கள் பஞ்சவடிதீரத்தில்போலவசிக்கின்றனர். தென்னிந்தியாவில்பவபாஸ பந்தத்தைப்பற்றற ஒழித்தஞானிகளுக்குத்தவமியற்றுவதற்கு ஏற்றவசதிகளமையப்பெற்ற க்ஷேத்திரம் வேறுகிடையாது. வேதமோதிய அந்தணர்கள் குடும்பசமேதராய் சுககாலக்ஷேபஞ்செய்ய (தக்க வரும்படியுடன்) மார்க்கமுண்டு.

தர்மஸ்தலம்.

தர்மஸ்தலம்:— இத்தலம் ஷை சுப்பிரமணியத்தினின்று மேற்காய் உடுப்பிக்குச்செல்லும் மார்க்கத்தில்சுமார் 30மைலிலிருக்கிறது. வண்டிகள் கிடைக்கும் இப்பாதைகளெல்லாம் காட்டுமார்க்கமாயிருந்தாலும் திருடர்துஷ்டமிருகங்கள் முதலியபயமில்லை. ஆங்காங்குஊர்களும், யாத்திரைக்காரர்களிடம்அன்புகூர்ந்து தங்களாலியன்ற எவ்வகையுதவியும் செய்யும் மனதுடையவர்களாயுமிருக்கிறார்கள். இத்தருமஸ்தலத்தில் விசேஷதருமம்நடந்து வராநின்ற அன்னசத்திரமும் மற்றதருமங்களும்உண்டு. இச்சந்நிதானத்தில்சுற்றுப்புறங்களிலுள்ளவர்கள் தங்கள் ஸிவில் கிரிமினல்வ்யவகாரங்களைபூசாரியின்பேரில்ஆவேசம்வந்து அவரதுஉத்தரவின்படி

தீர்த்துக்கொண்ணுகிறார்கள். இதன் மூலமாய் இத்தேவாலயத்துக்கு விசேஷவரும்படி கிடைக்கின்றது. இவைகன்னடராச்சியம், தலைக்காவேரியிலிருந்து இதுவரைமலைநாடு. இவ்விடமிருந்து இனிமேற்காக நம்சோளதேசத்தை எல்லாவிஷயங்களிலு மொத்ததாயிருக்கின்றது.

உடுப்பி.

உடுப்பி.—மேலசமுத்திரக் கரையிலியிருக்கும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவுக்குரிய இம்மஹாஸ்தலம்மத்துவ் மதஸ்தர்களுக்கு, ஸ்மார்த்தர்களுக்கு ஸ்ரீகாசியைப்போன்றது. இவ்விடத்துக்குமேற் கூறிய தர்மஸ்தலத்தினின்று (காட்டுமார்க்கமாய நல்லரஸ்தா, வண்டிகள் நயமாய்க்கிடைக்கும், தர்மசிந்தனையுள்ளபிராமணரது வீடுகளும்சத்திரங்களுமுண்டு) சுமார் 60 மைல் மேற்கேயுள்ள மங்களூருக்குச்சென்று, அங்கிருந்து வடக்கேசமுத்திரதீரத்தில் 30 மைலிலுள்ள இதற்குஸ்டீமரிலாவது கரைமார்க்கமாயாவது வரலாம்; இப்போது தெற்கேகள்ளிக்கோட்டையிலிருந்து மங்களூருக்கு இருப்புப்பாதை போடுகிறது, குறுக்குப்பாதையாகமேற்குறித்த மைசூர், குடகு, மடிகேரி அங்கிருந்து தலைச்சேரிக்கும் ரெயில்போட்டு வருகிறார்கள் இந்தஉடுப்பியில் நான்குபுறத்திலும் கால்மைல் நீளமுள்ள சதுரத்தின்எட்டுமூலைகளிலும்.எட்டுமடங்கள்விசேஷமாய் அமையப்பெற்றதாயும் ஊட்டுப்பிறை என்றதர் மான்னசத்திரமும (இராப்பகல் சுமார் 2000 பேர் சாப்பிடுகிறார்கள் எவ்வளவுகாலமிருந்தாலும கேட்பாரிலர்)ஜாகாவுக்குச்சௌகரியமான பொதுத்தலங்களுமிருக்கின்றன இவ்வஷ்டமடங்க

ளுக்கும் குருசிஷ்யக்கிரமத்தில் விசேஷவரும்படியுண்டு. ஸ்மார்த்தர்களுக்கு ஸ்ரீங்கேரி- கும்பகோணம் மடங்களைப்போன்றது. ஆசாரசீலமுள்ள ஒவ்வொரு மத்துவனும் இவ்வுடுப்பி யாத்திரைக்குச்சென்றுமுத்திராதானம் செய்துகொள்ளாமலிரார்; இது துளுவ தேசத்திலுள்ளது.

ஸ்ரீங்கேரி.

ஸ்ரீங்கேரி:—பெங்களூரிலிருந்து வடமேற்காக ஹூப்ளிக்குச்செல்லும் மார்க்கத்திலுள்ள பீரூர் ஜங்ஷன் ஸ்டேஷனிலிறங்கி சுமார் 35 மைல் மேற்கேயுள்ள இதற்கு நாட்டுவண்டி மார்க்கமாய்ச் செல்லவேண்டும். நல்ல ரோட்டும் வண்டிகளுங்கிடைக்கும். இத்தலம் ஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் பீடமுள்ளது. உள்ளுணர்வுள்ள மதாபிமான முடைய ஒவ்வொருவரும் தவறுமல் யாத்திரை செய்யவேண்டிய இந்த ஸ்தலம் துங்காநதி தீரத்தில் சாரதா பீடத்துடன் கூடியதாய் விளங்காநின்றது; விசேஷ அன்னதானமும் ஜாகாமுதலிய சௌகுரியங்களுமுண்டு. இதைப்பற்றிப் பிரிதோரிடத்தில் விரிவாய்க் கூறியிருக்கிறது.

அநந்தசயனம்.

அநந்தசயனம்:—திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு ராஜதானியான இப்பட்டணம் ஸ்ரீ பத்மநாபஸ்வாமி பள்ளிகொண்டிருக்கும் பிரசித்த க்ஷேத்திரம். இவிடத்தில் ஆறுவருஷத்துக்கொருதரம் நடக்கும் லக்ஷதீபோற்சவத்துக்குத் தெனிந்தியாவின் எல்லாப் பாகத்தினின்றும் எண்ணிறந்தோர் யாத்திரை செய்வர். இத் திருவனந்தபுரத்தில விசேஷ தானதருமங்களைச் செய்துவரும் மஹாராஜா வசிக்கிறார். இவரது சமஸ்தானத்தைப்போல் பிராமணர்களுக்கும், தேவாலயங்களுக்கும விசேஷ பரிபாலனம் வேறெங்குமில்லாமல தர்ம ராஜ்யமாக இக்கலியில் விளங்கி வருகிறது. இத் தருமங்களைக் குறைக்க நவீன மந்திரிகளேற்பட்டிருக்கிறதை ஸ்ரீ பத்மநாபன அருள்புரிவாராக. இது திருநெல்வேலியிலிருந்து சுமார் 88 மைல் தென் மேற்காக விருக்கிறது. நல்லரஸ்தாவும் தாமான்ன சத்திரங்கள், அக்கிரஹாரங்கள், நதிதீரங்கள், ஜல சௌகுரிய முதலிய எல்லா பிரயாண சௌகுரியங்களுமுண்டு. தபால்வண்டிகள் (குதிரை, மாடு) உண்டு. மற்றோர் மார்க்கம் கொல்லம் ரயில்வே ஸ்டேஷனிலிறங்கி சமுத்திர தீரத்திலுள்ள காலவாய்களின் மார்க்கமாகவும் காலவாய்களில் (படகுகள்) சுமார் 45 மைல் தெற்கேயுள்ள இவ்வூருக்கு வருவதும சௌகரியமே. இவிடம முற்றிலும மலையாளபாஷை. மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களிலிருந்து அநேக பிராமணர்கள் குடும்ப சம்மதராய் இவிடம் குடியேறியிருக்கின்றனர்.

ஜனார்த்தனம் வைக்கம், ஆலப்பிழை, அம்பலப்பிழை:—அனந்தசயனத்துக்கு சுமார் 25 மைல் வடக்கில் நாவாய்மார்க்கமாக உள்ள. பரசுராம சிருஷ்டியில் தக்ஷணகயை யென்று சொல்லும் விஷ்ணு க்ஷேத்திரமாகிய ஜனார்த்தனமும், அதற்கு வடக்கில் கொச்சி ரெயில்வேஸ்டேஷனுக்குப் போகும் மார்க்கத்திலுள்ள பிரசித்த சுப்பிரமணிய ஸ்தலமாகிய வைக்கமும், ஆலப்பிழை

அம்பலப்பிழைமுதலிய சில ஸ்தலங்களும் இருக்கின்றன. அனந்தசயனத்திருவிந்து கொச்சி (ராஜனிருக்குமிடம் ஊட்டுப்பிறையுண்டு) பட்டணத்துக்கு சமுத்திரக்கரை மார்க்கமாய் (நாவாய்களில் சௌகரியமாய்ப்போகலாம். கரைமார்க்கமாக நடந்து செல்லவும் எல்லாவித சௌகரியங்களுமுண்டு) சுமார் 135 மைல் தூரமுள்ளது. இது முற்றிலும் மலையாள தேசம், அனந்தசயனம் மஹாராஜாவினால் 64 ஊட்டுப்பிறைகள் (தர்மான்னசத்திரங்கள்) போடப்பட்டிக்கின்றன.



ஸ்ரீ கோகர்னம்.

கோகர்னம்:—கோ=பசு, கர்னம்=காது இலிங்கமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் சர்வ ஜீவ காருண்யனான பரமசிவனது திருஉருவம். இக்ஷேத்திரத்தில் பசுமாட்டின் காதைப்போன்றது. இம்மஹாலிங்கம் ஸ்ரீ காசி விஸ்வநாதரைப்போலவே பூமிமட்டத்துக்குக்கீழ் மிகவும் சிறிய ரூபத்துடனும் மேன்மைதங்கிய ஆவுடையார் சூழப்பெற்றதாயு மிருக்கிறது. இவிடத்திற்றான் இராவணேஸ்வரன் மகத்தான தவமியற்றிப் பரமசிவனிடம் மேலானவரங்கள் பெற்றதும், கங்காதாரணத்துக்காக பகீரதன் அருந்தவமியற்றிப்பரமசிவனை சத்தியவுலக கங்கையையேற்கும்படிவரம்பெற்றது மித்தலமே. இவர்கள் தவம்புரிந்த பருவதம் கோகர்னேஸ்வரருக்குத் தெற்கில் சமீபத்திலிருக்கிறது. இக்கோயில் கூடியவரையில் பெரிதாயும் பிரம்மோற்சவம் முதலியவைகளும் ஷட்கால பூஜாக்கிரமங்களுடனேயும் கூடி நம் சோளதேச ஏற்பாட்டைப்போல் நடக்கிறது. கோகர்னேஸ்வரருக்கு சுமார் ஒரு பர்லாங்குக்கு மேற்கில் உயர்ந்த அலைகளோடுங்கூடிய சமுத்திரங்கோஷித்துக் கொண்டிருக்கிறது. அமாவாசை முதலிய பருவகாலங்களில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸமுத்திர ஸ்நானத்துக்கு வருகிறார்கள். தவிரவும் ஊருக்குள்ளிருக்கும் புஷ்கரணி தீர்த்தமும், மற்றொரு சிறுநதியும்சாதாரணகாலங்களில் ஸ்நானம்

செய்யத்தகுந்தவைகள்; அன்னதான சத்திரமும் தர்மசாலைகளு மிருக்கின்றன. இம்மஹா, சிவக்ஷேத்திரம் (தக்ஷிணகாசி கோகர்னக்ஷேத்திர புராணத்தைப்பார்க்க) தர்மப் பிரபுக்களான நம் நாட்டுக்கோட்டையாரால் கவனிக்கப்படாமலிருப்பதும் ஆச்சரியமே. கோயிலைச்சுற்றி தேரோடும் வீதிகளும் கடை கடைத் தெருக்களும் தாலூகா முதலியகச்சேரிகளுங்கூடிய இச்சிறு பட்டணம் தென்னஞ்சோலை முதலியவைகளும், நெல் முதலிய தானியவகைகளும் விளையப்பெற்றதாய் வெகுசெழிப்பான பூமியாயிருக்கிறது. இவிடத்தில் மாக மாதத்தில் வரும் மஹா சிவராத்திரிக்குப் பிரம்மோற்சவம். இத்திவ்ய க்ஷேத்திரத்திற்கு பம்பாய், குஜராத்தி முதலிய வெகுதூரத்திலிருந்தும் யாத்திரைகள் 12 மாதங்களிலும் வந்துகொண்டிருப்பார்கள்.

இச்சீவன்முத்தி க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கும் பரமசிவனுக்கு மகாபலேஸ்ரவரென்றும் சொல்லுவர். பரமசிவனெழுந்தருளியிருக்கிற கைலயங்கிரியை இலங்காதிபதி தன்னால் கூடியவரை முயன்று பிடுங்கப்பார்த்தும் அசைக்கக்கூடமுடியாததால் உமாபதிக்கு இப்பெயர் காரணமாயிற்று. இப்படிக்கிருக்க புனாவிலிருந்து 68 மைல் தெற்கேயுள்ள வாதர் ரெயில்வேஸ்டேஷனுக்கு 40 மைல் மேற்கேயுள்ள "மகாபலேஷ்வர்" என்னு மூரை இக்கோகர்னத்துக்குப் பதில் தட்டுமாற்றலாக சிலர் நினைக்கிறார்கள். இந்த மகா, பலேஷ்வர மென்பது ஒரு க்ஷேத்திரமல்ல மேற்குத்தொடர்ச்சி மலையில் சமுத்திர மட்டத்துக்கு 4500 அடி உயரத்திலுள்ளது. ஐரோப்பியர், பம்பாய், புனாதேசவாசிகள் முதலானோர் சுகத்துக்காகச் செல்லும் ஒரு முதல்திறமான ஸானிடேரியம், இதில் ஐரோப்பியர் வாசத்துக்காக பங்களாக்கள் நூறுக்கு மேலிருக்கின்றன. இதன் சுற்றுப்பக்கங்களின் அதி ரமணீயகரமான தோற்றமும் விசாலமான சுத்த சமவெளியும் தேகாரோக்கியத்துக்கடுத்த உப்பங்காற்றும் சிலாகிக்கத் தகுந்ததேயொழிய எவ்விதமான மூர்த்தியும் தீர்த்தமும் இம்மஹாபலேஷ்வரத்தில் கிடையாது. இக்கோகர்னத்துக்கு மேற்குறித்த உடுப்பியிலிருந்து வடக்காக 25 மைல் தூரம், கரைமார்க்கமாயாவது ஸ்டீமரிலாவது வரலாம். ஸ்ரீங்கேரியிலிருந்து மேற்கே சுமார் 40 மைலுள்ள இத்தக்ஷிண காசிக்கு வருவதற்கு மலைச்சாரல், காடுகள் நிறைந்த கால்மார்க்கமல்லது வண்டிகள் போகக்கூடிய ரஸ்தாமார்க்கம் கிடையாது. இவிடமிருந்து சுமார் 170 மைல் வடக்கேயுள்ள மார்மகோவா துறைமுகத்துக்கு ஸ்டீமரில் சென்று அங்கிருந்து றெயில் மார்க்கமாகவாவது மறுபடியும் ஸ்டீமரிலாவது பம்பாய்க்குச்செல்லலாம். மார்மகோவாவிலிருந்து

பம்பாய், வடக்குத்திசையில் சமார் 250 மைல் தூரத்திலிருக்கிறது. முன் சொன்ன மங்களூரி லிருந்து பம்பாய்க்கு சமுத்திரக்கரை யோரமாய் ஸ்டீமரில் செல்லுவது திரவிய சகாயம், தேசசௌக்கியம், காலதாமதமின்மை முதலியவைகளைச் செய்கிறது. மங்களூரிலிருந்து பம்பாய், ஸ்டீமர் மார்க்கமாய் சுமார் 450மைலிருக்கிறது. மத்தியில் மேற்சொன்ன உடுப்பி, கோகர்னம், மஜிலிகளைத்தவிர ஹொனுவர், கார்வார், மார்ம கோவா, ரத்னகிரி, முதலிய துறைமுகங்களிலும் சௌகுரியப்படி இறங்கி ஏறிச் செல்லலாம். ஸ்டீமர் கட்டணம் ரெயில்வே கட்டணத்தைப் பார்க்கிலும் கொஞ்சம் சௌகுரியமாயும், ஸ்டீமருக்குள்ளாகவும் மல ஜலபாதைகளுக்கிடம் தேவையான வெளிச்சம், விளக்குகள்முதலிய எல்லாசௌகுரியங்களும் இருப்புப்பாதையைப் பார்க்கிலும் ஜாஸ்தியே. ஆனாலும் மார்மகோவாவிலிருந்து இருப்புப்பாதையில் போகப் பிரியமுள்ளவர்கள் மார்மகோவாவை விட்டால் லோண்டாஜங்ஷன், மிருஜ்ஜங்ஷன் அங்கிருந்து ஸதாராமார்க்கமாய் புனாவுக்குச்சென்று அங்கிருந்து கலியாணி ஜங்ஷன் வழியாய்ப் பம்பாய்க்குச் செல்லவேண்டும். ஸ்டீமர் மார்க்கத்தைப் பார்க்கிலும் இந்த ரெயில்மார்க்கம் அதிகசுத்தானபடியால் நபர் ஒன்றுக்கு சுமார் மூன்று ரூபாய் அதிகமாகிறது. மேற்குக் கரையில் இருப்புப்பாதையில்லாமல் அவசியமாய் ஸ்டீமரில் பிரயாணஞ் செய்யவேண்டிய பாகம் மங்களூரிலிருந்து மார்மகோவாவரையிலுள்ள சுமார் 185 மைல் தூரமே.

ஆகவே இராமேஸ்வரத்தினின்று பூப்பிரதக்ஷிணமாக செய்யவேண்டியயாத்திரைவிவரத்துக்கு முன்பக்கங்களில்சொல்லப்பட்டிருக்கிற விவரப்படிக்கு இராமேஸ்வரத்தினின்றும் மதுரை, திருநெல்வேலி(திருநெல்வேலியிலிருந்து தெற்கேயிருக்கும் சுசீந்திரம், கன்னியாகுமரி க்ஷேத்திரங்களைப் போய்ப்பார்த்துத்திரும்பிவரலாம்) அநந்தசயனம் இங்கிருந்துமேலசமுத்திரக்கரை மார்க்கமாய்க் கொச்சி, கள்ளிக்கோட்டை, கன்னனூர், மங்களூர், உடுப்பி, கோகர்னம், கார்வார், மார்மகோவா, ரத்னகிரி, பம்பாய், வீராவல் மார்க்கமாய்த்துவாரகைக்கும் அங்கிருந்து ஜடல்சர், ராஜ்காட், வட்வான், மார்வார், ஆஜ்மீர், புலேரா, ஜயிப்பூர், பண்டிகூப் வழியாய்மதுராவுக்கும்; அங்கிருந்து டில்லிசஹரான்பூர்மார்க்கமாய் ஹரித்துவாரத்துக்கும்; அங்கிருந்துலக்ஸர், மொரடாபாத், லக்நௌ, மொகல்சிரேமார்க்கமாய் ஸ்ரீ காசிக்கும்; அங்கிருந்து கயா (இதற்குமத்தியில் பிரயாகை அயோத்திமுதலியவிடங்களுக்குப்போய் வந்துவிடவேண்டும்) ஆட்ரா, கோமா, அல்லதுகலகத்தாமார்க்கமாய் கார்க்பூர், அங்கிருந்துகட்டாக், கூர்டாஜங்ஷன வழியாய் ஸ்ரீ ஜகந்நாதத்துக்கும் (மறுபடிகூர்டா ஜங்ஷனுக்குத்

திரும்பிவரவேண்டும்)அங்கிருந்துப்ர்ஹம்பூர்,ராஜமகேந்திரவரம் பெஜவாடா, நெல்லூர், சென்னப்பட்டணம் மார்க்கமாய் அவர்களிருப்பிடம்வந்து, மற்றப்படி முன் சொல்லப்பட்டிருப்பதைப் போல்பூர்த்திசெய்ய வேண்டியது என்றஎல்லாமார்க்கத்தையும் சம்பூர்ணமாய் ஈண்டு சுருக்கிச்சொல்லப்பட்டது.

குற்றாலம்.

குற்றாலம்:—தென்காசி ரெயில்வேஸ்டேஷனுக்குத் தென்மேற்கில் மூன்றுமைல்தூரத்திலுள்ள இவ்வரியக்ஷேத்திரம் மலையின் பேரிலுள்ள நீர்வீழ்ச்சியின் அழகாலும் தீர்த்தமஹிமையினாலும் அதிக சிறப்புடையதாயிருக்கிறது.

பாபநாசம்.

பாபநாசம்:—அம்பாசமுத்திரம் றெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கில் ஐந்துமைல்தூரத்திலுள்ள இவ்வரியசிவக்ஷேத்திரமும் சமீபத்துமலையிலுள்ள பாணதீர்த்தவிசேஷ மஹிமையினால் அதிகப் பிரசித்தியடைந்தது. இவ்விடத்தில் ஆடி, தை அமாவாசைகளுக்கு விசேஷஜனங்கள் யாத்திரைசெய்வார்கள். மேற்கூறிய மூன்றிடங்களிலும் வண்டி, ஜாகாமுதலிய சௌகரியங்களும் அன்னதானங்களுமுண்டு. இவைகளைத் தரிசிக்கத் தவறவிடக்கூடாதமாண்புடையன.



ஸ்ரீ பத்திராசலம்.

பத்திராசலம்:—பெஜவாடா றெயில்வேஸ்டேஷனிலிருந்துவடமேற்காய் 93 மைல்தூரத்திலுள்ள யெல்லண்டு ரெயில்வேஸ்டேஷனுக்கு டோர்னக்கல்ஜங்ஷன் வழியாய்ச்சென்று அங்கிருந்துநேர்வடக்காய் கோதாவரிதீரத்தில் சுமார் 62 மைல், அல்லது இராஜமஹேந்திரத்திலிருந்து வடமேற்காய்ச்செல்லும் கோதாவரிநதிக்கரையின்பேரிலேயே 120 மைல்தூரத்திலுள்ளது. எல்லண்டுறயில்வேஸ்டேஷனிலிருந்து செல்லவேண்டிய 62 மைலும் காட்டுப்பாதையாகையால் வண்டி வாடகை ஜாஸ்தியாயிருக்கும், இராஜமஹேந்திரத்திலிருந்து நதியிலேயே போகும்படகுகளில் சென்றால் சார்ஜும் சௌகரியம், பத்திராசலம் வரையில் படகிலேயேபோகலாம்; இந்தமார்க்கத்தில் ஆங்காங்கு தங்குவதற்கு அக்கிரஹாரங்களும்வசதியானஜாகாக்களுமுண்டு. இப்போது இந்தமார்க்கம் ரெயில்போட்டுவருகிறார்கள். பரமபாகவதபக்தசிரோன்மணியான இராமதாஸ்சுவாமிகளால் ஆராதிக்கப்பட்டு முத்தியீந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்யக்ஷேத்திரம்; இவிடத்தில் நடக்கும் ஸ்ரீராமநவமிபிரம்மோற்சவத்துக்கு தெலுங்குதேசம், ஐதராபாத்சீமை முழுமையும் திரளான ஜனங்கள்யாத்திரைவருவார்கள்; இம்மகானது திவ்யசரித்திரம் லோகப்பிரசித்தம்.

திருப்பதி-ஸ்ரீ காளாஸ்தி.

திருப்பதி-காளாஸ்தி:-முன்னது ரேணிகுண்டா ஸ்டேஷனுக்கு ஏழுமைல் மேற்காகவும், மற்றது பதினன்குமைல் கிழக்காகவு மிருக்கிறது. முன்னது உலகப்பிரசித்தமான ஸ்ரீ வெங்கடாசல ஸ்வாமியாகிய விஷ்ணுத்தலம். எல்லாக் காலங்களிலும் யாத்திரை வருவார்களானுலும் புரட்டாசி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவம் மிகவும் விசேஷம். ஸ்ரீ காளஹஸ்தி வாயுஸ்வாயம்பு லிங்க பிரஸித்த சிவக்ஷேத்திரம். மகா சிவராத்திரிக்குப் பிரம்மோற்சவம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் யாத்திரை செய்வார்கள். இது சுவர்ணமுகிநதி தீரத்திலுள்ளது. காளாஸ்தி ஸ்டேஷனிலிருந்து ஒருமைலிருக்கிறது. பிரவாக காலத்தில் ஷை ஆற்றைப் படகுகளால் தாண்டிச் செல்லவேண்டும். இவிடத்தில் ஒரு ராஜா வசிக்கிறார். இரண்டு ஸ்தலங்களிலும் ஜாகா முதலிய எல்லா சௌகரியங்களும் உண்டு. திருப்பதி மலையின்பேரிலும் மைசூர் மஹாராஜா அன்னதான சத்திரமும்காளாஸ்தியில்அன்ன சத்திரங்களுமுண்டு. மற்றப்படி ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் சந்நிதான விசேஷம் ஒவ்வொரு இந்துவுக்கும் தெரிந்ததே. திருப்பதி மலையேறுவதற்குமுன் அடிவாரத்திலுள்ள புண்ணிய தீர்த்தமாகிய பாபநாஸமென்னும் கபிலதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யாமலிரார். அடிவாரத்திலிருந்து சந்நிதானம் 7 மைல்.



ஸ்ரீஜகந்நாதம்

ஸ்ரீஜகந்நாதம்:—காசிக்குச் செல்லும் கீழமார்க்கத்திலுள்ள குர்டா ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்காய் 28 மைல் தூரத்திலிருக்கிறது. இது ஒட்டிரமதத்தியதேசம். நாள் தவறாமல் 365 நாளும் ஆயிரக்கணக்காய் யாத்திரை வருகிறார்கள். ஆடிமாதத்தில் இவிடம் நடக்கும் பிரம்மோற்சவத்துக்கு லெக்ஷம்

ஜனங்களுக்குக்கம்மியில்லாமல் கூடுகிறார்கள். இப்புண்ணியப் பிரசித்த தேவஸ்தானம் 652 அடி நீளமும் 630அடி அகலமுமுள்ள சதுரமாகவும் இருபதடி உயரமுள்ள மதில்களாலும் சூழப்பெற்றிருக்கிறது. இதற்குள் சுமார் நூறுசிறிய தேவஸ்தானசந்நிதிகளிருக்கின்றன. இந்த நூறு சந்நிதிகளிலும முக்கியமானவை:— பீமலா, லெக்ஷ்மீதேவி சந்நிதானங்கள், ஆனால் 192 அடி உயரத்துடன்கூடிய விமானமுள்ள பிரசித்த ஸ்ரீஜகந்நாதஸ்வாமி சந்நிதான விசேஷத்தைப்பார்க்கும்போது இவ்விரண்டும் எம்மாத்திரம் சுமார் 800 வருஷங்களுக்குமுன் அனங்கபீம ராஜனால் 50,00,000 பவுன் செலவுசெய்து கட்டப்பட்டு சமீபத்தில் ஏராளமான திரவியத்தால் ரிபார்செய்யப்பட்டிருக்கிறது. மகம்மது கலாபத்தில் மூன்றுதரம்இதற்குத்தெற்கிலுள்ள சில்காஏரியில் இந்த மகத்தான விக்கிரஹத்தைப் புதைத்து விட்டார்கள்; பிறகு வெகுகாலம் வரையில் இவ்வோட்டிரதேசத்தின் பச்சிம பாகத்திலுள்ள காடுகளில்மறைந்து கிடந்தது. இப்போது மிகவும் பழமை பெற்றிருக்கிறது. ஜக்கர்நாத்ஸ்வாமி கோயிலிலிருந்து ஒன்றரைமைல் தூரத்திலுள்ள இந்திரதூம்ன என்னுமிடத்துக்கு ஒரு விஸ்தாரமான அழகிய ரஸ்தாசெல்லுகிறது. இத்தலத்தில் ரூத்ஜாத்ரா திருவிழாவில் எட்டுநாள் இக்கடவுள் வசிக்கிறதாக ஆகமம். நாளின் அறுபது நாழிகையிலும் ஸ்வாமி தரிசனத்துக்காக உள்ளேபோகிறவும் வெளியே வரும்படியான ஜனசமூகத்தின் காக்ஷி தேவேந்திர காக்ஷியே! இந்தியாவின் எந்த சந்நிதியிலும் இப்படி ஒரேதொடாச்சியாய் எந்தக்காலத்திலும் கூட்டம் கிடையாது. ஸ்ரீ மந்திர் என்னும் தேவாலயம் மற்றெல்லாவற்றினும் பெரிது; இதற்கு மூன்று வாசல்களுண்டு, முதலாவது ஸிம்ஹத்துவாரம் அதாவது வாசலுக்கு இரண்டு பக்கத்திலும் கற்சிலை ஸிம்ஹங்களைக்காவலாக வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குள் விஸ்தாரமான 22 படிக்கட்டுகள் ஏறி மேலே சென்றால் ஒரு அழகிய உயர்ந்த விஸ்தீரமான சபாமண்டப மிருக்கிறது. இம்மண்டபத்தைத்தாண்டி உன்னதமான மத்திய வாசலால் உட்சென்றால ஜக்கர்நாதஸ்வாமியின் தேவாலயம் ஒருவிஸ்தாரமான திறந்த வெளியான முற்றத்துக்கு மத்தியில் சமீபத்திலுள்ள நாதமந்திரத்துடன் பிரகாசிக்கிறது. இந்த முன்றிற்றான் ஸ்வாமி தரிசனத்துக்காக ஜனங்கள் கூடி நின்று தரிசிப்பது. இப்படிக் கூடியிருக்கும் ஜனங்கள் தரிசனத்துக்காக எல்லாக்காலங்களிலும் உள்ளே விடப்படாமல் பகலிலும் இரவிலும் குறிப்பிட்ட காலங்களில் தரிசனத்துக்காக உள்ளேவிடப்படுகிறார்கள். அர்த்த மண்டபத்தினுள்ளே ரத்ன சிம்ஹாஸனத்தில் ஜக்கர்நாத் ஸ்வாமியும்

நாதருடைய ஜியேஷ்டரான் பலராமஸ்வாமியும் சகோதரி யான சுபத்ராதேவியும் இந்த ரத்ன ஸிம்ஹாஸன பீடத்தில் வீற்றிருக்கிறார்கள். இத்திரிமூர்த்திகளில் ஜக்கர்நாத், பலராம் இவர்களுக்கு அபூர்ணமான குட்டைக்கைகளும், சுபத்திரைக்குக் கைகளே யில்லாமலு மிருக்கிறது. ஏனெனில் பூர்வத்தில் ஆதிசிருஷ்டிக்கிரமத்தில் ஜக்கர்நாதஸ்வாமியே (கிருஷ்ண பகவானை மகாவிஷ்ணுவ்வ ஜக்கர்நாத் என்று இவிடத்து ஜனங்கள் சொல்லுகிறார்கள்) இந்த மூன்று விக்கிரஹங்களையும் மகாவிஷ்ணுவே ஒரு கிழத்தச்சன் வேடம்பூண்டு வேலை செய்துகொண்டிருக்கும் மத்தியில் (வேலை முடிவு பெறுவதற்கு இன்னும் ஒருவாரஞ் செல்லும்) ராஜனுடைய் பாரியையின் அந்தரங்க பக்தியுடன் கூடிய வேண்டிகோளினால் கர்ப்பத்துவாரம் திறக்கப்பட்டு அக்காரணத்தினால் அதேஸ்திதியில் அபூர்ணமாய் நின்று விட்டது. இம்மூர்த்திகள் மிக்க விலைபெற்ற ஆபரணங்களாலும் பட்டுபீதாம்பரங்கள் முதலிய ஆடைகளாலும் மிகவும் உன்னதோன்னதமாய் அலங்கரிக்கப் படுகின்றன. ஜக்கர்நாத் சுவாமியினது நெற்றியில் விலைமதிக்க முடியாத ஒரு பெரிய வஜ்ஜிரம் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது. அறுபது நாழிகையிலும் அநேகந்தடவை அதாவது அடிக்கடி, அடிக்கடி அலங்காரங்களை புதிய ஆடைகளாலும் புஷ்பங்களாலும் மாற்றிக்கொண்டே யிருக்கிறார்கள். நம்முடைய தேவஸ்தானங்களை யெல்லாம் நிர்மூலப்படுத்திவந்த மகம்மதிய அரசாக்ஷியில் இந்த ஸ்ரீ ஜகந்நாதஸ்வாமி கோயிலையழிக்காதிருக்கும் பொருட்டு யாத்திரை வரியாக வருஷத்துக்குப்பதினைந்துலக்ஷம் ரூபாய் கப்பஞ்செலுத்தி வந்தார்கள். ஆயிரக்கணக்காய் வரும் யாத்திரைக்காரர்களுக்கு 365 நாளும் பிரசாதமளித்தாலும் ஆடிமாதத்து ரதோற்சவகாலத்திலு மெல்லோருக்கும் அளிக்கப்படுகின்றது. சுவாமி நிவேதனமாகிய இப்பிரசாதத்தை ஏற்றுக்கொண்டு சமீபத்திலெதிரிலுள்ள சமுத்திரத்தில் தங்கடங்கள் பாவங்கள் போம்படி ஸ்நானஞ்செய்கிறார்கள். பிரபுக்களும் பணக்காரரும் ஆயிரக்கணக்காய் ஸ்வாமிக்குப்பாத காணிக்கையளிக்கவும் பிச்சைக்காரனைப் பரம ஏழையாயிருந்தாலும் தன்னாலியன்ற காணிக்கை போடாமலிரான். சிலர் வாங்கின கடனிலிருந்து மீளாவண்ணம் தங்களுடைய சர்வ ஆஸ்தியையும் கொதுவை வைத்து யாத்திரை செய்கின்றனர். வேறு சிலர் அப்படிக்கொண்டுவந்த பணம் முற்றிலும் இம்மஹாத்தான சந்நிதியில் செலவு செய்துவிட்டு ஊருக்குத்திரும்புகால் செலவுக்கில்லாமல் பிச்சை யெடுத்துக்கொண்டு போகின்றனர். இத்தேவாலயத்தின் சுவான்தார் ஷிகூர்டாராஜா. வெகுசானஎண்ணங்களுடன்

வருகிற யாத்திரைக்காரரில் சிலர் மிதமற்ற கஷ்டத்திஞலுண்டாகும் காலரு முதலியவைகளாலிறக்கும்படி நேரிடுகிறபடியால், பணத்தைக்கொண்டு ஜாகா முதலிய சௌகுரியங்களேற்படுத்திக்கொள்ள முடியாதவர்கள் சாதாரண நாட்களில் இத்தலத்துக்கு யாத்திரை செய்வது உசிதமாயிருக்கிறது. ஜக்கர்நாத்தென்று சொல்லப்பட்ட இஜ்ஜகந்நாத ஸ்வாமிக்கு பிரதிதினமும் சமர்ப்பிவிக்கும் போகம் (போகம்=நிவேதனம்) சாதம் சமைத்த காய்கறிகள், தித்திப்புத் தின்பண்டங்கள், பழவகைகள் பால், தயிர் முதலிய சமஸ்தமும் ஒன்ருய்ச்சேர்த்து ஒரு குவியலாக சந்நிதானத்தில் போட்டு நிவேதனஞ்செய்த பிறகு இயற்கனவே ஜாஸ்திப்பணங் கொடுத்தவர்களுக்கு அப்போகக்குவியலினின்றும் பிரித்தெடுத்துக் கொடுத்தபிறகு,பாக்கிநிற்கும் முழு பிரசாதத்தையும் விலைக்குக் கொடுக்கும் பொருட்டு தேவாலயத்துக்குள் ஆனந்தபஜார் என்னும்இடத்திற்கு அனுப்பப்படுகிறது. ஒருநாள் போகம் (இதை சமையல் செய்ய 200 சுயம்பாகிகளும் அதற்குத்தகுந்த பரிசாரகர்களும் பிடிக்கிறது) ஒரு இலக்ஷம் ஜனங்கள் ஆகாரத்துக்குப் போதுமானதாயிருக்கிறதென்பது என்னும் விவரத்தால் அப்போகத்தின் குவியல பரிமாணத்தை நீங்களேகணித்துக் கொள்ளலாம். இந்தப்போகத்தின் பரிசுத்தத்தையும் மகாத்மியத்தையும் பற்றி மனதாலும் அளவிட்டு மதிக்கக் கூடாது; எவ்வாறெனில் மிகவும் தாழ்ந்த சூத்திரன்முதல் (அதாவது பஞ்சமர்மட்டும் நீங்கலாக மிகவுமுயர்ந்த பிராமணன் வரையில் எல்லோரும் எவ்வளவேனும் ஜாதி மதவித்தியாசம் பாராட்டாமல் ஒரே இடத்திலுட்கார்ந்துகொண்டும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டும் ஒருசூத்திரன் கொடுத்த பிரசாதத்தை பிராமணன் ஏற்றுக்கொண்டும், ஒரே பாத்திரம் அல்லது போஜன பாத்திரத்தின் சுற்றிலும் பிராமணனும் சூத்திரனும் வித்தியாசமின்றி உட்காரந்தும் புசிக்கிருர்கள். !!! இஜ்ஜெகந்நாதமென்னும் பூரியில் ஒருவரும் சமைப்பதில்லை. எப்பேர்பட்டவனும் இந்தப் பிரசாதத்தைத்தான் வாங்கி சாப்பிடுகிருன். மேலும் நிற்பதற்குக்கூட இடங்கிடைக்காதபோது சமைப்பதற்கு எங்கிருந்து இடம் கிடைக்கும். !! "சர்வம் ஜகந்நாதம்" என்பது இதுதான். ரத்ஜாத்ரா என்னும் ஷெ பிரம்மோற்சவத்துக்கு இரண்டு வாரத்துக்கு முந்தி ஜக்கர்நாத்ஸ்வாமி பௌர்ணமியில் சமுத்திரஸ்நாநஞ்செய்துவிட்டு அன்றுமுதல் இரண்டு வாரம் வரையில் ஒருவருக்கும் தரிசனம் கொடுக்காது ஏகாந்தமாயிருக்கிருர். இக்காலத்தில் கோயில் கதவுகளெல்லாம் மூடப்படுகின்றன. இந்த சமயத்தில் ரதோற்சவத்தி (ராத்ஜாத்ரா

பிரமோற்சவம்)ன் ரதத்துக்காக 16 சக்கரங்களுடனமையப்பெற்ற ஒரு மகாரதம் தயாரிக்கப்படுகின்றது. அவருடைய ஸகோதரனுக்கும் சகோதரிக்கும் இரண்டு தனிசிறிய ரதங்கள் நிருமிக்கப்படுகின்றன. யாத்திரிகர்களெல்லோருஞ் சேர்ந்து இம்மூன்று இரதங்களையும் ஒருமைல் தூரத்திலுள்ள தோட்டத்தின் மத்தியிலுள்ள கோயிலுக்கு இழுத்துக்கொண்டுபோய் வைக்கிறார்கள். உடனே யாத்திரிகர்களெல்லோருந் தங்கள் தங்களூருக்குத்திரும்பி விடுகிறார்கள். ஷை மூன்றுசுவாமிகளும் ஷை தோட்டத்தில்பத்துநாள் தங்குகின்றன. திரும்புகாலில் கூலியாட்களைக்கொண்டு இம்மூன்று ரதங்களையும் கோயில் நிலைக்குக் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். யாத்திரிகர்களிலொவ்வொருவரும் தாங்கள் செய்த பாவங்களை இம்மூர்த்தியா லடிபட்டு பரிகரித்துவிடப்பட்டனவென்பதற்கறி குறியாக ஒவ்வொரு வர்ணப்பிரம்பை வாங்கிக்கொண்டு போகிறார்கள். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் முதலிய ஐரோப்பியவாஸஸ்தலங்கள்கச்சேரி முதலியவைகள் கடற்கரையில் ஒருவிஸ்தாரமான தனிஜாகாவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அநேக பங்களாக்களும் ஹோட்டல்களுமிருக்கின்றன. இவ்விடத்தில்கோடை மிதமாகவும், பொதுவாக தேகசௌக்கியமுள்ளதாகவுமிருக்கிறது. விஸிடர்கள்கடற்கரைஹோடல்களில் நிதானமான வாடகைக்கு ஜாகாக்களைப் பெறலாம். ஷை உற்சவகாலத்தில் ஸ்ரீ ஜகந்நாதத்தைச்சுற்றி சுமார் 30 மைல் நாலாபக்கங்களிலும் எங்கும் கூட்டமாகவேயிருக்கும். இந்தப்பூரி என்னும் ஸ்ரீ ஜகந்நாதம் கிழ் சமுத்திரக்கரையில் கல்கத்தாவிலிருந்து கார்க்பூர்மார்க்கமாய் 311 மைலும், சென்னப்பட்டணத்திலிருந்து பெஜவாடா, ராஜமகேந்திரம் வழியாய் 777 மைலுமிருக்கின்றது. இந்தியாவின் எந்த யாத்திரை ஸ்தலத்திலும் இஜ்ஜகந்நாதத்தைப்போல் சாதாரண நாள்களிலும், ஷை ஆடி அமாவாவாசைக்குப் பிரம்மோற்சவ காலத்திலும் கூடும் யாத்திரிகர்களினளவு எந்த தேசத்திலும் கிடையாதுள்ள அத்துணை மகிமைபெற்றிருத்தலால் இந்த ஸ்ரீஜகந்நாத யாத்திரையை ஒவ்வொருவரும் அவஸ்யம் செய்யவேண்டிய மாண்பினும் மாண்புடைத்தென்க. சர்வம் ஸ்ரீ ஜகந்நாதமென்பது பரமாநந்தம்; இவ்வானந்தத்தை நேரிற் பார்த்தாலல்லது விளக்கிமுடியாது.



குருக்ஷேத்திரம்.

குருக்ஷேத்திரம்:—என்பது திரிஷத்வதி, ஸரஸ்வதிந்திகளுக் கிடையில் 70மைல் நீளமும் 20மைல் அகலமும் 1167சதுரமைல் விஸ்தீரணமுமுள்ள புண்ணிய க்ஷேத்திரப் பிரதேசம். இந்தப் பூமியில்தான் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் மகாபாரதயுத்தம் நடந்தது. இந்தபூமியில்தான்பூர்வத்தில் நம்முன்னோர்

களான ஆரியர்கள் ஹிமாசலத்துக்கு வடக்கிலுள்ள மத்திய ஆசியாவிலிருந்து வந்து முதல் முதல் தங்கி நம்மேன்மைத்தங்கிய இந்துமதத்தைப் பிரசங்கித்து ஸ்தாபித்தது. இக்குருக்ஷேத்திரப்ரதேச ராஜ்யத்துக்குஸ்தானேஸ்வர் என்னும் பட்டணம் மத்தியப்ரதேசமாயும் ராஜதானியாயுமிருந்தது; இப்போது அந்த ராஜ்யமொழிந்து பஞ்சாப்மாகாணத்தைச்சேர்ந்த ஒருஜில்லாவாயிருக்கிறது. இக்குருக்ஷேத்திரத்துள் 352 புண்ணிய யாத்திரை ஸ்தலங்களிருக்கின்றன. அவைகளுக்குள் முக்கியமானவை ஸ்தானேஸ்வர்,பெய்ஹ்றவாவுக்குஇருபதுமைல்தென்மேற்கிலுள்ளவைகளே அதிகமுக்கியமானவை. ஸ்தானேஸ்வர்என்பதுகல்கத்தாவிலிருந்து வடமேற்கில் 1000 மைல் தூரத்திலும் டில்லியிலிருந்து வடக்காக 111மைலும் அம்பல்லா கண்டோன்மெண்டிலிருந்து தெற்காக 26மைலும் டில்லி-அம்பல்லா-கால்கா இருப்புப்பாதையில் ஒருரெயில்ஸ்டேஷனுமாயிருக்கிறது, மேலும் இக்குருக்ஷேத்திரமானது யமுனாதீரத்துக்கடுத்த பச்சிமத்திலிருக்கிறது. இக்குருக்ஷேத்திரதீர்த்தம் ஸ்தானேஸ்வர் ரெயில்ஸ்டேஷனிலிருந்து ஒருமைல் தூரத்தில், நீளத்தில்ஒருமைலும் அகலத்தில்கால்மைலுமுள்ள பரிசுத்ததீர்த்தவிசேஷத்துடன் கூடியஒருபெரியதடாகமாயிருக்கிறது. இத்தடாக மஹாதீர்த்தத்தின் மூன்றுதீரங்களிலும்உன்னதமான மூர்த்திகளோடுங்கூடிய தேவாலயங்களாலும், காட்ஸ் (படித்துறைஸ்நாநகட்டடங்கள்)களினாலும், ஜபதபமண்டபங்களினாலும், சூழப்பெற்றுப்பிரகாசிக்க, தடாகத்தின்மத்தியில் (இக்கோயிலுக்குக்கரையினின்றும்போவதற்காகஒருவிஸ்தாரமான கருங்கல் கட்டிடமார்க்க மமைக்கப்பட்டிருக்கிறது)முக்கியமான தேவாலயம் அநேகசிகரங்களோடும்,ப்ராகாரம், அர்த்தமண்டப,மஹாமண்டப, சபாமண்டப,கர்ப்பக்கிரகங்களோடுங்கூடி எண்ணிறந்த நக்ஷத்திரங்கள்மத்தியில் பிரகாசிக்கும் ஒருசந்திரனைப்போலஜ்வலித்துக்கொண்டிருக்கிறது. இக்குருக்ஷேத்ரமகிமையைநம்ஐந்துவேதங்களும் சுருதிஸ்மிருதிகளும்க்ஷேத்திரபுராணாதிகளும்வியந்துகூறுகின்றன. அவைகளில் இக்குருக்ஷேத்திரத்தை சதுர்முகப்பிரம்மாவினால் தெரிந்தெடுக்கப்பட்ட புண்ணிய ஸ்தலமென்றுபொருள்படும் "பிரம்ஹவரிதா" என்றும்சொல்லப்படுகிறது,இக்குருக்ஷேத்திரதீர்த்தத்துக்கு ஸ்தாணுதீர்த்தமென்றும்அதற்குமத்தியிலுள்ள மூர்த்திக்கு ஸ்தானேஸ்வரரென்றும் அவ்வூருக்கும்அதேபெயரும் பொருத்தப்பட்டது இத்தாணுதீர்த்தத்தில் தினந்தோறும்மத்தியானத்தில் ஸ்நாநம்செய்வதுவிசேடமாயினும் அயனம்; அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு சங்கிராந்தி, சந்திர,சூரியகிரகணங்கள், அர்த்தோதயமஹோதய

புண்ணியகாலங்களின் பிரபாவத்தைஎழுதிமுடியாதாயினும்இரு ப்புப்பாதைபோட்டபிறகுநேர்ந்தமுதல் சூரியக்கிரகணபுண்ணிய காலமாகிய 6-4-1894ல் இக்குருக்ஷேத்திரதீர்த்த ஸ்நாநத்துக்குக் கூடினஜனசங்கியை சுமார் பத்துலெக்ஷமென்று கணக்கிடப்பட் டிருக்கின்றது; இப்பெருங்கூட்டத்தைப்பார்த்துச் சமீபத்திலுள் ள அம்பல்லாகண்டோன்மெண்டும் திகிலடைந்து கலங்கிவிட்ட தென்பதினுல்,இக்குருக்ஷேத்திர தீர்த்தமஹிமையை ஒருவாறு நீங்களே மனதாற்பாவிக்கக்கூடுமென்று நம்பப்படுகிறது.

அமிருதசரஸ்:—டில்லியிலிருந்து வடமேற்காய் 278மைல்தூ ரத்தில் பஞ்சாப்தேசத்தைச்சேர்ந்த இருப்புப்பாதையிலுள்ள சிங்=ஸிக்ஜாதியாருக்கு முக்கியஸ்தலமாகிய ஒருபெரியபட்டண ம்;இந்நகரிலுள்ள சந்திரகாந்தக் கற்களினுல்கட்டப்பட்டிருக்கிற விஸ்தாரமான அமிருதசரஸ்என்னும் தடாகமத்தியிலுள்ளஸ்வர் ணம்-தங்கக்கோயிலுக்குள்ஸிக்கியர்களின்மதசம்மந்தமானகிரந்த ங்கள் காப்பாற்றிவைக்கப்பட்டிருக்கின்றன. இதைஆதரித்துப்பூ ஜித்துவரும் மதாசாரியர்களிங்கு அறுநூறுபேருக்குமேல்இவிட த்திலேயே வசிக்கின்றனர். இச்சுவர்ணதேவாலயத்தைப்போல் சுவர்ணத்தாலாகிய தேவஸ்தானம் இவ்விந்தியாவிலாவது உலக த்திலாவது வேறெங்குமில்லை; இதுபச்சிமகாசி.

டோல்பூர்.—ஆக்ராவிலிருந்து தெற்கேக்வாலியருக்கு போ கும்மார்க்கமத்தியில் இருப்புப்பாதைவழியாய் 42 மைல்தூரத்தி லுள்ள இச்சமஸ்தானபட்டணத்திலிருந்து இரண்டுமைலில் ஸ்ரீ கிருஷ்ணபகவானுல் சிருஷ்டிக்கப்பட்ட மகத்ஸரோவர தீர்த்தமி ருக்கிறது.

ஜாமல்பூர்:-கல்கத்தாவிலிருந்து நேர் வடமேற்குத்திசையில் (இருப்புப்பாதைவழியாக 297மைலில் கங்காநதியின்பேரிலுள்ள இந்நகருக்கு மூன்றுமைல்தூரத்திலுள்ள சீதாகுண்ட தீர்த்தவி சேஷம். நேர்விரோதமாக இத்தீர்த்தம் உஷ்ணோதகத் (வெந்நீர்ச் சுனைகள் வெந்நீரூற்றுகள்)தால் நிறைந்திருக்கிறது.



டேராடூன், ஹிமாசலம் அல்லது ஹிமோத்கிரி அடிவாரம்.

டேராடூன், ஹிமாசலம் அல்லது ஹிமோத்கிரி.

டேராடூன்:—ஹரித்துவாரத்தினின்று சற்றுவடமேற்குத்திசையாக இருப்புப்பாதைவழியாக 32 மைலில் இமயகிரியினடிவாரத்திலுள்ளவோர் பட்டணம், இதற்குச்சுற்றிலுமுள்ளகாடுகளில் காட்டானைகள், புலி, காடி முதலியவைகள் ஜாஸ்தி, இவிடத்தில் ஸ்ரீ ராமர் தம்பிலெட்சுமணருடன் இராவணாசுரனைவதைக்கத்தவம்புரிந்தார்; அது பரமசிவனுடைய முக்கிய வாசஸ்தானமாகிய கேதாரகண்டத்திலுள்ளது; இவிடத்திற்றான் பாண்டவர்கள்சுவர்க்கம்புகுதற்கு முந்திதங்கிப்போனவிடம். கோபாதபள்ளத்தாலுண்டாகிய ஸரோவரத்தைத்தாண்ட இங்குதபசுசெய்துகொண்டிருந்த 60000 ரிஷிகளையும்பார்த்து இந்திரன்பரிகாஸஞ்செய்ய அந்தரிஷிகள் கோபங்கொண்டு அவ்விந்திரனைத் தொலைக்கும்படியாக வேறு இந்திரனைத்தங்கள் தபோபலத்தால் சிருஷ்டித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து பிரம்ஹா (நம்தொழிலும் போய்விடுமோ வென்று) அவர்களிடம் பிரத்தியக்ஷமாய் அவர்களைச் சமாதானப்படுத்திவேண்டிய வரமளித்ததும் இந்த இடமே. இவிடம் தவசித்தி சீக்கிரம். இதற்குக்குருத்துவாரமென்றும் பெயர், ஏனெனின் சற்குருவின் கிருபா கடாக்ஷம் வெகுசீக்கிரத்தி லிவிடத்தில் பெறப்படுகின்றமையால்.

கார்நல்:—டில்லியிலிருந்து அம்பல்லாவுக்குச் செல்லும்ரெயில்மார்க்கமத்தியில் டில்லியிலிருந்து வடக்குத்திசையில் 76மைலிருக்கிறது. குருக்ஷேத்திரயுத்த பூமியில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடந்த மஹாபாரத யுத்தத்துக்கு முக்கிய காரணமாயிருக்கின்ற கர்னமகா ராஜனால் உற்பவிக்கப்பட்ட இந்நகரத்தில் கர்னனுடைய சரித்திர சம்மந்தமான இடங்களிருக்கின்றன.

பாகல்பூர்:—கல்கத்தாவிலிருந்து வடமேற்காய் 265 மைலில் இருப்புப்பாதையில் கங்காநதியின் பேரிலிருக்கிற இப்பட்டணத்துக் கருகிலோடும் கங்காநதி மத்தியில் ஒரு மலைக்குன்றிலிருக்கப்பட்ட கோபிநாத் தேவஸ்தானம் பேர் பெற்றது.

வினுகோண்டா:—குண்டக்கல்—பெஜவாடா இருப்புப்பாதையில் குண்டக்கல்லிலிருந்து வடகிழக்காய் 208 மைல் தூரத்திலுள்ள இந்த ஸ்டேஷனுக்குச் சமீபத்திலுள்ள இதேபெயருள்ள மலையின் பேரில், ஸ்ரீ ராமர் எழுந்தருளியிருந்தனர்; சீதையை இராவணன் தூக்கிக் கொண்டுபோனதாக முதல் முதல் கேட்ட இடம். தங்க மிக்கசௌகரியம்.

கோரிபிட்னூர்:—குண்டக்கல் பெங்களூர் இருப்புப்பாதையில் குண்டக்கல்லிலிருந்து தெற்கே 126 மைலில் உத்தரபினகினி தீரத்திலுள்ள இவ்வூர் பாண்டவர்களின் ~~மாமா~~வான விதுர மகாராஜனுக்குரிய இடம்.

டோட்டகுருகாட்:—மேலே சொன்ன கோரிபிட்னூருக்கு அடுத்த ஸ்டேஷனாகிய இவ்வூர், ஷை நதிதீரத்தில் ஷை விதுரனால் சுமார் 4000 வருஷங்களுக்குமுன் வைத்துப் பயிராக்கப்பட்ட விதுராஸ்வத்தமென்னும் பழமையாகிய அரசமரத்தின் அஸ்வத்த நாராயணன் சந்நிதிக்கு யாத்திரை செய்வோரது தீராதவியாதிகளெல்லாம் தீர்ந்துவிடுகின்றன; இத்தலத்திற்கு யாத்திரை செய்யும் எண்ணிறந்தோரால் ஏராளமான காணிக்கை இத்தேவஸ்தலத்துக்கு வசூலாகின்றது.

பம்பாய்:—சென்னையிலிருந்து அரக்கோணம், ராயச்சூர், டோண்டு ஜங்ஷன், புனா, கல்யாணி ஜங்ஷன்களின் வழியாய்794 மைல் தூரமும் மெயிலானால் ரூ. 11—8—0வும் ஆர்டினெரியானால் ரூ 8—5—0வும் ரயில்சார்ஜ்; இது மேலசமுத்திரக் கரையிலுள்ள பல தீவுகளால் கட்டப்பட்டு மூன்று பக்கம் சமுத்திரத்தையுடைய ஒரு தீபகல்பமாக விருக்கிறது. இந்நகரின் துறைமுகத்தைப் போல் உலகத்தில் வெகுசொற்பம்; மற்றெல்லா விஷயங்களிலும் கல்கத்தாவுக் கடுத்த படியாயிருக்க துறைமுகத்தினழகு அதனிலும் மேன்மையுள்ளது. இம்மாநகரில் திராவிடரநேகர் மற்ற வடதேயத்தாரைப் போலவே குடியேறி பலதொழில்களையும் புரிகின்றனர். இந்நகரத்தில்செல்வத்தால்மேம்பட்டவர்கள் பார்ஸிஜாதியார், கல்கத்தாவைப் போலல்லாமல் ஆங்காங்கு அநேக தருமசாலைகளும் அன்னசத்திரங்களும் தேவாலய•மடாலயங்களு மிருக்கின்றன. ஏழைகளுக்கு விசேஷதருமங்கள் செய்யப்படுகின்றன. சிலபிரபுக்கள் காசியாத்திரை போவோருக்கு ரெயில் சார்ஜ பூராவும் கொடுத்தும், வேறுசிலர் பாத்திரங்கள் ஆடைகள் முதலியவுமீந்தும் கொடுக்கின்றனர். கொஞ்சம் நல்ல சாரீரத்துடன்கூடி ஸ்ரீமத் ராமாயண, பாரதங்களை வாசித் தருத்தஞ்சொல்ல வல்லோருக்கு அதிகமான திரவிய லாபங்கிடைக்கும். இம்மாபுரியில் பார்க்கவேண்டிய விடங்களாவன:—டவுன்ஹால், தங்கசாலை, ஸெண்ட்தாமஸ் கதீட்ரல், துறைமுகம், மாளுமி கட்டிடங்கள், இஞ்சினீரிலாகா கட்டிடங்கள், தபால் தந்தி ஆபீஸ்கள், ஹைகோர்ட், கவர்ன்மெண்டு ஹவுஸ் கட்டிடங்கள், விக்டோரியா டெர்மினஸ் ரெயில்வேஸ்டேஷன், கைத்தொழில் கலாசாலையும், மண்வேலை செய்யுங் கட்டிடங்களையும் பார்க்கத் தவறவேகூடாது. க்ரூபோர்ட் மார்க்கெட்டைக்

காலைவேளையில் பார்க்கவேண்டும்,த்விரவும்மிருகாசயமியூஸியமும்,கிழவர்களுக்கும், வயதுசென்ற மற்றஜீவப்பிராணிகளுக்கு மேற்பட்டிருக்கும் தர்மசாலையும் வெகு விநோதமானது. பார்ஸி ஜாதியர் தங்கள்பிணங்களை கழுகு முதலியபறவைகளுக்கு எறியும் (இவர்கள் சுடுவதுமில்லை புதைப்பதுமில்லை)டவர்ஆப்ஸைலென்ஸ்-மவுனகிரியென்னும் மலையிலிருந்துபம்பாய் பட்டணம் முழுமையையும்நன்ருய்ப்பார்க்கலாம்;மற்றப்படி இதுஒருபெரிய இராஜாங்கதேசவேந்திர நகராதலான் சாதாரணஜனங்களுக்குஒவ்வொன்றும் (ஒருபிரபுவின் வீடுகூட) அதிசயமாய்த்தோன்றும்.

ஜெய்ப்பூர்:—துவாரகைமதுரா இருப்புப்பாதை மார்க்கத்தில் மதுராவிலிருந்து தென்மேற்காக 160மைல்தூரத்திலுள்ள இந்நகரின்அழகுக்காகவே பார்க்கவேண்டியதாயிருக்கிறது. இவிடத்தில்தர்மாத்மாவான மகாராஜாவசிக்கிருர், அநேககோயில்கள், குளங்கள், மியூஸியம் அரண்மனை, ஜெய்ப்பூரிலிருந்து ஏழுமைலிலுள்ள ஆம்பா என்னும் புராதன இராஜதானி, புலி, கரடி கட்டிட சாலைகள் முதலியவைகள் பார்க்கத்தகுந்தது, ஜாகாமுதலியவைகளுக்கு தர்மசாலைகள் முதலிய சௌகுரியங்களுண்டு. இதுஇந்தியாவின் தற்காலசுதேசராஜ்ஜியங்களில் எல்லாவிஷயங்களிலும் மேலானது. பிரதிதிங்கட்கிழமை பிற்பகலில் இவ்விடத்திலும் மகாராஜாவின் யுத்தபாண்டுவெகுநேர்த்தி. இவிடத்திலுள்ள காளிகோயிலுக்குப்பூர்வத்தில் தினந்தோறும் நரபலிகளைக் கொடுத்துவந்ததற்குப்பதிலாக இப்போது தினந்தோறும் ஒரு ஆடுபலி கொடுக்கின்றனர். இந்நகரின் வீதிகளின் ஒழுங்கு, நேர்த்தி, சுத்தமும் எதற்குமில்லை.

வைத்தியநாத்.

வைத்தியநாத்:—கல்கத்தாவிலிருந்துவடமேற்கில்202மைலில்கங்காதீரத்துக்குத் தெற்கிலுள்ள இப்புண்ணியபதியில் இருபத்திரண்டு சிவாலயங்கள் ஒரேயிடத்தில் சேர்ந்தாற்போலிருக்கின்றன.

அவைகளில் முக்கியமானதும் பழமையானதும் வைத்தியநாதராலயமே; இத்தலத்துக்கு இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும்யாத்திரை செய்கின்றனர்.

க்வாலியர்:—மதுராவிலிருந்து தென்கிழக்கில் இருப்புப் பாதை மார்க்கமாய் 105 மைலுள்ள இப்புராதன பட்டணம் தர்மாத்மாவான ஸிந்தியாமஹாராஜாவின்பிரதானநகரம். இம்மஹாராஜா ஸ்ரீ காசியில் ஸ்தாபித்திருக்கும் அன்னதான சத்திரம் மற்றெல்லாவற்றிலும் பெரிதும் விசேஷ தருமமுள்ளதுமாயிருக்கிறது. இப்பட்டணத்தின் கோட்டை கொத்தளங்களினழகும் பலமும் இந்தியாவில்வேறெந்தகோட்டைக்குமில்லையென்னலாம்; தர்மசாலைகளும் அன்னசத்திரங்களும் மற்றெல்லாசௌகரியங்களு முண்டு.

லாகூர்:—பிஞ்சாபின் பஞ்சநதிகளிலொன்றாகிய ரவிநதியின் பேரில், டில்லிக்கு வடமேற்கில் 346 மைலிலிருக்கிற இப்புராதனபட்டணமும் மேற்சொன்ன பட்டணங்களைப் போல் எல்லா விஷயங்களும் பொருந்தி பார்க்கத்தகுந்ததாயிருக்கிறது. இவிடத்தில் மகமதியரும் இந்துக்களும் சமபாகமாக விருக்கிறார்கள். இதில் ஒரு பெரிய மிலிடெரி கண்டோன்மெண்டிருக்கிறது.

அட்டாக்:—ஸப்தநதிகளிலொன்றாகிய ஸிந்துநதி தீரத்திலுள்ள இந்த ரெயில்வேஸ்டேஷன் டில்லியிலிருந்து வடமேற்காக 591 மைலிருக்கிறது. ஸிந்துஸ்நாநத்துக்காக இந்த ஊரைப் பற்றிப் பேசுகிறோமேயல்லது வேறில்லை. மேற்குறித்த லாகூரிலிருந்து இங்கு வரும் மார்க்கத்தில் பஞ்சநதிகளிலொன்றாகிய ஜீலம் ஸ்டேஷனிலோடும் ஜீலம்நதியில் தங்கியும், அவசியமானால் ராவல்பிண்டி ரெயில் ஸ்டேஷனிலுமிறங்கி வரலாம்; இந்த அட்டாக்குக்கு மேற்கில் 58 மைல் தூரத்திலுள்ள பெஷாவர் வரையிலும் இருப்புப்பாதை சென்று அதோடு முடிந்துவிடுகிறது. இந்தியாவின் 56 தேசங்களுள் அங்க, வங்க, கலிங்க, சௌராஷ்டர, மகதமென்னும் இவ்வைந்துக்கும் க்ஷேத்திர தீர்த்தயாத்திரைக்காகவன்றி போகக் கூடாதென்றும், ஸிந்து நதியைத் தாண்டி எக்காரணத்தாலும் போகக்கூடாதென்றும், போனால் ப்ரஷ்டராவரென்றும் நம்மதாசாரியர் கூறுகின்றனர். ஏனெனில் ஸிந்துநதிக்கு மேற்கில் மிலேச்சரது தேசம், ஷை ஐந்து தேசங்களிலும் ஆசாரங்களொன்றுமே கிடையாது. தவிரவும் வடக்கில் இமயமலை கிழக்கில் முன் சொல்லப்பட்டிருக்கிற த்வாரகை—மதுரா இருப்புப்பாதை லைன், தெற்கில் த்வாரகை—அதாவது குஜராத்திதேசம், மேற்கில் சிந்துநதி, இதற்குட்பட்ட

தென்வடல் சுமார் 800 மைல் கிழமேல் 400 மைல் அதாவது 320,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள இப்ரதேசத்தில் எவ்விதமான தீர்த்தமூர்த்தி விசேஷங்களுமிருப்பதாகத் தெரியவில்லை; (இப்பரதகண்டத்தைச்சேர்ந்ததாயிருந்தாலும்) அப்படி ஏதாவதொன்றிரண்டிருந்தாலும் இப்பிரதேசத்தில் மகமதியர்மூன்றிலிரண்டுபங்கும், ஹிந்துக்கள் மூன்றிலொரு பங்குமிருக்கிறார்கள், மகமதியர் ஜாஸ்தியாயிருத்தலால் அவிடத்திலுள்ள இந்துக்களும் பாதி மகமதியராயிருக்கின்றனர், ஆனால் இப்பிரதேசத்துக்கு ஷை ஐந்து தேசங்களைப்போல் தடைப் படுத்தப் படவில்லை.

லக்னெள:—ஸ்ரீகாசியினின்று ஹரித்துவாரத்துக்குப் போகும் மார்க்கத்தில் 190 மைல் தூரத்திலுள்ள லக்ஷ்மணபுரி என்னுமிந்நகர் இவ்விந்தியாவின் கல்கத்தா, பம்பாய், சென்னைநகரங்களுக்கடுத்த நான்காவது மாநகரமாயிருக்கிறது. இதுகௌமதி நதி தீரத்திலுள்ளது. பார்க்கவேண்டிய அநேகவிஷயங்களிம்மாநகரிலடங்கியுள்ளன.

நண்ரோ:—காசி மேலமார்க்கத்தில் புஸாவல் ஜங்ஷனிலிருந்து கிழக்கே நாகப்பூருக்குச் செல்லும் ரெயில் மார்க்கத்தில் ஷை ஜங்ஷனிலிருந்து 49 மைலுள்ள இவ்வூரில் பூமிக்குள் கட்டப்பட்டிருக்கிற காளிகா தேவிக்குரிய ஒரு கோயிலிருக்கிறது. இவ்விந்தியாவில் வேறெங்குமில்லை, பார்க்கத்தகுந்தது.

கஸ்ரா:— இகட்புரி:—பம்பாயினின்று மன்மாடுக்குச்செல்லும் இருப்புப்பாதையில் முறையே 75-85வதுமைல்களிலுள்ள இந்த இரண்டு ஸ்டேஷன்களுக்கும் மத்தியில் அநேக இடங்களில் மலைகளைக்குடைந்து ரெயில் உள்ளே செல்லுகின்றது, இதில் அதிக நீளமானதும் உயரமானதும் எஹிகெயான் என்னும்டன்னல், இது இவ்விந்தியாவிலுள்ள டன்னல்களுக்கெல்லாம் அதிக நீளமுள்ளதும் உயரமுள்ளதுமாயிருக்கிறது.

பூன்பூன்=புனப்புன:—(இதற்குவடக்கே கங்காதீரத்திலுள்ள பாடலீபுரம் 9மைல்) ஸ்ரீமத்கயாவிலிருந்து வடக்கே இருப்புப்

பாதை வழியாய் 49 மைலிருக்கிற இப்புண்ணிய க்ஷேத்திரத்தில் ஓடும் பூன் பூன் என்னும் நதியில் ஸ்ரீமத்கயாவில் பிதிரர்களுக்குப் பிண்டம் போடுவதற்கு முன்னால் இந்நதியில் தீர்த்த சிரார்த்தம் செய்யவேண்டும். இவிடம் இந்நதியில்போடும் பிண்டங்கள் பிதிரர்களின் கொடியபாதகங்களை யொழித்து கயாபிண்டங்களை யேற்கும்படியான பரிசுத்தராக்குகின்றன.

ஜோர்ஸப்பா நீர்வீழ்ச்சி:—சிவமொக்கா (மைசூர் ராச்சியம்) ரெயில்ஸ்டேஷனிலிருந்து 64 மைல் தூரத்திலிருக்கிற இதற்குப் போக 45மைலிலிருக்கிற ஸாகர் என்னும் சிறியபட்டணம் வரையில் குதிரை டோங்காவண்டிகள் கிடைக்கும் (ஆள் 1-க்கு சார்ஜ் ரூ 3) அங்கிருந்து வாடகைவண்டிகள் அமர்த்திக்கொள்ளவேண்டும். இந்நீர்வீழ்ச்சியைப் போன்றது உலகத்தில் வெகு சொற்பம். இந்தியாவுக்குள் இதுவே முதன்மையானது. இதற்குச்சமீபத்தில் காட்டுப்பாதையாய் ஸ்ரீங்கேரிமடம் இருக்கிறது. இந்நீர்வீழ்ச்சியினழகைப் பார்த்தாலொழிய சொல்லிமுடியாது. சர்வேஸ்வரனுடைய சிருஷ்டியில் இதுஒரு அபூர்வதிருவிளையாட்டு!

வைதரணீரோட்:—காசிகீழ் மார்க்கத்தில் ஸ்ரீ ஜகந்நாதத்துக்குப் பிரியும் கூர்டா ஜங்ஷன் ஸ்டேஷனின்று, வடக்கே 82 மைலில் இருக்கும் இந்த ஸ்டேஷனிலிருந்து இந்நதி பத்துமைலிருக்கிறது. தீர்த்த மூர்த்தி விசேஷம். இந்நதியில் ஸ்நாநஞ் செய்பவர்கள் பரலோகத்துக்கு (வேதத்திற் கூறியுள்ளவாறு) வைதரணீ நதியைத் தேவாம்ஸம் பெற்று இனிதில் கடப்பர். வண்டிகள் கிடைக்கும்) ஜாகா உண்டு.

புவனேஸ்வர்.

புவனேஸ்வர்:—ஷை கூர்டா ஜங்ஷனுக்கு அடுத்த வடக்கில் 12 மைலிலுள்ள இந்த மகா சிவக்ஷேத்திரம் மிகவும் பிரசித்திபெற்றது. ஒரு காலத்தில் 7000 கோயில்கள் இப்போதிருக்கும் கோயில்களைச் சுற்றிலுமிருந்தன, இப்போது அவைகளில் நல்லஸ்திதியில் 500-க்கு மேலிருக்கின்றன; என்ன அற்புதகாக்ஷி! ஏககாலத்தில் தனித்தனி விமானங்களோடு கூடிய ஐந்நூறு கோயில்களைத் தரிசிப்பது யாருக்குக்கிடைக்கும்!! இவைகளில் முக்கியமான தேவாலயம் ஐந்நூறு அடி சச்சதுரமுள்ள வெளிப் பிரகாரத்துள் விளங்கா நிற்கும் இலிங்கராஜ் மஹாதேவ். ஷை கம்பவுண்டுக்குள் மற்றுமநேக சில்லறை சிவாலயங்களிருக்கின்றன. அவைகளில் முக்தேஸ்வர் சிவாலயத்

தில் செய்திருக்கும் கருங்கல் வேலை, இழைப்பு வேலைகளின் நாணயமும், சிறப்பும் இவ்விந்தியாவி லெங்குமேயில்லை. மதுரை மீனாக்ஷிகோயில், ஆவுடையார்கோவில், சிதம்பரம் இவைகளெல்லாம் அதற்கப்புறந்தான். இவைகளைக் கட்டின மகராஜனின் னொன்றும், கட்டப்பட்ட சரியான காலமும் விளங்கவில்லை, மேற்குறித்த இலிங்க ராஜ்மகதேவ் தேவாலய கம்பவுண்டுக்குள் ஐரோப்பியர்விடப்படமாட்டார்கள். மற்ற கோயில்களுக்குள் போகலாம், ஷை இலிங்கராஜ் மகதேவ், முக்தேசர் முதலான கோயில்களினழகையும் மஹிமையும், ஐரோப்பியர் முதலானோர் பார்க்கும் பொருட்டு அவர்களின் வேண்டுகோளின்படி ஷை கோயில் கம்பவுண்டின் ஈசான்யத்தில் ஒரு பிளாட்பாரம் (உயர்ந்த மேடை) கட்டியிருக்கிறது.

சம்பா:—கல்கத்தாவிலிருந்துநாகப்பூருக்குப்போகும் இருப்புப்பாதையில் கல்கத்தாவிலிருந்து 412 மைல், நாகப்பூரிலிருந்து 289 மைலில் ஹஸ்த தேவ் நதிதீரத்திலிருக்கப்பட்ட மஹதேவ் சந்நிதானத்தில் எவ்வித வியாதிகளும்தீர்க்கப்படுகின்றன வென்பது வெகு பிரசித்தம்.

டன்டன்:—கார்க்பூர் ஜங்ஷனிலிருந்து தெற்காக 32 மைலிலுள்ள இக்ஷேத்திரத்தில் போஜராஜாவினால்கட்டப்பட்டிருக்கிற சிவாலயத்தின் சந்நிதியில் மிகவும் பெரிதும் உயரமுமான கருங்கல்லாலாகிய நந்தி யொன்றுமிருக்கிறது. சமாளேஸ்வரி சந்நிதிவிசேஷம், இதிலிருக்கிற வித்தியாதர், ஷஸங்கா என்னு மிரண்டு பெரிய அழகிய ஸரோவரங்களும் உள்ளாகவே ஒருபெரிய (இரண்டுக்கு மத்தியில் ஒருமைல் தூரம்) சுரங்கத்தினால் சேர்க்கப்பட்டிருக்கிறது, பார்க்கத் தகுந்தது.

கோலாகாட்:—கார்க்பூர் ஜங்ஷனிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும் இருப்புப்பாதையிலுள்ள, கார்க்பூரிலிருந்து 38 மைல் கல்கத்தாவினின்று 34 மைலிலுள்ள இந்த ஸ்டேஷனுக்கு பத்து மைலுக்குத் தெற்கில் ரூபநாராயண நதி தீரத்திலும் இந்நதி சமுத்திர சங்கமமாகுமிடத்திலுமுள்ள தம்லூக் என்னும் கிருஷ்ணார்ஜுன க்ஷேத்திரம் பிரசித்திபெற்றுவிளங்குகிறது; சுமார் மூவாயிரம் வருஷங்களுக்குமுன் அவிடத்திலரசாண்ட கைவர்த்தராஜவம்ச மஹாராஜாக்களால் கட்டப்பட்டவைகளாயிருந்தாலும், அவைகளை வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துப்போற்றி வரும் காரணத்தினால் பழுதடையாமலிருக்கிறது. இவிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும், அர்ஜுனனுக்கும் தனித்தனி இரண்டு கோயில்கள் வெகு பிரசித்தமாயிருக்கின்றன. இதன்வரலாறு:—

யுதிஷ்டிரமகாராஜா அஸ்வமேதயாகம் செய்யும்பொருட்டு ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனிருவர்களின் பாதுகாப்பின்மேல்பூப்பிரதக்ஷண திக்விஜயத்துக்காக விடப்பட்ட அஸ்வமானது, இந்நகரின் அரசகுமாரனால் பிடித்துக்கட்டப்படவே சதுரங்க சைனியங்களுடன் கூடிய அந்த ராஜகுமாரனுக்கும் அர்ஜுனனுக்கும் மிகவும் கடுமையான யுத்தம் வெகுநேரம் நடந்தும் அர்ஜுனனால் அந்த ராஜகுமாரனை ஜயிக்கமுடியாமல் சமீபத்திலிருந்த கிருஷ்ண பரமாத்மாவினிடம் சென்று இதற்கு யாதுகாரணமென்றுவினவ, ஹே அர்ஜுனா நீ யுத்தஞ் செய்பவனுடைய பிதா மிகவும் உறுதியுள்ள விஷ்ணு பக்தனாகையால் உன்பலம் அவனைவெல்லாது. வேறு உபாயத்தால் தான் ஜயிக்கவேண்டுமென்ற ரகசியத்தைச் சொன்னவுடனே, கிருஷ்ணார்ஜுனனிருவர்களும் பிராமணர்களாக மாறுவேடம் பூண்டு தந்திரத்தால் ஜயிக்க எண்ணங்கொண்டு அந்த விஷ்ணுபக்த ராஜனரண்மனைக்குள் சென்றார்கள். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அந்த மகாராஜா விஷ்ணு பக்தி செய்யும் விதத்தையும் அவனது வைராக்கியத்தையும் குறித்துக்காண்பித்தபோது. ஆ! இவ்வளவு பக்தியுள்ள அடியானை மோசஞ்செய்யஉத்தேசித்தது மிகவும் பாதகமானதென்று அர்ஜுனன் சொல்லவும், அவ்விருவரும் தங்கள் சுயரூபத்தை யடைதலும் மஹாராஜன் திடுக்கிட்டு "நான் இதுவரையில் எந்த பரமாத்மாவின் திருவருளுக்காகத் தவம், பக்திபுரிந்து வருகிறேனோ அந்தப்பரம்பொருளே பிரத்தியக்ஷமாய் விட்டதென்று மனமகிழ்ந்து அவர்கள் சரணாரவிந்தத்தை யடைந்து தங்கள் தரிசனம் எப்போதுமெனக்குக்கிடைத்துக் கொண்டு தங்கள் சந்நிதானத்திலிருக்கும்படியான வரத்தைக்கொடுக்கவேண்டு" மென்றுபிரார்த்தித்தபடி வரமளிக்கப்படலும், ஷை கிருஷ்ணார்ஜுனர்களின் திருக்கோயில்கள் கட்டப்பட்டு அதுமுதல் விளங்கிவருகிறது.

நருமதை உற்பத்தி:—ஜப்பல்பூரிலிருந்து பிரயாகைக்குப் போகும் இருப்புப்பாதையிலிருக்கும் கட்நி ஜங்ஷனிலிருந்து, தென்கிழக்காக பிலாஸ்பூர் இருப்புப்பாதையிலுள்ள பெண்ட்ரா ரோட் ஸ்டேஷனிலிருந்து 25 மைல் மேற்கே அமரகண்டக் ப்ரதேசத்திலிருக்கிற அமரநாத் தேவஸ்தானத்துக்குச் சமீபத்தில் இம்மஹா நருமதை நதி உற்பத்தியாகிறது. பச்சிமவாகினியாகிய இந்நதி, இக்கலி யையாயிரத்துக்குமேல் கங்கையினும் மேன்மையுடைத்தென்று மத்திய இந்தியா ஜனங்களெல்லோரும் ஏராளமாய யாத்திரை செய்கிறார்கள். இந்த ஸ்தலத்தில் சோணபத்திரை, மகாநதிகளு முற்பத்தியாகி ஒவ்வொன்றும்

தன் தன் மார்க்கமாய், இம்மூன்று நதிகள் பிரிந்தோடும் காக்ஷி அற்புதவானந்தீத்தினுமாநந்தம். சூரிய, சந்திர கிரஹண புண்ய காலங்களில் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வெகு தூரங்களிலிருந்து வருகிறார்கள். வெகுப் பிரஸித்த புண்ணிய தீர்த்த விசேஷம்.

அஹியரி:—கல்கத்தாவுக்கு நேர்வடமேற்கில் 320மைல் தூரத்திலிருக்கிற"காம்டௌல்" ரெயில்வே ஸ்டேஷனிலிருந்துஒருமைலிலிருக்கிற இந்தயாத்திரைஸ்தலத்தில் கௌதமபத்னியான அகல்யை பரகதியடைந்தவிடம், ஸ்ரீராமர் தேவாலயம் பிரபலம்.

அஹோபலம்:—கர்நூல்ஜில்லா நந்தியால் ரெயில்ஸ்டேஷனிலிருந்து 30 மைலிலிருக்கிற இவிடத்துக்கு (ஒருபிரபலமான மடம் உண்டு)ஒருமைலிலிருக்கிற மலையின் அடிவாரத்தில் ஒன்று, மத்தியில் ஒன்று, உச்சியில் ஒன்று ஆக மூன்று தேவாலயங்களிருக்கின்றன.

புஷ்கரம்.

புஷ்கரம்:—மதுராவிலிருந்து தென்மேற்கில் 220மைலிலிருக்கிற ஆஜ்மீர் ரெயில்வேஸ்டேஷனுக்கு ஏழுமைல் தென்மேற்கிலிருக்கிற இந்த சதுர்முகப்பிரம்ஹா க்ஷேத்திரம் மிகப்பிரபலமானது; இவ்விந்தியாவுக்குள் தனி பிரம்ஹாலயம் வேறெங்குமில்லை.

அமரகண்டக்:—கல்கத்தாவுக்குத் தென்மேற்கில் 508 மைலிலுள்ள பெந்த்ராரோட் ஸ்டேஷனிலிறங்கிச் செல்லவேண்டும்; இது நருமதையினுற்பத்தியுடன், ஸ்ரீகாளிதாஸ மஹாகவியினுற்பத்திஸ்தலமாயுமிருக்கிறது.

அமர்நாத்:—பரமசிவன் சதாவஸித்துக் கொண்டிருக்கிற இப்புண்ணிய க்ஷேத்திரம் காஸ்மீரத்திலிருக்கிறது. கல்கத்தா

வினின்று வடமேற்கில் 1393 மைலிலுள்ள ராவல்பிண்டிவரை யில் இருப்புப்பாதையாலும், அங்கிருந்து காஷ்மீர ராஜதானியா கிய ஸ்ரீநகர்மார்க்கமாய் 227½ மைல் குதிரைடோங்காவண்டி மூலமாயும் செல்லவேண்டும்.

அம்பர்நாத்:—ஆதியந்தமில்லாதவன்:—இச்சிவ க்ஷேத்திரம் பம்பாயிலிருந்து ராயச்சூர் மார்க்கத்தில் 38 மைலிலுள்ளது, இக் கோயிலின் அழகுக்கு நிகர் இவ்விராஜதானியிலில்லை.

அம்ரோட்டி.

அம்ரோட்டி:—பம்பாயிலிருந்து வடகிழக்காய் 419 மைலில் (நாகப்பூர் சமீபம்) உள்ள இவிடத்தில்தான் விதர்ப்ப ராஜா ருக் மின்சகோதரி ருக்குமணியை சிசுபாலனுக்கு விவாகஞ் செய்யு முன்னர், நடந்த பூர்வாங்கங்கள் நடத்தப்பட்டபோது ஸ்ரீகிரு ஷ்ணபகவானால் ருக்மணியைத் தூக்கிக்கொண்டு போய், அவ்வி வாகத்தை விக்னேஸ்வர பூஜைசெய்யாதால் தடைசெய்தது.



அம்ரேஷ்வர்.

அம்ரேஷ்வர்:—முன்சொன்ன ஆஜ்மீரிலிருந்து தென்கிழக் காய் 356 மைலும் கண்ட்வாஜங்ஷனிலிருந்து வடமேற்காய் 37

மைலினுமுள்ள மொர்டாகாஸ்டேஷனிலிருந்து 7 மைலில் நருமதா தீரத்தினுள்ள இப்பிரபல சிவக்ஷேத்திரம் ஹோங்காரஜி மஹாதேவருக்குரியது; இதற்கு ஹோங்காரமென்னும் பெயருமுண்டு. இப்புராதானப் பிரஸித்த தேவஸ்தானம் ஸ்ரீமஹாபாரதகாலத்தில் கட்டப்பட்டது.

அந்தர்வேதி.—மதிராஸ் ஸ்டேஷனிலிருந்து வடக்கில் 347 மைலில் நிடதவோலு ஸ்டேஷனிலிறங்கிச் செல்லல் வேண்டும். இவிடம்மாகசுத்த ஏகாதசியில் நடக்கும் "சப்தசாகனயாத்ரா" வெகுவிசேஷம்.



அரியபாத் அல்லது ஹரிபாத்.

அரியபாத் அல்லது ஹரிபாத்:—கொல்லம் ரெயில்வேஸ்டேஷனிலிருந்து 36 மைலினுள்ள இவ்வேல்யுதர் க்ஷேத்திரத்தில் வருஷத்தில் பிரபலமான மூன்று உற்சவங்கள் நடத்தேறி வருகின்றன.

அதிரலா:—மதிராஸிலிருந்து 137 மைல் வடமேற்கிலுள்ள ராஜம்பேட்டை ரயில்ஸ்டேஷனிலிருந்து 6 மைலில் செய்யாற்றங்கரையினுள்ள இத்தலதேவாலயத்துளமைபப்பெற்றிருக்கிற புஷ்கரணி தீர்த்தத்தில்தான், ஸ்ரீமஹாவிஷ்ணுவினவதாரமாகிய பரசுராமர்தன் "மாதுர்ஹத்யை" தாயைக்கொன்ற கொடும்பாவத்தை நிவர்த்தித்துக் கொண்டனர். மஹாசிவராத்திரி ஸ்நாநவிசேஷம்.

அவநி:—மதிராஸிலிருந்து பெங்களூர் மார்க்கத்தில் 176 மைலில் பௌரிங்பேட் ஸ்டேஷனிலிருந்து 22 மைலிருக்கிறது, இவிடத்தில் ஸ்ரீராமர், ராவணவதஞ் செய்து திரும்புகாலில் தங்கியருளின ஸ்தலமுமன்றி, சீதாபிராட்டியார் ஸ்ரீராமரால் ஆரண்யத்தில் கொண்டுபோய் விடப்பட்ட பிறகு, இவிடத்துள்ள ஸ்ரீ வால்மீக மகரிஷி ஆச்சிரமத்தில் தான் தங்கியிருந்து குச, லவாள் என்னும் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றது; தவிரவும் ஸ்மார்த்த மடம் விசேஷமாய் ஒன்றுண்டு.

பலிகட்டம்:—சென்னப்பட்டணத்திலிருந்து வடகிழக்காய் 439 மைலில் நரஸப்பட்டணம் ரயில்வேஸ்டேஷனிலிருந்து 23 மைலிருக்கிறது; வராஹநதிக்கரையிலிருக்கிற இவிடத்தில்தான் பலிசக்கிரவர்த்தியாகஞ் செய்து மோக்ஷமடைந்தது; ஷி யாக சாலையில் நாளைக்கும் யாகச்சாம்பல் வெட்ட வெட்ட வந்து கொண்டேயிருக்கிறது.

பத்ட்ராஸ:—அயோத்தி ஸ்டேஷனிலிருந்து தெற்கே 12 மைலிலுள்ள இவிடத்தில்தான் ஸ்ரீராமன், பரதனைச் சந்தித்தவிடம்; இத்தலம் மஹாநதிக்கரையிலிருக்கிறது. இதற்குச்சமீபத்திலுள்ள "பரதகுண்டத்தில்ஸ்ரீராமநவமியில்ஒருமேலா"=உற்சவம் நடத்தப்படுகிறது.

பாண்டக்:—பம்பாயிலிருந்து நாகப்பூருக்குப்போகும்மார்க்கத்தில் வார்டாஜங்ஷனிலிருந்து தென்கிழக்கில் 72 மைலிருக்கிற சண்டாஸ்டேஷனிலிருந்து, மேற்கில் 18மைலிலுள்ளது; இவிடத்தில்தான் ஸ்ரீமஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிற "ஸம்கர்ண" என்னும் அஸ்வமேதயாகக்குதிரையுத்தம் நடந்த பத்ராவதி பட்டணமிருந்தது; இதற்குச்சான்றாகசமீபத்திலிருக்கிற திவாலா, விஞ்சஸனி பர்வதங்களில் பத்ராவத் தேவஸ்தானமும் ஸ்ரீபீமனுடைய பிரம்ஹாண்டமான பாதங்களும் இடிந்துபோன கோட்டை கொத்தளங்கள், வாபி, கூப, தடாகாதிகளுமிருக்கின்றன.

டாகர்:—பம்பாயிலிருந்து வடக்கே காசிமார்க்கச்சமீபத்தில் 289 மைலிலுள்ள ஆநந்த் ஸ்டேஷனிலிருந்து 20 மைலிலுள்ள இத்தலத்தில், த்வாரகையினின்று கொண்டு வரப்பட்டிருக்கிற ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் தேவாலயம் வெகு பிரசித்தம்; இவிடமிருந்து வடக்கே 10 மைலில் உஷ்ண நீர்ச்சுனைகள் வெகு விசேஷம்.

டாம்ரோயன்:—கல்கத்தாவிலிருந்துகாசிக்குச் செல்லும் மார்க்கத்தில் 411வது மைலிலிருக்கிற பக்ஸார்ஸ்டேஷனிலிருந்து

10 மைலிலுள்ள இஷிடத்தில்தான் கௌதமபத்நியான அஹல்யைசிலை=கல்ரூபசாபத்தினின்றும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியினது ஸ்ரீபாதஸ்பரிசத்தினால்விடுபட்டு திவ்யமங்கள தேஜோ ரூபத்தைப்பெற்று சுவர்க்கஞ்சார்ந்தது.

தேவ்பந்த்:—டில்லியிலிருந்து வடமேற்கில் 90 மைலில் இவிடத்திலுள்ள் தேவிகுண்ட் மென்னும் ஒரு அழகான சிறிய ஏரிக்கரைகளில் அநேகஸ்நாநகட்டங்கள், தேவாலயங்கள், ஸ்தி பர்த்தாவுடனுயிர்துறத்தல்) ஸதிமடாலயங்களால் சிறப்புற்று விசேஷபுண்ணிய தீர்த்தயாத்திரையாகவிளங்குவதற்குமுக்கிய காரணம், இவ்விடத்தில் தான்பஞ்சபாண்டவர்கள் முதல்அக்ஞாதவனவாஸஞ்செய்தக்ஷேத்திரம்,

டிவால்வாரா.

டிவால்வாரா:—புனவிலிருந்து 97மைல்தெற்கிலிருக்கிற அர்வி ரோட்ஸடேஷனிலிருந்துமேற்கேவரதாநதிதீரத்திலுள்ள இச்சிறு கிராமத்தில், ருக்மணிதேவியின் அதிஅழகான தேவாலயம் மிகப்பரிவாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இக்கிராமத்துக்கு நேர் அக்கரையிற்றான் ஸ்ரீமத் பாகவதம் தஸமஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற குண்டினீபுரம் பூர்வத்தில்பிரகாசித்தது; இக்குண்டினீபுர அரசனும் விதர்ப்பதேச ராஜனுமாகிய பீமக்

ராஜனுடைய செல்வக்குமாரிதான் நம் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு விவாகஞ்செய்து கொடுக்கப்பெற்றது.

எற்ராண்டல் ரோட்:—பம்பாயிலிருந்து 311 மைல் வடக்கி லிருக்கிற இந்த ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 25 மைலில் "அநபதேவ்" உஷ்ணநீர்ச்சுனைகளும், அதற்குமேல் சச்சதுரமான ஒருபெரிய அழகான குகைக்கும் யாத்திரைசெய்வோர் மிகுதி.

குருமுக்தேஷ்வர்:—டில்லியிலிருந்து வடகிழக்கே ஹரித்துவாரத்துக்குப்போகும் மார்க்கத்தில் 54 மைலில் கங்கா தீரத்தி லிருக்கப்பட்ட இக்ஷேத்திரம் பூர்வம் ஹஸ்தினபுரத்தின் ஓர் பாகம்.

கௌஹடி:—கல்க்த்தாவிலிருந்து வடகிழக்கில் 545 மைலில் பிரம்ஹபுத்திராநதி தீரத்திலிருக்கும் இப்பட்டணம், மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிற நரகமஹாராஜனுமவன் குமாரன் பாகதத்த ராஜனுடையவும் பிரதான நகரமாகிய ப்ரயாகஜோதிஷ்புர மாயிருக்கிறது. இம்மாநதியின் நீரோட்டமத்தியில் இயற்கையழகு பெற்றிருக்கும்பர்வதத்தில், அதிவினோதமாயுமழகாயுமமைக்கப்பெற்றுள்ள உமாநந்தா என்னும் ஈஸ்வரதேவாலயம், இந்த அஸ்ஸாம் தேசத்தில் ஸ்ரீகாசியைப்போல் யாத்திரை செய்யப்படுகின்றது.

ஹஸ்தினபுரம்:—டில்லியிலிருந்து வடகிழக்கில் 51 மைலி லிருக்கிற மீரட்ஸ்டேஷனிலிருந்து 22 மைலிலுள்ள இப்போதைய இச்சிறு கிராமம்தான் பூர்வத்தில் ப்ரக்யாதி பெற்றிருந்த மாக்ஷிமைதங்கிய ஹஸ்தினபுரத்தின் பாக்கியாய்த் தங்கிநிற்க, மற்றதை கங்காநதி பிரவாஹத்தில் கொண்டுபோய்விட்டது. "ஹஸ்தின்" என்னும் பாரத அரசனால் கண்டுபிடிக்கப்பட்டமையாலிந் நகர்க்கு இப்பெயர் காரணமாயிற்று; இவிடம் பாண்டவ கௌரவமஹாபாரத யுத்தகாக்ஷிவிசேஷம்.

ஜாஜ்பூர்:—கல்கத்தாவிலிருந்து ஸ்ரீஜகந்நாதத்துக்கு வரும் மார்க்கத்தில் 202மைலிலிருக்கிற இப்புண்ணிய புராதனக்ஷேத்திரம், வேதத்தில சொல்லப்பட்டிருக்கிற "வைதரணீ" நதி தீரத்திலுள்ளதும், ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளின் விசேஷமடாலயங்களுள்ளதும், பிரசித்திபெற்ற திவ்ய சிவ க்ஷேத்திரமாயு மிருக்கிறது.

ஜ்வாலாமுகி:

ஜ்வாலாமுகி:—டில்லியிலிருந்து வடமேற்கில் 284 மைலிலிருக்கிற பாதன்கோட் ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கிற இப்பிரசித்திபெற்ற மஹாதேவிக்ஷேத்திர தேவஸ்தானத்தினடியிலிருந்து ஓயாத்தீ எரிந்துகொண்டேயிருக்கிறது !! இவ்வக்னிஜ்வாலை "ஜாலந்தரா" வென்னும் ராக்ஷஸனுடைய வாயினின்றும் வெளிப்பட்டு வருகிறதாக தேவிபுராணத்தில் சொல்லப்படுகிறது. இவிடத்துக்குச் சமீபத்தில் சுற்றிலும் ஆறு உஷ்ண நீர்ச்சுனைகளிருக்கின்றன. இதற்கு ஜெல்லண்டர் ஸ்டேஷனி லிறங்கி ஹோஷியர்பூர் மார்க்கமாயுஞ் செல்லலாம். ஏராளமாய் வரும் யாத்திரிகர்களுக்காக எண்ணிலா தர்மசாலைகளும, சத்திரங்களுமிவிடம் கட்டப்பட்டிருக்கின்றன.

புஷ்பகிரி:—மதிராஸிலிருந்து வடமேற்கில் 176-வது மைலிலுள்ள கமலாபுரம் ஸ்டேஷனுக்கு வடகிழக்கில் 5 மைல் தூரத்திலுள்ள இச்சிவ க்ஷேத்திரத்தில் ஒரு பிரபலமான மடம் இருக்கிறது.

கம்பில்:--பிரயாகையிலிருந்து மதுராவுக்குப்போகும் மார்க்கத்திலுள்ள கான்பூரிலிருந்து மேற்கே 82-வது மைலிலுள்ள பேடகார் ஸ்டேஷனின்றும், 28 மைல் தூரத்திலுள்ள இத்தலம், கங்கைமாநதியின் பேரிலமையப் பெற்றிருக்கிற ஒரு பிரம்மாண்ட செங்குத்தான கற்பாறை மலையின்மீது உளது.

இக்கிராமம் பூர்வம், தக்ஷிணபாஞ்சால அரசனாகிய த்ரௌபதாராஜனுக்கு இராஜதானி. இவிடத்தில் தான் த்ரௌபதாதேவி பஞ்சபாண்டவர்களை ஸ்வயம்வரத்தால் விவாகஞ் செய்து

கொண்டது. இதன் அறிகுறிகள் யாவும் விசிதமாய் நாளைக்கும் காணப்படுகின்றன இப்பட்டணத்தை ஆதியில் கபில ரிஷியால் இயற்றினமையாலிதன் பெயர் காரணமாயிற்று. இவ் விராஜ்ஜியத்தை ஷ்டி த்ரௌபதாராஜனுக்கு முந்தி, பிரமஹதத்தாவென்னும் அரசனால் ஆளப்பட்டு வந்தது.

கன்யா ஆஸ்ரம்.

கன்யா ஆஸ்ரம்:—ஹரித்துவாரத்தினின்று தெற்கே 30 மைலிலுள்ள இவிடத்தில் தான் "சகுந்தலா" பிறந்த இடம்; இதன் சீதோஷ்ணஸ்திதி வெகு ரமணீயகரமானது. ஹரித்வாரத்தில் தேவையான வண்டிகள் கிடைக்கும்.

கர்நல்:—டில்லிக்கு வடக்கில் 76-வது மைலிலுள்ள இவ் விருப்புப்பாதை பட்டணம், மஹாபாரத குருக்ஷேத்திரயுத்தத்தில் கௌரவ பக்கத்துக்கு முக்கிய சூத்ரதாராயிருந்து நடாத்தின "கர்னமஹாராஜா" வின் பிரதான பட்டணம். கர்னன் கொடை=ஈகையால் சிறந்தவன். கர்னம்=காது, இவர் ஜனிக்கும்போதே மகரகுண்டலந்தரிக்கப் பெற்ற காதுடன் விளங்கினமையா லிப்பெயர் காரணம்.

கஸூர்:— ஸ்ரீராமரின் குமாரனை குஸலருக்குரிய இப் பெரிய வர்த்தக சம்மந்தமான ரெயில்வே பட்நம், லாஹூரிலிருந்து 42 மைல். இது இப்போது பஞ்சாபில் லாஹூருக்கடுத்தது. ஸ்ரீராமராலயம் வெகுபிரவித்தம்.

கடஸ்=கடாக்ஷம்:—லாகூரிலிருந்து வடமேற்கில் 163 மைலிலுள்ள கேவ்ரா ரெயில்ஸ்டேஷனிலிருந்து $11\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள இப்பிரசித்த சிவக்ஷேத்திரமானது குருக்ஷேத்திரத்துக்கும், ஜ்வாலாமுகிக்கும் இரண்டாவதாயிருக்கிறது. பஞ்சபாண்டவர்கள் வனவாஸத்தில் கொஞ்சகாலம் இவ்விடம்தங்கியிருந்தார்கள்.

பரமசிவன் தக்ஷகுமாரியான தன் பாரியாவியோகத்தினால், தன்னிருகண்களினின்றும் பெருகிய நீரானது ஆறாகப்பிரவஹித்து இக்ஷேத்திரத்திலும், மேலே சொல்லியிருக்கிற "புஷ்கர" க்ஷேத்திரத்திலும் போய்த் தங்கி, இரண்டு ஸரோவரங்களாயின. பருவகால ஸ்நாநங்கள் மஹாமஹா விசேஷம்.

கேண்டுலி:—கல்கத்தாவுக்கு வடகிழக்கிலுள்ள இக்கிராமத்தில், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பேரிலெழுதப் பட்டிருக்கிற "கோவிந்த கீதை" கிரந்த கர்த்தாவாகிய ஜயதேவகவி ஜநித்தனர். ஸ்ரீகிஷ்னன்கோவில் மிகப்பிரபலம்.

கோணாரக்:— ஸ்ரீஜகந்நாதத்தினின்று வடமேற்கில் சமுத்திர தீரத்தில் 19 மைலிலுள்ள இக்ஷேத்திர தேவாலயத்தைக் கட்டும்போது, ஸ்ரீ கிருஷ்ணனுடைய 16000 கோபஸ்திரீகளுடன் "சாம்பன்" அளவுக்கு மிஞ்சி பழகிவந்ததை முன்னிட்டு, நாரதமாமுனி அவனைக் குஷ்டரோகியாகச் சபித்தனர். பின்னர் அச்சாம்பன் சூரிய பகவானைக் குறித்துத் தவஞ்செய்து குஷ்டரோகந்தீர்ந்த மறுநாள் ஸ்நாநஞ் செய்யும்போது விஸ்வகர்மா வினாலியற்றப்பட்ட சூரியவிக்கிரஹத்தைக் கண்டெடுத்து, தேவாலயங் கட்டுவித்தனன்; இச்சந்நிதானத்தில் குஷ்டரோகம் நிவர்த்தியாகிறது.

க்ரைமடை:—மதிராஸ்க்குத் தென்மேற்கில் 323-வது மைலிலுள்ள இந்த ஸ்டேஷன் ஒரு பிரசித்திபெற்ற விஷ்ணுஸ்தலமாயும், சுவாயம்பு சிவக்ஷேத்திரமாயுமிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள இத்தலம் இப்பிராந்தியத்தில் மிகப் பிரபலமானது.

மகாபலிபுரம்:—செங்கல்பட் ஸ்டேஷனிலிருந்து 18 மைலிலுள்ள இத்திவ்யசிவ, விஷ்ணு க்ஷேத்திரத்திலுள்ள கல்வேலைகளும், மண்டபவேலைகளும், ரிஷிகுகைகளும், கற்பாறைப் பிரதிமைகளும், பிம்பங்களும், இவ்விந்தியாவில் முதற்றரத்திலுள்ளன.

மஹஸ்தான்கார்:—கல்கத்தாவிலிருந்து வடகிழக்காய் 216 வது மைலிலுள்ள இவ்விருப்புப்பாதை ஸ்டேஷன், விஷ்ணுவினாருவதவதாரமாகிய ஸ்ரீ பரசுராமரின் பிரதானபட்டணம். இவிடத்திலிருந்து 22 தேசக்ஷத்திரிய ராஜாக்களையும் தனக்குள்ளடக்கி யாண்டார்.

மஜௌரா.—காசியிலிருந்து ஹரித்வாரத்துக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள லக்நௌவிலிருந்து 116-வது மைலிலுள்ள

அக்பர்பூர் ஸ்டேஷனின்றும் 10 மைலிலுள்ள இவிடத்தில் தான், தசரதமஹாராஜா அந்த முனியின் புத்திரனான ஸர்வன் ரிஷியை, மானுக்குப் பதிலாகத் தவறிக்கொன்றடைந்த சாபத்தினால், ஸ்ரீ ராமராகிய தனது புத்திரனும் வனவாஸஞ்செய்ய நேரிட்டு புத்ரசோகத்தையடைந்தனன்.

மாந்தாதா.

மாந்தாதா:—முன் சொன்ன அம்ரேஷ்வருக்கு ½ மைலில் நருமதாநதியின் தீவிலுள்ள இப்பிரசித்த சிவக்ஷேத்திரத்துக்கு பூர்வநாமம் "வைதூரியமணி பர்வதம்"; பிறகு, ஸ்காந்தபுராணம் நருமதா கண்டப்படி, சூரியவமிஸத்தின் 17-வது அரசனான "மாந்தாத்ரி" யினது அரியதவத்தினால் அவிடத்துள்ள "ஹோங்காரேஸ்வர" ரதுவரமஹிமையால் இப்பெயர் காரணமாயிற்று.

பின்னும் யமுனையில் ஏழுநாளும், ஸரஸ்வதியில் மூன்று நாளும், கங்கையில் ஒருநாளும் ஸ்நானஞ் செய்வதினாலொருவன் பரிசுத்தனாகவும், கங்கையின் பரிசுத்த சக்தி வடகரையோடு வரையறுக்கப் படவும், இந்நருமதையைத் தரிஸித்தமாத்திரத்திலேயும், இதன் வடக்கில் முப்பதுமைலும், தெற்கில் 18 மைலும் வீசி ஜீவகோடிகளைப் புனிதராக்குகின்றதெனவும் ஷை நருமதா கண்டத்தில் கூறுநிற்கின்றது.

ஆகவே ஹோங்காரம், அம்ரேஷ்வர், மாந்தாதா இம்மூன்று சிவத்தலங்களும், சில விஷ்ணுஸ்தலங்களும் கூடி ஸ்ரீ காசிக்கு

இரண்டாவதாய் விளங்குகின்றது. சத்திரம், தருமசாலை முதலிய எவ்வித சௌகரியங்களுக்கும் குறைவில்லை.

மிஸ்ரிக்.

மிஸ்ரிக்:—லக்நௌ என்கிற லக்ஷ்மணபுரியிலிருந்து வடக்கில் 55 மைலிலுள்ள ஸீதாபூர் ஸ்டேஷனிலிருந்து 13 மைலிலுள்ள இப்பிரசித்த க்ஷேத்திரத்தின் அதிசுந்தர, வெகுபுராதன ஸரோவரத்தில், சமஸ்த தீர்த்த விசேஷங்களும் கலந்திருப்பதால் "மிஸ்ரிதா=கலப்பு" இப்பதியின் பெயர் காரணம்.

இத்தலத்தில்மஹாபரிசுத்தததீசராஜமகரிஷி, மிகவரிதாயதவமியற்றிவருநாளில்தேவாஸுரயுத்தத்தில் தேவதைகள் முறியடிக்கப்படவே, அவர்கள் சதுர்முகப்பிரமாவினிடஞ் சென்று முறையிடவும், அவ்வயன் நீங்கள் ததீசமாமுனிவரது எலும்புகளை ஆயுதங்களாக வேற்று யுத்தஞ்செய்யின் ஜயமடைவீர்கள் எனதிருவாக்களிக்கவும், தேவர்கள் அம்மாமுனிவரிருப்பிடஞ் சார்ந்து அவர்நன்னிலைமையோடு முயிர்வாழ்ந்திருப்பதைக்கண்டு ஆச்சரியத்தையுந் துக்கத்தையுமடைந்து சதுர்முகனதுகட்டளையைத்தெரிவிக்கவே, இம்மஹாஅரிய தேவகாரியத்துக்காகவென் உயிரைஇக்ஷணமே கொடுக்கமிகவும்சந்தோஷமுடையவனாயிருக்கிறேனாயினும்,என் உயிரை விடுமுன் இப்பரதகண்டத்தின்சமஸ்ததீர்த்தங்களிலும் நீராடி சர்வமூர்த்திகளையும் தரிசிப்பதாக பிரதிக்ஞைசெய்திருக்கிறே" னெனலும் தேவர்கள்மனக்லேசமடைந்து தெரிவித்துக்கொள்ளவும் தேவேந்திரன்முதல், பிர்ஹஸ்பதிக்கடவுளினது ஆக்ஞைப்படிஎல்லாத்தேவர்களும்தங்கடங்கள் தீர்த்த விசேஷங்களுடன் இத்ததீசமாமுனிவரது இருப்பி

டத்தை அத்தியந்த சந்தோஷத்துடனடைந்து, ததிசமஹரிஷிக்குத் தரிசனந்தந்து, தங்கடங்கள் திருக்கரங்களாலேயே ஸ்நாநமுஞ் செய்வித்தனர்; உத்தரக்ஷணத்தில் திவ்யதேவவிமானத்திலேறி அம்மஹரிஷி சாயுஜ்ஜியத்தையடையவும், தேவர்கள் அவரது அஸ்திகளை ஹஸ்திரங்களாக வேற்றுத்தேவாஸுரயுத்தத்தில் அஸுரர்களை முற்றிலும் முறியடித்து ஜயப்ரதாபத்தைப் பெற்றனர். அத்தீர்த்த விசேஷங்களக்காலமுதலிவிடமே தங்கி ஒரு ஸரோவரமாயிற்று.

மாங்கிர்:—கல்கத்தாவுக்கு வடமேற்கில் 296-வது மைலில் கங்கைமாநதியில் நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு கற்பாறையின் மீதமைக்கப்பெற்றிருக்கும் அழகிய கோட்டையோடுங் கூடிய இவ்விருப்புப்பாதை பட்டணத்திலிருந்து மூன்றுமைல் தூரத்தில் "சீதாகுண்ட" மென்னும் உஷ்ணநீர்ச் சுனைகளும், ஐந்து மைலில் "ரிஷ்பஸ்ரிங்க" மென்னும் ஷ்ரிங்க முனிவரது ஆச்சிரம மலையுமிருக்கிறது.

முஞ்ச்:—கான்பூரிலிருந்து மேற்கில் 87 மைலிலிருக்கிற இடாவாஸ்டேஷனிலிருந்து வடகிழக்கில் 14 மைலிலுள்ள இப்புராதன கிலமானகிராமத்தி (பூர்வம் இராஜதானி) ல் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம் நடந்தது. யுதிஷ்டர ராஜனுடைய பக்கத்தில் இம்முஞ்ச் ராஜனாகிய க்ரானிச் சண்ட்ராஜனும் அவனுடைய இரண்டு குமாரர்களும் யுத்தஞ்செய்ததாக மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.



நாதத்வாரம்.

நாத த்வாரம்:—பம்பாயிலிருந்து த்வாரகைக்குப் போகும் இருப்புப்பாதையில் 403-வது மைலிலுள்ளமியுலி ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கிற இப்பிரசித்த விஷ்ணுக்ஷேத்திரம், வைகுண்டத்திலிருந்து பூர்வம்மதுராவுக்குக் கொண்டுவரப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி விக்கிரஹத்தை இவிடத்துக்கு எடுத்துவந்துஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இப்பதியும் வைகுந்தமாகவே இப்போது விளங்குகிறது. இக்ஷேத்திர எல்லைக்குள் யாரும்

எவ்வித ஜீவவதையும் எக்காரணத்தாலும் என்றும் செய்யக் கூடாது.

பால்வால்:—டில்லிமாநகரிலிருந்து 37 மைலிலுள்ள இந்த ஸ்டேஷன் நகரம், பூர்வம் பாண்டவராஜ்யமாகிய இந்திரப்ரஸ்தத்தின் ஓர்பாகம், இதினின்றும் 24 மைலிலுள்ள ஸோஹானு கிராமத்தில், நான்கு இயற்கை உஷ்ணநீர்ச்சுனைக ளிருக்கின்றன.

பாபநாசம்:—மதிராஸிலிருந்து 205 மைலில் தஞ்சைஜில்லாவில் காவேரிதீரத்திலுள்ள இத்தலத்தில் ஸ்ரீராமர் ராவணவதஞ் செய்த பாவத்தை நிவர்த்தித்துக்கொண்டனர்.

பிஹீவா:—டில்லியிலிருந்து 97மைலிலுள்ள ஸ்தானேஸ்வரிலிருந்து 13மைல் மேற்கில் ஸரஸ்வதி நதிதீரத்திலுள்ள இக்ஷேத்திரம் ஷிகுருக்ஷேத்திரத்துக்கு இரண்டாவதாயும் குருக்ஷேத்திரஎல்லைக்குட்பட்டதாயுமிருக்கிறது, இவிடத்தில்வெகுபுராதனமானவும் ஆச்சரியமானவும்; அழகானவும், பூதாகாரமானவுமான ஹஜாரவாயில்களும், பிரதிமைகளுமிருக்கின்றன.

ராஜக்ரஹம்:—கல்கத்தாவிலிருந்து 304 மைலில்ஜமுவாவான் ஸ்டேஷனுக் கச்சமீபமான மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிற பர்வதமத்தியில், இப்பதிக்கருகிலுள்ள குஸநகராபுரத்தண்டையிலுள்ள உஷ்ணநீர்ச்சுனைகளுக்கு, ஹிந்துக்கள், ஜெயினர்கள், மஹம்மதியரும் யாத்திரைசெய்கின்றனர்.

ஸஹ்டல்:—மேலமார்க்கத்தில் கட்நிஜங்ஷனுக்குக்கிழக்கில் நருமதா உற்பத்திமார்க்கத்தில் 79 மைலிலுள்ள இப்பட்டணம் (வேறுபெயர்-மஸாஹாஜ்பூர்) பூர்வம் விராடநகரம்; கீசகராக்ஷஸாலயமும், பங்கங்காஎன்னும் விசேஷபுண்ணிய தீர்த்தமுமுண்டு; இவ்விராடராஜசபையிற்றான்பஞ்சபாண்டவர்கள்ஒருவருஷம்தங்கள் அஞ்ஞாதவனவாஸகாலத்தைக்கழித்தது; மேலும்பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடந்தமஹாபாரதயுத்தத்தில்,பிரதமபலியாக ஸ்ரீபீமன் இக்கீசகனை வதஞ்செய்த இடமும் இதுவே, பாண்டவர்கள்தங்கள்யுத்தாயுதங்களை ஒளித்துவைத்திருந்த விருக்ஷத்தை இவிடத்தில் "டோகோரா" என்னும்பிரபலமான உற்சவம்நடாத்தி மிகப்பரிவுடன் கொண்டாடுகின்றனர்.

ஸகிகோபால்:—கூர்டாஜங்ஷனிலிருந்து ஸ்ரீஜகந்நாதத்துக்குப்போகும இருப்புப்பாதையிலுள்ள இப்பதி ஸ்ரீகோபால்ஜி விஷ்ணுதேவாலயத்தால் சிறந்தது.

ஸக்ராயபட்ணா:—மைசூர் ராஜ்ஜியத்திலுள்ள சிக்மங்களூருக்கு 15 மைல்வடகிழக்கிலுள்ள இக்கிராமம், மஹாபாரதத்தில்சொல்லப்பட்டிருக்கிற ருக்மாங்கதமஹாராஜாவின் ராஜதானிநகரம்.

ஸரஸ்வதி:—குருக்ஷேத்திர (தானேஸர்ஸ்டேஷன்)த்திலிருந்து வடமேற்கிலுள்ள ஸிர்முர்ராஜ்ஜியத்தில் அதாவது ஹிமாசலத்தின் கைலாஸபர்வதத்துக்குத்தெற்கில் உற்பத்தியாகிற இப்புண்யநதி தீரத்திற்றான் பூர்வம், நம்முன்னோரான ஆரியர்கள் முதல் முதல் குடியேறினது. இப்புண்ணியநதி மலைப்ரதேசத்தினின்றுமிழிந்து "ஜடபத்திரி" என்னும்மைதான புண்ணியப்ரதேசத்தில் விரிகிறது.

இச்சரஸ்வதி, மகதேவனாகிய பரமசிவன் புத்திரி, ஒருநாள்குடிவெறியில் பார்வதிரமணன் தன்குமாரியின்மீதுகாதலுற்றுச்சமீபித்தவுடன், நடுநடுங்கிஓடிமறைந்தும், பிறகு அதேமாதிரிமற்ற எந்தசமயத்தில் பார்த்தாலும்மறைந்தும்வந்தனள்; இதினாற்றான் ஸரஸ்வதி உற்பத்திப்ரதேசங்களில் த்ரிஸ்யமாயும், மத்தியில் அந்தர்வாஹினியாயும், இறுதியில் பிரயாகையில் கங்கை, யமுனைகளுடன் சங்கமமாகும்த்ரிவேணிக்குச்சமீபத்திலுள்ள, சிரஞ்சீவியான வடமஹாவிருக்ஷவாலயத்தின்கீழ் (இவிடம்ஜலம்கசிந்துஊர்வது நன்றாய்த்தெரியும்) மார்க்கமாகச்சென்று ஸங்கமமாகிறது.

ஸர்நாத்:—ஸ்ரீகாசிக்கு $3\frac{1}{2}$ மைல்வடக்கிலுள்ளவிது, பௌத்தமதஸ்தர்களுக்கு முக்கிஸ்தானமாயும் நம்மவர்களுக்குநேத்திரானந்தமான அநேகதேவாலயங்களும்கட்டிடங்களும்ஸ்தூபிகளும் உள்ளன.

ஸயால்கோட்:—டில்லியிலிருந்து வடமேற்கில் 438மைலிலுள்ள இவ்விருப்புப்பாதை நகரம், பூர்வத்தில்பாண்டவர்களுக்கு ஒருமாமனான ஸல்ய ராஜனுடைய ராஜதானியாயும், பிறகுசாலிவாஹன (விக்கிரமாதித்தியராஜனென்ற வேறுபேருமுண்டு)னுடையராஜதானியாயுமிருந்தது; சாலிவாஹனசகம் கிறிஸ்தவசகத்துக்கு 78வருஷம் முந்தியுள்ளது; இந்நகரத்துக்கு 10மைல்வடகிழக்கிலுள்ள ஷாநூர்ஜமாலில் ஒரேமரத்தில்பலவித இலை, பூ, காய், பழங்களுள்ள அநேகமரங்களும், அநேகவாசயோக்கியமானகுகைகளுமிருக்கின்றன. பூர்வத்திலிவிடத்தில் அநேகபிரபலயோகிகளிருந்திக்கிறதாகவும், இப்போதுஞ் சிலரிருப்பதாயும் சொல்லப்படுகிறது.



ஸித்தேஸ்வர்.

ஸித்தேஸ்வர்:—கல்கத்தாவுக்குவடகிழக்கில்529மைலிலுள்ள பாதர்பூரிரெயில்ஸ்டேஷனுக்குச்சமீபத்திலும், ஸரஸ்பூர்பர்வதத்தினடிவாரத்திலும், பிரமபுத்ராநதியின் உபநதியாகிய பாரக்நதிதீரத்திலுமுள்ள இத்தலம், நம் அறுவகை தத்துவசாஸ்திரத்திலொன்றை இயற்றிஸ்தாபித்தவரான பதஞ்சலி மகரிஷியுடன் கூடப்பாடுபட்டு உழைத்தவராகிய கபிலமாமுனிவரதுவாசஸ்தலமாயிருக்கிறது. பங்குனிமாதத்திலிவிடம் நடந்தேறிவரும் உற்சவத்துக்கு யாத்திரைசெல்வோர் பலர்.

ஸித்தபூர்:—பம்பாயிலிருந்து நேர்வடக்கில் இருப்புப்பாதையில் 374-வது மைலிலிருக்கிற இப்பிரசித்த சிவக்ஷேத்திரத்திலிருக்கும் ருத்ரமாலாவுக்கும், ஸரஸ்வதிநதிஸ்நாநத்துக்கும் (திரிவேணியில்சங்கமமாகிறஸரஸ்வதி அல்ல) விசேஷயாத்திரைசெய்கின்றனர்; இத்தேவாலயத்தின் மிகவுன்னதமான கட்டிடவமைப்பும் அழகும் பார்ப்பவர்களைப் பிரமிக்கச்செய்து, அவர்களாயுட்காலம் வரையில் மனதிற்பதிந்துவிடுகிறது.

சீதாகுண்டம்.—கல்கத்தாவுக்குக்கிழக்கில் இருப்புப்பாதையில்359மைலில் இதேபெயருள்ள மலையின்பேரிலுள்ள இக்ஷேத்திரத்தை ஸ்ரீ ராமரும், பரமசிவனுமிருவரும் அடைந்ததாயும்

பரமசிவனுக்கு இப்பூமியில்,மிகவுமானந்தத்தைத்தரக்கூடிய இருப்பிடங்களிலொன்றாயுமிருக்கிறது. இவ்விடத்தில் மஹாசிவராத்திரிஉற்சவம் மிகப்பிரசித்தம்; தவிரவும் இதேபெயருள்ளபுண்ணிய உஷ்ணநீர்ச்சுனைகளுமிருக்கின்றன.

சீதாமர்ஹி:—கல்கத்தாவுக்குவடமேற்கில் 357 மைலிலுள்ள இந்தரெயில்வேஸ்டேஷன் பட்டணத்தில், ஜனகமஹாராஜாஉழுதுகொண்டிருக்கையில் பூமிக்குள்ளிருந்து சீதையாகிய ஸ்ரீ ஜானகிவெளிப்பட்டனள். இவ்விடத்தில் சீதா, ஹனுமான்முதலியோருக்குரிய ஒன்பதுபிரசித்ததேவாலயங்களும், ஸ்ரீராமநவமிஉற்சவமும் பிரசித்தம்.

ஸோநேபூர்:—கல்கத்தாவுக்கு வடமேற்கில் 344-வது மைலிலுள்ள பாங்கிபூர் (இவ்விடமிருந்துநேர்தெற்காய் ஸ்ரீமத்கயாவுக்குப்பிரிகிறது) ஜங்ஷனுக்குநேர்அக்கரையில் கண்டகிநதி, கங்காநதியுடன்கூடுகிறஇடத்திலுள்ள இப்புராதன புண்ணியஸ்தலத்திற்றான் "கஜேந்திரமோக்ஷம்" நடந்தஇடம்;அதாவது ஸ்ரீமகாவிஷ்ணுயானையை முதலையினின்றும் விடுவித்து ரக்ஷித்தது, தவிரவும் ஸ்ரீராமர் சீதையைவிவாகஞ்செய்ய ஜநகபுரத்துக்குப்போகும்மார்க்கத்திலிவ்விடம் ஒருதேவஸ்தானம் கட்டியிருக்கிறார், இவ்விடமதுமுதல் (மேலா=உற்சவம்) ஆரம்பிவித்துநடந்துவரும் இம்மேலாவே இவ்விந்தியாவில்மற்றவைகளைக்காட்டிலும் அதிகபுராதனமானது. கிர்த்திகாபௌர்ணமையில்நடக்குமிவ்வுற்சவம் ஒருபக்ஷம் (15-நாள்) பிரபலமாய் நடக்கிறது.

ஸோரன்:—மதுராவிலிருந்து வடகிழக்கில் ஹரித்துவாரத்துக்குப்போகும் புகைரதமார்க்கத்தில் 102-வதுமைலிலுள்ள இதற்கு, பூர்வத்தில் உகாலக்ஷேத்திரமென்றும், பிறகு ஹிரண்யகஸ்யபராக்ஷஸனை ஸ்ரீமகாவிஷ்ணு வராஹாவதாரஞ்செய்து கொன்றருளியதின்பின் ஸூகரக்ஷேத்திரமென்றும்பெயர். இக்ஷேத்திரத்தில் அநேகப்பிரபலமான தேவாலயங்களும், பகீரதகங்கைக்குப்பூர்வத்திலுள்ளகங்கையும், யாத்திராவிசேஷம்;பகீரதரிஷிவர்த்தமானகங்கைக்காக ஆயிரக்கணக்கான வருஷங்கள் அருந்தவமியற்றினவிடங்களிலிதுவுமொன்று.

ஸ்ரீங்கேரி.

ஸ்ரீங்கேரி:—பெங்களூரிலிருந்து வடமேற்கில் 128மைலிலுள்ள கடூர்ஸ்டேஷனிலிருந்து மேற்கில் 55மைலில் துங்காநதியின் வடகரையிலுள்ள இப்புண்ணியகிராமம், ஸ்ரீமத்ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிற ரிஷிய ஸ்ரீங்கரென்பரது ஜனனபூமியாயும் விபந்தகரிஷி தபஸ்செய்தஸ்தலமாயுமிருக்கிறது, சுமார்1200வருஷங்களுக்குமுன் ஸ்ரீமத் ஆதி சங்கராசார்யஸ்வாமிகளிவிடத்தில் காஷ்மீரத்திலிருந்து கொண்டுவந்தசாரதாம்பாள் (ஸரஸ்வதி) விக்கிரஹத்தைப்பிரதிஷ்டைசெய்துஸ்தாபித்து சைவ—ஸ்மார்த்த மதஸ்தர்களுக்கு ஒப்புயர்வற்ற ஆசாரியராயும்,"ஜகத்குரு,,என்னும்பட்டமாகிய மதசம்மந்ததெய்வீகக்கிரீடாதிபத்தியத்தை (ஸாரதாபீடம்) யும் அடைந்து, அதுமுதல்தொடர்ச்சியாய்சிஷ்யபரம்பரையில்நடந்தேறிவருகிறது. இப்போதிருக்கும் (நரசிம்ஹாசாரியாரென்றுபெயர்) ஜகத்குரு, இவ்வரியபீடத்துக்குஏற்றவித்வத்முதலியபரிபூர்ணராய்விளங்குகின்றனர். இம்மடத்துக்குமைசூர் மஹாராஜாஅவர்களால் இந்த ஸ்ரீங்கேரிமாகாணத்தைச்சேர்ந்த பூமிகளனைத்தும்சர்வமானியமாய்விடப்பட்டிருக்கிறதுமல்லாமல், மாதத்துக்கு நூறுபவுன்சாஸ்வதகொடைஜாரிசெய்துமிருக்கிறார்;தவிரவும்சிஷ்யகோடிகளால் ஏராளமானவருமானமும்கிடைத்து அநேகஉற்சவங்களும் தருமங்களும் விசேஷமாய் நடந்தேறிவருகின்றன. இக்ஷேத்திரத்தின் மத்தியிலுள்ள ஸ்ரீங்ககிரிமலையில்

ஸ்ரீ சாரதாம்பாள்தேவஸ்தானமும், சுற்றிலுமுள்ள 4 தெருக்களி லொன்றில்மட்டும் வீடுகள் நிறைந்துமுள்ளன.

டாம்லுக்:—கல்கத்தாவிலிருந்து 34 மைலிலுள்ளகோலாகாட் ஸ்டேஷனிலிருந்து 10 மைலுள்ள இப்புண்யக்ஷேத்திரத்தில்ரூப நாராயண்நதியின்பேரிலுள்ள "பார்கபீமா" என்னும்காளிகோவில் மஹாப்பிரசித்தம்; அதிவேகமாயோடிவரும் இந்நதிகூட இத்தே வஸ்தானத்துக்கருகில்வரும்போது பயந்துதடஸ்தமாய்விடுகிறது; இத்தேவஸ்தானம்தேவத்சசனாகிய விஸ்வகர்மாவினால்கட்டப்பட் டதாகையால் இதன்வேலைத்திறமையும் அழகும் எழுதிமுடியாது; ஏறக்குறைய இதே அமைப்புள்ள ஜிஷ்ணு ஹரிஎன்னும் விஷ்ணுவா லயமொன்றுமுண்டு, மகாவிஷ்ணு ராக்ஷஸர்களைக்கொன்றருளியசி ரமத்தினாலுண்டானவியர்வைத்தண்ணீரிவிடதீநில்தங்கினமையா லிதன் மஹிமை.

தீர்த்தப்லலி:—மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தசிவமோக் கரெயில்ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கில் 30 மைலிலுள்ள இத்தீ ர்த்தங்கள்நிறைந்துள்ளக்ஷேத்திரம்துங்காநதியின்வடகரையிலிரு க்கிறது, பரசுராமருக்குரிய குகையிலுள்ள நீரோட்டதீர்த்தவிசே ஷமும், இரண்டுமடங்களும் தர்மான்னசத்திரங்களும், ஜாகா சௌகரியமுமிங்குண்டு.

* மேற்கூறிய க்ஷேத்திர தீர்த்தங்களிற் பெரும்பான்மையும் ஹிந்துஸ்தானி தேசத்திலிருப்பதால், ஹிந்துஸ்தானி தேசத்தோருக்கு நந்திராவிட தேசதிவ்ய க்ஷேத்திரங்களின் பத அர்த்தங்கள் (உதாரண மாக திருவையாறு, திருவண்ணாமலை முதலானவைபோல) விளங் காதிருக்குமாறு, நந்தக்கினை தேசத்தோருக்குமேயன்றி, அவைகளோவ் வொன்றிற்கும் அவ்வப்பாஷைகளில், அவ்வவ்விவரங்களைக் குறிக் கும் மேன்மையான மதசம்மந்த விசேஷ அருத்தங்களுண் டேனற் றெளிக.

மிற்க, பாரத, பாகவத, ராமாயணாதிகளிற் கூறப்பட்டிருக்கிற ஒவ்வொரு விஷயத்திற்கும் சான்றாக க்ஷேத்திர தீர்த்தாதிகளுள் ளன வென்பது மேற்கூறியிருக்கிற பல க்ஷேத்திர தீர்த்தாதி களால் விளங்கும்; இதிற் சொல்லப்படாத மற்றவைகளையும்

யாத்திராக்கிரமத்தில் விசிதமாகும். இப்பரதக்கண்டத்தில் மட்டு மல்ல, விண், மண், பாதளமென்னும் மூன்று லோகங்களுள்ளும், கங்கைமா நதியாற் சூழப்பட்ட ஸ்ரீ காசியம்பதிக் கொப்பாய தொன்றுமில்லை. அந்தந்த க்ஷேத்திர தீர்த்தமான்மியங்களுள் அவையவைகளைப் போற்றிச் சொல்வதும் சுபாவமேயாகும் குருக்ஷேத்திரம், ஆதிசேது முதலானதும் முத்தியைத்தவிர்த்து மற்றசுவர்க்கேந்திராதி போகங்களை யினிதிலளிக்குமே யல்லது அவைகளுடன் ஸாயுஜ்ஜியத்தையுமடைவினிற்கொடுப்பது ஸ்ரீ காசியம்பதியே யல்லதுவேறில்லை-வேறில்லை. இது சத்தியத்தினும்-சத்தியம், என்றுபகவதாம்ஸரான சூதமாமுனிவன் நைமிசாரண்யவாஸிகளானசௌனகாதி மஹரிஷிகளுக்கு அருளுகின்றார்.

பொருவில்கடவுணிலங்க டம்மிற்புகலுங் குருக்கேத்திரஞ் சிறந்த
துரைசானைமிசாரணிய மதனிற்சிறந்த தொலிக்குநெடுந்
திரைசேர் பிரயாகை யாங்கதனிற் சிறந் ததனிற்றெய்வநன்னீர்க்
கரைசேர் கங்கைசூழ்கிடந்த காசிப்பதியே சிறந்தனவால்.

இன்னநற்கா லைத கேட்டவர்துறக்கத்தெய்துவ ரெனவெடுத்தியம்பிக் [ன்
கன்னவிற்பழுத்தகனிமொழித்துவர் வாய்க்கதிர் முலைக்குறக்கொடி கணவ
றென்னவன்மகிழச்செழுந்தமிழ்க்கவிதை பொழிதருந்தென்வரைமுனிவன்
மன்னியமுத்திசேர் ஞானமுநல்குமென வகுத்தினிதுரைத்தனமாதோ.

மேற்சொன்னவைகளைத்தவிர (பாரத, பாகவத, ராமாயணாதிகளிற் சம்மந்தப்படாத) (அநேகஸ்வயம்புமூர்த்தி தீர்த்தவிசேஷங்களாங்காங்குண்டு. இந்நூலவைகளுக்கிங்கிடங் கோடாமைபற்றி நம்மிறைவனைத்தாழ்த்தி, மற்றோர் பதிப்பில் வெளியிடக்கருதுகின்றோமாயினம்.

இரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.



III வது அத்தியாயம்.

இராமேஸ்வரத்திலிருந்து ஸ்ரீ காசிக்குச் செல்லும் கீழ இருப்புப்பாதையினிடையேயுள்ள ஸ்டேஷன்கள், மஜிலிகள், பிரயாணசௌகரியங்கள் வண்டிவரும்காலநிர்ணயங்களையும்பற்றியது.

நெ	ஸ்டேஷன்களின் பெயர்	ஸ்ரீ காசியிலிருந்து மைல்	நெ.	ஸ்டேஷன்களின் பெயர்.	ஸ்ரீ காசியிலிருந்து மைல்
1	தனுஷ்கோடி	1817	35	புங்குடி	1614
2	இராமேஸ்வரம்	1806	36	திருச்சி ஜங்ஷன்	1607
3	தங்கச்சிமடம்	1802	37	மஞ்சத்திடல்	1604
4	பாம்பன்	1799	38	திருவெறும்பூர்	1601
5	மண்டபம்	1795	39	சோளகம்பட்டி	1595
6	உச்சிப்புளி	1785	40	பூதலூர்	1587
7	வலந்தரவாய்	1778	41	ஆலக்குடி	1582
8	இராமநாதபுரம்	1773	42	தஞ்சாவூர் ஜங்ஷன்	1576
9	சத்திரக்குடி	1763	43	வடவார்	1577
10	பாண்டிகண்மாய்	1757	44	திட்டை	1570
11	பாமக்குடி	1751	45	பசுபதிகோயில்	1568
12	பார்த்திபனூர்	1742	46	ஐயம்பேட்டை	1566
13	மானாமதுரை	1736	47	பண்டாரவாடை	1564
14	முத்தநந்தல்	1730	48	பாபநாசம்	1561
15	திருப்பாச்சேத்தி	1724	49	சுந்தரப்பெருமாள் கோயி[ல்	1558
16	திருப்புவனம்	1717	50	கும்பகோணம்	1555
17	சிலைமன்	1712	51	திருநாகேச்சுரம்	1553
18	கீழ்மதுரை	1706	52	திருவிடைமருதூர்	1550
19	மதுரை ஜங்ஷன்	1703	53	ஆடுதுறை	1548
20	மதுரைபாலம்	1703	54	நரசிங்கம்பேட்டை	1545
21	சமயநல்லூர்	1696	55	குத்தாலம்	1541
22	சோளவந்தான்	1690	56	மல்லியம்	1539
23	வாடிப்பட்டி	1686	57	மாயவரம் ஜங்ஷன்	1536
24	கொடைக்கானல் ரோட்	1678	58	ஆனைதாண்டவபுரம்	1532
25	அம்பாத்துறை	1672	59	வைத்தீஸ்வரன்கோயில்	1527
26	திண்டுக்கல்	1665	60	சீயாழி	1523
27	தாமரைப்பாடி	1660	61	அரசூர்	1522
28	வடமதுரை	1655	62	கொள்ளிடம்	1517
29	அய்யலூர்	1650	63	சிதம்பரம்	1513
30	கல்ப்பட்டிசத்திரம்	1644	64	கிள்ளை	1509
31	வையம்பட்டி	1639	65	பரங்கிப்பேட்டை	1506
32	மணப்பாறை	1630	66	புதுசத்திரம்	1502
33	சமுத்திரம்	1625	67	ஆலப்பாக்கம்	1496
34	தென்கொளத்தூர்	1619	68	காபர்சூரங்கம்	1492

நெ.	ஸ்டேஷன்களின்பெயர்	ஸ்ரீகாசியிலிருந்தமைல்	நெ.	ஸ்டேஷன்களின் பெயர்	ஸ்ரீகாசியிலிருந்தமைல்
69	கூடலூர்	1489	109	மதிராஸ் பேஸன் ப்ரிட்ஜ்	1358
70	திருப்பாப்புலியூர்	1487	110	கொறுக்குப் பேட்டை	1357
71	வரகல்பட்டு	1484	111	தண்டயார் பேட்டை	1356
72	நெல்லிக்குப்பம்	1481	112	திருவெற்றியூர்	1353
73	மேலபட்டம்பாக்கம்	1478	113	எர்ணூர்	1352
74	பண்ணுருட்டி	1472	114	என்னூர்	1349
75	வரிஞ்சிப்பாக்கம்	1469	115	மீஞ்சூர்	1343
76	சேர்ந்தனூர்	1465	116	பொன்னேரி	1337
77	விழப்புறம் சேர்க்கை	1460	117	கவரப்பேட்டை	1333
78	முண்டியம்பாக்கம்	1457	118	கும்முடிபூண்டி	1329
79	விக்கிரவாண்டி	1452	119	எலவூர்	1326
80	பேர்ணி	1449	120	ஆரம்பாக்கம்	1320
81	மைலம்	1443	121	தட	1315
82	திண்டிவனம்	1437	122	சல்லூருபேட்டா	1308
83	ஒலக்கூர்	1431	123	போலிரெட்டிப்பாளையம்	1305
84	பெரும்பயர்	1425	124	தொரவாரிசத்திரம்	1298
85	அச்சரபாக்கம்	1421	125	நாயுடுபேட்டா	1291
86	பாக்கம்	1417	126	பெத்தபாரியா	1283
87	மதுராந்தகம்	1413	127	கூடூர் ஜங்ஷன்	1274
88	கருங்குழி	1411	128	மனுபோலு	1268
89	பாடாலம்	1405	129	வெங்கடாசலம்	1260
90	ஒட்டிவாக்கம்	1403	130	நெல்லூர்	1250
91	செங்கல்பட் ஜங்ஷ்ன்	1397	131	படுகுபாடு	1247
92	சிங்கப்பெருமாள் கோவி	1392	132	கொடவலூரு	1243
93	கட்டுப்பாக்கம் [ல்	1389	133	தலமஞ்சி	1240
94	கூடுவாஞ்சேரி	1385	134	அல்லூருரோட்	1233
95	வண்டலூர்	1382	135	பிட்ரகுண்டா	1229
96	தம்பரம்	1378	136	காவலி	1218
97	பல்லாவரம்	1374	137	தெட்டு	1210
98	மீனம்பாக்கம்	1373	138	உலவப்பாடு	1201
99	ஸெண்ட்தாமஸ்மவுண்ட்	1371	139	சிங்கராயகொண்ட	1195
100	கயிண்டி	1370	140	டங்கடூரு	1189
101	சைதாபேட்டை	1368	141	சூரரெட்டிப்பாளயம்	1184
102	மாம்பழம்	1367	142	வங்கோல்	1178
103	கோடம்பாக்கம்	1365	143	கரவாடி	1172
104	செட்பட்	1363	144	அம்மனப்ரோலு	1169
105	எழும்பூர் } மதிராஸ்	1362	145	உப்புகுண்டூர்	1160
106	பார்க்	1361	146	சின்னகஞ்சம்	1162
107	கோட்டை	1361	147	வேட்டபாளையம்	1157
108	பீச்	1360	148	சீராள	1145

நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீகாகுளம்லிருந்து மைல்	நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீகாகுளம்லிருந்து மைல்
149	பாபட்லா	1138	188	குல்லிபாடு	928
150	அப்பிகட்ல	1132	189	நாசபட்நம்ரோட்	921
151	பொன்னூரு	1125	190	யெல்லமஞ்சிலி	910
152	சுண்டூரு	1119	191	பய்யாவரம்	901
153	தெனாலி	1111	192	காசிம்கோடா	896
154	கொலக்கலூரு	1107	193	அனபகல்லி	895
155	டுக்கிரள	1105	194	துவ்வாடா	885
156	பெத்தவட்லபூடி	1099	195	வால்டேர் ஜங்ஷன்	875
157	கிருஷ்ணகால்வாய்	1096	196	ஸிம்ஹாசலம்	870
158	பேஜவாடா ஜங்ஷன்	1092	197	பெண்ட்ருட்டி	863
159	முஸ்டபாடா	1084	198	கோட்டவலஸ	858
160	கன்னவரம்	1079	199	அலமண்ட	848
161	அம்பாபுரம்	1073	200	விஜயநகரம்	837
162	நூஜ்விட்	1066	201	நெல்லிமர்லா	829
163	வட்லூர்	1060	202	கஜ்ஜங்கிவலச	824
164	பவர்பேடா	1056	203	கரிவிடி	821
165	எல்லூர்	1055	204	சீபுருபல்லெ	818
166	பீமடோல்	1043	205	ஸிகடாம்	810
167	புல்லா	1039	206	பாண்டுரு	803
168	ஙிப்ரல்	1034	207	தூசி	798
169	பாதம்பூடி	1029	208	ஸ்ரீகாகுளம்ரோட்	794
170	தாடபல்லிகூடம்	1025	209	உர்லாம்	788
171	நவாப்பாளையம்	1020	210	திலாரு	782
172	நிடதவோலு	1013	211	கோட்டபொம்மலி	774
173	சாகல்லு	1009	212	நௌபட் ஜங்ஷன்	765
174	கொவ்வூரு	1004	213	பூண்டி	756
175	கோதாவரி	1001	214	பலாசா	749
176	ராஜமஹேந்திரம்	999	215	மந்தாஸாரோட்	740
177	கடியம்	993	216	பாருவா	735
178	த்வாரபூடி	986	217	சோம்பேட	729
179	அனபார்தி	984	218	ஜடுபூடு	725
180	பிக்கவொல்	978	219	இச்சாபுரம்	718
181	மேடபாடு	973	220	கொலன்த்ரா	709
182	சாமல்கோட் ஜங்ஷன்	968	221	பர்ஹம்பூர்	703
183	பீடாபுரம்	960	222	ஜகந்நாதபுரம்	697
184	கோல்லப்ரோலு	957	223	சத்ரபுரம்	689
185	துர்க்காடா	949	224	கஞ்சம்	684
186	கோட்டபள்ளி	945	225	ஹம்ம	680
187	தானி	934	226	ரம்ப	673

நெ.	ஸ்டேஷன்கள்.	ஹௌராவிலி ருந்து மைல்	நெ.	ஸ்டேஷன்கள்	ஹௌராவிலி ருந்து மைல்
227	கல்லிக்கோட்டா	666	266	கோடபீஸல்	384
228	பலுகான்.	655	267	ஸால்போனி	378
229	ப்ராண்டெய்பூர்	650	268	சன்ட்ரகோனாரோட்	374
230	குஹ்ரூரி	642	269	கார்பெட்டா	361
231	கலுபாராகாட்	638	270	பியர்டோபா	355
232	பூஸண்ட்பூர்	632	271	விஷ்ணுபூர்	348
233	ஙிரகர்பூர்	627	272	ராம்ஸாகர்	345
234	டாபங்க்	622	273	ஒண்டக்ரை	339
235	சட்டிப்பூர்	617	274	பங்கூரா	329
236	கூர்டாரோட் ஜங்ஷன்	611	275	ச்சட்ரா	321
237	புவனேஸ்வர்	599	276	ஜன்டிபாரி	315
238	பாரங்க்	589	277	இண்ட்ரபில்	305
239	கட்டாக்	581	278	ஆட்ரா ஜங்ஷன்	297
240	ஜகட்பூர்	578	279	கார்கலி	287
241	கபிலாஸ்ரோட்	572	280	போஜுடி	278
242	பைய்ரீ	565	281	பாகா	271
243	தன்மண்டல்	559	282	பார்பட்	267
244	ஹரிடாஸ்பூர்	555	283	மால்கேரா	262
245	ஜெஜுபூர்	546	284	மொஹுடா	255
246	வியாஸ்ஸரோவர்	536	285	கஜுடி	249
247	பைதணிரரோட்	529	286	கோமா ஜங்ஷன்	242
248	கெண்டுவேபடா	519	287	ஙிமியாகாட்	236
249	பாதரக்	509	288	இஸ்றி	231
250	மார்கோனு	500	289	சௌதரீபாண்ட்	225
251	ஸோரோ	491	290	சிசாகி	220
252	கன்டாபாரா	480	291	ஹஜாரிபாக்ரோட்	214
253	பலாஸோர்	471	292	சோபே	207
254	நுப்ஸா ஜங்ஷன்	460	293	பராஸ்டாட்	200
255	பஸ்டா	453	294	ஙிர்ம்டண்ட்	195
256	அமர்டாரோட்	450	295	ஹிரோடி	190
257	ஜெல்லாஸோர்	442	296	கொதர்மா	184
258	டன்த்டன்	431	297	குஜ்ண்டி	178
259	நெகுர்ஸெனி	426	298	குர்பா	164
260	கன்டெய்ரோட்	422	299	பஹர்பூர்	157
261	நாராயண்கர்	414	300	டன்குப்பா	149
262	பெனுபூர்	407	301	பண்டுவா	144
263	கர்க்பூர் ஜங்ஷன்	400	302	மான்பூர்	140
264	ஓகோகுல்பூர்	396	303	கயா ஜங்ஷன்	137
265	மிட்னாபூர்	392	304	பறெய்யா	127

நெ.	ஸ்டேஷன்கள்	ஸ்ரீ காசியிலி ருந்து மைல்	நெ.	ஸ்டேஷன்கள்	ஸ்ரீ காசியிலி ருந்து மைல்
305	இஸ்மெய்ல்பூர்	118	314	ஷியூஸாகர்ரோட்	64
306	ரபிகஞ்ஜ்	113	315	குட்ரா	57
307	ஜகிம்	106	316	புஸௌலீ	51
308	பீஸர்	99	317	பாப்டோவாரோட்	43
309	பால்மர்கஞ்ஜ்	94	318	துர்கௌடி	37
310	ஸோணபத்திராநதி	87	319	கர்மநாஸ	30
311	டேஹ்ரீஆன்ஸோன்	84	320	ஸையெட்ரஜா	25
312	க்கர்வீண்ட்யா	77	321	மாஜ்வர் [ன்	20
313	ஸஸாரம்	73	322	மொகல்ஸெராய் ஜங்ஷ	7

மேற்கூறிய கீழ்மார்க்கமானது கீழசமுத்திரக்கரையோரமாய் 223நெ. சத்ரபுரம் வரையில் தெலுங்கு தேசத்திலும், அங்கிருந்து ஒஷ்டரதேசத்திலும், கடைசியாக ஸ்ரீகாசியுள்ள வடமேற்கு மாகாணத்திலும் செல்லுகிறது; இந்தமார்க்கத்தில் தனுஷ்கோடியிலிருந்து காசிக்கு மூன்றாவது வகுப்புமெயில் ரயில் சார்ஜ ரூ 21–14–0ஆகிறது. கல்கத்தாவழியாய்ச் சென்றால் 22—7—0.வித்தியாசம்ஒன்பது அணாதான், நேராய் கல்கத்தாவழியாய்ப்போவதில், குழந்தைகுட்டிகளையும் மூட்டை முடிச்சுகளையும் பாஷைதெரியாததேசத்தின் ரெயில்வே ஜங்ஷன்களில் இரவுபகலில்லாமல் ஏற்றிஇறக்கியும் காத்திருந்து கஷ்டப்படவேண்டிய அவசியமில்லை; நேராய்க்காசிக்குப்போகிறவர்கள்சென்னப்பட்டணத்திலிருந்துநபர் 1-க்கு கல்கத்தாமார்க்கமாய் ரெயில் சார்ஜ ரூ 17—5—0, சென்னப்பட்டணத்திலிருந்து கல்கத்தாவுக்குப்போகிற மெயில்,சாயரக்ஷை6மணிக்குப் புறப்பட்டு மறுநாளில்லை, அடுத்தநாள் காலை10மணிக்கு கல்கத்தாவுக்கு அதாவது 40மணிதேசகாலத்தில்(24மணி=1நாள்)போகிறது. அவிடமிறங்கிஸ்நாநபானம்சமையல்சாப்பாடு முதலியவைகளைச் சாவகாசமாய்ச் செய்து கொண்டு(ஸ்டேஷனுக்குச்சமீபத்தில் தர்மசாலை சமயல்செய்து சாப்பிட்விடமிருக்கிறது)கல்கத்தா நம்மிந்தியாதேசத்தின்பிரதானநகரமானபடியாலும் அவிடத்தில் ஹிந்துஸ்தானி பங்காளிபாஷையானபடியாலும் விசாரிப்பதுகொஞ்சம்சிரமமாய்த்தோன்றும். இங்கிலீஷ்கற்றறிந்தோர் அவிடம்; இவிடத்தைப்பார்க்கிலும் அதிகம்;கல்கத்தாவிலிருந்துகாசிக்குப்புறப்படுகிறவண்டி, இராத்திரி ஒன்பது மணிக்குப் புறப்படுகிறபடியால், இந்த்ரலோகத்துக்குச்சமானமான இப்பட்டணத்தின் முக்கியமான இடங்களை (இந்நகரின் விவரங்களைப்பற்றி மற்றோரிடத்தில்

சொல்லப்பட்டிருக்கிறது) யும்பார்த்துக்கொண்டுஜாகைக்குவந்து இராச்சாப்பாடும் செய்துகொண்டுரெயில்வேஸ்டேஷனுக்கு எட்டரைமணிக்கு மேற்படாமல் வந்துவிடவேண்டும். கல்கத்தாவில் இரவு ஒன்பதரைமணிக்கேறி காசிக்கு மறுநாள்காலை $9\frac{1}{2}$மணிக்குப்போய் விடுகிறது: ஆகவே சென்னையிலிருந்து சௌகரியமாய் நான்காம்நாள் போய்விடுகிறது; ஆனால்ரயிலில் உட்கார்ந்துபிரயாணம் செய்யும் மொத்தநேரம் $40+12=52$ மணிதேசகாலந்தான், இந்தக்கால வேற்பாடு மாறுமலிருக்கும். ஷை ரயில்வே ஸ்டேஷன் அட்டவணைப்படி செல்ல கார்க்பூர்ஜங்ஷனிலும் கோமாஜங்ஷனிலும் இறங்கி ஏறவேண்டும்; பாஷைதெரியாதவும் அகாலத்தில் செல்லும்படியானவும் இந்த இரண்டுஜங்ஷன்களிலும் யாத்திரைவாஸிகள் ஷை ஒன்பதனுசாதகத்துக்காக உட்படவேண்டிய அசௌகரியங்கள் ஜாஸ்தி, தவிரவும் கார்க்பூர், கோமாஸ்டேஷன்களில் திருடர்கள் ஜாஸ்தி, ஆனாலும்ரெயில்வே கம்பெனியார் கூடியவளவு பந்தோபஸ்தும் சௌகரியமும் செய்திருக்கிறார்கள், ஆகையால்நம்திராவிடதேசவாசிகள் கார்க்பூரிலிறங்காமல் நேராய்கல்கத்தாமார்க்கமாய்க்காசிக்குச்செல்லுவதே மிகவும் நல்லது; அநேகரிதை அறியாமல் கோமாமார்க்கஞ்சென்று வருந்துகிறார்கள்.

இறங்கக்கூடிய மஜிலிகள்:-சென்னப்பட்டணம்வரையில், நம்திராவிடதேசவாஸிகளுக்கு இங்கெடுத்துச்சொல்லவேண்டிய தனுவசியம்,மதிராஸிலிருந்து மாலை6மணிக்குப்புறப்பட்டுகிருஷ்ணா(தீர்த்தவிசேஷம்)தீரமாகியபெஜவாடாவுக்குக்காலை$4\frac{1}{2}$மணிக்கும், கோதாவரிதீர்த்தமாகியஇராஜமஹேந்திரத்துக்குக்காலை$8\frac{1}{2}$மணிக்கும் போகிறது. பெஜவாடாவில் ஸ்டேஷனுக்குஅரைபர்லாங்தூரத்தில் பிரயாணிகள் சௌகரியமாய் ஜாகைசெய்துகொண்டுசமையல் சாப்பாடு செய்ய, ஒருவிஸ்தாரமான ஸெகிந்தராபாத்ஸேட் ஸர்வ்கார் தர்மசாலையிருக்கிறது. ஸ்டேஷனிலிருந்துகிருஷ்ணாஸ்நாநகட்டவிசேஷமுள்ளஊர் $1\frac{1}{2}$மைலிருக்கிறது, ஊருக்குள்ளும் சிலதர்மசத்திரங்களிருக்கின்றன. அந்தணருக்கு இலவசமாய் அன்னமளிக்கும் தர்மசத்திரங்கள்பலஉண்டு, தீர்த்தவிசேஷத்துடன் கிருஷ்ணாநதியின் அழகான அணைக்கட்டையும் ஆழமான கால்வாயும் மற்றுமுள்ள இஞ்சினீர்இலாகாஜலாதாரக்கட்டடஏற்பாடுகளையும் புத்தியூகங்களையும் பார்க்கத்தகுந்தது. க்ஷேத்திரவாசிகளான அந்தணர் தீர்த்தசிரார்த்த முதலியவைகளைச்செய்துவைக்கக்காத்திருக்கின்றனர்.

கோதாவரி தீர்த்தத்துக்காக இராஜமஹேந்திரத்திலிறங்காமல் கோதாவரி ஸ்டேஷனிலேயே இறங்கிவிடவேண்டும்,

ஏனெனில் இதிலிருந்து கோதாவரிநதியும், கோடிலிங்கஸ்நாநகட் டமும் மூன்றுபர்லாங்குக்குள்ளாகவிருக்கிறது, ராஜமஹேந்திரத் தில்புதிதாய்ப்போகும் யாத்திரைவாஸிகள் தெரியாமலிறங்கி கஷ் டப்பட்டு அநாவசிய செலவுசெய்து மறுபடியும் கோதாவரிஸ்டே ஷனுக்கேவரவேண்டியிருக்கிறது. இந்நதிசப்தநதியிலொன்றுகை யால் தீர்த்தசிரார்த்தம் முதலியவை செய்யவேண்டியது முறை மை. மேலே சொன்னகோடிலிங்கஸ்நாநகட்டத்தில் சமையல்சா ப்பாடு செய்து கொள்ளதர்மசத்திரம் மிகவும் சௌகரிய மாயி ருக்கிறது. ப்ரிட்டிஷ் இராஜாங்கமாகிய இக்காலத்தில் அதிலும் இருப்புப்பாதை பெரிய ஸ்டேஷன்களில் "வேண்டிய சாமான்க ள் கிடைக்கும் கிடைக்கும்" என்று அடிக்கடிசொல்லவேண்டிய அவசியமில்லை; வேதியருக்குஇல்வசமான தர்மசத்திரம் இக்கோ டிதீர்த்தத்திலிருக்கிறது; பின்னும் பட்டணத்துக்குள் ஐந்தாறு தர்மான்னசத்திரங்களிருக்கின்றன. இந்தத்தெலுங்குராஜ்யத்தி ல்பிராமணன் தீர்த்தபாத்திரமும் மடியுங்கட்டிக்கொண்டாலன்றி அன்னமளிக்கமாட்டார்கள்.

இந்தஆசாரத்தைப்பிராமணரல்லாதமற்றோரும் இத்தேசத் தில் அனுஷ்டிக்கிறார்கள். பட்டணத்துக்குள் வைசியகுலதிலகரா கிய நாளம்வாரி தர்மான்ன சத்திரம்வெகுவிசேஷம், சௌகரியம், இவிடத்தில்பார்ப்பாரன்றிமற்றெல்லாச்சாதியோருக்கும்சமமான தருமமாகவே இலையாக அன்னமளிக்கின்றார்கள். கொஞ்சம் வை திககருமங்களை நடத்திவைக்க யோக்கியதை பெற்றவர்களு க்குவிசேஷவரும்படிகிடைக்கும். பெஜவாடாவிலுமப்படியே. வெ குபேர் உத்தியோகஸ்தர் முதலிய பல தொழிலுள்ள நம்தமிழ் நாட்டார் இவிடமிருக்கிறார்கள், இவ்விரண்டும் பெரிய வியா பாரஸ்தலங்கள்.

மறுநாட் காலை, அந்தக் காலை 8½ மணி மெயிலிலேயே ஏறி இராத்திரி 7½ மணிக்கு பர்ஹம்பூரி லிறங்கலாம். ஸ்டேஷனு க்கு ½ பர்லாங்கு தூரத்தில் முன் ராஜமகேந்திரத்தில் நாளம்வாரி சத்திரத்துக்கொப்பான தர்மான்னசத்திரமிருக்கிறது. எல்லாச் சாதியாருக்கும் இலைபோட்டு அன்னமளிக்கிறார்கள். சமையல் செய்து கொள்ளவும் மிக சௌகரியமே, ஸ்டேஷனி லிருந்து பேட்டை யென்கிற டவுண் இரண்டு மைலிருக்கிறது. பட்டு நெசவுக்குப்பேர்போனது, திராவிடதேசத்தோர் வெகுபேர் இப் பட்டிணத்தில் பெரிய உத்தியோகஸ்தரா யிருக்கிறார்கள். பேட் டைக்குள்ளும் அநேக தர்மான்னசத்திரங்கள் முதலியவையிருக் கின்றன. இந்த ஊருக்கு வடக்கே நம்மதேசத்தவர்கள் காணப் படமாட்டார்கள். பாவையும் ஒட்டிரம்—வங்காளி. மறுநாள்

இராத்திரி 7½ மணிக்கு இறங்கின அதே ரயிலிலேறி கல்கத்தாவுக்குக் காலை 9½ மணிக்குப் போய்விடுகிறது. இந்த மஜில்களை போதுமானளவும் மற்றவைகளையும் எழுதுகிறேன்.

இந்தக் கீழமார்க்கத்திலுள்ள முதலாவது ஜங்ஷன் கூடூர், இவிடத்தில் திருப்பதி, காளாஸ்தி முதலிய விடங்களிலிருந்து வரும் இருப்புப்பாதை வந்து சந்திக்கிறது. இவிடத்தில் ஒரு லோகல்பண்டு சத்திரமும் ஆஸ்பத்திரியு மிருக்கிறது. 2-வது ஜங்ஷன் இயற்கனவே சொன்ன பெஜவாடா, இவிடமிருந்து ஹைதராபாத், குண்டக்கல், மசுலிபட்டணம் இவைகளுக்கு தனித்தனி லயன் போகிறது. வால்டேர், இவிடத்தில் மதிராஸ் தக்ஷிணமராடா ரெயில்வே முடிந்துவிடுகிறது. இவிடமிருந்து கல்கத்தாவரையில் பெங்கால் நாக்பூர் ரெயில்வே, கல்கத்தாவிலிருந்து ஈஸ்ட் இண்டியன் ரயில்வே, மொகல்ஸிரே ஜங்ஷனில் ஸ்ரீ காசிக்குச் செல்லும் ஔட் அண்ட் ரோகில்கண்ட் ரெயில்வே ஆரம்பம். 3-வது சாமல்கோட் ஜங்ஷன், இவிடமிருந்து காகிநாடா என்னும் துறைமுகப் பட்டணத்துக்குச் செல்லுகிறது. 4-வது நௌபடஜங்ஷனிலிருந்து பர்லகிமிடி ஜமீன்பட்டணத்துக்குச் செல்லுகிறது. ஷை சாமல்கோட் ஜங்ஷனில் ஸ்டேஷனுக்கு ஒரு பர்லாங்குக்குள் வெகு வசதியான தர்மான்ன சத்திரமிருக்கிறது. இந்தப் பக்கத்திலெல்லாம் தர்ம சத்திரமென்றால் பிராமணனுக்கு மாத்திரமல்ல. எல்லாச் சாதியாருக்கும் சமமான படி நடக்குமெனக. ஷை வால்டேரிலிருந்து விசாகப்பட்டணம் 2 மைல், மஜில்செய்யப் பிரியமுள்ளவர்கள் இவிடத்துக்குச் சென்றால் சௌகரியம். ஸ்டேஷனிலேயே தர்மான்ன சத்திரமிருக்கிறது. பட்டணம் நீர்த்தாழ்ந்த நம் சோழதேசத்தை ஒத்திருக்கும். வெகு பேர் நந்தேசத்தாருத்தியோகத்திலிருக்கின்றார்கள்.

5-வது கூர்டாரோட் ஜங்ஷனிலிருந்து ஸ்ரீ ஜகந்நாதத்துக்குச் செல்லுகிறது. சார்ஜ ஆறணாதான். இந்த ஜங்ஷனில் பாஷை ஒட்டிரம், எல்லாம் புதுமையாகக் காணப்படும். ஸ்டேஷனில் தங்க இடமிருக்கிறது, ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். 6-வது கர்கபூர் ஜங்ஷன், இவிடமிருந்து ஒரு கிளை லயன் பிரிந்து ஆட்ரா—கோமா ஜங்ஷன்கள் வழியாய் கயாவுக்கும் அங்கிருந்து காசிக்கும் செல்லுகிறது. பாஷை தெரியாத இக்கிளைப்பாதையில் செல்லும்போது ஷை ஜங்ஷனில் இறங்குவோர்கள் சிரமப்படுவார்கள். கர்கபூர் ஜங்ஷன் மிகவும் நவீன இயந்திர ஏற்பாடுகளமையப்பெற்ற பெரிய ஸ்டேஷன். இதின் வேலைக்காரர்களில் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பட்டணமாயிருக்கிறது. ஸ்டேஷனில் விஸ்தாரமான தர்மசாலை யிருந்தாலும் பிரயாணிகள் வெகு

ஜாஸ்தி, பாஷையும் தெரியாததால் நிர்ப்பந்தம் அதிகமாய்த் தோன்றும். ஜாதி வித்யாசம் பார்க்கமுடியாது. தண்ணீர் பைப்புகளால் ஜலகஷ்டமில்லை.



ஷை கார்ச்பூரிலிருந்து கல்கத்தா 72மைல், இவ்விடமிருந்து கல்கத்தாவுக்கு இரவு பகல் இடைவெளியின்றி அரைமணிக்கு ஒரு லோகல்வண்டி போய்க்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வண்டியிலும் இஞ்சின் இழுக்கமுடியாத வண்டிகள் சேர்க்கப்பட்டும், வண்டிக்குள்ளோ ஜனங்களுக்கு நிற்பதற்குக்கூட இடமிராது. இந்தக்கூட்டத்தினாலேயே இவ்விடமிருந்து கல்கத்தா நகரம் (நகரத்துக்குரிய நிர்ப்பந்தங்கள்) ஆரம்பமாய் விட்டதென்று சொல்லலாம். இந்தப்ரதேசம் நம் சோழநாட்டைப்பார்க்கிலும் பதின்மடங்கு அதிக செழிப்புள்ளது. மரங்கள் முதலிய மனிதருள்பட ஜீவராசிகளின் வளர்ச்சி சற்று கம்மியாயிருந்தாலும், அவைகளின் செழிப்பத்தையும் பலனையும் மனிதஜாதியாரின் யுக்தி புத்தி-பலம்-தைரியம் முதலியவைகளையும் வியக்கத்தக்கதாயிருக்கின்றது. நம்முடைய சோழதேசந்தான் மேலானதென்றிருந்தேன். உதாரணமாக ஒரு இளநீர் சாதாரணமாய் ஒரு சிறிய பூசணிக்காயளவும், வயலிலிருக்கும் நெல்தாள்கள் ஒரு மனிதனுயரமும், ஒற்றைத்தாளின் பருமன் கட்டைவிரல் பருமனும், இதைப் போலவே மற்றெல்லாவற்றையும் ஊகித்துக்கொள்ளுங்கள். ஆ என்ன! தென்னை, மா, பலா, வாழை, கமுகு, முதலியவைகளின் செழுமை!! கல்கத்தாவிலிருந்து சமுத்திரம் 80 மைல் தூரத்திலிருந்தாலும் கங்காநதியால் சேர்க்கப்பட்டிருப்பதால் அந்நதியில் ஊசிகுத்த இடமில்லாமல் ஸ்டீமர்கள், கப்பல்கள், படகுகள், ஓடைகள் முதலியவை வியாபார நிமித்தமாக ஓடிக்கொண்டிருக்கும். டவுனுக்குள் எங்கே பார்த்தாலும் டிராம்வே, றெயில்வே முதலியவைகளும், ஒவ்வொரு கடை, கோடி ரூ. விலை மதிப்புள்ளவைகளும், இப்படி இதைப்பற்றி வர்ணிக்க இவ்விடமிடமின்று; சுருக்கமாய் தேவேந்திர ராஜதானியாகிய தேவலோகத்தின் அமராவதிக்

கொப்பாகச் சொல்லலாமே யொழிய இப்பூவுலகினிதற்கு நிகர் இன்றென்பது நிச்சயம். இம்மாநகரில்முக்கியமாய்ப்பார்க்க வேண்டியவைகள் கவர்ன்மெண்ட்ஹவுஸ், போர்ட்வில்லியம், ஸ்ட்ராண்ட்ரோட்டிலுள்ள தங்கசாலை,ஸிப்பூரிலுள்ள ஸ்தாவரசாஸ்திர தோட்டங்கள்; அலிப்பூரிலுள்ள பூமிப்பிரகிருதிசாஸ்திர நீரோட்டங்கள், சர்க்கியுலர் ரோட்டிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரி, இந்தியன் பலபொருட்காக்ஷிசாலை, சுப்ரீம் கோர்ட்ஹவுஸ் கட்டிடங்கள், எதை விடுகிறது! எதை யெழுதுகிறது!!றெயில் ஸ்டேஷன் கட்டிடத்தைப் பார்த்தால், கட்டிடத்தி னழகும், ரிப்ரெஷ்மெண்ட் ரூம் வெய்டிங் ரூம்களிலுள்ள இந்திராணிகளுக்குச் சமானமான சுதேச பங்காளிஸ்திரீகளையும், றெயில்வே பிளாட்பாரங்கள் 48 லும் நிற்கும் போகும், வண்டித்தொடர்களின் ஜெகஜ்ஜோதியையும் ஆ! இரவில் எலக்ட்ரிக் லைட்களேற்றியிருக்கும் போது பார்க்காதகண்ணும் ஜன்மமும் இருந்தென்ன போயென்ன! 90 சதுரமைல் விஸ்தீரணமுள்ள இந்நகரில் எங்கேபோனாலும் நிற்பதற்குக்கூட இடமில்லாமல் ஜனங்களிருந்தாலும் பட்டணத்தைச் சுத்தமாய்ப் பாதுகாத்துவரும் மியுனிஸிபாலிட்டியாரின் திறமை மிகவும் வியக்கத்தக்கது. எவ்வளவோ ஜாக்கிரதையாய் போலீஸ் முதலிய பந்தோபஸ்துகள் செய்திருந்தாலும் வண்டிகளிடையிலகப்பட்டு உயிர்கள் சேதமடையாத நாளில்லை. தனவந்தர்களைத் தவிர மற்றெவரும் சுத்தமான வெள்ளை வஸ்திரத்தைத்தரிக்கமுடியாது, ஏன்! இந்நகரின் பற்பல புகையந்திரங்களினால் ரோட்டுகளின் கீழ் மண்ணும் கறுப்பாயிருக்கிறது, ஜோடில்லாமல் நடக்கக்கூடாது.

இந்தக்கீழ மார்க்கத்தில் மேலேசொல்லப்பட்டிருக்கிற சரியான மஜிலிகளைத்தவிர அடியிற்கண்ட பிறவற்றையும் கூறுகின்றோம். இஷ்டமானவர்கள் சௌகரியப்படி நடந்து கொள்வதற்கு:—சென்னையிலிருந்து காசிக்கு ஒரேடிக்கெட்டாய்வாங்கிவிட்டு நூறுமைலுக்கொருமுறை சௌகரியமான இடத்தில் சமையல் சாப்பாடு, க்ஷேத்திர தீர்த்த வாஸங்கள் செய்துகொண்டு மறுநாள் இறங்கின அதே மெயில் வண்டித்தொடரில் ஏறிச்செல்லலாம். சென்னையிலிருந்து காசிக்குக்கோமா மார்க்கமாய் 1358 மைல், கல்கத்தா மார்க்கம் 1458 மைலாதலால் முறையே 13-ம் 14 நாளும் டிக்கட்டு செல்லும். அதாவது அந்தடயத்துக்குள்ளாக காசிக்குப்போய்ச்சேர்ந்து விடவேண்டும், ஒரே டிக்கெட்டாய் வாங்காமல் மேலே சொல்லியிருக்கிற .1. இராஜமகேந்திரம், .2. பர்ஹம்பூர் .3. கல்கத்தா இந்த மூன்று மஜிலிகளுக்கும், தனித்தனியாய் வாங்கிச்சென்றாலும் பறவாயில்லை. சார்ஜ் ஜாஸ்தி

யாகமாட்டாது. இவைகளைப் பற்றிய மற்ற ரூல்ஸ்களை இந்நூ லின் கடைசி அத்தியாயத்தால் கண்டு கொள்க.

திருவொற்றியூர்:—ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் சில தர்ம சத்திரங்களிருக்கின்றன. இது ஸ்ரீ தியாகராஜஸ்வாமி ஸ்தலம். பங்குனி, சித்திரை மாதங்களில் பிரம்மோற்சவம். இவிடமிரு ந்து இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள காலடிப்பேட்டை ஸ்ரீ வரதராஜஸ்வாமிக்கு வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம். என் னூர், மிஞ்சூரில், ஜாகா முதலியவைகள் கிடைக்கும்.

பொன்னேரி:—விஷ்ணு, சிவ தேவாலயங்களும் சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவமுமுண்டு. ஜாகாசௌகரியமுண்டு.

கும்மிடிபூண்டி:—மிகவும் சௌகரியமான சத்திரம்.

ஆரம்பாக்கம்—காளாஹஸ்தி ஜமீன்தாருக்குச் சொந்தமான இக்கிராமத்தில் ஒரு சிறிய சத்திரமுண்டு.

நாயுடுபேட்டை:—இவிடத்தில் சென்னை, காளாஸ்தி, வெங்கி டகிரி முதலிய இடங்களினின்று ரோட்டுகள் வந்து சங்கிக்கின் றன. சத்திரமும் ஆஸ்பத்திரியுமிருக்கிறது.

கூடூர்,—லோகல் பண்டு சத்திரமிருக்கிறது.

மனுபோலு, வெங்கிடாஜலம்:—ஜமீன்தாரி கிராமங்கள், சிறிய சத்திரங்களிருக்கின்றன.

நெல்லூர்:—உத்திரபினாகினி தீரத்திலுள்ளது. இதன் பூர்வ நாமம்விம்ஹபுரி, ஸ்டேஷனிலிருந்து டவுன் 1½மைலிருக்கிறது, நாகரீகம்மிகுந்துள்ள பிரிடிஷ்ராஜாங்க இக்காலத்தில் இராமேஸ் வரம்முதல் காசிவரையிலும் இன்னும் இருப்புப்பாதைசெல் லும் எல்லாவிசேஷ விடங்களிலும் வண்டிகள் கூலிக்காரர் எப் போதும்கிடைக்கும்; இதைப்பற்றி ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் எழுதவேண்டியதில்லை. ஸ்டேஷனுக்கு 150 கஜதூரத்தில் ஜாகா வுக்குசத்திரமிருக்கிறது. இரவுநேரங்களில் முழுவதும் விளக்கு கள்முதலியவை போட்டுவெகு பந்தோபஸ்தும் சௌகுரியமுமா யிருக்கிறது. ஊருக்குள் பல கோயில்கள் தர்ம சத்திரங்கள் உண்டு தமிழ் நாட்டார் இவிடத்தில் வெகுபேர் உத்தியோகத்தி லமர்ந்திருக்கின்றனர். சாயப்புடவைகளுக்குப் பேர்போனது.

பிட்ரகுண்ட:—மலையின்பேரிலுள்ள விஷ்ணு சந்நிதானத் தில் பிரார்த்தனைக்காரர்களநேகர் விவாகாதிகளை நடத்துகின்ற னர், தங்கள் வீடுகளில் ஜாதிவழக்கங்களின்படி செலவழிக்க வேண்டிய ஏராளமான பணத்தின் நூறிலொருபங்கை என்

சந்நிதானத்தில் செலவழித்தால் போதுமென்று இக்கருணாகடாக்ஷவிஷ்ணுமூர்த்தி அநேகஜோடிகளைச் சேர்த்துவைக்கின்றனர், தங்குவதற்கு சௌகரியம்.

காவலி, உலவப்பாடு, சிங்கராயகொண்ட, டங்குடூரு இந்நான்கிலும் சத்திரம் முதலிய ஜாகா சௌகரியமுண்டு. பின்னைய மூன்றில் சித்திரை வைகாசிமாதங்களில் பிரம்மோற்சவங்களோடு கூடின சிவவிஷ்ணு தேவாலயங்களிருக்கின்றன.

ஓங்கோலென்னும் வங்கவோல்:—இந்த நெல்லூர்ஜில்லாவில் இரண்டாவது முக்கியப்பட்டணம். கானமாடுகளுக்குப்பேர்போனது, சௌகரியமான ஜாகாவும் தர்மான்ன சத்திரமுமுண்டு.

கரவாடி:—ஸ்ரீராமர் கராசுரனைக்கொன்றருளிய இடம்.

சீரள:—நெசவு கைத்தொழிலுள்ள வியாபாரஸ்தலம்.

தேனலி:—வர்த்தகம் ஓங்கிவளர்ந்துவரும் செழுமையான பெரிய ஊர், இது கர்நூல்ஜில்லாவின் முக்கியமான தாலூகா. டிஸ்டிரிக்ட்முன்சிப், தாசில்தார், சப்மேஜிஸ்டிரேட், போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்ரிஜிஸ்டரார், லோகல்பண்டு ஓவர்ஸீர் முதலிய உத்யோகஸ்தர்களும் தர்மசத்திரமும் இருக்கின்றன. பெஜவாடாவைப்பற்றி முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

ஏலூர்:—ரத்ன கம்பளங்களுக்குப் பேர்போனது, தர்மான்ன சத்திரமிருக்கிறது.

பீமடோல்:—தர்மசத்திரத்துடன் கூடிய ஒரு பெரிய ஜமீன்தாரிஸ்தலம்.

கோவ்வூரு:—இவ்விடத்துக்கு கௌதமரிஷியால் முதலில் கோதாவரியைக்கொண்டு வரப்பட்டது—புராணோக்தம்.

கோதாவரி:—கோதாவரிநதியின் வடகரையிலிருக்கிறது. சிறிது வருஷங்களுக்குமுன் கட்டிமுடிந்த இந்நதியின்பாலம் 160 அடியுள்ள 56 கண்வாய்கள்பெற்று ஒன்றேமுக்கால்மைல் நீளமுள்ளதாயிருக்கிறது, இந்தியாவிலுள்ள வாராவதிகளின் பரிமாணத்தில் இது இரண்டாவதாயிருக்கிறது; முதன்மையானது—கயாவிலிருந்து காசிக்குப்போகும் மார்க்கத்திலுள்ள ஈஸ்ட்இந்தியன்ரெயில்வே கம்பெனியைச்சேர்ந்த ஸோணபத்திராநதியின் பாலம். ஷை கோதாவரிபாலத்துக்கு மூன்றுமைலுக்குக் கிழக்கில் கோதாவரிநதி மூன்றரைமைல் அகலம் விரிந்திருக்கிறது. மற்றப்படி தீர்த்த க்ஷேத்திரவிசேஷங்களைப்பற்றி முன்னமேசொல்லப்பட்டிருக்கிறது.

பீடாபுரம்:—இது ஒருஜமீன்தாரி. ஸ்டேஷனிலிருந்து 1½மை லிருக்கிறது, தர்மான்னசத்திரமுண்டு, கயாசுரனுடைய பாதம் இவிடத்தில் முடிந்திருப்பதால் பாதம்=பீடம் ஆனதால்இப்பெ யர் காரணமாயிற்று. இக்கயாசுரனுடைய சிரசு ஸ்ரீமத்கயா விலிருக்கிறது. அவ்வசுரனுடைய நீளம் அதுமுதல் இதுவரை, இதுகாரணம்பற்றி இது விஷ்ணுக்ஷேத்திரமாகையால் இதை பாதகயையென்று க்ஷேத்திரவிசேஷம்.

துனி:—ஒருராஜா இருக்குமிடம், காசிம்கோடா, அனக பல்லி:—இவ்விரண்டும் ஜமீன்தாரிகள். இம்மூன்றாரிலும் தர் மான்னசத்திரங்கள் ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கின்றன.

வால்டேர்:—விசாகப்பட்டணம் ஜில்லாவின் ஹெட்குவார் டர்ஸ்; சமசீதோஷ்ண சௌகுரிய முள்ளபட்டணம். இதற்கு அடுத்த ஸ்டேஷனாகிய ஸிம்ஹாசலம் றெயில்வழியாய் 5மைலி ருக்கிறது; மறுபடி அந்த ஸ்டேஷனிலிருந்து மலையின்பேரில்நர ஸிம்ஹாவதாரமாக எழுந்தருளியிருக்கும் விஷ்ணுசந்நிதானத் துக்கு 4மைலிருக்கிறது. இவிடமிருந்தும் 4மைல்தான். பா தையும் போக்குவரவும் மலைமேல் ஜாகாவும் சௌகுரியம், ஆகை யால் ஷை சந்நிதானத்துக்குச் செல்லுபவர்கள் இவிடத்திலிறங் கிப்போவது சௌகுரியம். மூர்த்திவிசேஷம் அவசியம் தெரி சிக்க வேண்டியஸ்தலம்.

விஜயநகரம்:—இராஜனிருக்குமிடம், அரண்மனை கட்டிடவி சேஷம். ஸ்டேஷனுக்குச்சமீபத்தில் தங்கி ஜாகாசெய்வதற்கு தர்மசாலைகளிருக்கின்றன. டவுனுக்குள் தர்மான்ன சத்திரங் களுண்டு. ஜல சௌகரியம்போதாது.

உர்லாம்:—ஜமீன்தாரிருக்குமிடம், தர்மான்னசத்திரம் முத லிய விசேஷ தருமங்களுண்டு, ஸ்டேஷனிலிருந்து 1½மைல்தூர மிருக்கிறது.

சோம்பேடா:—ஸ்டேஷனிலிருந்து ஒருமைல் தூரத்திலு ள்ள இவ்வூரில் தர்மான்னசத்திரமும், ஜாகைக்கும் சௌகுரியம்.

சத்திரபுரம்:—ஸ்டேஷனிலிருந்து 1½மைலிருக்கிறது, சௌ கரியமுள்ள ஊர், இது ஒட்ர தேசத்தைச்சேர்ந்தது, தர்மான்ன சத்திரமுண்டு, தெலுங்குபாஷைக்கு இது வடகோடி எல்லை யாகவிருக்கிறது.

கள்ளிக்கோட்டா:—இதுவொரு ஜமீன்தாரிஸ்தல ஊருக்குள் ஜாகாமுதலியவைகள் சௌகரியமாயிருந்தாலும் பாஷை தெரியாதகாரணத்தால், எல்லாம் நூதனமாகவும் சிரமமாகவும் காணப்படும்.

கடகம்:—மகாநதி தீரத்திலுள்ளது. தீர்த்த விசேஷம். தெலுங்கு பிராமணர்கள் தீர்த்தக்கரையிலிருப்பவர்களைத்தவிர மற்றெல்லாரும் ஒட்டிரர். இதுவங்காள ராஜதானியைச்சேர்ந்த தென்கோடிஜில்லா; ஸ்டேஷனிலிருந்து இரண்டுமைலிருக்கிறது, ஜாகாவும் தர்மான்னசத்திரமும் சௌகரியமே. இதற்குவடக்கே கால் நடையாய் நடந்து போகிறவர்கள்கூட எப்படியாவது கஷ்டப்பட்டு ரயிலேறிச் செல்லுதல் நலம், ஏனெனில் பாஷை முதலியவை தெரியாத காட்டுப் பாதையுமானதேசம், தர்மங்களும் சொற்பம் திருடர்பயம், மஜிலிகள் தூரம்.

கர்க்பூர், கல்கத்தா இவைகளைப்பற்றி இயற்கனவேசொல்லப்டிருக்கிறது.

கல்கத்தாவை விட்டால் ஸ்ரீமத்கயா:—ஸ்டேஷனிலிருந்து மூன்றுமைலிருக்கிறது. லோகப்பிரசித்தமான க்ஷேத்திரம், ஸ்டேஷனிலேயே கயாவாலர்களின் குமாஸ்தாக்கள் அழைத்துக்கொண்டு போகக்காத்திருப்பார்கள். மற்றவிவரங்களைப்பற்றி மற்றோரிடத்தில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமத்கயாவை விட்டால் ஸோர்ன்ப்ரிட்ஜ் என்னும் ஸோணபத்திராநதி தீர்த்தவிசேஷம், இந்தியாவிலுள்ள வாராவதிகளிலெல்லாம் அதிக நீளமான இதன் பாலம் இரண்டேகால்மைல் நீளமுள்ளது; உலகத்திலுள்ள வாராவதிகளுக்கெல்லாம் மிகவும் நீளமுள்ளதான ஸ்காட்லெண்ட் தேசத்திலுள்ள டே நதிவாராவதிக்கு இது அடுத்ததாயிருக்கிறது. இதற்காகவாகிலு மிறங்கிப் பார்க்கத்தக்க சிறப்பமையப்பெற்றது,

ஷை ஸோன் ப்ரிட்ஜ் ஸ்டேஷனைவிட்டால் ஸ்ரீமத்காசியே; ஸ்டேஷனிலிருந்து டவுன் ஆரம்பமாயிருந்தாலும் நம்தமிழ்நாட்டார் மிகுதியாயிருக்கும்படியான அனுமந்தகட்டம் மூன்று மைலிருக்கிறது. கங்காபுத்திரர்களின் குமாஸ்தாக்கள் ஸ்டேஷனில்வந்து காத்துக்கொண்டிருப்பார்கள் மற்றவிவரங்களைப் பற்றி மற்றோரிடத்தில் விரிவாயெடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. கயாவாளி, கங்காபுத்திரர் இவர்கள் குமாஸ்தாக்கள் கார்க்பூர்முதலான மார்க்கத்திலேயேவந்து அமர்ந்துகொள்ளுபவரை ஏற்காது நேராகவும் தனியாகவும் இக்கயிட்டுப்படி யாத்திரைசெய்வது செலவு கம்மியாகும்.

ஸ்ரீ காசிக்குச் செல்லும் மேலமார்க்கம்.



இடையேயுள்ள ஸ்டேஷன்கள், மஜிலிகள், பிரயாணசௌகரியங்கள், மெயில்வண்டித்தொடரின் காலநிர்ணயங்களைப்பற்றியது.

நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீ காசியிலிருந்து மைல்கள்	நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீ காசியிலிருந்து மைல்கள்
92	செங்கல்பட் ஜங்ஷன்	1526	125	முத்தனூரு ...	1336
93	ஆத்தூர் ...	1522	126	மங்கபட்டணம் ...	1327
94	வில்லியம்பாக்கம் ...	1519	127	கொண்டாபுரம் ...	1321
95	பழையசீவரம் ...	1516	128	ரேகடிபல்லெ ...	1317
96	வாலாஜாபாத் ..	1512	129	வங்கனூர் ..	1312
97	நத்தபேட்டை ...	1507	130	தாட்பத்திரி ...	1304
98	காஞ்சீபுரம் ...	1504	131	ஜூதூரு ...	1296
99	பள்ளூர்	1498	132	ராயல்செருவு ..	1289
100	அரக்கோணம் ஜங்ஷன்	1489	133	ஜக்கல்செருவு ..	1282
101	திருத்தணி ..	1481	134	குத்தி ...	1274
102	பொம்படி ...	1477	135	பாதகொத்தசெருவு ...	1267
103	நகரி ...	1472	136	திம்மன்செர்லா ...	1258
104	வேபகுண்ட ...	1467	137	குண்டக்கல் ஜங்ஷன்	1256
105	புத்தூர் ...	1462	138	நன்செர்லா ...	1251
106	தடுக்கு ...	1458	139	மொளகவல்லி ...	1244
107	பூடி ..	1454	140	ஆஸ்பரி ...	1237
108	ரேணிகுண்ட ஜங்ஷன்	1448	141	நாகர்பூர் ...	1231
109	மாமண்டூரு ...	1439	142	ஆதோணி ...	1224
110	செட்டிகுண்ட ...	1429	143	குப்பல் ...	1215
111	கோடூரு ...	1423	144	கோஸ்கி ...	1207
112	ஊரம்பாடு ...	1414	145	துங்கபத்திரைநதி ...	1198
113	ரெட்டிபல்லெ ..	1410	146	மட்மரி ...	1192
114	ராஜம்பேட்டா ..	1402	147	ராய்ச்சூர் ஜங்ஷன்	1181
115	நண்டலூர் ...	1395	148	ராய்ச்சூர் கண்டோன் ..	1175
116	வொண்டிமிட்டா ...	1385	149	சிக்ஸுகர் ...	1171
117	சித்தவட்டம் ...	1377	150	கிருஷ்ணா ...	1165
118	கடப்பை ...	1370	151	சைடாபூர் ...	1153
119	கிருஷ்ணபுரம் ...	1365	152	யாத்கிரி ...	1138
120	கங்கயபல்லெ ...	1360	153	நால்வார் ...	1123
121	கமலாபுரம் ...	1356	154	வாடி ஜங்ஷன்	1114
122	யெற்றகுடிபாடு ..	1351	155	ஷஹாபாட் ...	1108
123	யெற்றகுண்ட்ல ...	1346	156	மர்டூர் ...	1101
124	கலமல்ல ...	1341	157	குல்பர்கா ...	1091

நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீ காசியிலிருந்து மைல்கள்	நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீ காசியிலிருந்து மைல்கள்
158	ஸவால்ஜி ...	1083	197	புன்டாம்பா ...	801
159	கங்காபூர் ...	1075	198	ஸம்வத்ஸர் ...	797
160	குலாவி ...	1067	199	கோபர்கெயோன்ரோட்	787
161	தூத்னி ..	1061	200	யியோலா ...	778
162	பொரோடி ...	1052	201	அன்கெய் ...	769
163	கறப்கோன் ...	1043	202	மன்மாட் ஜங்ஷன் ...	760
164	டிலடி ...	1037	203	ஹிஸ்வஹால் ...	751
165	ஹாட்கி ஜங்ஷன்	1031	204	பன்ஜன் ...	748
166	ஷோலாபூர் ...	1022	205	நண்ட்கோன் ...	744
167	பேலி ...	1018	206	பிம்பர்கெட் ...	738
168	பக்னி ...	1012	207	நெய்டொன்சிரி ...	731
169	மொஹல் ...	1002	208	ரோஹினி ...	728
170	அங்கர் ...	992	209	ஹீராபூர் ...	723
171	மட்த ...	983	210	சாலிஸ்கோன் ஜங்ஷன்	718
172	பார்ஸிரோட்ஜங்ஷன்	973	211	வக்லி ..	713
173	ட்தாவலஸ் ...	968	212	காஜ்கெயான் ...	706
174	கெம் ...	962	213	கால்ஞ ...	697
175	பலவ்ரி ..	957	214	பச்சோரா ...	690
176	ஜியர் ...	952	215	மஹெறஜி ..	681
177	போப்லெஜ் ...	946	216	மஸவெட் ...	674
178	வாஷிம்பி ...	942	217	ஷிர்ஸோலி ...	668
179	பொமல் வாடி ...	934	218	ஜால்கோன் ஜங்ஷன்	661
180	கட்ரூஜ் ..	928	219	பாட்லி ...	653
181	டிக்ஸல்	923	220	புஸாவல் ஜங்ஷன்	646
182	மால்தன் ...	918	221	டுஷ்கேடா ...	641
183	போரிபியால் ...	912	222	ஸவ்டா ...	636
184	டோண்ட் ஜங்ஷன்	906	223	நிம்போரா ...	630
185	பிம்ப்ரீ ...	894	224	ரேவர் ...	624
186	பெல்வாண்டி ...	885	225	வகோடா ...	618
187	விஸாபூர் ...	877	226	பர்ஹன்பூர் ...	612
188	ஸரோலா ...	867	227	சுல்கன் ...	606
189	அகோல்னர் ...	863	228	ச்சண்ட்பி ...	600
190	ஆமத்நகர் ...	855	229	மண்ட்வா ...	592
191	விலாட் ...	846	230	டொங்கார்கெயொன் ...	583
192	வம்போரி ...	838	231	பாக்மர் ...	576
193	ரகூரி ...	830	232	கண்ட்வா ஜங்ஷன் ...	569
194	லாக் ...	821	233	மதிலா ...	564
195	இபலாபூர் ...	814	234	டல்வாடா ...	559
196	சிடலி ...	806	235	கெய்கோன் ..	553

நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீ·காசியிலிருந்து மைல்கள்	நெ.	ஸ்டேஷன்கள்.	ஸ்ரீ·காசியிலிருந்து மைல்கள்
236	பிர் ...	548	275	டியோரி ...	300
237	ஸிங்காஜி ..	541	276	ஸிஹோராரோட் ...	287
238	ஹாரர்ஸாட் ...	536	277	ஸ்லீமனாபாட்ரோட் ...	272
239	பிப்லகி ..	531	278	கிவார் ...	263
240	கிர்க்கியாயா ...	525	279	கட்நிஜங்ஷன்	254
241	குராவன் ...	521	280	ஜுகெஹி ...	244
242	பிரிங்கி ...	517	281	அம்டாரா ...	232
243	மாலெஷுங்கோன் ..	513	282	பாடென்பூர் ...	224
244	பலஸ்நர் ..	510	283	மெய்ஹர் ...	215
245	ஹர்டா ...	505	284	உன்செரஹ்ரா ..	206
246	சர்க்ஹிரா ...	501	285	ஸட்நா ...	195
247	டிமர்னி ...	497	286	ஜெய்ட்வார் ..	181
248	ச்சிட்கெயான் ...	491	287	மஜ்கெவான் ...	168
249	பக்டெயால் ...	488	288	மர்குண்டி ...	155
250	பெய்ரன்பூர் ...	483	289	மாணிக்பூர் ஜங்ஷன்	145
251	பாணுபுர ..	479	290	டபௌரு ...	131
252	ட்தாம்குண்டி ...	474	291	பார்க்கார் ...	121
253	ச்குட்வன்ஸ ...	469	292	ஷங்கர்கார் ..	111
254	டுலேரியா ...	466	293	லொஹ்காரா ..	105
255	பிலக்ஹெரி ...	461	294	ஜஸ்ரு ...	97
256	இடார்ஸி ஜங்ஷன்	458	295	ச்சியோகிஜங்ஷன் ..	86
257	குர்ரு ...	451	296	கர்சாணு ...	81
258	பக்ரா ..	441	297	பீர்பூர் ...	75
259	ஸெம்ரி ...	433	298	மேஜாரோட் ..	68
260	ஸோஹாஜ்பூர் ...	427	299	உன்சிடி ..	63
261	பிபேரியா ...	416	300	மன்டாரோட் ...	58
262	பங்கெடி ...	410	301	ஜிக்நா ...	53
263	பாபெய் ...	400	302	கெய்புரு ...	48
264	கடர்வாடா ஜங்ஷன்	391	303	பிரோஹி ..	44
265	பொஹோனி ...	383	304	பிர்ந்தாச்செல் ...	41
266	கரெலி ...	373	305	மிர்ஜாபூர் ...	39
267	நர்ஸிங்பூர் ...	363	306	ஜிங்கூரு ..	37
268	நாரெக்பெல் ...	354	307	பஹ்ரா ..	34
269	கோடிசெயான் ...	344	308	டாக்மபூர் ...	29
270	பிக்ராம்பூர் ..	337	309	சுஞர் ..	26
271	ஷாபுர ...	330	310	கைலாஹட்	22
272	மிர்கஞ்ஜ் ..	322	311	அஹ்ரௌரரோட் ...	15
273	மாடென்மஹல் ...	317	312	ஜியோநாத்பூர ...	12
274	ஜப்பல்பூர் ஜங்ஷன்.	311	313	மோக்ல்சிரே ஜங்ஷன்	7

ஸ்ரீகாசிக்குப்போகும் மேலமார்க்கத்தின் மஜிலிகள்.

காஞ்சிபுரம்:—ஸப்தபுரிகளில் ஒன்று. க்ஷே... சேஷம் ஏகாம்பரேஸ்வரர், வரதராஜப்பெருமாள் இரண்டும் பிரசித்தி பெற்றவை. விஸ்தாரமான வீதிகளோடு கூடிய இப்பட்டணத்தினழகும் பட்டணமத்தியில் பிரகாசிக்கிற ஷை தேவாலயங்களினழகும், ஸ்ரீகாமாக்ஷியம்மன் மஹிமையும், ஜாஸ்தி. இதற்கு மூன்றுமைலுக்குத் தெற்கே க்ஷீரநதியென்னும் பாலாறு ஓடுகிறது. ஸ்டேஷனிலிருந்து ஷை கோயில்கள் இரண்டுமைல்தூரத்திலிருக்கின்றன. தர்மான்னசத்திரங்களுண்டு, வைகாசிமாதத்தில் நடக்கும் கெருடோற்சவம் வெகு விசேஷம். இப்புராதன புண்ணிய நகரைப்பார்க்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஒருவரும்இழந்து விடக்கூடாது.

—அரக்கோணம்ஜங்ஷன்:—இவிடமிருந்து கிழக்கே பட்டணம், தெற்கே காஞ்சீபுரம், மேற்கே ஜோலார்பேட்டை, வடக்கே ராயச்சூருக்கும் ரெயில் பாதைகள் போகின்றன; ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் நல்ல ஹோடல்களுண்டு.

திருத்தணி:—ஸ்டேஷனிலிருந்து ஒருமைலிருக்கிறது. மலையின் மீதுள்ள சுப்பிரமணியர் சந்நிதானம் வெகுபிரசித்தம், இக்கலியுகத்தில் பிரத்தியக்ஷதெய்வம்; விசேஷமான யாத்திரிகர்கள் பிரதிகிருத்திகைக்கும் வருவதால் ஜாகைக்காக நூறுக்குமேம்பட்ட தர்மசாலைகளிருக்கின்றன. எண்ணிறந்த ஹோட்டல்களும் நாட்டுக்கோட்டையார் தர்மான்ன சத்திரமுமுண்டுவசதியாய்.

புத்தூர்:—இவிடமிருந்து கார்வெட் நகர்ராஜா எழுமைல் தூரத்தில் வசிக்கிறார்.

பூடி:—அலமேலு மங்கைநாச்சியார் சந்நிதானத்துக்கு எண்ணிறந்த ஜனங்கள் யாத்திரைசெய்கிறார்கள். இச்சந்நிதானத்தில் விவாகாதிமுகூர்த்தங்களை பிரார்த்தனை செய்து நடத்துகின்றார்கள்.

ரேணிகுண்டா ஜங்ஷன்:—இவிடமிருந்து மேற்கே திருப்பதி முதலான இடங்களுக்கும், கிழக்கே காளஹஸ்தி முதலிய இடங்களுக்கும் இருப்புப்பாதை செல்லுகிறது. மேற்கேபோகும் லயன் காட்பாடி, தர்மாவரம் ஜங்ஷன்களுக்கும் கிழக்கே கூடூர் ஜங்ஷனிலும் சந்திக்கிறது; ஸ்டேஷனுக்கு அருகாமையிலே ஜாகாவுக்கு தர்மசாலையும் ஓட்டல்களுமுண்டு, இவிடமிருந்து திருப்பதி ஏழுமைல்,

வொன்டிமிட்டா:—கிருஷ்ணமூர்த்தி தேவாலய விசேஷம். ஊர்ஸ்டேஷனிலிருந்து ஒருமைலிருக்கிறது.

கடப்பை:—ஸ்டேஷனிலிருந்து டவுன் ஒன்றரைமை... கை சௌகரியம், தர்மான்னசத்திரங்களுண்டு, இதுமுதல்... சூர்வரை தெலுங்கு தேசமாகையால் போஜனகாலத்தி... உடுத்திக்கொள்ளாமலும் தீர்த்த பாத்திரமில்லாமலுமி... அன்னமளிக்கமாட்டார்கள்; இந்த சீமையில் பிராமணர்ம... மல்ல, வைசியர் முதலானவர்களுக்கும் தர்மமுண்டு, பு... போகிறவர்களை கடப்பை ஜ்வரம் பிடித்துக்கொள்ளுமா... தாமதமில்லாமல் புறப்பட்டுவிடவேண்டும்

கமலாபுரம்:—இவிடமிருந்து வடகிழக்கே ஐந்துமை... தில் பேர்போன புஷ்பகிரி தேவஸ்தான சந்நிதானமிருக்கி...

கோண்டாபுரம்—இவிடமிருந்து ஐந்துமைல் தூரத... கிற குண்டி கோட்டாவின் புராதான கோட்டையு... குகைக்குள்ளிருக்கும் நீர்வீழ்ச்சியும் பார்க்கத்தகுந்த...

பெண்ணேறு:—இரண்டுமைல் தூரத்தில் பிநாகி... லுள்ள அஸ்வத்த நாராயணஸ்வாமி சந்நிதானத்துக்... ரைபோவோர் பலர்.

தாடிபத்திரி:—விஜயநகரம் ராஜாக்களினால் 400 வ... க்குமுன் கட்டப்பட்ட ஸ்ரீராமர் தேவாலயத்தில் எழு... ருக்கிற ஸ்ரீராமயணம் சித்திரங்களாக பார்க்கத்தகுந்த... ம சாலைகிடையாது, ஜாகாகிடைக்கும்.

குத்தி:—டவுனுக்குச்சமீபத்தில் 2000 அடி உயரத்... ள மலைமேல் கட்டப்பட்டிருக்கிற புராதன கோட்டை ஒன்றுண்டு; ரெயில்வேஸ்டேஷனுக்குச்சமீபத்திலும் டவுனுக்குள்ளும் ஒரு தர்மசத்திரம் உண்டு.

திம்மன்சர்லா.—ஏப்ரல் மாதத்திய உற்சவத்திற்கு வெகுபேர்வருகிறார்கள் ஸ்டேஷனுக்குச்சமீபத்தில் சத்திரம்.